௮ பார்த்துள்ளேபிர்ம நாடிவழிக்கொண்டுக பாலம்கிழிந்திடத் தாவினர் தவம்
வாயத்தபயனால் வரும்விமானத்தேறி மாதேவன் லோகத்தில மேவினர்
௯ மேவும்முனிவனளித்தமுதுகென்பை விசுவகர்மாப்பரிந்தெடுத்தான் அதைச
சிவியோர்வச்சிர மாகச்செய்திந்திரன் செங்கமலக்கையில கொடுத்தான்
௰ தக்ஷணமேஅயி ராவமேறியே தானைக்கடலுடன் சூழ்ந்தான் சூழ்ந்
தக்ஷணம்விர்த்திரன தங்குமிடம்தேடி ஆகண்டலன்வந்து சேர்ந்தான்.

இந்திரனுக்கும்விருத் திராசுரனுக்கும்உயுத்தம்.

விருத்தம்

வானவர்கோன் இந்தவிதம் குலிசம்பெற்று
வந்தனன்பண் டாழியிலெ ஒளித்திருந்த
சேனைசமுத் திரமெனவே ஆர்த்துக்கூடச
செருக்களத்தில வந்துகலந் திட்டானங்கே
தானவர்கோ னவனும் வடவைசெந்தீ
சைலமிசை யோங்கியழல் றெழுந்தாற்போலே
மானமிகத் தலைக்கொள்ளத் தானைசூழ
வளைத்திட்டார் இருவரும்போர் விளைத்திட் டாரே.

கலியாணி, சாபு.

பல்லவி

வாசவனுக்கும் ஆசுரனுக்கும் வளர்ந்த தேசண்டை

அநுபல்லவி

ஈசனைப்போற்றும்ததீசிமுனிதந்த என்பைக்குலிசம்செய்தும்பருடன்வந்த வா

சரணங்கள்

௧ மூடவசுரத்தலைவரிடிபோல முழங்கிச்சவுரியம் பேசினர் பேசிக்
கோடியவில்லவளைத்தேறிடநாணொலி கொண்டுவசையுரைத் தேசினர்
சாடியவேல்மழுசக்கரம்தோமரம் தண்டாயுதம்முதல வீசினர் ஓளி
நீடியவெங்கணைரக்கெனப்பொங்கி நெருப்பெழுவானவர் கூசினர்
தேடியவும்பர்படைத்தலைவர் கிட்டிச் செங்கையினுலெபுயங்களிலே தட்டிக்
கேடகங்களுடனகேடகங்கள்முட்டிக் கொர்சசித்துமந்திரவாளினாலேவெட்டி
கேளும்சிலர்தலை அறுந்துபுரளப்படக் கிழிந்துசிலர்விரி மார்புந்துளைபடத்
தாளும்தோளுமுதரத்திலமறைபடத் தகர்ந்தவுணர்கால னூரிலநிலைபட
வாசவன [ம்
௨ அங்கமதுகுறைந்தாலுங் குறையாமெய் யணிகள்சேனையிற்சிலபேர் மாத
தங்கியவீரகண்டாமணிதன்னுடன தாள்களறுபட்டார் சிலபேர்
தங்கமணிமுடியோடேவிளங்கும் தலைகளறுபட்டார் சிலபேர் உத்
துங்கயிருந்தகேயூரத்துடனே திண் தோள்களறுபட்டார்சிலபேர் [ழிந்திட
செங்கைகளவாளோடறுபட்டிழிந்திடச் சிலர்கள்தும்பையும்போருமொ
அங்கியுடனகலமார்புகிழிந்திட ஆனைமையுமானமுமோடிக்கழிந்திட
அண்டுகழுகுடனபருந்துகூடவும் அறுத்துக்குடல்களையிழுத்தங் கோடவும்
மண்டலகைசோரியுண்டாடவும் மாண்டபிணத்தின் மேல்கவந்தமாடவும்

வாசவ

௩ இந்த்ரனனல்படைபோடவருணாஸ்த்ரம்எய்தவுணனதை ஆற்றினான் பின்னும்
கந்தவாகாஸ்த்ரம்விடஅவுணனதைக் கட்செவியாஸ்த்ரத்தால் மாற்றினான்
பிந்நிநாகாஸ்த்ரம்விடக்கருடாஸ்த்ரம்பிடித்தசுரன்வெகுண்டேற்றின னதற்
கந்தமோகாஸ்த்ரத்தைப்போடஅசுரன்ஞா னாஸ்திரத்தாலதைத்தூற்றினான்
விந்தையுட்னிருள் நீங்கிடவும்மேக மின்னலைவிட்டதுபோலேவிரைவாக
சந்தமிகும்குலிசாயுதத்தைப்பாக சாதனன்வீசிடக் கண்டு பயமாக
சகலதெய்வதப்படைகளையும்விண்டு சலதியிலவுணன்மறைந்திடவுங்கண்டு
மகபதியுந்தொடர்ந்தறியாமலேபண்டு மைநாகமொளித்தவகைபோலாகக்
வாசு (கண்டு

அகத்தியர் கடலைக்குடித்தல்.

விருத்தம்.

இகலவிளைத்தா சுரன்மறைந்தா னிபபால விண்ணோர்க்
கிறைவனயன பாற்சென்று நடந்த தெலலாம்
புகலவவன் தனனொருளா லகததி யன்பால
போநதுரைகக நம்பரமன் அருளபெற் றோர்க்குச்
சகமதிலதெத் தொழி லரிதாம் நாரி பாகன்
தனதாழித் திவடிவை யவன்தியா னித்தே
அகல்கடலை யுழுந்தளவா கததி ரடடி
அங்கையிற்கொண டரைநொடிக்குள் அருந்தி னானே

சுருட்டிராகம், சாப்புதாளம்.

பல்லவி

கடலை ஆகருஷித்தாரே முடிவில்வரும் வடவைபோலக்குடித்தரே.

அநுபலலவி

படிவம்மிகும்கும்பசம் பவமாமுனிவரைந்த கடலை

சரணங்கள்.

க திடமாம்அறத்தைமறநது சம்பாதிக்கின்றோர் செலவம்போலவேவறந்து
வடவாக்கினியோவென்ன மாணிக்கங்களும் மின்னப்
படரும்அதின்சிகைபோல பவளம்எழுந்து துன்னக் கடலை

௨ பிசகில்ரத்தினங்களாலே செய்தணிவைதத பெட்டிவாய்திறந்தாற்போலே
உசிதமணிகள் மிக்க ஒளிசெய்திருள் விலக்கப்
பசுயோவந்திடும்வலன். பட்டசெஙகளம் ஒக்கக் கடலை

௩ பிறைவாள்எடுத்து கிரம்ப வீசுவதுபோல் பிறங்கும்மீனினம் எழும்ப
தறையிற்சர்ப்பம் விளங்கச் சங்கமுத்தும் இலங்கச்
சிறுமீனெலாம் பருந்தின் சிவந்தமூக்கினில தொங்க கடலை

இந்திரனைப் பிர்மஹத்தி பிடித்துக்கொள்ளல்.

விருத்தம்.

வாரிதியில் வகைசுவற அவுண னங்கோர்
மலைமேற்கொண் டினிமேரும் வகைதோன் றுமல்

சாருழும்பர் தீவினையோர் வடிவெடுத்துத்
தவம்செய்த லெனத்தவம்செய் திடப்பார்த் திந்த்ரன்
கூரியவஜ்ராயுதத்தைச் சீர்ப்ப டுத்திக்
கொள்ளுதல்போலவன்தலையை யறுத்தானங்கே
சோரிகடல் நிரம்பியது பிரம ஹத்தி
தோஷமவனைச்சேர்ந்து தொடக்கண் டானே.

பெலகரிராகம் சாப்புதாளம்.

பல்லவி

பிரமஹத்திஇந்திரனைப் பிடித்துக்கொண்டதேவந்து பிரம

அநுபல்லவி

உரமிகுத் தவவுணன் உயிரைக்கொன் றதால்வந்த பிரம

சரணங்கள்

க மார்பைத்தட்டு மும்மென்னும் வாயைமடிக்கும் பினனும்
கோபித்தெழுமெழுந்து கூக்குரல்செய்து துன்னும் பிரம

உ ஓடும்திரும்பும்விழும் உக்ரமுடனே யெழும்
நீடுஞ்சிரிக்குமழும் நெருங்குமகலும் தொழும் பிரம

ந சமர்புரியத்துடிக்கும் தந்தங்களைக் கடிக்கும்
அமருமிமைப்பொழுதும் அகலாதுடன் நடிக்கும் பிரம

நகுஷன் இந்திரபதவியடைதல்.

இந்திரனிவ் விதமடைந்து விரைவி லேசென்
றீசான திசையிலொரு தடத்தில் வீழ்ந்து
கந்தமலர்த் தாமரைநூ லுக்குட் சென்று
கரந்திருந்தா னிப்பாற்பொன் னுலகம் முன்போல
அந்தமிலா திருக்கையிற்கு ரியகு லத்தின்
அரசனெனும் நகுஷனச்வ மேத யாகம்
சிந்தைமகிழ்ந் தொருநூறும் செய்தா னின்பம்
தேடினன் துறக்கம்வந்து கூடினனே.

பூரிகல்யாணிராகம் ஆதிதாளம்.

பல்லவி

இனனம்சொலலுவோம் முனிவோரே
நீசனுககன்புசெய் வீரே

அநுபல்லவி

மன்னனில்லாவறுமை நோக்கிநகுஷனுக்கு
மகுடம்புனைந்தமரர் தருமரசாகக்கொண்டார் இன்னம்

சரணங்கள்

அந்தநகுஷன்சொர்க்கங்கூடி சசியைத்தன்கண் அழைத்துவருவீரெனஓடி
வந்ததூதுவர்சொல்ல வாடி இதென்ன மாறுபாடென்றுசானை நாடி

என்றன்டதியுலகத் திருக்கையிலே பின்னும்
வந்துவேறொருவன்றான்றருவலாகுமோ வென்னும் இன்னம்

உ சிவிகைஎழுமுனிவர்பரிக்க வநத தீரனே இந்திரனுமென் றுரைக்க
அவனேபதியெனவும்ரமிக்கச் சசி ஆசானைப்பணிந்துசம் மதிக்க
உவகையுடன்இங்குவந் துறவேகடவதென்றே
அவசரக்காரரைத்து தனுப்பியிருந்தாளன்றே இன்னம்

ரு போகமதிலழுந்து மதியான் சிவிகை பொறுக்கும்மாதவர்களை மதியான்
வேகமதிலழியும் நிதியான் இநதிராணி விளங்குமிடம்குறித்தூழ் விதியான்
ஏகுமின்சர்ப்பசர்பப வெனநகுஷன் மொழிந்தான்
ஆகையினலென்சாபத் தாலரவாய் விழுந்தான இன்னம்

இந்திரன் பிரமகத்திநீங்கும்பொருட்டு சிவதரிசனத்துக்கேகல்.

விருத்தம்.

அற்பருக்குச் செல்வமே பகையா மென்றார்
அதுநிசமே நகுஷனும்ப ருலகத் தெய்தும்
சொற்பநே ரத்திலகம் கொண்டு பாம்பாய்த்
தொல்லுலகி லென்சாபத் தாலே வீழ்ந்தான்
அபபொழுதே விணணவர்தங் குரவ னைசசார்ந்
தரசிலாக் குறைசொலத்தேர்ந் தவரோ டிந்திரன்
தப்பியொளித் திருககுமலர்த் தடஞ்சேர்ந்துள்ளம்
தழைத்திடடா ரன்புடனே யழைத்திட் டாரே.

ஆசிரிய னழைக்க வந்தீ சனுக்குச் செய்யும்
அரும்பிழைகள் தேசிகனு லாற்ற லாகும்
தேசிகர்க்குச் செய்தபிழை தன்னை யந்தத்
தேசிகனே யன்றியெவர் தீர்ப்பரென்றே
வாசவனறன கொடும்பழியைத் துடைக்க வேண்டி
மலரடியிற் பணிந்தெழுந்து கேடக விநதக்
காசினிவாழ சிவதரிச னத்தாற் றீரும்
காணெனறார் மற்றதெலலாம் வீணென்றாரே.

தரு. பூரிராகம் சாப்புதாளம்.

க ஆதிகுருபதம் போற்றினன் கொடி தாகும்பெரும்பழி மாற்றினன்
ஓதரும்பத்தியோடேத்தினன் உள் உவந்தான்விழிபத்து றாற்றினன்

உ ஆசானுடனசொர்க்கம்மேவினன உசசம் ஆகும்புரவியில் தாவினன்
கூசாமல்தேவரைக்கூவினன் வேட்டை கொள்ளும்வியாசமு லாவினன்

ரு பொன்னுலகம்விட்டிறங்கினன் பாணம் பூட்டுதனுவோடி லங்கினன்
தன்னுவல்கொண்டு துலங்கினன் ஆசான் தன்னுடன்கூடிஇ ணங்கினன்

ச வெள்ளிமலைமுதல் தேடினன ஈசன் மேவும்தலம்பின்னும் நாடினன்
தெள்ளுநதிதோறும் ஆடினன் சிவ தெரிசனத்துக்கன்பு கூடினன்

ரு அத்தலம்தோறும் பின்னலே விருத்திர ஹத்திதொடர்ந்திட மேலே
பற்றியடாகத்தி னலே ஒளி பங்கமுறும்சந்திரன் போலே

சு உம்பருடன்நடந் தோறும் கடம் போங்கும்வனம்தெரி யாது
சம்பபேதிவழி மீது அதின் சாமீபத்தில்வரும் போது

இந்திரன் பிரமகத்திநீங்கி கடம்பவனத்தைக்கண்டதிசயித்தல்·

விருத்தம்.

சதமகனிப் படிகடப்ப வனத்தே குங்கால்
தன்பழிவே ருகிநிற்கக் கண்டா னந்த
அதிசயம்தே சிகனறிந்தா னிவிடத் தின்மேல்
ஆனசிவ ஸ்தலமும்தீர்த் தமும் நமக்கிங்
குதவியதா யுறல்வேண்டும் சோதி யென்றான்
உடனறிந்து வரச்சிலரை யனுப்பி னாறு
விதமிருகம் பக்ஷிகள்சஞ் சரிக்கும் பாதை
மேற்கொண்டான் கண்களதின் பாற்கண் டானே.

முகாரிராகம், சாப்புதாளம்.

பல்லவி.

கண்டா னிநத்ரன் — அதிசயம் — கொண்டா னிந்த்ரன்.

அநுபல்லவி.

வண்டுலவியநீப வனத்தினி டையின் மேலே
அண்டரு டன்தன தாயிரம் கண் ணாலே கண்டான்

சரணங்கள்.

அருவிகொழிக்கும்மணி தனைக்குரங்குகள்பாறை
அதின்மேல்வைத்தருவிநீர் அபிஷேகம்தொடுப்பதும்
மருமலர்கொய்தர்ச்சனை செய்துகனிகளூட்டி வணங்கிநின் றடுப்பதும்
கரியும்யாளியுமொரு துறையிலிணங்கித்தும்பிக்
கரத்தில்நீரெடுத்தானைக் கன்றின்வாய் விடுப்பதும்
பரவிளமான்குட்டிக் கிரங்கிமெய்புளகித்துப்
பரிந்துவன்புலிமுலைப் பாலூட்டக் கொடுப்பதும் கண்டான்

அண்டவரியகொடும் வெய்யிலிடையில்கிடந்
தரவின்குட்டிகள்பல அழன்று மெய் பொரிவதும்
கண்டிரங்கிச்சிறகால் நிழல்செய்துவணப்பக்ஷி கணம்சுற்றித்திரிவதும்
வண்டினங்களுவணம் வருத்தப்படுதல்நோக்கி
வாய்விட்டரற்றியாவச் சோவென்று பரிவதும்
கொண்டமடமந்திகள் அருவிநீர்தனைச்சங்கின்
குடங்கொண்டெடுத்ததன்மேல் கருங்கையாலசொரிவதும் கண்டா

வன்னமயில்கள்தங்கள் பெட்டைகளைமருவ
வாளரவிரத்தின மணிவிளக கெரிப்பதும்
மன்னியகருங்குயில் கூட்டினிலோமென்று வாய்கொண்டுச்சரிப்பதும்
பின்னுமினத்துடனே துனனும்கிளிகளெல்லாம்
பெருமைதருகும்பஞ்சா க்ஷரத்தைவிஸ் தரிப்பதும்
அன்னதைக்குருவுப தேசம்போல்பூவைகள்
அறிந்துசந் தோஷத்தோ டகம்தனில் தரிப்பதும் கண்டா

இந்திரன் சுந்தரலிங்கத்தைக்கண்டு தெரிசித்தல்.

விருத்தம்.

அண்டர்கோ னித்தவண்ணம் கண்டு வந்தே
  அங்கிருக்கும் போதுமுன்போ னவர்கள் வந்து
சண்டியபா லருந்துபவர்க் கினிய தேனைச்
  சொரிந்ததுபோ லதிமகிழ்ச்சி பெருக வெந்த
மண்டலத்து மெக்காலும் காணு ஞத
  மாநிதிகண் டதுபோலோர் தீர்த்த மும்கண்
டண்டையிலே கடம்பிடையோ ரிலிங்க மும்கண்
  டறிந்துவந்தோ மெனவணங்கி யறைந்திட் டாரே.

இருசெவிக்கின் பூட்டியது துவரோ டிந்திரன்
  இருகைகுவித் தம்பொற்ரு மரைகண் டாடி
அருகிலரு வாகியுரு வாகிப் பினனும்
  அருவுருவா யுயிர்க்கொளியா யனுதி யாகிச்
சரமசர மாய்விளங்கு முலகம் யாவும்
  தன்னிடத்தில் தோன்றியவா றொடுக்கி நின்று
கருவுருவாய் முளைத்தசிவக் கொழுந்தி னைத்தன்
  கண்கள்பல வும்களிப்பக் கண்டிட் டானே.

தரு காம்போதிராகம் சாப்புதாளம்.

௧ இந்திரன் சுந்தரலிங்கத்தைத்தரிசித் திறைஞ்சியெழுந்துமுன்னாலே மிகச்
சிந்தையிலொன்றிய ஆனந்தக்கண்ணீர்ச் செழுங்கடலாடியின்பாலே (பூசைக்
௨ தோத்திரம்செய்தன் புருவாகிநின்று துறக்கத்திற்சென்றிமைப் போதில
கேற்றவெல்லாம்கொண்டுவாருமென்றுற்றரை யேவிடுத்தான்வெளி மீதில்
௩ தேவர்குலத்தச்சனை ஓர்விமானத்தைச்செய்துவரும்படிக்கேவினன் விரைந்
தாவலுடன்சுவாமி பூசைக்குப்புஷ்பம் அகப்படாமலகுறைமேவினன்
௪ புண்ணியதீர்த்தக் கரையருகேவரும் போதிலைய்யனருள் கொண்டு எழுந்
தெண்ணரும்பானு ஒருகடல்மீதில் இசைந்துதித்ததென விண்டு
௫ செம்பொன்மரைமலர்கண்டானுவகை சிறந்திட ஆயிரம்கண்ணினன் அதில்
அன்புடன்தோய்ந்தேமபத்மாகரமென்றதற்கோர்நாமதேயம்பண்ணினன் [ன்
தூயபொற்றாமரைப்பூக்களைச்செங்கையால்தொட்டெடுத்துக்கரை ஏறினான் த
நோயைவிலக்கமுளைத்தமருந்தினை நோக்கித்தனதுள்ளம் தேறினன்
௭ சுற்றியகாட்டைஅழித்துநிலத்தினைச் சுத்திசெய்துவரும் காலே ஞான
வித்துருக்கொண்டசிவக்கொழுந்தாகும் விமலன்திருமுடி மேலே
௮ பானுவின்கிரணம்ஆனதுமெல்லப் பரிசிக்கக்கண்டுளம் துடித்தான் தேவர்
கோனுமபபோதுதன்சந்திரவட்டக் குடையால்நிழல்செய்யப்பிடித்தான்
௯ அப்பொழுதேயொருரத்நவிமானம தம்பரம்தன்னில் இருந்து எழுந
திப்புவியில்சூர்யமண்டலமான திறங்குதல்போலே இழிந்து
௰ அஷ்டகஜங்களோர்எட்டுத்திசையிலும் முட்டிச்சுமந்துநின் றோங்கநால்
எட்டுச்சிங்கங்களும்கிட்டியவற்றேடெட் டெட்டுக்கணங்களும் தாங்க
௧௧ கோடியிரவிஉதித்ததுபோற்சொர்ன கும்பங்களுச்சியில் இலங்க வாகை
சூடுமிடவக்கொடிகளெட்டெங்கும் சோபிதமாகவே துலங்க

னுக்கிப்பொன்மேற்கட்டிமுத்துச்சரங்கள் தொடுத்தணி[illegible]லே ஒளி
தாக்கியஅவ்விமானத்தைமயன்தரச் சாத்தினன்செழுஞ்சூழ்[illegible] னூலே [சிந்
கங உம்பருலகுக்குச்சென்றவர்பூசைக் குபகரணங்கள்கொண்டுவந்தார் தெ
தம்பொற்கமலத்தில்ஆடிப்பிறப்பை அறுக்கும்விபூதியையணிந்தான் (ய்பில்
கச ,செய்யருத்ராக்ஷமணித்தாவடம்பூண்டு தேவர்கோன்ஆதரவுடுத்தான் மெ
யையரவாடும்பராபரனைப்பூசை பண்ணமுறைப்படி தொடுத்தான்
கரு சித்தமகிழ்நதுகுருவுடனேமறை செப்புமுறைமைபா ராட்டினன் ஆக
மத்தின்படிதன்மனம்வாக்குக்காயமொன் ருகஉறுதியை நாட்டினன்
கசு தேவிதன்விம்பத்துடனேபரிவார தேவதைகள்யாவும் பதித்தான் பதித்
தாவலுடன்ருத்ரமாதிமொழிந்தே அபிஷேகத்தைச்செய்ய மதித்தான் (சிவ
கஎ தேனுவின்பாலும்பஞ்சாமுதமும்கங்கா தீர்த்தமுதல்யாவும் சேர்த்தினன்
ஞானமிகுத்தபிஷேகாதியைச்செய்து நல்லபீதாம்பரம் சாத்தினன்
கஅ வாசம்மிகுந்தநற்கந்தமணிந்து மணிமாலைகள்பல பூட்டினன் துய்ய
ீதசுள்ளபொற்ருமரைமுதலாயுள்ள திவ்வியமலர்களைச் சூட்டினன்
ககூ தூபதீபநிவேதனமுதல்செய்து சோடசோபசாரம்புரிந்தான் பின்னு
மாபதியையடிக்கடிபிரதக்ஷணம் வந்துபணிநதெழுந் துவந்தான்

இந்திரன் சுந்தரலிங்கத்தைப்பூசைசெய்துதுதித்தல்·

விருத்தம்.

விதிமுறையால் பூசைசெய் தஷடாங் கத் தோடும்
மேலுயரும் பஞ்சாங்கத் துடனே தாழ்ந்து
குதிகொளுமானந்தவெள்ளம் கண்ணீ ராகக்
கொண்டுபிர தக்ஷணம்வந் துடல்கம் பிக்கக்
கதிதரும்நற் கரணமொரு மூன்றுமொன்ருக்
கலநதிருகை யஞ்சலித்து நிருத்தம் செய்தே
மதியணியும் கடவுளையன்புடனுள்ளத்தில்
மதிக்கின்ருன் வானவர்கோன் துதிக்கின் ருனே.

ஆனந்தபைரவிராகம் ஆதிதாளம்.

பல்லவி

உமாபதியேசரணம் சோமசுந்தர தயாநிதியேசரணம் என்னைரக்ஷிக்கும் உம

அநுபல்லவி

உமாபதியேசின்மயமா முனக்கொருவர் சமான மோஹரிபி ரமாதி தேடரிய
உமாப

சரணங்கள்

ஆரணங்கள் தேடும்மூல காரணுவனைத்தையுமுண்
டாக்கியும ளித்துமழித் தவனே
தாரணியி லேசகல ரூபமுமாய் நின்றவற்றில்
தாமென்றுமில் லாமல் கழித் தவனே
தீரமாயெல் லாமறிந்தும் யாவையும் மறந்தெப்போதும்
செழுஞ்சுட ராகவே செழித் தவனே

க்ஷீரமும்நெய்யும்போலுல கெங்கும்கலந்தும்கலவாத்
தேவனே என்பழி ஒழித் தவனே
சிலா பரிபாலா அற்புத லீலா யாரும் செப்பரிய சாமகான
லோலா ஆதிமூலா கரக பாலா விசாலானுகூலா காலகாலா உமாப

மங்கலம்மி கும்கடம்ப மாவனத்தனே கயற்கண்
மணாளனே ஈறில்லா முத லவனே
துங்கமா யெங்கும்பரவும்சுடரொளி விமானத்திடை
சுந்தர லிங்கமாய் எழுந் தவனே
அங்கஜனை நீறாக்கிய வண்ணிதிர்த்தி
ஆக்கமருந் தாய்முளைக்கும் பவனே
.....கள்நாயகனே லோகம் எங்கும்வியாபித்த உன்னை
யாவராலும் அறியப்படா தவனே
யோகா பேரனேகா என்னைநீகா மனத்தெண்ணிரிய புண்ணிய ஞான
யோகா இடபவாகாதிவ்வியதேகா பெண்பாகாவைபோகாசகன்மோகா
உமாபதியே

ஆகமப்ப டிதொழும்மார் க்கண்டனுக்கெந் நாளும்பதி
னாறுவய தளிக்கும் வாம தேவா
ஆகுமணு வுக்குளணு வாயும்மேரு வுக்குமேரு
வாயும்விளங் கிடும் மகா தேவா
ஏகமா யிருக்கும்பர்ம ரூபனே யுனையல்லாமல்
இதரதெய்வ மில்லை ஆதி தேவா
பாகம்மிகுந் திடும்பல யாகம்செய்மா தவருக்கப்
பலனுவந்த ளிக்கும் தேவ தேவா
பாரா தருள்தாரா தூறல்சீரா சூலபாணிமதிபூணிகொன்றைத்
தாரா பொருட்சாரா அலங்காரா உதாரா கெம்பீரா என்நேரான உமா

பூசுரரோதும் மறையின் முடியிலே நடிக்கும்பரி
பூர்ணமா நிறைந்த பரா பரனே
பேசும்பொரு ளாயும்அறி வாயும்அறி பவராயும்
பிறங்கியே நீடும் சூல தரனே
பூசையும் பொருளுமாகிப் புரியுமவ னுகியந்தப்
பூசைகொண்ட தற்கருளும் வரனே
ஈசனுமா கியென்போத வாசனை யுமாயென்பூசைக்
கிசைந்தெனை ரக்ஷிக்கின்ற சங் கரனே
ஈசா பஞ்சகோசா சர்வேசா பணிந்தேத்தும்அடியார்க்கருளும்
நேசா பாபநாசா கூடல்வாசா உல்லாசா பூதேசா மந்தகாசா உமா

இந்திரனுக்கு ஈசன் தரிசனம்கொடுத்து அருள்புரிதல்.

விருத்தம்

கங்கைமதி இலகும்மணி முடியும்காதில்
கதிர்விடுகுண் டலமும்அங் கதமும்நாக
கங்கணமும் செங்கைமழு மானும்நீல

கண்டமும் அம்பிகைபடர்மே னியும்முக்
சங்கும்இள மகையும்அருள் முகமும் கொன்றைத்
தாமமும்பூண் டுளங்கதிர்போல் ஐயன்மூல
லிங்கமதில் இருந்திந்த்ரன துதிகேட்டன்பு
நீட்டினார் எழுந்துருவம்காட்டி னாரே.

இன்னவகை தோன்றிமகிழ்ந் தருடகண னோக்கி
யாதுனத பேகைஷயுன ரயென்று ரப்போ
துன்னதுபெ ரும்பதிக்குள் வருமுன் நீங்கா
துறுபழியும் தொல்வினையும் துடைத்தா யுனறன்
தன்னடியா ருக்குளொரு தொண்டனாகத்
தக்கதுவே வேண்டுமென ப்பணிநதா னந்தப
பொன்னகர்வா சனுக்கிரங்கி யீச னன்பு
பொழிகின்று னதற்குவகை மொழிகின் றனே

அடாணா, சாபபு.

க வாசவனேருது ஆறுக்குளவசநத	காலம	வளர்
மாதங்களுக்குள் சிறப்பாகும் மேஷம்வி	லாசம்	
பேசரியதிதிக் குள்ளுயரும்பூர்ணை	யாமே	சலம்
பெற்றநக்ஷத்திரத்தில் சித்திரையாமுயர்	பூமேல்	
உ ஓதியஇந்நாளும் எந்தத்தினத்திலே	சேரும்	அஃ
துத்தமமாகிய சித்திராபூர்ணையில	நேரும்	
தீதையகற்றும் எமதுதலம் தனை	நாடி	முத்தித்
தீர்த்தத்திலேமகிழந் தாடிமகிமையைக்	கூடி	
௩ நேரொளிபொற்று மரைமலர்கொயதன்பி	னாலே	மூல
லிங்கவடிவாம் எமைபபூசைபணணத	னாலே	
ஆரும்முந்நூற்றறு பத்தைநது நாளும்	தப்பாமல	பூசை
ஆற்றும்பயனை அடைவாயதுவு	மல்லாமல்	
ச அந்நாளில் செய்யும் ஜபஹோம தர்ப்பண	தானம்	தர்ச
னாதிமுதற்செய்வ தாலேயகனுமஞ்	ஞானம்	
பன்னாளில் செய்திடும் பாவஙகளிலலாமல	போகும்	பூசை
பண்ணிடில்தேசு புகழுமுதலாவிர்த்தி	யாகும்	
ரு இபபோதமரரு டன்விண்ணு லகத்தில்	பரிவாய்	புகுந்
தெப்போதும் போலே சுவர்க்காதிபத்தியம்	புரிவாய	
அப்பாலயன்மால் முதற்பலதேவராச	சிறப்போர்	பதத்
தாசையுமற்றே யுயர்ந்த நல்வீடுனைக்	களிப்போம்	
சு எந்தமக்காகநீ சாத்தும்விமானததுக	கிலங்கும்	பெயர்
இந்த்ரவிமானமெனா றுன்தன்பேரொளிறைக்கும்	விளங்கும்	
இந்தப்பதிக்கழி வில்லைபயிரளயத்	தாலே	புரத்
தெந்தொண்டர்மூவர்எரிக்குட்பிழைந்தது	போலே	

இந்திரன் விடைபெற்றுக்கொண்டு தேவலோகத்துக்குப்போதல்.

விருத்தம்

விடையருளீ சனைப்பணிந்து புளகப்போர்வை
மெய்க்கணிந்தஞ் சலிக்கமலம் தலைமேல்வைத்துக்
கடைதிறந்தா னந்தக்கண் ணீர் துளும்பக்
சாக்ஷிதரும் ஐயன்மொழி கருத்துட் கொண்டே
உடையவனை க்கினைநாடிப்பிரிவாற்ருமை
உன்னிவிமா னத்தைவளை ந துளம்பூரித்து
நடைபெயர்வா னவருடனே சென்றுசொர்க்கம்
நண்ணிஞன் நூறுபத்துக் க

தாலாட்டு, ரூபகம்.

க அமராவதி நகர்வீதியில் அனைவோர்களும் மகிழ
இமையோருடன் முனிவோர்களும் இசைந்தேமறை புகழ
உ மந்தாரமும் சந்தானமும் மலர்மாரிகள் தூற்றச்
சந்தோஷமா விணஞடர்கள் தாளில்முடி சாத்த
ங வேலார்வரி விழிமங்கையர் வெண்சாமரை வீசக்
கோலாகல மொடுகின்னரர் கூறுமிசை பேச
ச கயலூர்விழி உமைநாயகன் கருணைக்கடல் ஆழ்ந்தான்
நயமாம்பழை முறைசெய்துவிண் ணுேடோருடன் வாழ்ந்தான்

பலசுருதி விருத்தம்.

இந்திரன் பழியைநீக்கும் இந்தலீ லையைமொழிந் தோர்
சிந்தையில் உவந்துகேட்போர் சிறந்தறம் செல்வ மோங்க
நிந்தையாம் பாவம்நீங்கி நிரோகரா யிருப்பதல் லால்
சந்ததம் சுபமுண்டாகத் தழைத்துவீற் றிருப்பர் தாமே

க வது இந்திரன்பழிதீர்த்த திருவிளையாடல்முற்றும்.

ஆக விருத்தம் — (உ0) சந்தம் — (க) கீர்த்தனை — (அ) தரு — (சு) ஆக ௩டு.

௳

வெள்ளானைச்சாபந்தீர்த்த படலம்.

அவதாரிகை விருத்தம்.

விழியொரு மூன்றுடையோனிந்திரனை விருத்திரா சுரனைக்கொன்ற
பழிதொலைத் தாடல்செய்த பாங்குமுன் னுரைத்தேனிப்பால்
மொழியும்வெள் ளானைக்கந்நாள் முனிவரன் கொடுத்தசாபம்
கழியுமா றருளிச்செய்த கதையினை விளம்புவேனே.

ரன்பவனிவர துருவாசமுனிகாணுதல்.

காசியிலே துர்வாசமுனிவர்தம்பேர்
கண்டிலிங்கம் தனையமைத்தர்ச் சிக்குங்காலங்
கீசுரனதன் திருமுடியின மேல்நின் றபபோ
தெழுந்தொருதா மரைப்பூவீழ நிடக்கையேந்தி
நேசமுடன் தமதுவிழிமுடியுரததில்
நிகரிலா உவகையுடன் அணைத்தெழுந்து
மாசகலும் பொனனுலகில பருகுங்காலிந்தரன்
வானவர்சூழ்ந் திடப்பவனி வருகின்றானே

பைரவி, ஆதி.

பல்லவி

அந்தஇந்திரன் பவனிவரும்சிறப்பின் அதிசயம்கேளும் முனிவோரே

ஐந்தருவும்தேனுவும் சிந்தாமணியும் நாளும்
சிந்தையிலுணர்ந்துதெ ரிநதளிக்கம கிழும் அந்த

சரணங்கள்

க சுற்றிவிசயசங்கத் தொனி மீறச் சண்டை
தொடுத்தசுரரைக்கொன்ற இசை மீற
வெற்றிமாலைபூண்டதோள் வலி மீறச் சூழும்
விண்ணோராம்சேனைக்கடல் ஒலி மீற
பத்தியுடனேயஷ்ட மங்கலங்க ளேந்திகைப்
பல்லாண்டும்வேதமும் பக்கங்களில கதிக்க
மத்தியிலேதனது நகரத்தினர் மதிக்க
வருகுமதிசயங்கண் டனைவர்களுந் துதிக்க அந்த

உ இருநாலுதிக்கிலும் படை யிலங்கக் கலலென
றிசைந்தஓசையுடன்பல லியம் முழங்கப
பெருகுமமுதரசமென விளங்கத் தெய்வப்
பெண்கள்பாடுமிசை செவிக் கிணங்கப்
பரவும்சேனை ஆகிய கடலிலநிலைமை கொண்டு
பத்திபத்தியாகவே தத்தித்தத்திப்பு ரண்டு
வருமலைகள்போல்வெண்சா மரைக்கூட்டங்கள சூழ்ன்று
வரிசைவரிசையாக அசைப்பவதனைக் கண்டு அநத

ந சங்குலவியகடல்நடு வாலே நாவாய்
தனைச்செலுத்தும்மீகா மனைப் போலே
திங்களையொத்தநடை யொருக காலே நிழல்
செய்யவுயர்ந்தவெள்ளா னையின் மேலே
தங்கும்விண்ணுடர்தனித் தனியாய ருகில் வந்து
தங்கள்தங்கள்மனதுக் கிசைந்தகாணிக்கை தந்து
செங்கைகளைஎடுத்துக் குவித்துக்கொண்டிரு ந்து
சேவடியில்தொழுது காணமிகப்ப ணிந்து அந்த

துர்வாசமுனி இந்திரனைக் கோபித்தல்.

விருத்தம்

அமரர்கோ னிந்தவிதம் பவனிவந்தான்
அரியதுரு வாசரும்கண் டாசிகூறித்
தமதுகையி லிருந்தார்க்கும் கொடுக்கொணாத
தாமரைப்பூ வினைக்கொடுத்தா ரந்தப்பூவை
மமதையுடைந் தொருகையை நீட்டிவாங்கி
மதமிருமை ராவதயா னையின்மேல்வைத்தான்
தமருடைக்கை யாலதனைக் கீழேதள்ளித்
தாளினால சிதைக்கமுனி தாம்கண்டாரே

இதுவுமது.

மண்ணிலிந்த வாறுமலர் சிதையக்கண்டு
மன்மதனை யெரித்தசிவ னுடையநெற்றிக்
கண்ணிலிருந் துண்டானதீப்போலேதம்
கண்ணிலிருந்துதிர்ந்திடவே கோக்கிக்கோபம்
பண்ணியரு கினிலுள்ள விண்ணோரெல்லாம்
பயந்தோட வார்ப்பரித்து வலனைவென்ற
திணையிகும் இந்திரன்முன் அடர்ந்துசீறிச்
செப்புவார் உருத்திரனை யொப்புவாரே

சங்கராபரணம், சாபு.

என்செய்தாய் இந்திரனேநீ என்செய்தாய்

அநுபல்லவி

சஞ்சமலராயனும் கண்ணனும் பணிந்தேத்த
நஞ்சையுண் டருள்செய்த நாதன்ம லரையிகழ்ந் தென்

க புள்ளியம்புலித்தோலுடுதது வெண்மை பூண்டெழில்மிகுநத எருத்துமிசை
நள்ளியசிவனைச்சிந் தித்து அளபை நாடுமடியார்கள் வெறுத்துத்
தள்ளிநிந்தித்தசெலவத் தருக்காலகண் தெரியாமல்
உளளாருந்தவத்தோரென் றோர்நதெண்ணிப் புரியாமல் என்செய்

உ இமையோர்தரும்காணிக்கைமதித்து எமநீசன்மணிமுடிமேல்பதித்துவந்த
கமலமலரையகங் கரித்து ஒரு கையால்வாங்கியவ மதித்து
மும்மதம்பொழியும்யானை முதுகின்மீதினில் வைக்க
மமதையினாலது மண்ணில்தள்ளி மிதிக்க என்செய்

௩ திசைமுகன்படைக்கின்றமுப்பு மனைவசெந்திருமால்காக்கும்காப்பும் துட்ட
அசுரரைவென்றகி தாப்பும் கொண்டு அமரர் சூழுமுன்னிறு மாப்பும்
பசுபதி யைப்பூசித்த பலனென்று குறியாமல்
இசையும் பரகதிக்கும் ஹேதுவென் றறியாமல் என்செ

இந்திரனுக்கும் ஐராவதத்துக்கும் துர்வாசமுனி சாபங் கொடுத்தல்.

மன்னுமுனி வரன்வெகுண்டிந் திரனைச் சீறி
வழுதியர்க்குள் ஒருவன்வளை தடியா லிந்திரன்
சென்னிசிதைந் திடவும்வெள்ளை யானை காட்டில்
செறிந்தகளி றாகவுமே கடவ தென்று
துன்னியசா பங்கொடுக்கத் தெரிந்து தேவர்
சூழ்ந்தரசும் யானையும்நீங் குற்ற காலே
அன்னவர்தம் பொன்னடியில் பணிந்தீ திப்போ
தகற்றுமென அவர்க்கிரங்கி யருள்செய் வாரே.

பரமசிவன் சேஷகிந் தனையெஞ் ஞான்றும்
பரிகாரத் தாலகலா தானு லிந்திரன்
சிரமளவா னதுமுடிமட் டாகிச் சாபம்
தீர்ந்திடவே கடவதுவெள் ளானை காட்டில்
கரியதுவாய் நூறுண்டு சென்ற பின்பு
கழிந்தைரா வதமாகக் கடவ தென்று
வரமுனிவர் விண்ணவரை நோக்கி யாங்கே
மறுசாபம் அளித்திருக்கை மகிழ்ந்துற் றாரே.

திபதை—மோகனம், சாப்பு.

க மாவலரேதவம் நீளும் தரு வாசரகன்றபின் கேளும்
தேவர்கள்பொன்முடி பங்கப் பட்ட செய்கைபின்சொல்வோம் துலங்க
உ அஞ்சிவெள்ளானை விண்ணுடு விட் டறிவழிந்து துக்கத் தேடு
அஞ்சனக்குன்றெனச்சோர்ந்து காட் டானையின்கூட்டத்தில் சேர்ந்து
ங தூயவெண்கொம்பிரண் டாக வலி தோற்றுத்தெய்வத்தன்மை போக
செய்யபூமுல்லை நிலத்தும் வனம் சேர்ந்தமலைபல் தலத்தும்
ச ஓடியலைந்துடலிளைத்து நலம் உற்றிடாதுள்ளம் களைத்து
வாடித்தவிக்குமக்காலே அந்த மாமுனிதன்னரு ளாலே
ரு ஆண்டொருநூறுமகன்று கடம் பாரணியர்தனில் சென்று
வேண்டும்பொற்றாமரைகண்டு கரை மீதிலேநின்றன்பு கொண்டு

ஐராவதம் சாபம்நீங்கிச் சுந்தரேசரைத் துதித்தல்.

விருத்தம்

மண்டலத்தி லுலைந்துபொற்றா மரையைக் கண்ட
மாத்திரத்தி லறிவுவந்தத் தீர்த்தம் தோயப்
பண்டுருவா கவுமீசன் கருணை யால்முன்
பரானந்த லிங்கமுறக் கையா லந்நீர்
மொண்டபிஷே கம்புரிந்து பூசை செய்ய
முன்னவனவ் வானையைப்பார்த் தனத பேசை

விண்மேரையென் றருளமுன்னே நடந்த வெல்லாம்
விளம்பியதோர்ந் திடும்தவத்தில் மேவு வீரே.

தரு—மத்தியமாவதி, சாப்பு.

க சாமிசரணம் சரணமபயம் தரும்சோம சுந்தரனே அரி
பூமன்வருந்தியும் காணருஞ்சீருறும் பூலோக சுந்தரனே
உ என்னவரம்வேண்டு மென்றெனைக்கேட்கவிசைந்தாயேசுந்தரனே ஐயா
உன்னையடைந்து தொழுதவர்க்குக்குறை உண்டாமோ சுந்தரனே
ங தீராவினைக்குத்தெய் வமேதுணையென்ற செய்திநற் சுந்தரனே
தாரணிசொல்லும்படிக்கென்றன்சாபம் தவிர்த்தாயேசுந்தரனே
ச இன்பமெனக்குற வாகுமிருநால் இபத்துடன் சுந்தரனே
தொன்பதுபோரா யடியேனும்கூடி ஒருமையாய்ச் சுந்தரனே
ரு சந்ததமுன்பொன் னடிபிரியாமலுன் தன்முன்னே சுந்தரனே நாளுட்
இந்தவிமானம் முதுகில்சுமக்க எனக்கருள் சுந்தரனே

ஐராவதம் விடைபெற்றுத் தேவலோகம் செல்லுதல்.

கட

போற்றும்வெள் ளானைக் கிரங்கியென் பத்தன் புரந்தரன் தனைச்சுமப் பதுவே
புகமெனச் சோம சுந்தர மூர்த்தி புங்கமா வரங்கொடுத் தனுப்ப
மேற்றிசை போய்த்தன் பெயர்க்கொரு தடமும் விநாயக னையும்பர மனையும்
விளககவங் கமைத்தர்ச் சிக்கையில் மகவான் விடுத்தது துவரைமுன்னனுப்பி
கீழ்த்திசையினில்தன் பெயர்க்கொருதலமும் கேளுமிந்த்ரேச்வர மென்னும்
கிரிச்சிறுகரிந்தோன்பெயர்க்கொருதலமும்கிளர்நதிடவமைத்திறைஞ்சுங்கால்
மாற்றியும் ஆதரமைக்கவா னடைந்திம் மாநிலத் துலைந்ததும் கடப்ப
வனத்தனால் தனது சாபநீங் கியதும் வகையுடன் வணங்கிவிண் டதுவே.

விருத்தம்.

கருதியயி ராவததீர்த் தம்ப டிந்து
கணேசனார னையும்பணிந்தி யானை செல்லும்
இருவழிபோய் வையைபடிந் ததன்தென பக்கத்
திந்திரே சனைப்பணிந்தோர் இகத்தில வாழ்ந்து
சுரபதியீ ரெழுவர்பட்டம் வரைக்கும்விண்ணில்
சுகித்ததிகழ்ந் தானுலகில் செல்வா ரீதை
உரைசெய்வர்கேட் பவர்பவநோய் நீங்கியென்றும்
உறுதிபெறும் செல்வமடைந் துறைகுவாரே.

ஆக விருத்தம்— கூ, தரு— உ. திபதை— உ.

இரண்டாவது வெள்ளானைச்சாபம்தீர்த்த திருவிளை யாடல்
முற்றும்.

ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசர்திருவடிகளேசரணம்.

———(...)———

உ

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது

திருநகரம் கண்ட படலம்·

———(*)(*)———

அவதாரிகை—விருத்தம்.

விடர்திகழ் கண்டத் தெந்தை வெள்ளிவா ரணத்தைச் சூழ்ந்து
தொடர்ந்திடும் முனிசா பத்தைத் துடைத்தவா றுரைத்தே னிப்பால்
கடம்பமா வனத்தை மாற்றிக் கடிகொள்மா நகர மாகத்
திடம்பெறக் கண்ட வாடற் சிலதெடுத் துரைசெய் வேனே.

தனஞ்சயன் கடம்பவனத்தில் மூலலிங்கத்தைக்கண்டுபூசித்தல்·

மன்னிவரும் சுரும்பினங்கள் பயில் கடம்ப
மாவனத்தின் கிழக்காக மகிமை யோங்கும்
தென்னர்குல சேகரனென் றொருவன் செங்கோல்
செலுத்திமுறை செய்திருக்கும் மணவூர் தன்னில்
முன்னவன்சே வடிக்கடிமை பூண்ட மெய்யன்
முக்கியமாச் சிவபூசை செய்யும் தூய்யன்
நன்னிதிசேர் வசியகுலோத் துங்க னும்சொல்
நயனென்பான் சிறந்ததனஞ் சயனென் பானே.

திபதை—புன்னுகவராளி, சாப்பு.

க கல்லியாணவூரிலிருந்துநெடுநாளாக் கப்பல்வியாபாரம்பண்ணுவான் மிக
உல்லாசமாகச்சிவனடியாருக் குதவியேதக்கதென் றெண்ணுவான் [வன்
உ சீலத்துடன்வாணிகம்செய்யவேண்டுந்திரவியத்தைக்கொண்டுநடந்தான்அ
மேலைத்திசையைக்குறித்துத்தனதூரை விட்டுநெடுந்தூரம் கடந்தான்
ஙா தூரத்தொலையிலிருக்கும்வளம்பதி தோறும்புகுந்துசஞ்சரித்தான் பல
சீனரத்தரும்வாணிபத்தைச்செய்துதேவ தேவன்நாமத்தையுச்சரித்தான்
ச நேமமுடனேதனதுபதியை நினைந்துவரும்வழிக் கொண்டான் அன்று
ஸோமவாரவிர்தமானதனல்நடை சோர்ந்திளைப்பாகவேசென்றான் [மறைந்
ரு செல்லத்தடத்தில் கடம்பவனத்திடைச் சேர்கையில்சூரியன் மறைந்தான்
தல்லுக்குள்ளேதனித் தஞ்சிவழிதெரி யாமலக்கானகத் துறைந்தான்
சு பக்ஷிமிருகம் முதலாத்தமது பதியிலடங்கியங் குறையத் தனக்
கக்ஷிதெரியாதிருட்டுக்குள்நீர்ச்சடை அண்ணலிடத்தன்பு நிறைய
எ தாங்குமிருநாலு யானைப்பிடரியில் தன்னுயிரங்கதி ராலே மிக
வீங்குமிருளைத்தூரத்தும்ரவிபோல் விமானம்கண்டானெதி ராலே
அ கண்டவிமானத்தமரும்திருநீல கண்டனைக்கண்டிரு தயத்தில் அன்பு
மண்டுமுவகையுடனேபணிந்தெழு வானவர்தச்ச மயத்தில்

௯ சோமவாரத்தினமென்றுயரும்சோம சுந்தரலிங்கத்தைப்பரிவால் அவர்
யாமமொருநாளும்பூசித்தருச்சனை ஆகமத்தின்முறை புரிவார்
௰ அண்டர்கள்வந்துதொண்டனறிய அமலனும்ஞானக்கண் ணீந்தான் திரி
புண்டரநெற்றித்தனஞ்சயனுமையன் போதங்கொண்டண்டரைச்சார்ந்தான்
௧௧ தானும்செழித்தபொற்றாமரையாடித் தனதீசன்கோயிலையடுத்தான் உயர்
வானவர்கையிலஅபிஷேகத்துக்குள்ள வாசவருக்கங்கள் கொடுத்தான்
௧௨ மாமண்டபத்திலிருந்துதவள மதிச்சடையோன்பூசையாற்றினான் திகழ்
சோமசுந்தரக்கடவுளைக்கும்பிட்டுச் சுற்றிவலங்கொதிர் ஏத்தினான்

தனஞ்சயன் தான்கண்டதைக் குலசேகரனுக்குத் தெரிவித்தல்.

தனஞ்சயனிவ் வாறுபூ சித்தெ ழுந்தான்
தன்வினையு மிருளுமங்கே நீங்கக் கண்டான்
இன்பசெறிந்த விண்ணவரைக் காணுன் முன்னே
இலங்கியதோர் விமானம்கண் டதிச யித்தான்
தனம்தனியே மணவூர்க்கு வந்தான் செங்கோல
தரித்தகுல சேகரபாண் டியன்பால் நீப
வனம்தனில்தான் கண்டவண்ண மெல்லாம் சொல்லி
மகிழுவான் விவரமுடன் புகழு வானே.

சௌராஷ்டிரம் சாப்புதாளம்.

பல்லவி

கண்டதைக்கே ளாய்குலசே கரபாண்டி யராஜனே

அநுபல்லவி

வண்டினம்ப யில்கடம்ப மாவனத்தி ரவில்கணுல் கண்ட

சரணங்கள்

௧ நான்வரும்போ தந்தக்கானம் நண்ணிமிகக் கொண்டேன்தீனம்
பார்வநாச ரைத்தி யானம் பண்ணுமுன்னே ரேவி மானம் கண்ட

௨ அமரர்வந் தொருக் காலே அர்ச்சனைசெய் தார்மேன் மேலே
நிமைக்கும்கண் ணின்முன்னாலே லிங்கக்குறி யையனை பாலே கண்ட.

௩ சுவணத்தா மரை யாடி சுந்தரனைத் தாழ்ந்து தேடி
சிவபூசை செய்தேன் நீடி செங்கதிரு திக்க நாடி கண்ட

சுந்தரேசர் கடம்பவனத்தில் பட்டணங்கட்டும்படி ஆஞ்ஞாபிக்க அரசனைக்கண்டு துதித்தல.

விருத்தம்

சிவபத்தி மானிவகை சொல்ல மேற்குத்
திசைநோக்கிப் பணிந்தரசன் இருக்கவந்நாள்
தவமுனிவர் தேடரியோன் சித்த ராகத்
தனியிரவில் அவ்வரசன் கனவில் தோன்றி

உவமையிலாச் சசிகுலசே கரனே இம்மேற்
குயர்கடம்ப வனத்திடையெம் விமானஞ் சூழ
நவமதாய் உனக்கொருபட் டணஞ்செய் யென்று
நடந்திட்டார் தமதிருக்கை யடைந்திட்டாரே.

கனவுகண்டாங் கெழுந்தரசன் அமைச்சர் மற்றோர்
களுக்குமுரைத் துச்சேனை யுடன்க டம்ப
வனமடைந்து செய்யபொற்றா மரைநீ ராடி
மனமகிழ்ச்சி பூண்டுவிமா னத்துள் மேவித்
தனிவளரும் மங்கைபா கனைப்ப ணிந்து
தனதுடலம் கம்பிக்க வந்து காயம்
மனமொழியொன் றாகநின்று னந்தக் கண்ணீர்
வடிக்கின்றான் துதித்தெதிரே நடிக்கின்றானே

செஞ்சுருட்டி ஏகதாளம்.

பல்லவி

சாமியுன் — றன்திருவடி — சரணம்

அநுபல்லவி

தாமோதரனும் அயனும் தேடிய மாமலரடி முடியும் நீடிய — சாமி

சரணங்கள்

க ஏகனே சரணம் விடை வாகனே சரணம்
நாகபூஷண னேகயற்கண்ணி பாகனேநித்திய தேகனே என்றன் — சாமி

உ அரகர சரணம் திரிபுரகர சரணம்
வானேபரசு தரனேசோமசே கரனேமெஞ்ஞான பரனே என்றன் — சாமி

ந ஈசனே சரணம் கூடல் வாசனே சரணம்
பூசனையன்பர் நேசனேபவ நாசனேபஞ்ச கோசனே என்றன் — சாமி

ஆரசருணைப்பக்கட்டளைவெட்டியறிந்தல்.

விருத்தம்

துதித்துமறை பரவரியா தனதுபாதம்
துறவிகடகல் லாமலிநத மண்ணையாண்டு
கதித்தநா கெய்தியுழல் ஏழையேற்குக்
காணவெளி தோகருணைக் கடலேயன்பு
பதித்தெனது குலமுழுதும் அடிமைகொண்டு
பாலிக்க முனைத்தபரஞ் சுடரேயென்று
மதித்தகுல சேகரபாண் டியனங்கோர்பால்
மன்னினன் அமைச்சரொடும் துன்னினனே.

திபதை— புன்னாகவராளி, ஆதிதாளம்.

க இருந்தபின்மகாராசன் ஆக்ஞையால் இசைக்கிடுமந்திரிகளியம்பும்வண்ணம்
விரைந்தெழுந்தேவலர்கள் துறைதொறும் மேவியனுப்பநெடுங்காட்டைவெட்டி
உ அதிசயநகரமைக்கச் செயுந்தொழி லாட்களளவில்லாம லேயெழுந்து
உதிபோலார்ப்பரித்துக்கொண்டுசென் றெண்கொடுவாளும் கோடாலிகளும்.
ந வகிக்கின்றதோளினரும் அரையினில் வைச்சுவரித்துக்கட்டும் கச்சினரும்
மிகக்கறுத்திரும்பினைப்போ லேயொளி விளங்கியதேகத்தை யுடையவரும்
ச பூட்டியவாரிறுக்கும் செருப்பினைப் பூண்டிடும்கால்களை யுடையவரும்
காட்டினைவெட்டியழிக்கப் போவதும் கடுத்துவருவதுமா கியவொலியும்
ரு மட்டிலாவண்டொலிக்கவும் மரங்களை வளைந்துதலைநடுங்கவெட்டுமொலியும்
வெட்டுகிறவர்களொலியு மம்மரங்கள் மேலும்சத் தித்துமுறிகின்றவொலியும்
சு முறிந்துவீழும்மொலியும் நீருண்ட முகிலொலியினுமதி கமாயொலிக்க
செறிந்தமலரும்தேனும் சிந்தவொலி செய்துவயிரமுள்ளவன்மரங்கள் [தென
எ கவைகளொடியும்படிக்கு விழுந்தது களத்திலகொம்பொடிந்தானை விழுந்த
அவிடத்திலுறுமளிகள் பாங்குள்ள ஆரணியம்சோலைகள்சென்றடைந்திடவே
அ பறவைகள்விண்ணிலிருக்கும் கற்பகப் பசுந்தருக்களைநாடிப் பறந்தோட
இறைவன்வரக்கண்டோடும் குறும்பர்போ லேபலமிருகங்கள் ஓட்டம்பிடிக்க
கூ மெய்யுணர்ந்தவர்மனம்போல் தெளிவுற வெட்டியக்காட்டினை வெளியாக்கி
ஐயனடியார்பிறப்பை வேருடன் அகற்றல்போல்வேருடனகழ்ந்தனரே தான

குலசேகரபாண்டியன்ராசன்சொற்படிநகர்அமைத்தல்.

ஏவலர்கள்வனத்தையிவ்வா றழித்திடப்பார்த்
தினிநகருண்டாக்குவதெவ் வாறென்றெண்ணிக்
காவலனமந்திருடன்யோ சிக்குங்கால்முன்
கனவில்வந்த படிசித்த வேஷம் பூண்டு
பூவடியிற் திலம்படிய மெய்யில பூதி
புனைந்தப்பை யும்கரத்தில் விளங்க வந்த
தேவனைக்கண் டடிபணிந்தா சனமீந் தன்பால்
தேற்றினான் மெய்யுணர்ந்து போற்றினானே.

தென்னவனன் புக்கிணங்கும் சித்தர் தாமுன்
செப்பியமுன் னூல்சார்ந்த நூல்சொல் வண்ணம்
வன்னமிகும் ஆலயமும் நகரும் திவ்ய
மண்டபங்கோ புரங்கள்சுற்று மதில்க ளாதி
இன்னபடி செய்யெனவே மொழிந்திம் மென்றுங்
கேகிமறைந் திடக்குலசே கரனும் பாண்டி
மன்னவனம் முறைசிற்ப நூல்கொண் டெல்லை
வகுத்திட்ட [illegible] நகரமைக்கத் தொகுத்திட் டானே.

கல்லியாணி ரூபகம்.

பல்லவி

கதம்பவனம் தனைவிளங்கும்நகரமாகவே சந்திரகுலசே
கரபாண்டிய ராசன்செய்தனன் கேளும் நாளும் நீளும் எழில் கதம்ப

அநுபல்லவி

நிதம்பெருகும் இளம்பிறை சூடிய நித்தன்நிருமலன் சித்தரூபத்தைக்கொண்
டிதம்பெறச்சொன்னவாறேவளைநகரதுலகெங்கும்விளங்கும்சனங்கள்புகழ்ந்திட
கதம்ப

சரணங்கள்

க மண்டலமெய்க்கும் மறைநவிலும்பத்ம மண்டபமுமர்த்தமண்டபமும்மஹா
மண்டபமும்ஷட் பதப்பீடமும்நிர்த்த மண்டபமும்திருநாள்கள
கொண்டமண்டபமும்
பண்டைமகம்பயில்சாலைதிருமடைப்பள்ளியும்சூழும்பரிவாரதேவர்கள்[யிலும்
அண்டிடுங்கோயிலுந்தொண்டரினத்துக்கருட்கொண்டளிக்கும்கயற்கணிகோ
கதம்பவன

உ ஒத்தபொன்மாளிகைபெற்றதிருமதிலும்கொடிகள்திகழும்மண்டபங்களும்
சுத்தவெண்மாளிகை களும்நக்ஷத்ரங்கள். சூழும்சிகரங்கள்மேவும்
பொற்கோபுரமும்
சித்திரங்கள்தீட்டும்கடைத்தெருக்களும் சித்ரகூடமும் திருவிழாவீதியும்
மெத்தநாற்சநதி யகழ்அரணங்களும் மேடையும்நாடகம் ஆடரங்காதியும்
கதம்பவன

ங ஆதிமுனிவர்க்கிருப்பிடமும்பிர மாலயமும்ராசவீதியும்வைசியர்
வீதிகளும்நன்மை தங்கும்வேளாளர்கள் வீதிகளும்பலவாகும்
குடித்தெருவும்
மோதும்கரிபரிதேர்கட்கிருக்கையும் முழங்கிடும்கல்விச்சாலைகளும்துய்ய
சாதுஜனங்கட்கறுசுவையோடன்ன சத்ரமுப்பத்ரண்டறத்துடனேமுற்றும்
கதம்பவன

ச மங்கலபேரிகள்தங்கும்கொத்தளமும் மாமலரோடையும்வாவியும்கூபமும்
தெங்குறுநந்தவனங்குளிர்சோலையும் திருநகருக்கழகு பெறும்வளமும்
தங்கும்நகரின்வடகிழக்குத்திசை தன்னிலதனக்கரணமனைமுதலாக[ய்க்க
புங்கமுடன்சிற்பநூலின்முறைப்படிபூமிக்குளளேமிக்கவாய்முக்கியமாமெ
கதம்பவன

மதுராபுரியென்று நகர்க்கு நாமஞ்சூட்டுதல்.

விருத்தம்

தென்னனிந்த வாறுநகர் அமைத்துச்சாந்தி
செய்யவென்று லோசிக்கு மளவிலீசன்
தன்னுடைய வேணியின்மீ தமைந்ததிங்கள்
தண்கலையின் அமிர்தமதைச் சொரிந்தார்சென்றம்

முன்னவன்தன் திருவடிசேர் அன்பர்தாமும்
முதல்வனெனவிளக்குதல்போல் நகரமுற்றும்
தன்மயமாக் கியதறிந்தவ் வாறேநாமம்
சாத்தினன் பலகுடிகொண் டேற்றினனே.

சாரங்கம் சாப்பு.

பல்லவி

மதுராபுரமெனப்பேர் சூட்டினன் நாலு வருணத்தாரையும்நிலை நாட்டினன்

அநுபல்லவி

சதுரானனன்மாயன் தேடும்கடவுளணி
மதியாரமுதால்சாந்தி விதியாலபுரிந்ததாலே மதுரா

க ஏலும்கீழ்வாயில்சாஸ்தாவும் தெற்கில் இடும்வாயில்சத்தமாதாவும் [ம்
மேலைவாயிலபின்னைபர்த்தாவும் எண்தோள் விளங்கும்காளிவடவாய்த்தாவு
கோலநகரைக்காத்துக் கொள்ளும்படிக்குசசேர்த்துச
சீலமுடனேநாலு திசையிலும்சென்றுபார்த்து மதுரா

உ சோமசுந்தரேசரைநாளும் அடி தொழுதருச்சனைசெய்யக்கேளும்
நேமமுடன்காசியில்வாழும் புண்ணிய நெறிமுனிவோர்களையும் நீளும்
தாழுவந்தேயாதி சைவராகியமித்துப
பூமிபுகழுமந்தப் புரந்தனிலேதாபித்து மதுரா

ந உத்தமக்குலக்குடி நாலும் அதில உற்பவக்குலக்குடி நாலும்
மற்றக்கோளகர்முதலேலும் மூன்று வகுக்கும்குலக்குடியெககாலும்
தத்தம்மார்க்கத்தினில் தவறுதொழுகி யார்களும்
சித்தமுவந்திடவே திகழநின்றோங்கத்தெய்வ மதுரா

மாமதுரா புரம்செழிக்கச் செய்து கூடல்
வள்ளலுக்குச் சிறப்பொடுபூ சனை நடத்தி
பூமியையா ருயிரமாண் டிந்தி ரன்போல்
புரந்துமல யத்துவசன் தனைப் பெற்றுத்
தாமமுடி சூட்டிவைத்து மூல லிங்கம்
தனில்குலசே கரனைக்கிய மடைந்தா னீதை
யேமொழிவோர் கேட்பவர்பா வம்போய்ச் செல்வம்
இணங்குவார் சிவனடியின் வணங்கு வாரே.

———(0)(0)———

விருத்தம் (ഥ) தரு (௪) திபதை (உ)

திருநகர்கண்டதிருவிளையாடல்முற்றும்.

ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசர்திருவடிகளேசரணம்.

———(*)———

உ

சிவமயம்.

நான்காவது

தடாதகைப்பிராட்டியார் திருஅவதாரப்படலம்.

அவதாரிகை — விருத்தம்.

தேவர்கள் எல்லாம் போற்றும் தேவனே பெரும் கடம்ப
மாவனம் நகரம் செய்த வளம்சில வுரைத்தே னிப்பால்
பூவுல கின்றுள் தென்னன் புதல்வியாய் அவதரித்துக்
காவலன் செலுத்தும் செங்கோல் கைக்கொண்ட தினிச்சொல் வேனே.

மலயத்துவசன்ராஜ்யம்ஆளுதல்.

விருத்தம்.

பார்விளங்க வரும்குலசே கரபாண்டிய ராசனருள் பால னென்னும்
பேர்விளங்க வருமலயத் துவசபாண் டியராசன் பெருநா டெங்கும்
கார்விளங்க முறைசெய்து வடமொழிதென் மொழிக்கெல்லை கண்டு தர்மச்
சீர்விளங்க உலகமெலாம் தன்குடைநீ ழலில்வளரச் செய்தாண் டானே.

சாவேரி, சாப்பு.

பல்லவி.

பாரைராசர்க்கு ராசன்மலயத்வச பாண்டியன் புரந்தானே

அநுபல்லவி.

சீருயரும்திரு ஆலவாய்க்கடவுள்
திருவடிமலர்தேடித் தினம்தோறும்பணிந்திந்தப் பாரை

சரணங்கள்.

க அரனாலயத்துக்கு நித்தியநைமித்தியங்கள் அனுதினமும்வளர்ந் தேறவே
அசுவமேதயா காதிமகங்கள்செய் தந்தணர்ஆசிகள் கூறவே
பெருகும்மாதங்கள் தோறும்மும்மாரிகள் பெய்யக்கண்டம்புவி தேறவே
பிறக்கும்வச்சரம் தோறும்முப்போகத்தின் பெருமையால்வளம் மீறவே
இந்தப்—பாரை

உ தருமம்நாலுபாதத் தோடேநடந்துவரத் தனதுகோல்முறைகோ ணாமலே
சாதுர்வருணமும் தங்கள்தங்கள்நெறி தவறுதலென்றும்பூ ணாமலே
திருநாலிருவரும் தனதரண்மனைவிட்டுச் செல்லமனசிற்றே ணாமலே [மலே
திடங்கொண்டாறிலோர் கடமைகொண்டுயர் செம்பொன்னுக்கெல்லைகா ணா
இந்தப்—பாரை

ந ஆகண்டலன்பரி கரிபோலழகுள்ள ஆனைபரிகளுமல் லாமலே
அளவிறந்தர தங்களும்காலாளும் ஆகும்படைகுறைவில் லாமலே
வாகுபலம்கொண்டு துஷ்டர்கள்மேற்சென்று மற்றவர்மேலேசெல் லாமலே
மனுமுறைப்படி நீதிசெய்துமனம் வாக்காலசத்தியம்சொல் லாமலே
இந்தப்—பாரை

மலயத்வசன்புத்திரகாமேஷ்டியாகம்செய்தல்.

விருத்தம்.

இருந்தமல யத்வசபாண் டியனீ ரைந்தா
யிரமினிய கன்னியரை மணந்து நீதி
தெரிந்தொழுகும் பானுவங்கி சத்தில் சூர
சேனன்மகள் காஞ்சனமா லையைப்பின் வேட்டுப்
பரிந்தவளோ டசனைமுக் காலும் போற்றிப்
பதினாயி ரம்வருடம் புவியை ஆண்டும்
வருத்தனையர் இல்லாத குறையால் உள்ளம்
வாடினான் அதற்குவகை தேடி னானே.

திபதை—ஆனந்தபைரவி, சாப்பு.

௧ மதிமரபினி லவதரித்துயர் மனுவைவொக்குமுல் லாசன்
வளமேவிய மதுராபுர மலயத்வச ராசன்
விதிமுறைப்படி நடக்கையில்சிவ விரதமாதிசொல் நூலை
விசுவாசமொ டாராய்ந்தெழில் மிகுகாஞ்சன மாலை

௨ அவளுடன்பல சிவவிரதங்கள் அடுக்கடுக்காக எடுத்தான்
அரனார்மகிழ் மதிவாரத்தில் அதிநேமத்தைத் தொடுத்தான்
சிவனையர்ச்சனை செயுமவர்க்கனனம் திரவியத்துடன் கொடுத்தான்
தினசாரியும் தவறுமலே சிவசந்நிதிக் கடுத்தான்

௩ மறைமொழிப்படி பரிமேதயாகம் மகிமைகண்டுதொண் ணூறு
மகமோடொன்ப ததனைச்செய்து வருநாளதின் பேறு
நிறையமற்றொரு மகமுழுமற்றிடும் நிலைமைபெற்றிடக் குறித்தான்
நெடுவானுறு மகரேசனந் நிலைவந்ததை மறித்தான்

௪ பதியுனக்கொரு குழந்தையைத்தரும் படிக்கோரிஷ்டிசெய் யென்றான்
பலதேவர்களுடனேவந்த படிதன்னகர் சென்றான
அகவிருப்பொடம் மகம்நடத்திட அணிந்திடும்நிம்பத தாரன
அதற்கானவை யாவும்விரைந் தமைத்தானேகம் பீரன

௫ தருமநியமத்துடன் சூரியபதநின் தனனுடனசாலை புகுந்தான்
தருமாகம நெறிதேர்ந்தவர் தம்மோடமைபு மிகுந்தான
சுருதியாயந்ததம் குருமொழிப்படித் தொடங்கிமாதுரமு தாந்தம்
சொரிதம்அனு தாத்தம்ஓசை சோராமல்வே தார்த்தம்

௬ பரிவுடன்சொலித் திசைவிசும்பிடைப் பசும்புகையெழுந் துலையப்
பலவாம்சமித் தொடுநெய்பொரி பரிந்தோமத்தில் நிறைய
கருணைகொண்டுவிண் ணவர்க்கமுதுடன் கதிக்கவாகுதி பெய்தான்
கனவேதிய ருடனேபுத்ரகாமேஷ்டியைச் செய்தான்

தடாதகைப்பிராட்டியார் திருஅவதாரம்செய்தல்.

விருத்தம்

இவ்வகையாய் புத்திரகா மேஷ்டி யைச்செய்
தெழுந்ததவும் பூரணா குதிபெய் யுங்கால்

மெய்வடிவாம் பரனருளால் அதனில் நின்று
மீனவர்கோன் வலதுமணித் தோள்து டிக்கக்
கொவ்வையிதழ்க் காஞ்சனைதன் இடைதள் ளாடக்
கொங்கையில்தீம் பாலொழுக மேனி நாணச்
செவ்விதரும் அங்கயற்கண் தாயே வந்து
சிறந்திட்டாள் மகளாகப் பிறந்திட் டாளே.

வியாகடைராகம், ஆதிதாளம்.

தாள

அண்டம்பிண்டம் ரண்டும்படைத் தாதாரம் ஆகும் அன்னை

அநுபல்லவி.

மன்னும்காஞ்சனையுடன் மலயத்துவசபாண்டிய மன்னன்குறையைத் தீர்க்க
உல — கன்னை

சரணங்கள்

௧ பூமியுடனேயுல கேழுமகிழத்தொண்டர் பொருந்தும்சைவாகமநெறிபடிக்க
ஆமனசிலஞ்ஞானம் நீங்கியறம்செழிக்க அமரர்புகழ்ந்துந்துந் துமியடிக்கத்
தாமரைமலர்நிகர் கண்ணியர்கச்சணியும் தனங்கள்குலுங்கபர தங்கள்நடிக்க
மாமதுரைநகரு ளாரும்சுதினமென்று மாலைசென்னியில் முடிக்க
உல — (

௨ தாரணியில்மூவாறு பாஷைக்குளேயிசைக்கும் தமிழ்விளங்குந்திருநாடது
சீரமுடனரசுசெலுத்துமன்னவர்களில் மீனவர்குலமேமகிமைபிறக்க [பறக்க
பாருமக்கினிதேவன்பண்ணுந்தவத்தாலெய்து பலன்தளிரொளக்கொழுந்துகள்
சேரும்ஓமகுண்டத்தில் கமலம்முளைத்துமலர் நீடும்கொடிபோல் சிறக்க
உல — கன்னை

௩ வண்டுலவியசிறு கொண்டையுநிறைமதி வதனமுமுத்துமூக்குத்தியிலங்க
வெண்டாளச்சுட்டியணிந்தநெற்றியுமதில் மின்னும்திலதமும்கிரணம்துலங்க
கண்டொழுகும்குதலை அமுதம்வழிமார்பில் கதிர்வடம்கண்டிருள் நிலைகலங்க
மண்டும்நித்திலமணி மாலையுடனபவள மாலைகழுத்தில் இலங்க

௩ சிற்றிடையில்சிறிய பொற்றுகிலும்வளைந்த செழுமணிமேகலை புரம்சூழச்
சுற்றுமணியழுத்தும்தாடங்கமும்குதம்பைத் தொங்கலுமிருபுய மிசைதாழ
சற்றுமுளைத்திடும்பல் வரியும்மழலைமொழி தன்னுடன்அமுதம்த தும்பிவீழ
முத்தனமும்வயது மூன்றுள்ளகன்னியாக மூதுலகங்கள் வாழ
உல — கன்னை

பிராட்டியார்காஞ்சனமாலைமடியில்வந்திருத்தல்·

விருத்தம்.

கன்னிகையாய்ப் பிறந்துசிற் றடியிற் பூணும்
கதிர்மணிநூ புரம்சதங்கை ஒலிகள் சின்ன
அன்னநடை தளரவிள நகையும் தோன்ற

அரசுடன்வீற் றிருக்கும்பொன் மாலை தன்பால்
மன்னியவள் மடியினில்வந் தொருபெண் பிள்ளை
வடிவாக இருந்தனளெவ் வுலகு மீன்ற
அன்னையிவர் தமக்குமக ளாக என்னேன்
பாற்றிரு ரெனப்பலரும் போற்றி னாரே.

சௌராஷ்டிரம் சாப்பு.

பல்லவி.

காஞ்சனமாலை மடியிலுமையொரு கன்னிகையாயிருந் தாளே

அநுபல்லவி

மிக — வாஞ்சையுடனே யணைத்துச்சி மோந்துசெவ்
வாய்முத்தம்கொண்டின்பம் பூரித்திடப்பெற்ற காஞ்சன

சரணங்கள்

க சித்திதரும்யாக சாலையில்வந்து தெருண்டவருள்ளன்பு திகழ சிவ
சத்திதிருமக ளானதுமன்னன் தவமேதவமெனப் புகழ
முற்றியுண்டாகும் கருப்பக்குறிகள் முழுதுமில்லாமலே மகிழ தெய்வ
புத்திரியைப்பெற்ற பாக்கியசாலிதன் புண்யமேமுன்செய்த புண்யமாகிகழ
காஞ்சன

உ மாமகசாலையில் பெண்ணுருவாக வரக்கண்டோர்மங்கலம் நீட வெகு
க்ஷேமமுடையபொன் மாலைதவப்பயன் நேராகவந்துகை கூட
பூமன்குடும்பம் செழிக்கவுயர்ந்த புவிக்கும்பெருமையைத் தேட வரும்
சோமகுலமே பெரிதென்றுலகம் துதித்துச்சந்தோஷமிருத்துக்கொண் டாட
காஞ்சன

ந மைந்தரில்லாமல்பலநாள்வருந்தி மகம்செய்தேனிப்புவி மீது அது
விந்தைமுலையொருமூன் றுடன்ஓர்பெண் விளங்கவேதந்ததிப் போது
இந்தவிகாரத்தைக் கண்டுபகைவர்கள் ஏசுவாரீதுபோல் லாது என்று
சிந்தைகலங்கியமன்னவன்சுந்தரர் திருவடிநினைந்துருகிடும் போது
காஞ்சன

ச மன்னவனேயுன்மகட்குச்சகலமும் மைந்தனைப்போலவே நல்ல வேதம்
பன்னியவாறுநடத்தித்தடாதகைப் பாவையெனும்பெயர் செல்ல
வன்னமுடிசூட்டு வாயன்பனைக்காணில் மாறுமொருமுலை மெல்ல என்று(ல
மன்னியஈசனருளாலசரீரிவாக்கொன்றெழுந்தியாரும்கேட்கவிணணில்சொல்
காஞ்சன

பிராட்டியாரைமலயத்துவசன் அரண்மனைக்குக்கொண்டுவருதல்.

விருத்தம்.

அன்னைமடி மீதுகன்னி யிவ்வா றுய்வந்
தமைந்திடும்போ தாகாச வாக்குக் கேட்டுத்
தன்னிருகா தும்குளிர்ந்து மனம்பூ ரித்துச்
சங்கையற்றே ஆனந்தக் கண்ணீர் பொங்கத்
துன்னுமகம் முடித்தெழுந்து சாலை நீங்கித்
துணைவியுடன் அம்மகவை ஏந்திக் கொண்டு

பின்னைவளர் அரண்மனைக்குட் புகுந்தான் வேந்தன்
பெருமைதான் பெற்றதுவும் அருமை தானே.

பூரிகல்யாணி ஆதி.

பல்லவி.

செகத்திலேசி றந்ததென்னன் அகத்திலேகன் னிகையாகத்
தேவியுமை யைக்கொண்டுவந் தானே.

செகத்தில் இகபரத்தின் சுகத்தைக் கொடுக்குமீசன
மகத்துவத் தைத்தெரிந்து மிருத்தவிரு தம்புரிவீர் செகத்

சரணங்கள்.

க முரசதிரமங்கலம் ஏநதியெதிர்வருவார்
முகமலர்ந்துமுறுவல் செய்ய
அரசன்பலருடனே ஆஸ்தானமண்டபத்தில
அமர்ந்துமனமகிழ்ந்து துய்ய
வரமருளுமந்தணர் முதலானவர்க்கும்சொர்ணம்
மழைபோலேவாரிவாரிப் பெய்ய
பரவும்சோமசுந்தரர் கோயில்சிறபபும்பரி
பாகங்கள நேகம்மபி ஷேகஙகளவை போகம்செய்ய செகத்

உ சிறையில்இருக்கின்றவர் தமையும்விட்டுவிடடவர்
சிறைச்சாலை யுமுடனே மாற்றி
இறையெந்தநிலத்துக்கும் ஏழுவருஷம்மடடும்
இல்லையெனக்குடியைத் தேற்றி
திறைறைந்தமன்னவர்க்கும் நீக்கிப்பினஆயநதுறைத
தீர்வையும்இல்லையென்று சாற்றி
நிறையும்பேரிஒலிக்கக்கடடியத்தின்பெருமை
நீடப்புகழ் சூடப்பலர் நாடக்கொண டாடவிந்த செகத்

ங முடிமன்னவரைச்சிறை விடுத்துவரிசையுடன
முன்போலவேஅரசும் கொடுத்து
படியில்உள்ளபேர்எல்லாம் கொளளைசசிறந்த
பண்டாரத்தைத்திறநது விடுத்து
வடிவுயரும்பசும்பொன் னுடைபலமணிகள்
வாரிக்கொண்டேகவிடை கொடுத்து
அடியவர்தமக்கன்னம் அறுசுவையோடளித்து
ஆசைமறை ஓசைசிவ பூசைசெய்து நேசம்பெற செகத்

ச புலவர்சொலும்மஙகல கவிகட்கிருநிதியும்
பூணும்துகில்ஆரமும் அளித்து
நிலமும்கரிபரிதேர் முதலாப்பலபொருளும்
நேர்ந்தவர்அவருள்ளம் களித்து

குலமுறைப்படிசெய்து சுண்ணமோடெண்ணெய்விழாக்
கூடிக்கொண்டனைவரும் குளித்து
பலரும்புகழ்மதுரை அன்றிமற்றநகரும்
பாங்காச் சிறப்போங்கக் கலிநீங்கச் சுபம்தாங்க இந்த செகத்

பிராட்டியின் திருவிளையாட்டைக்கண்டு பெற்றோர் மகிழ்தல்.

இந்தவகை யாமலயத் துவச பாண்டியன்
இசைந்தபல தானமும்செய் தீசன் வாக்குத்
தந்தபடி சாதகரணதி செய்து
சதுமறையும் தேடரிய தைய லாக
வந்தவொரு கன்னியையம் மேனை போலே
வாஞ்சையுடன் காஞ்சனைசெந் தளிர்க்கை யேந்தி
சந்ததமும் வளர்ப்பஇம வான்போல் உள்ளம்
தழைத்திட்டார் தடாதகையென் றழைத்திட் டாரே.

திபதை—மத்தியமாவதி, சாபபு.

௧ கன்னிவரவறிந் தன்னைனைச்சொல்லும்
காஞ்சனமாலையும் வாஞ்சையுடன்பெற்று
மன்னனும்பிள்ளைச்சீர் கொள்ளக்கிடைக்குமா
வையகம்தன்னிலென்பார் சோமசுந்தர ஐயன்செயலிதென்பார்

௨ அங்கம்மிருந்தமகங்கள்பலசெய்
தருமையாப்பெற்ற பெருமைகண்டாகாச
கங்கைகுதித்தது போலேநமக்கிந்தக்
காட்சிகிடைத்ததென்பார் மகிழ்ந்தர சாட்சிகிடைத்ததென்பார்

௩ செம்மைவிளையும்பயிர்முளையிலே
தெரியும்என்றிந்தச்சகத்துவழக்கம்போல்
நம்மதடாதகைப் பெண்ணால்அறம்முதல்
நாலும்தழைக்கும்என்பார் உலகமென் மேலும்பிழைக்குமென்பார்

௪ மோதிவரும்கோடி துக்கம்குழந்தை
முகம்கண்டாலாறிடும் என்னும்மொழிபோலே
கேதம்எல்லாம்தீர்க்கக் கண்டோமென்றுள்ளம்
கிளர்ச்சியுடன்புரிவார் நாள்தோறும் வளர்ச்சிகண்டுபுரிவார்

௫ சாலவுமிப்படித் தக்கோருமொக்கலும்
சார்ந்திதேகார்யமாய் வேடிக்கைபார்த்திட
காலில்சிலம்புகள் கல்லீர்கலீரெனக்
காட்டிநடக்கக்கண்டார் சுமிமாரைக் கூட்டிநடக்கக்கண்டார்

௬ மின்னியசித்திரம் தன்னுடன்வாது
விளம்பிவிளக்கைக் கிளம்பிப்பிடிக்கையில்
அன்னைகண்டோடி எடுத்துச்சிமோந்துதன்
ஆகம்பூரித்துவந்தாள் அரசனும் தேகம்பூரித்துவந்தான்

௭ சின்னஞ்சிறுங்கிளியில் அன்னையுமீத்திய
சிற்றுடையைக்கையில் வைத்திடும்பொற்பாவை
தன்னில்அணிந்தெழில் கண்ணாடியில்பிம்பம்
தன்னைப்பிடிக்கக்கண்டாரி வாராமல் தன்னிலிடிக்கக்கண்டார்

௮ திருத்தாமழலை மொழிந்துசகியுடன்
சேர்ந்துவெளிவந்து சிற்றில்விளையாடி
விருந்தாகதுண்மணற் சோறுசமைத்து
விளம்பிமதிக்கக்கண்டார் பிறகு இளம்பிக்குதிக்கக்கண்டார்

௯ அம்புயத்தோன்தரும் அண்டமெல்லாம்சிற்றில்
ஆக்இழைப்பவளேகன்னியாவந்து
அம்புவிமீதில் பலவிளையாடல்செய்
தம்மனைநாடக்கண்டார் கழங்குபந் தம்மனை ஆடக்கண்டார்

௰ மீட்டியபாச வினைக்கயிற்றுலிந்த
மேதினியைக்கீழும் மேலும்தள்ளிஊசல்
ஆட்டுதல்போலவே பொன்னூசல்தாம்பசைத்
தாடிமகிழக்கண்டார் சகிமாரைக் கூடிமகிழக்கண்டார்.

பிராட்டியாருக்குமலயத்துவசன்முடிசூட்டல்.

விருத்தம்.

சகியருக்கும் அன்னைபிதா வுக்கும் இன்பம்
தருபவளாய்க் கலையனைத்தும் தனதி டைக்கண்
மகிமையுடன் மேகலையாய் அணியும் தேவி
மறைகள்முதல் பலகலையும் ஆராய்ந் தியானை
வகைபரிதேர் முதல்நடத்தும் திறனும் வில்வாள்
வஜ்ரமுதல் படைத்தொழிலும் கண்டு தென்னன்
அகமகிழ்ந்தம் மகட்குமகு டாபி ஷேகம்
அடுத்தசுப தினமதிற்செய் தருளி னானே.

மோகனம் திரிபுடை

பல்லவி

திருமகளுக்குமுடி சூட்டினான் வளர் தென்னர்குலத்தைநிலை நாட்டினானே

அநுபல்லவி.

தருமம்பெருகும்மதுராபுரவாசன் சகலகுணசம்பன்ன கீர்த்திபிர காசன்
தருமுயிர்க்குத்தாயினு மதிகவிச்வாசன் தழைக்குமலயத்வசபாண்டியராசன்

சரணங்கள்

௧ மங்கலபேரியொலிக்களமுந்த மத்தகசத்திலே வைத்துக்கொணர்ந்த
கங்கைமுதலொன்பது தீர்த்தம்நிறைந்த காஞ்சனகும்பத்தைப் பூசித்துயர்ந்த
புங்கமுன்னூலை ஓதுவர் தங்களினாலே வேள்வியி
லங்கமென்மேலே செய்துவி ளங்கஅன்பாலே கதிர்விடு
தங்கத்தகட் டாலொளிஆடிய துங்கப்பெரு மாமணி சூடிய
அங்கத்தொடு பூசனைகூடிய சிங்கத்தவி சின்மேல்நீடிய திருமகள்

உ திருமுடியைமத யானைமேல்வைத்துச் சிறந்தநகரைவலம் செய்துபூசித்து
குருமணியாலும்பொன்னாலுமிழைத்துக் கோதிறும்றந்தலைநாகம்கவிழ்த்து
அருமணிமின்னப் பலகதிர் பொருதியதென்னத் தலைமிசை
விரிபடம்துன்னத் திருவளர் அரிபீடமன்னக் கண்டுயர்
பெருவானவர் ஆனவரேதுய்ய மருமாமலர் மாரிகளைப்பெய்ய
தருமாகமநூல்முறையாய்ச்செய்ய வருநீரபிஷேகமிசைத் துய்ய திருமக
நடபாலைநிகருஞ்வெள்ளைக் கவிகைநிழற்றப் பரவியிலகும்மணிக் கவரிசுழற்ற
ஏதும்மகரக்கொடி மேலேயுயர்த்த இரசதகிரிமிசை யிளம்சூரியனுதித்த
கோலம்படைத்துக்கமழ் நிம்ப மாலைதொடுத்தயிராவத
மேலேயெடுத்து நகர்வலம் சூழவிடுத்து உரியசெங்
கோலாரணியங்கைபிடித்திட நாலாவித பேரியடித்திட
சேலார்விழி மாதர்நடித்திட ஏலாரிட வாகுதுடித்திட திருமக
ச ஆதரவுடன்தெய்வ மறையவர்கூட அருந்தவமுனிவர்கள் ஆசிகள்நீட
கோதைரம்பையர்முத லோர்நடமாடக்கூர்முனிமங்கையர் சோபனம்பாட
வேதம்துலங்கத் துந்துபி நாதம்துலங்கப் பலபல
கீதம்துலங்க அறம்நாலு பாதம் துலங்கமுறையுடன்
ஓதருமமைச் சென்றவரும்வல்ல பூதலம்புரக் கின்றவரும்நல்ல
பாதமிறைஞ்சிநின்றவரும்செல்ல மாதரசென்றுவந்துவரிசைசொல்ல திரும

தடாதகைப்பிராட்டியார்அரசியல்

விருத்தம்.

திருமகளுக் கிந்தவண்ணம் மகுடம் சூட்டிச்
சிலநாட்சென் றமரர்பதம் சேர்ந்தான் மன்னன்
ஒருமையுடன விரதநெறி அடைந்து தநதைக்
குரியகடன் அனைததுலகும்ஈனைறுள் செய்தே
அருமைதரும் சோமசுந்தர லிங்கத்தை
அனுதினமும் தொழுதுசிங்காதனமேல் கொண்டு
பொருதரங்கபுவனமெலாம் செலுத்திச செங்கோல்
பூண்டிட்டாள் ஒருகுடைக்கீழ ஆண்டிட்டாளே.

இராகம் நாதநாமக்கிரியை, தாளம்.

பல்லவி

பூபரிபாலனம் செய்தாளேதேவி மதுராபுரத்திருந்து பூபரி

அநுபல்லவி

பூபதிமார்அனைவோர்களும்போற்றிப்புகழமனுவிக்நாளேச்வரமொழியாற்றி
தாபமில்லாமலெவர்க்கும்துயர்மாற்றிதனதுயிர்போலேமன்னுயிர்காப்பாற்றி
பூபரிபாலனம்

சரணங்கள்.

காலையெழுந் துநீ ராடிக் காவலன்கு லத்துவாடிக்
கைப்படிதா னங்கள்நீடிக் கருதிஈந்தா லயம் நாடி
ஆலமுண்ட வனைவணைந்து ஆகமமுறை
யால்அடிக் கமலம்பணிந்து தனதுசெம்பொன்
மாலரண்ம னையில்புகுந்து மணிஇழைத்த
வாள்அரியா சன[illegible]ருந்து சாமரைஇரு
பாலினுமாமகள் நாமகளிருவரும்வீசக் காளாஞ்சியடைப்
பைகளனிந்திதைக மலினியுமேந்தப்பலதேசப் பதிகளும்பின்
ஞாலம்மதிக்கவரும் சேரன்சோழனிரு ராசர் அவர்முடியில
ணிணியமாலைகளைத் தன்னடியிற்சாத்திவிசு வாசம் ஆகவணங்க
கோலமுடையகூர் வாள்கொண்டுநிற்கச்சில ராசர் மார்பில்கைகளைக்
கூட்டியணைத்துக்கட்டிக் கொண்டுமேநிற்கச்சில ராசர் எப்போகடைக்கண்
ணேலயருள்வாரோவென் றிமைக்காமல்நிற்கச்சிலராசர் நின்றருள்செய்தால்
அங்கைவாய்பொத்திக்கொண்டுபிழைத்தோமென்றேதச்சிலராச ரிதுவலாம
லேலுமஞ்சாமையீகை அறிவூக்கம் நாலும்
இன்சொலமொழிந்தளிக்கும் திறனுமெக் காலும்
சாலும்மன்னவர்க்குள்ள ஷடங்கமும் கோலும்
சகலமும்பூர்ணமாய்த் தழைக்கமென் மேலும்
பூபரிபாலனம்

ஆங்கவன்ம ராடமன்னன் அடுத்தவன்வி ராடமன்னன்
அவன்கரு ணடமன்னன் ஆருமிவன் குருமன்னன்
ஈங்கிவரே சோழன்கோஷ்டி உடனேசேரன்
என்பவனி வனென்றீட்டிக் கஞ்சுகர்கையில்
தாங்குபொற்பி ரம்புநீட்டி சன்னிதானத்தில்
சமயமறிந் தாங்குகாட்டிப் பக்கத்தில்நிற்க
தேங்கமழும்தமிழ் ஆரியம்கரைகண்ட பேரும் ஆரணம்முதல்
சிறந்தறுபத்துநாலு கலைகள்முழுதும்படித் தோரும் இரண்டெற்றும்
நீங்கிடத்துறந்தவர் ஆகியசைவமாத வோரும் அறுவிதமா
நிகழும்சமயசாஸ் திரங்களைப்படித்துணர்ந் தோரும் தற்போதமற்றே
ஓங்கிவருமாயையின் றீங்ககல்மெஞ்ஞானி மாரும் முன்னிருந்துமேல்
உறவரும்கருமங்கள் தெளியவுணர்த்தும்பெரி யோரும் கணிதத்திறனல்
பாங்குறும்வினைகளைப் பகுத்துசொல்லும்சோதிடத் தாரும்அமைச்சியலின்
பண்பறிசுமதிமந் திரியுடன்பலமந்திரி மாரும் நிறைந்திருக்கத்
தாங்கியேசூழ்பல பேர்கட்கும் ஈயத்
தரணியில்ஒப்புர வறிதலைச் செய்யத்
தேங்கியசலதிசூழ் உலகெங்கும் உய்யத்
திங்கள்தோறுமும்மாரி சிறக்கவே பெய்ய
பூபரிபாலனம்

வேதவிருத் திகளையும் மெய்அரன்பூ சைகளையும்
மேலறச்சா லைகளையும் மேதினிக்கு டி

காதலாலின் னம்மென்மேலும் உள்ளகாரியங்கள்
யாவையும்மந் த்ரிகளாலும் அறிந்தும்தனி
யேதனியே ஒற்றராலும் தெரிந்ததனில்
ஏதமது நேரிட்டாலும் தண்டித்தும்தீர்த்தும்

ஆதியுத் தேசத்தாலும் இலக்கணங்களினாலும்மற்றும் சாக்ஷிகொண்டேயாராய்த்
ததனைச்சோ தனையாலும் சொன்னபொருளனுவாதித்தும் நீதியுடனிப்
போதப்ர காரம்கண்டித் தந்தவழியிலேதா பிக்கும் வாதிகள்வாதம்
புரிந்துசெய் யும்கூட்டத்தி னிடத்தில்மனமகிழ்ச்சி பெற்றும் கற்றபுலவர்
ஓதும்செய் யுளிலமு தொழுகவேநாவில்வி ளைத்தும் ஊடடச்செவிகட் (தும்
குணவுகொண் டுதெவிட்டும் படிக்குண்டுளத்தில்சந்தோஷித்தும் மறைகளோ
வேதியர் சைவர்து றந்தவர்க்கறுசுவை யொத்தும் முல்லைமுகைபோல்
விளங்குமுணவருத்தி யவர்சொல்லமுதினைப்பு சித்தும் அபரான்னத்தில்

சூதமகாமுனிவர் மொழிந்தமு வாறு
தொகையாகவிலங்கும்பு ராணவா லாறு
பேதமறவேயா ராய்ந்தவர் கூறும்
பெருமையால்பெரும்பகல் கழித்திந்த வாறு
பூபரிபாலனம்

மின்னிடைமா தர்களாட விஞ்சையரி ராகம்பாட
வேடிக்கைபார்த் துச்சந்தோஷம் மேவியேநல் லருள்நீட
முன்னிருந்த வரு ணடாக்கி வைத்ததருமம்
முழுவதும் பழுது நீக்கி அறங்கள்மிகப்
பின்னையும மைத்து நோக்கி மகங்கள்செய்யப்
பெருநிதியளித்து ஊக்கி கல்விசெல்வத்தைத்

தன்னிருகண்ணெனத் தழைக்கும்படிக்குச்செய்து பரிந்து மணம்கமழும்
தண்மலர்மாலையை அணிந்தமணிமுடிபு னைந்து கொண்டுகுளிர்ந்த
வன்னம்மிகுந்தசந்திர வட்டக்குடையின்கீழி ருந்து மனுவினாலே
வரையறையேற்படுத்தி வைத்தசாஸ்திரத்தில் மொழிந்து வருமுறையை
இந்நிலமுறைசெய்து மனுவெனக்காத்துலக ளந்து நட்புநொதுமல்
ஏதிலர்வழக்குகள் ஆய்ந்துமயிர்முனைவ கிர்ந்து தீர்த்தலிக்குக்
கன்னியேஒருசிறு கன்னியாயரசுப ரிந்து செங்கோலையேந்தி
ஆற்றலொருகடமை கொண்டரசாட்சியில மைந்து புகழ்பெருக

தென்னர்வங்கிசமே யிவ் வுலகினில மிக்க
சிரேஷ்டம்என்றேயிசைந்துயாரும்து திக்க
கன்னல்வளரும்பாண்டி நாட்டை யுவக்க
கன்னிநாடென்றுலகில் எவருமு ரைக்க
பூபரிபாலனம்

அகத்தியர் முனிவர்களுக்கு வித்யாவதியின்வரலாறுகூறல்.

விருத்தம்.

பூமிபரி பாலனமிவ் வாறு செய்யும்
புதுமையைக்கேட் டகங்களித்தம் முனிவோ ரெல்லாம்
மாமறைதே டரியவெம் பிராட்டி தக்கன்

மலையரச னிவர்பலநாள் வருந்தி நோற்கத்
தாமதலை யாகவந்தாள் மனித ருகத்
தழைத்தமல யத்வசபாண் டியன்பெண்ணாக
நேமமுடன் வந்தகா ரணம்யா தென்ன
நிகழ்த்தினு ரருந்தமிழைப் புகழ்த்தி ஞரே.

திபதை.—கல்யாணி, சாப்பு.

க விச்வாவசுவென்றோர் வித்யாதரன்பெற்ற வித்யாவதியென்னுமாது அவள்
விச்வாசம்கொண்டுமையாளிடத்துள்ளன்பு மேவியிருக்கின்றபோது [தேவி

உ தந்தையைத்தாழ்ந்தையனேயுமைபூசனை தன்னைச்செய்யவேணும் என்றாள்
மந்திரம்தன்னைத் தனதுமகட்கு மகிழ்ந்துபதேசித்து நின்றான்

ந சொன்னதிருமந்திரத்தாலுமையைத் துதித்துவருகையிலாக்கம் கொண்டு
பின்னுமுமையையாராதிக்கத்தக்க பெரும்தலம்யாதெனக் கேட்க

ச எப்பதிக்கும்த்வாத சாந்தம்பெரிதென் றெமக்குச்சதானந்த ராலே கண்டு
செப்பும்வளம்பதி மண்டலமீதில் சிவபுரமாகுமென மேலே

ரு சேடன்சுமக்கின்ற பூவுலகுக்குள சிறந்துயரும்சத்தி பீடம் அதில்
நாடிமகிமை பெருகுமறுபத்து நாலதற்குள்முதல் பீடம்

சு நீண்டிசைபூண்ட திருவாலவாயின் நிலத்திலேபோகமும் வீடும் தரும்
வேண்டியவாறெந்தச் சித்தியும்புத்தியும் வேணுமென்றாலும்கை கூடும்

எ விந்தையாயக்ஷர் வசுபூரணர்ச்வச்ச வித்யர்வித்யாதரர் நிகரில்லாத
எந்தையோடைவர்கள் வேண்டும்வரம்பல எய்திவந்தார்களந் நகரில்

அ மேவும்சராசரம் யாவையும்பெற்று விளங்கிவளரும்மீ னாக்ஷி அம்மை
சேவடிக்கன்புபூண் டாராதனம்யாவர் செய்யினுமீவளே காட்சி (றை

கூ என்றபிதாவைப் பணிந்துவிடைபெற் றெழுந்துவழிக்கொண்டு நடந்தாள்ம
மண்டும்மலர்க்கொடி போலேயசைந்து வனம்மலையாறெல்லாம் கடந்தாள்

௰ நீடியபாதை குறுகிமகிமை நிறைந்தமதுரையை நாடினாள் எழில்
கூடும்இளம்பிடி போலவேயா டகக் கோகனதநீரில ஆடினாள்

கக மாமறைதேடும் சிவனேயும்சேல்விழிவல்லியடியும் வணங்கினாள் வெகு
நேமமுடன்தேவி பூசனைக்கன்பு நிறைந்துதைமாசம் துடங்கினாள்

கஉ மகரமாசத்தில் மத்யானத்திலுண்டு மாசியில்ராத்திரி உண்டும் இந்த
வகைநியதியில் லாமலுதவி வருமுண்டிமீனத்தில் உண்டும்

கந சித்திரையில்இலைகாய்முதல்உண்டும்திலத்தாள் இடபத்தில்உண்டும் மிது
னத்தில்சாந்திராயணநோன்பிழைத்தைதங்கவ்யம்நண்ணிக்கடகத்திலுண்டும்

கச ஆவணிமாசத்தில்பாலைஉண்டும்புரட்டாசியில்நன்னீரை உண்டும் நலம்
கூவுதுலாத்திற்குசாகிரநீரைஉட் கொண்டும்தேளில்காற்றை உண்டும்

கரு பத்தியுடன்மார்கழித்திங்களில்சுத்தபட்டினியாய்த்தவம்சிறக்கச்செய்து
முற்றிவருகும் சுறுமதியில்பதி மூன்றுகும்திங்களும் பிறக்க

வித்யாவதி தோத்திரம்

விருத்தம்.

வித்தியா வதியாறி ரண்டு திங்கள்
விரதமிருந் திப்பால்சன் னிதியில் சென்று
பத்தியுடன் பணிந்தெழுந்து நின்றுமாவின்
பைந்தளிர்ச்சே வடியுமின் னிடையும் கார்தள்
ஒத்தகரங் களும்நெருங்கும் தனமும் திங்கள்
ஒத்தமுக மும்திருமங் கலக்க ழுத்தும்
சுற்றிவண்டார் குழலுமுடை யங்கயற்கண்
-ரொளியைத் தியானித்துத் துலங்கினளே.

பதமுதல்கே சத்தளவிப் போது சொன்ன
படிநினைந்தி யாழ்க்குளதெய் வத்தை வேண்டி
இதயமுவந் திருகைகுவித் திறைஞ்சி வீணை
எடுத்துப்பொன் னுறைநீக்கிப் புயத்தில் சார்த்தி
மதிவிளங்கு மந்தவித்யா வதியா ளோர்ந்து
மாடகத்தை முறுக்கித்தந் தியைத் தெறித்து
மதுரமிகும் பண்ணினை முன் னெழுப்பிப் பாடி
...ரன் பராபரையைத் துதிக்கின்றளே.

ஆனந்தபைரவி, ஆதி.

பல்லவி.

தேவிஸ்ரீ கதம்பவனநிலையே தெரிசனம்தாராய் அம்மா

அநுபல்லவி.

பூவிலறுபத்துநாலு பொருந்தும்சத் திபீடத்துள்
மூவுலகும்புகழும் முதற்பீடத்தில்வளரும் தேவிஸ்ரீ

சரணங்கள்

மாநிலத்துயிர்களை ஈன்றவ்வுயிரையெல்லாம்
மச்சம்போலேநோக்கி ரக்ஷிக்கின்றவென்றாயே
மானேமலையரசன் மகளாயவதரித்து
மயின்பைங்கிளிவளர்த்து விளையாடும்மாயமென்ன தேவிஸ்ரீ

அமையும்பலவண்டங்கள் ஆகியவெண்மணற்சோ
றாக்கித்தனியேவிளை யாடுகின்றவென்றாயே
இமயமலையருவி முத்தால்சிறுசோறாக்கி
இணங்கும்தோழிகளுடன் விளையாடும்மாயமென்ன தேவிஸ்ரீ

நிலைகொள்மறைமுடிவில் ஆனந்தவடிவாக
நிறைந்திடும்மெய்ப்பொருளே பரம்பரையேயென்தாயே
மலையரசன்மார்பிலும் திருத்தோளிலும்மிதித்து
மலரடிகள்சிவக்க விளையாடும்மாயமென்ன தேவிஸ்ரீ

௪ சகலலோகத்துக்கும் மூல காரணியே
சனகாதிகர்க்குச்சுகத்தைத் தரும் பூரணியே
செகத்தில்ஒருதரம்பூ சிக்கக்கொண் டாரணியே
செல்வங்கள்வேண்டும்படிக் கொடுக்கின்ற சீரணியே தேவிஸ்ரீ

௫ பரமசிவனுனவர் தமதிடம்வளர் தாயே
பஞ்சகிருத்தியங்களை நடத்தச்செய்வதும் நீயே
பெருகும்முத்தியைவேண்டு வோர்க்கருள்செய்யு மாயே
பிரமவித்தையை யுபதேசம்பண்ணு வாயே தேவிஸ்ரீ

௬ புகலுமுனதுகிருபா லேசத்தினுலே மாட்சி
பொருந்தும்போக மோக்ஷங்கள் கொடுக்கும்சர்வ சாக்ஷி
மகிழும்வாணியும்மலர் மகளும்துதிக்கும் சூடசி
மங்களமூர்த்திகர மாகவளர்மீ னுக்ஷி தேவிஸ்ரீ

வித்யாவதிக்கு மீனுக்ஷிஅம்மைவரம்கொடுத்தல்.

அருமையுட னிவைதுதிக்கக் கேட்டு மநத
ஹாசம்செய் தொருகையிற் செங்கழுநீர்ப் பூவும்
ஒருகையிலே பைங்கிளியும் தூய செம்பொன்
உடுக்கையும்செம் மலர்பணிபூண் டங்க யற்கண்
திருநிறைந்து மூவயதுக் கன்னி யாகச்
சிறந்துவெளி வந்திலங்கு மண்ட பத்தில்
அருளினள்கண் டிறைஞ்சும்வித்யா வதியைப்பார்த்தென்
அம்மாநீ வேண்டுவதே தறைகென் ருளே.

சேல்விழிவிளம்பவித்தி யாவதிபணிநதெனக்குன் சேவடியிலன்புநிற்க வென்றொளும், — சீரருள்சிறந்தளிக்க வேணுமெனவின்னுமுற்ற தேவையை மொழிந்துகைக்கொள் எனஓத, — ஆவலுடனிங்குதித்த கோலமுடனென் தனக்குன் ஆடலதுகண்டுவக்க மனமீதில், — ஆசையெனவுநதிருத்த மாயடி பணிந்திரக்க ஆகவெனவுள்ளுவந்து புவிமீது — பூவலர்புகழ்ந்துயர்த்த மீன வனெனும்செழித்த பூபதிமணந்திருக்க வருவாயப் — போதிவுரு வம்சிறக்க வேவருவமென்றுபெற்ற பூரணிமகிழ்ந்துரைக்க மகிழ்வாளுள் — மாவலரே சிந்தையுற்ற கோதைவிடுமன்றியித்தை மாலுடனிசைந்துரைப்பர் அறிவோரும் — மாதனம்வளர்ந்துபுத்ரர் ஆயுளும்நிறைந்திகத்தில வாழ்சிவபுரம்கிடைத்து மகிழ்வாரே.

———⟨ * ⟩———

ஆக விருத்தம் ௧௯ சந்தம் கீர்த்தனை ஏ திபதை ௯

நான்காவது தடாதகைப்பிராட்டியார் திருஅவதாரப்படலம்.

முற்றும்.

ஸ்ரீமீனுக்ஷிசோமசுந்தரேச்வரர்திருவடிகளேதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது,

திருமணப்படலம்.

---***---

அவதாரிகை—விருத்தம்.

தரும்புகழ் வழுதி செல்வத் தடாதகைப் பிராட்டி யிந்தப்
பெரும்புவி முழுதும் காத்த பெருமையை யுரைத்தே னிப்பால்
திரும்பவம் மாதை யீசன் திருக்கலியாணம் செய்து
விரும்பியிவ் வுலகை யாண்ட விதத்தினிற் சிலசொல வேனே.

சாவேரிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

கேளும் முனிவர்களே சிவகதையைக் கேளும் முனிவர்களே

கேளும் அரசுசெய்த டாதகை செம்பொற் றளில்
சூழும் மன்னர்தொழச்செங் கோல்முறை செய்யும்நாளில் கேளும்

சரணங்கள்.

க படியிலாக் ஞாசக்கிரமா கிடிரவி ஒளிபெய்ய
பாவமா கியகலி யிருள்பறந் திடத்துய்யா
குடையாகி யதவள மதிதண்ணி ழலைச்செய்யக்
கூறும் மனுநெறியால புரக்கும்நா ளுலகுய்யக் கேளும்

உ நாடும் கன்னிப்பருவம் முதிர்ந்து குறியுண்டாக
மாளொரு வண்ணமும் பொழுதோர்மே னியுமாக
கூடுமி ரவிருளை வெள்ளை நிறமதாகக்
கொண்ட கருங்குழலும் வண்டினத் துக்கொப்பாகக் கேளும்

ந வாலைப் பருவம்நீங்கிச் சிற்றிடை யுபிளைக்க
மார்பில் தனங்களிறு மாப்புக்கொண் டுகிளைக்கச்
சேலைப் பொருவும்விழி செவியில்பூ சல்விளைக்கத்
திருக்கலி யாணம்செய்யும் பருவம்வந் துமுளைக்கக் கேளும்

தடாதகைப்பிராட்டியார் கிக்குவிஜயம்செய்தல்.

விருத்தம்.

கன்னியிந்தப் படியிருக்கும் பருவம் கண்டு
காலம்செய் வதுகோலம் செய்யு மாவென்
றின்னிலம்சொல் லியபடியே திருக்கல் யாணம்
இன்னமும்செய் திடவிலையே யென்றுநெ கெண்ணி
தன்னிதயத் திரக்கமுற்றுத் தாயு ரைக்கத்
தடாதகைப்பி ராட்டியதை யுணர்ந்து பெற்ற
அன்னையரே வருந்திடலீர் ஆங்கா லாமென்
றுரைத்திடாள் உலகமெங்கும் நிறைந்திட் டாளே

இதுவுமது.

அன்னைகாஞ் சனமாலை மனத்தைத் தேற்றி
அங்கிருத்தி அஷ்டதிக்கும் உலகம் யாவும்
தன்னுடைய கொடிநாட்டி மீனவென்றே
தடாதகைநா யகிசென்று ளவற்றை நாடி
மன்னவரும் அமைச்சர்களும் பிறரும் சூழ
வளைந்தடுத்தார் புரவிகளை வலவன் தூண்டத்
தென்னர்குலம் விளங்கவெற்றிச் சங்கம் ஆர்ப்பத்
தேறினாள் கொடிஞ்சித்தேர் ஏறினாளே

நாதநாமக்கிரியை சாப்பு

பல்லவி.

விசயத்தைக்குறித்தாள் இந்திராதியர் விருதெல்லாம்பறித்தாள்

அநுபல்லவி.

விசயத்துடனேயெட்டுத் திசையுந்த னதாநட்டு
மீனக்கொடிவிளங்கத் தானைப்படையிலங்க
விசைகொண்ட பரிநாலு பூண்டரதத்திலேறி
மேருவைச் சுற்றிமெய்க்கும் சூரியன்போலேதிக்கு விசய

சரணங்கள்

க பேரிதடாரிமல் லாரிஉடுக்குமொந்தை
பெருகும்சின்னம்எக்காளம் வருநகசேமேளம்
வீரசங்கம்முதலாப் பதினெட்டுவாத்தியமும்
மேகத்திலும்அதிகம் ஆகத்தொனிஎழும்ப
விரைந்தெங்கும் அடிக்க மகரக்கொடி பரிந்தங்கு பிடிக்க வரிபரந்த
காரிகையார்தங்கள் விழிபோலேதைக்கின்ற
கணைபூட்டியதனுவும் பரிசைவாளும்சூலமும்
சூரிமுதலாகிய பதினெட்டாயுதங்களும்
தொடுத்துப்பெண்தெய்வம்போலடுத்திரதத்திலேறிச்
சுற்றிலும்துலங்கத் தானுமவர்கள் மத்தியில்விளங்க வண்டில்களிந்தப்
பாரைவகிர்ந்துபிலத் துவாரத்தைஉடைக்கப்
பரந்தகொடுங்கையாலே விரிந்ததிசையுடைக்க
நேருமம்பரபகங்கை நீர்முழுதும்துடைக்க
நெடியசாரிசுற்றும் கொடிகளால்சிகரங்கள்
நீடும்பொற் றேரும் அதனைச்சுற்றி ஓடும்பொற் றேரும் நெருங்கிச்சூழ
போரிலிருப்புலக்கை ஏந்தியமனைப்போலே
புரிந்துமும் மதநீரைச் சொரிந்துகொம் புகளாலே
காரைவயிற்றைக்கீறி நீரைக்குடிக்கவாயைக்
காட்டிவருதலபோலே நீட்டுந்தடக்கையானை
கருமலைபோலும் அளவிறந்த பெருமலைபோலும் வரயோகியர்
தீரமுடன்வாயுவைத் தம்பித்துளத்தைவசம்

22650

செய்துநினைத்தவிடம் செல்லும்மனத்துக்கொப்ப
ஆருமைங் கதியுடன் கடையுகமுடவில்பார்
ஆளவரும்புரவி போலனேகம்பரிகள்
அணிகொண்டு சொலிக்க காலில் மணிகல்லென் றொலிக்க எழும்பிரசண்ட
மாருதத் திலும்வேக மாகநடப்போர்காலன்
வந்தாலும் முதுகிட்டு டைந்தோடச் செய்துமீள்வர்
வீரமிகும்அரவின் பல்லின்விஷத்தினிலும்
மீளாவிஷத்தைச்சிநதும் வேலாளர்களும்சூழ

விஜயத்தை

எண்ணவரியசது ரங்கப்படைகளாலே
இருநிலத்தைமறைக்கக் கொடிவெண்குடைகளாலே
விண்ணைமறைக்கவெழும் தூளிகதிரவன்றன்
விழியைமறைக்கமிக்க ஒலியாலேகடலோசை
யைறையும் மறைக்க நிரைநிரையா ஆறெங்கும் நிறைக்கத் தேரொலி
நண்ணும் கதிகளுடன் செலலும் பரியொலியும்
நாடும் களிறொலியும் வீரர் பிளிறொலியும்
கண்ணகன் றொலிசெய்யும் வீரமணிகள்காலில்
கட்டிம் சேவகர்தோளில் தட்டும் கனவொலியும்
கண்டண்டம் பிளக்க மிகுத்தவோசை சென்றெங்கும் அளக்க பரந்தெழுந்த
நுண்ணியதுகளாலே தினகரன் மறைபட
நோக்க அரியவிருள் ஆக்கமும் நிறைபடத்
தண்ணிலவொளிர்முத்துக் குடையின்சோதியும்முடி
தரித்தமனனரணியில் பரித்தவஜ்ரவொளியும்
தனிநிலவெறிக்க அதனுலெங்கும் பகலெனக்குறிக்க தேர் அணிகள்
பண்ணும்கப்பல்களாகப் பரிகள் அலைகளாக
பலமுரசொலியாகப் படைகள்மீன்களாக
வெண்ணுரைகவரியாத் ததும்பவரும் யானைகள்
மேகநிரைகளாக ஏகும்கடலைப்போலே
திசைகொண்டு நடக்க நடநதெட்டுத் திசையெங்கும் மடக்கஎழில்மிகுத்த
பெண்ணினங்கள்திரண்டு வெண்கவரிகள்வீசப்
பெருகும்வெதியர்புகழ் தாசியொருபால்பேச
பண்ணுடனேயமுத கீதமொருபுறத்தில்
பாடச்செவிக்கினிமை கூடவொருபுறத்தில்
பாவலர் துதிக்க முடிபுனைந்த காவலர் மதிக்க என்னசொல்லுவேன்
திண்ணமுடையமீனக் கொடியும் புலிக்கொடியும்
செம்பொன் தனுக்கொடியும் கும்பலாகவேசுற்ற
வண்ணமுடனேபசுங் கழைநிகர் தோளில்நிம்ப
மாலையணிந்துதேரின் மேலேயிருந்துதிக்கு

விஜயத்தை

வேதம்பலமுகம்கொண் டேத்தியும்அறியாத
மின்னேஎனதுகுல மன்னன் மகளாய்வையம்

நீதிமுறைசெலுத்தி மாசகற்றுதல்போலே
நீயென நுமுகத்து மாசகற்றெனத்திங்கள்
நிழற்றுதல் போலும் கவிகைசுற்றும் தழைக்கமென் மேலும் அமைச்சியலை
ஓதியுணர்ந்துதெளிந் துரைகளும்சுமதிமந்திரி
ஒண்டொடி ரதத்துடன் தன்தேர்நடத்தும்தந்திரி
சேதியுரைத்துச்சது ரங்கப்படைகள்செல்லச்
செங்கைப்பிரம்புகொண்டு நங்கைகுறிப்பறிந்து
சேவகம் செலுத்த ஆயுதத்துடன் நால்விதம் வகுத்த பலசேனைக்கும்
பூதலம் எவரும்தளைப போலேசெலவது வன்றிப்
புரந்தரன் இருக்கும்பொன ஹுலகம்முதலாகிய
மாதிரம் களிலும்பின் மற்றிடங்களும்செல்ல
வலிமையளித்துப்பல பலமன்னர் திருவைத்தன்
வசம்செய்யநடந்தாள் நடந்துவட திசையின்மேல் தொடர்ந்தா ளவ்விடத்துள
மாதங்கபதிமுத லான அரசர்களின
வலிமை அடக்கிவென்று மதயானை கள்பரிகள்
கோதில்லா இரதங்கள் மாதர் முதலவர்கள்
கொடுத்துத்திறைப்பொருளும் கொடுத்து வணங்கவாங்கிக்
கொண்டகமகிழ்ந்தாள் எண்டிசை தோறும் வென்றிட நினைந்தாள் தேரைவலவ
ஞேதநீ ரிலகப்பலைத் தூண்டும்கால எனத்தூண்ட
உம்பர் உலகில்சென்று வெம்போர் விளைக்கப்புரு
கூதனை அமர்க்கஞ்சித் தும்பைமாலையுடனே
கொண்ட புயவலியும் விண்டொருவருடனும்
கூடாமல முடுக்கி அமரரைபபின நாடாமல் அடக்கி விண்ணுலகுள்ள
மாதர்களையும்வெள்ளை வாரணத்தையும்பரி
மாவையும் நலநதரும் கோவையும் ஓரைந்து
பாதபங் களையும்சிந் தாமணியையும்கையில்
பற்றிக்கொண் டதுபோலே மற்றத்திசையும்வெலல
விஜயத்தை

பிராட்டியார் கைலைமலையை முற்றுகைசெய்தல்.

விருத்தம்.

இந்தவிதம் பொன்னுலகம் ஜயித்த பினமற்
றெங்குமுள திசையுளகா வலர்தாளாணமை
சிந்தஅமர் செய்துவெற்றி மாலை சூழத்
திறைகொண்ட தடாதகைப்பி ராட்டி பின்னும்
முநதியுயர் கனகமலை தனைவ ளைத்து
முப்புரம்சுட் டவுணர்வலி அடக்கும் நீல
கந்தரன்வாழ் கயிலையில்சென் றமர்பொ ருந்தக்
கருதினள் சேனையுடன பொருதி னளே.

திபதை— காம்போதி, சாப்பு.

க வெள்ளிமலையைக்குறித்துத்தடாதகை வெற்றிப்பரித்தேரில்ஏறினள் வெகு
முள்ளர்திரண்டு கடலினுமிக்க வயங்கொலிகொண்டெதிர் கூறினர்

௨. பேரிபடக முதலான தூரியம் பேரொலிசெயமனம் கடுத்தார் இந்தப்
பாரினிலூழிகள் தோறும்விளங்கும் பருப்பதம்தன்னைவந் தடுத்தார் (சென்று

௩. சேர்ந்தங்கொருமலை யோடெதிர்தாக்கும்செழுமலைக்கூட்டங்கள் போலே
பாய்ந்துபொருது மதவாரணங்களும் பாரித்துக்கர்ச்சிக்க மேலே

௪. வீமந்தருங்கணைபூட்டும்வில்லாளிகள் மேகத்திடிபோலார்ப்பரித்தார் தூய
மாமலைக்காவலர் கண்டோடியிந்த வகையெல்லாம்நந்திக்குச் சரித்தார்

௫ நந்தியறிந்தேனந்தேடக்கிடையாத நாதனுக்கம்மொழி தொடுத்தார் சாமி
தந்தமொழிப்படித் தானேபூதகணம் தங்களைச்சண்டைக்கு விடுத்தார்

௬ குன்றிமணியெனக் கண்களில்தீப்பொறி கொப்புளிக்கச்சினந்திடுவார் கற்
கண்டுமொழியாள் பெருஞ்சேனைமீது கடலும்கடலும்போல் அடுவார்

௭ ஆலத்துடனே வடவானலும்போல் அடுத்திருசேனையும் சீறினார் ஊழிக்
காலத்தெழுந்து வரும்கடலென்னக் களம்தனில்கர்ச்சித்து மீறினார்

௮ சூலம்மழுப்படை வாள்கள்கழுக்கடை தோமரம்நேமிகள் தண்டம் பிண்டி
பாலமுதற்படை வீசிக்கொண்டேசண்டை பண்ணத்தொடுத்தாருத் தண்டம்

௯ ஏந்தும்படையுமெறியும்படையும்பின் எய்யும்படைமுதலெடுத்து கொண்டு
சேர்ந்தொருவர்க்கொருவர் விடுக்கும்படை செந்நிறப்புண்ணீரில் அடுத்து

௰ பட்டுப்பிழைக்கின்றனவும்நுழைந்து பறிகின்றனவுமெய் நோகமிக
முட்டிமுறிகின்றனவும்ஒப்பாகும் முயன்றார் வினைப்போக மாக

௧௧ ஈசனைக்கண்டு தரிசிக்கவந்தாங் கிமையோர்கள்வாகனம் நிறையச் சிறை
வீசியஅன்னம் கருடப்புள்ளாதி வெருவிப்பறந்தோடி மறைய

௧௨ மீளும்விமானம்மிருகங்கள்வீழ்ந்தனமேலும்படைகள்சென்றடிக்கப் பத்ர
காளிமுன்னுண்டது போலிரத்தம்கக்கிக் காலன்தன்வாகனம் துடிக்க

௧௩. போகமும்வீடும் தருகின்றதேவனைப் போற்றிவித்யாதரர் நாட வந்து
பாகுமொழியா ளமர்க்கஞ்சிவேறொரு பாதையைக்கூடிக்கொண் டோட [னும்

௧௪. திங்கட்படையைவிடுக்கவதற்கெதிர் செங்கதிரோன்படைஏற்றினார் பின்
அங்கிப்படையைத் தொடுககப்பெரும்வரு ணஸ்திரத்தாலதை மாற்றினார்

௧௫. நாரசிங்கப்படை போடச்சரப நறும்படையாலதைத் தாக்கினார் சண்ட
மாருதவெம்படை வீசிடநாக வடிக்கணைவிட்டதை நீக்கினார்

௧௬. இப்படிச்சண்டை புரிபவர்தங்களி லேநந்திக்கன்பர்கள்தோற்றனரவர்
கைப்படைதூள்படச் செய்துதடாதகைக் கன்னிகணைமாரி தூற்றினள

௧௭. செங்கைப்படையற்ற பூதகணத்தர் சிலைஎடுத்தேஎதிர் தார்த்தார் வீர
மங்கைபொய்யுள்ளத்தோர்செய்யுந்தவம்போலமாயவஜ்ரவேலைத் தூர்த்தாள்

துண்டங்களாகத் துணிபட்டுடலங்கள் சோர்ந்துவிழுந்தங்கே வாடினாரம்மை
தண்டத்தினாலங்கே நின்றவர்தங்களைத் தாக்கவும்சாம்பிப்பின் ஓடினார்

௧௯. ஆயுதமற்றபி மானமுமற்றணி மாலையுமற்றோடு வாரும் சென்று
பாயும்புலியைக்கண் டஞ்சுமான்கள்போல் பயம்பிடித்துச்சாடு வாரும்

௨௰. இந்தவிதம்நாலு வாசலிலும்போரினைத்துக்கணநாதர் முறிந்தார் அதை
நந்தியறிந்தோடிச் சொல்லக்கயிலாச நாதனுமவ்வகை அறிந்தான்

பிராட்டியார் சதாசிவரூபத்தைத் தரிசித்தல்.

விருத்தம்.

தேவதே வனும்அறிந்து மந்த ஹாசம்
செய்திடபம் தனிலேறிப் படைகைக் கொண்டு
மேவரிய அமர்க்களம்வந் தடுத்துப் பூத
வீரர்களைச் செயித்துவெற்றி மாலை சூடி
சேவகம்கொண் டெவர்வரினும் செயிப்போம் என்றோர்
சிங்கத்தின் பேடெனவே நிற்கும் ஆதி
தேவிதிரு உருவமும்வீ ரமும்பார்த் தன்பு
தேக்கிடுமுன் தாயும்எதிர் நோக்கி னாளே.

பரசுராகம் ஆதிதாளம்.

பல்லவி.

ஸதா சிவ ஸ்வரூ பத்தைக் கண்ணால் கண்டாள் கன்னி
தடா தகைப் பிராட் டிவி ஜயம் கொண்டாள்

அநுபல்லவி.

பிதாமகனும் கேசவனும்வி புதாளும்இந்தி ரனும்முனிவரும்
ஸதாகாலமும் தேடரியசச் சிதாநந்த பூர்ணசாம்ப ஸதாசிவ

சரணங்கள்.

க சோதிவார்கழல் பாதமும்புலித் தோலு டையும் தூயவி
பூதியணிந்த மெய்யும்கங்கைவ ளர்ச டையும்
காதில்குழையும் பரசுதரித்த கரமும்நீலகந் தரமும்தன்மிசை
யேதிரும்பிய விழியும்தன்வலப் பாதியாகிய ஆதிசாம்ப ஸதாசிவ

உ கண்டொருமுலை மறையுமெல்லிலயி லொருக் காலே நாணம்
கொண்டுதுவண்டு வளைந்திடும்பூங் கொம்பு போலே
பண்டன்பனுக வேமலர்க்குழற் பாரமும்பிடர் தாழச்சேல்விழி [ஸதா
ரண்டுமடியின்புறத்தைப்பார்க்கவிந் நிலத்தைக்கிளைத்துமின்னைப்போனின்று

ந முந்தவேள்வியில் வந்தருள்செய்தா காச வாணி சொன்னது
மந்திரிஆகும் சுமதிஎன்பவன் நெஞ்சில் தோணி
சுந்தரிஉன்னை மணம்செய்யத்தகும் சுவாமிஎன்றடி பணிந்துமொழிய
அந்தமொழியே செவிக்கமுதாக அருந்திஆனந்தம் பொருந்திச்சாம்ப ஸதா

சேலநிகர் விழியன்னை நிற்க என்று
திக்குகளை வெலக்கருதி யெழுந்தாய் அன்றே
ஆலவா யினைவிட்டுன் பின்னே நாமும்
அடுத்துவந்தோம் எனவையன் அருளிப் பின்னும்
ஓலமறை புகல்நாளை யிந்து வாரத்
தோரைநலம் தொட்டுவரு கின்ற நாளில்
மாலைமுடி மணம்செய்ய வருவோம் உள்ள
வாறென்றார் கின்னகர்க்குச் சேறொன் றுரே.

மதுரைநகர் அலங்கரித்தல்.

விருத்தம்.

கங்கைவே ணியன்விடைபெற் றவனமேல் அன்பும்
கருத்தையும்வைத் தணிதேர்மேல் கொண்டெ ழுந்து
புங்கமதி குலம்விளக்கும் கன்னி கூடல்
புரத்திலன்னை மகிழ்ந்திடமா ளிகைபுகுந் தாள்
மங்கலவோ லைகளெழுதி யரசர்க் கெல்லாம்
மந்திரிமா ரனுப்பிநகர் அலங்க ரிக்க
அங்கமிகும் மணமுரசம் யானை யின்மேல
அமைத்தடிக்கச் செய்தெவர்க்கும் அறிவித் தாரே.

திபதை—மத்தியமாவதி, சாப்பு.

க மங்கலபேரிகை அறைந்தார் புலமாந்தரும்சந்தோஷம் நிறைந்தார்
திங்கட்சடிலனைப் பணிந்தார் நகர்சிங்காரம்செய்திடத் துணிந்தார்
உ ஆடவர்மாதர்மென மேலே உலகன்னைமணத்துக்கா பாலே
தோடணிகைவளை மாலை சிந்தத்தோணுமல்செய்குவார் வேலை
ந என்றைக்குக்கலயாணம் என்பார் நாளை இந்துவாரத்தினம் என்பார்
அன்றைக்கின்றுறுநாள் எனபார் யுகம்ஆறுகநீளுமே என்பார்
ச மங்கைதிருமணம் காணவே தம்வலத்தோள்துடித்ததென் றுணவே
செங்கைதழுவித் திகழுவார் ரும்பல சேர்ந்துமகிழ்ந்து புகழுவார்
ரு மாளிகைவெண்சுதை பூசுவார் அதின் வாலொளிகண்டுகண் கூசுவார்
கோளிலாச்சித்திரம் எழுதுவார் இணை குங்குமம்கொண்டு மெழுகுவார்
சு சுற்றிலும்பாலிகை விம்பமும் தளிர் தோயும்நீர்பூரண கும்பமும்
வைத்துயர்வேதிகை அமைத்தார் பல மகரதோரணங்கள் சமைத்தார்
எ நீளும்பொற்றூண்களை நாட்டினர் வீதி நெடும்நடைபந்த லிட்டினர்
பாளைகமுகு திரட்டினர் வாழைப் பைங்கரும்பும்கூடக் கட்டினர்
அ சூரியன்போலொளி நீடி எங்கும் சோபிக்கும்கண்ணடி கோடி
நேருக்குநேராக மாட்டினர் எங்கும் நீணடகொடிகளை நாட்டினர்
கூ பாவைத்தீபங்களுண் டாக்கினர் நெடும்பந்தலெங்கும்மா லை தூக்கினர்
பூவும்பனிநீரும் இறைத்தார் பொன் பொரியும்சுண்ணமும் நிறைத்தார்
ய ஆவணவீதியி தென்னவே மணி ஆரம்பொன்மாலைகள் மின்னவே
காவணமீதலங் கரித்தார் ரத்தினக் கம்பளமெங்கெங்கும் விரித்தார்
கக தேரில்புரவிகள் பூட்டினர் கதி சேரும்பரிக்கணி சூட்டினர்
வாரணங்கட்கழு காற்றினர் மணி மங்கலத்தீபங்கள் ஏற்றினர் [வார்
கஉ முன்புள்ளநல்கலையத் தள்ளுவார் பெண்கள் முற்றும்புதிதாகக் கொள்ளு
பண்புளளகுங்குமம் குழைத்தார் தன பாரம்மறைபட இழைத்தார்
கந சந்தனம்பூசி உலாத்துவார் வாசனை தங்கும்கலவைகள் சேர்த்துவார்
சுந்தரக்கண்ணடி நோக்குவார் மைந்தர் தோறும்பரவசம் ஆக்குவார்
கச வேல்விழிக்கஞ்சனம் தீட்டுவார் மைந்தர் மேலேஉரத்திடை நாட்டுவார்
தாள்களில்செம்பஞ் சிருத்துவார் மணித் தண்டைசதங்கை திருத்துவார்

கரு தையலரெல்லாரும் கூடுவார் இடை தள்ளாடக் கள்ளுண்டு வாடுவார்
செய்யகுயில்போலே மொழிவார் பலர் சேர்ந்துகுரவைகள் பொழிவார்
கசு அன்னங்கள்போலவேசெல்லுவார் வீணை ஆதியாம்கானத்தில வெல்லுவார்
கன்னிஅரசடிதொழுவார் திருக் கலியாணமெய்ப்புள கெழுவார்
கஎ.அந்தமுடன்வீணை மீட்டுவார் கேட் டதற்குத்தியாகம்பா ராட்டுவார்
சிந்தைமகிழக்கொண் டேற்பார் நறும் தேனையருந்திட வாய்ப்பார் [ளும்
கஅ ஆஞ்ஞையுடன்மன்னர் பெண்களும் துய்ய மாமறையோர்குலப் பெண்க
காஞ்சனையைக்கண்டு மதித்தார் உடன் கன்னிமணத்திறம் துதித்தார்
கக பொன்னின்குடங்களை எடுத்து நறும் பூமாலைசுற்றிலும் தொடுத்து
மன்னும்கவரிகள் சுழற்ற சந்திர வட்டமணிக்குடை நிழற்ற
உ0 புங்கமிகும்கங்கை ஆறும் துய்ய பொன்னிமுதற்றுறை தோறும்
மங்கலவாத்தியம் பெருக தீர்த்தம் வாரணமேலகொண்டு வருக
உக வீட்டுக்குவீடுகல் யாணம் போலே வேண்டும்பணிகளைப் பூண
ஈட்டும்மறையவர்·அருந்த ஆறென்னும்சுவைஅன்னம் பொருந்த
உஉ செய்யமனத்தில் இணங்குவார் அதி திக்கெதிர்நோக்கி வணங்குவார்
மெய்யடியார்களைப் பூசிப்பார் மறு விதிமுறைநூலை வாசிப்பார்

கல்யாணமண்டபம் அலங்கரித்தல்.

கன்னிபுரம் தன்னையிவ்வா றலங்க ரிக்கக்
கடிமணமாப பிளைக்குமண மகட்கும் வேறு
பன்னவிணை யில்லையென்று லிவர்க்கு வேடகப்
பண்புறுமிந் நகர்க்கிணையெவ் வுலகத் துண்டாம்
இந்நகரிவ் வணம்செய்ய அதன்முன் அணைக்
கினியமண மண்டபமும் இசைக்க வெண்ணித்
துன்னும்நிலைத் தேர்கள்வா னளவும் நாட்டிச்
சுபம்செய்வார் மிருந்தொளிர்வை பவம்செய் வாரே.

கேதாரகவுளை ஆதி.

பல்லவி.

சிங்காரம் செய்தானே சுமதி கலயாணமண்டபம்
சிங்காரம் செய்தானே சுமதி

அநுபல்லவி.

கங்காதரனுக்கும் தடாதகைப் பிராட்டிக்கும்
காணவரியதிருக் கல்லியாணம் தனைச்செய்ய சிங்காரம்

சரணங்கள்.

க பாரும்பளிங்காளை களிருபாலும்பொருந்தப்பொற் படிகளும்சீலத்தி னாலே
ஏறும்கேசரிகளை கிறந்திருவமணிவைத் திழைத்ததிண்ணையும்செய்திப் பாலே
சேரும்புறத்திலுள்ளோர் மெய்நிழல்சித்ரம்போலே திகழ்படிகமணி யாலே
ஆரும்சுவரைஎடுத் திடையில்சாளரம்பச்சை யாலேநிருமித்தொருக் காலே

நேரும்பவளத்தாலே ஆயிரங்கால் . நாட்டி
நீலப்போதிகைவைத்துச் செம்பொன்உத்திரம் பூட்டி
சாரும்பதுமராகத் தால்துலாங்களைச் சூட்டி
சந்திரகாந்தக்கல்லாலே மாடங்களைச்செய் தீட்டி சிங்காரம்

ஆணிநித்திலங்களைக் கோத்துப்பாளைகளாக அணிந்துநாலுபக்கமும் தொங்க
தோணும்மரகதரத் தினங்களாலேபசிய துளிரும்இலைகளும்வி ளங்க
பூணும்ப்ரவாளத்தினால் செய்துகுலைகுலையாய்ப் பொருந்தும்பழங்களுந்துலங்க
காணும்வெள்ளியினாலே கோழரையுடன்செய்த கமுகமரங்களும்இ ணங்க
நீணிறத்துப்பினாலே செம்மலரும்தொ டுத்து
நெடியபச்சிலைகளை மரகதத்தால்அ மைத்து
மாணும்கனகத்தாலே பழக்குலைகளும் வைத்து
வாழைமரங்கள்ஒளி துலங்கிடநிறு வித்து சிங்காரம்

ந பைத்தசண்பகமும்பா திரியும்குருக்கத்தியும் பலபலதருவுடன் கூட
சுற்றும்வரிசையாக வளர்த்ததில்மதுகரம் சூழ்நதகீம்களித்திசை பாட
மற்றும்நறுமணத்தைக்கவர்ந்துகொண்டுசாளரவாயில்தோறும்தவழ்ந்துநாட
தித்திக்கின்றமதுவின்துளிகளையிளம்தென்றல் தெளிக்கின்றபூந்தோட்டம்நீட
ஒற்றுமையாகவே வேதிகையுமு யர்ந்த
ஓமகுண்டமும்யாக சாலையுடனி . சைந்த
முற்றுமேகலையும்சி வாகமத்தில் மொழிந்த
முறைமையினாலேசெய் தமைத்துமிகச் சிறந்த சிங்கார

மாசகன்றிடும்அஷ்டமங்கலங்களைச்சித்ர வகையாலேற்படுத்திப்பின்வாய்த்து
வாசமிகும்சந்தனம் கஸ்தூரியும்குங்கும மலரும்பனிநீருடன் சேர்த்து
நேசமுறவேகுழும் பாக்கியக்குழம்பாலே நிலத்தைமெழுகிவிண்ணில் ஆர்த்து
வீசியுலவுகின்ற சூர்யமண்டலம்நாண விளங்கும்நாகரத்நங்கள் ஏர்த்து
காசுலவும்தீபங்கள் இருபுறமும்ப கட்டி
கையிலேலநதிப்பிரதிமை நிற்பவிருள்வி ரட்டி
தேசுலவும்உடுக்கள் போல்பன்மணிக ளொட்டி
செய்திலங்கியகம்ப லங்களைமேலே கட்டி சிங்கார

பேராசிரியம்.

திருமணிக் கோயிலை யமைத்துமுன் வான்றொடத் திசைகள்மறை யப்பந்தரை
சிறப்புடன் செய்துபொற் பாலிகையி லேமுளை தெளித்தயன் முதல்வா னவர்
சேர்ந்திருக் கக்கம்ப ளம்விரித் ததனுளே திருத்தவி சிருத்தி வளரும்
செழுமதிச் சடையனடி யாருக்கு மாசனம் செய்துவைத் ததன்மத் தியில்
தருவைந்து மீன்றவயி ரத்தா லியன்றகே சரிகளின் பிடரி யின்மேல்
சாதகும் பப்பலகை வைத்ததில் துகிரினால் சதுரக் குடத்தூண் களும்
தண்கொள் பளிக்குத்தி ரங்களும் பவளம் தனால்கொடுங் கைக ளுமேலே
தங்கும்நிலை மூன்றாக வேவிமா னம்சிற்ப சாஸ்த்ரமுறை செய்த தற்குள்
பெருமைதரு மாநங்க மும்கால்க ளாகியும் பிரணவமா சனமாகியும்
பேசரிய நான்மறைகள் முத்துவட மாகியும் பிறையணிப் பரம சிவனெம்
பிராட்டியொடு வீற்றிருந் திடுவதற் காகவிப் பிரகாரம் வடிவெடுத்துப்
பிறங்குவதுபோல்மணியிழைத்தபொற் றவிசினைப் பெட்புறச் செய்துமேலும்

கருதரிய அமுதமுட னுண்டிவகைகளும் காமதேனுக்கொடுக்கக்
கற்பக விருக்ஷங்கள் பீதாம்பரங்களும் கனகபூஷணமும் அருளக்
கதிர்கொள்சிந்தாமணி நினைத்தது கொடுத்திடக் கண்டிந்த வண்ணம் ஓங்கக்
கண்ணதா யிரவனகர் நாளும் படிக்கலங்காரம்செய் தான்சுமதியே.

கல்யாணம்காணப்பலதேசமன்னர்வருதல்.

விருத்தம்.

திருமகளைப் பலபலசிங் காரம் செய்தார்
தென்னன்மகள் திருக்கலியாணத்தி னாலே
வருகமகிழ்ந் தரசரெதிர் வணங்கித் தங்கள்
மலர்க்கரத்தி லேந்திமணி முடிமேல் வைத்துப
பொருவருவா சகமறிந்து கொணர்ந்த வர்க்குப்
பூஷணமும் பொற்றுகிலும் கொடுத்து வெல்லற்
கருமைதரும் படைகளுடன் பாதை மேற்கொண்
டாடினர் மதுரைவந்து கூடி னாரே.

தோடிராகம், சாப்புதாளம்

பல்லவி.

மன்னர்மகிழ்ந்துவந் தாரே தடாதகை அன்னை திருமணம் காணவே

அநுபல்லவி

கன்னிதடாதகை தன்னைமணம்செய்யக் கைலாசநாதர் வருவதுகண்டுய்ய [டி
சென்னியின்மீதும லர்க்கைகுவித்தெங்கும் சீராடிச்சீராடி நேராடிக்கொண்டா

சரணங்கள்

க கல்லியாணர் கோசலர் வங்காளர் சோனகர்
காந்தாரர் கொங்கணர் ஒட்டியர் சீனகர்
கொல்லர் மகதர் குகுதர்வை தர்ப்பர்
குளிங்கர் கலிங்கர் தெலுங்கர் எனத்திகழ மன்னர்

உ குச்சரர் மாளவர் சாளவர் ஆரியர்
கொங்கர் குருநாடர் கேகயர் நேரியர்
மச்சரர் சிங்களர் பாஞ்சாலர் வங்கர்
மராடர் விராடர்கள் ளுடரொ டும்கூடி மன்னர்

ங கன்னோசி நாடர் பவுளகர் பல்லவர்
காம்போசர் சாவகர் பப்பரர் வில்லவர்
மன்னர் முதலைம்பத் தாறுதேசத் தோரும்
மங்கலம்சொல்லிக்கொண் டெங்கும் நிறைந்திட மன்னர்

எல்லாஉலகத்தாரும்கைலைக்குச் சேர்ந்துவருதல்.

விருத்தம்.

பலதேச மன்னர்களும் சேனை சூழப்
பார்மீதில் சமுத்திரம்போல் பரவத் தங்கள்
தலவளங்கொண் டாலவாய்க் கெய்திச சிங்கா
தனத்திருக்கும் தேவியடி தாழ்ந்தங் குற்ற

நலமிகுந்த தமதிடம்சென் றிருந்தார் அவ்வூர்
நானிலத்தைந திடப்பொருளும் நிரம்பி மிக்க
பொலிவுபெற்று விளங்கினதால் இனியெம் மையன்
புதுமணம்செய் திடவருமற் புதம்சொல் வேனே.

இதுவுமது.

சங்கரனபோர்க் களமகன்று கைலே சேர்ந்து
தலைமைபெறும் நந்திசர்க் கருளும் வண்ணம்
செங்கண்மால் அயன்மகவான் முதலா யுள்ள
தேவர்களை வரக்கருதி அவர்நாட் டுக்கு
சங்குகன்னன் முதலாம்பா ரிடவீ ரரைத்
தான்விடுக்க வரும்சோம வார நாள்நம்
மங்கைபா கன்மணமென் றுரைப்ப அன்பு
மனம்கொண்டார் வரத்தேவர் இனம்கொண் டாரே.

மத்தியமாவதி ஆதி.

பல்லவி.

சேர்ந்து வந்தனரே கயிலா சகிரியைச் சார்ந்து வந்தனரே

அநுபல்லவி

சேர்ந்து மலயத்துவச வேந்தன் மகளை த்ரிபு
ராந்தகன் மணம்செய்ய வாய்ந்த மகிழ்ச்சிகொண்டு

சரணங்கள்.

க ஓதும்கா லாக்கினிருத்திர ரும்தச ருத்திரரும்நூ
றுருத்திரரும் அஷ்டவித்தி யேசுவரரும்
பூதவீ ரரும்கண நாதரும் சூக்ஷ்மாண்டரும்
புண்ணியன ருளியநூ றுருத்திரரும்
நீதம் உறும்அஷ்டமூர்த் தியும்ஆட கேசுவரரும்
நீலலோகி தரும்க்ஷேத்திர பாலகரும்
பாதுகாக் கும்சாஸ்தாவும் ஏகாத சருத்திரரும்
பகாமலே மகாருத் திரர்முதல் சேர்ந்து

உ மால்அயனஇநதிரன்முதல்ஆன திக்கதிபரெண்
வசுக்கள் மருத்துவர்கள் இருவோரும்
மேலும்மருத்தெழுவர்சூரியர்பன்னிருவர்
வெண்சுடர் மதிஏழ் அனைமாரும்
ஏலும்கின்னரர்சித்தர்வித்தியா தரர்இயக்கர்
இமையவர் உரகர்கந் தருவோரும்
சாலும்நிருதரும்பேதாளப்படைகள்முதல்
சமேதரா கமான மேற்கொண்டு சேர்ந்து

ந செய்ய பதஞ்சலிவி யாக்கிரபா தமுனிவர்
திகழும் பிருகுவெனறுபேர் உறுமுனியும்
மெய்யை உணரும்சன காதியோ கியர்சுகர்
வேதவி யாசமுனி குறுமுனியும்

வையம் புகழும்வாம தேவர்நா ரதர்முதல்
மாதவம் தனில்நிலை பெறுமுனியும்
பையர வையணியும் துய்யனைத் தேடியின்னம்
பலபல நலமு னிவரும் சேர்ந்து

௪ வருஷம் அயனம்பரு வம்திங்கள் பக்ஷம்திதி
வாரம்ந க்ஷத்திரம்க ரணம் யோகம்
இரவு பகல்பொழுது நாழிஎண் திசையானை
எழுகடல நதிமலை மின்னல் மேகம்
மருவும்பூ தம்புவனம் மநதிரம் நூல்கள்தத்து
வம்கலை சுருதிய தமாம்அ னேகம்
சரியைகி ரியையோக ஞனசித் திகள்முதல்
சதாசிவா ஹராஹரா என்று சேர்ந்து

௫ ஆயிரம் வாரிதியொன் றாக வருவதுபோல்
ஆயிர மாம்சேனைக் கடல் மேலே
ஆயிரம் செங்கதிரை வீசி எழும்பிவரும்
ஆயிரம் சூர்யனுதித் தது போலே
ஆயிரம் ருத்திரர்கள் துந்துபி அடித்தண்டம்
ஆயிரம் கலங்கிட ஒருக் காலே
ஆயிரம் சதகோடி யோசனை வழிநடந்
தவாளவாள் பவாசிவா என்று சேர்ந்து

௬ ஆனை முதல்வாகனம் ஏறி மனைவியுடன்
அரன்உருக் கொண்டுவந்து குதிப்பாரும்
மானமீ தில்அம்பர வழிவந் துடல்புளகம்
மருவ முடியிலசெங்கை பதிப்பாரும்
மாநிலத் தில்மெய்யுற வணங்கி எழுந்துதங்கள்
மனமகிழ்ந் தனபொழுகத் துதிப்பாரும்
ஆனந்தத் தேன்மலையை அளிகள்மொய்த் ததுபோலே
அமோகமா நமோநமோ என்று சேர்ந்து

விருத்தம்

வந்தயன்மால் முதலான பேரிவ் வண்ணம்
வரும்போது நந்திபிரம் படிக்குட் பட்டுச்
சிந்துமணி முடிபபொடிகள் பறக்கத் தோன்றும்
தினகரமண் டலத்துக்குள் அடங்கும் பூர்ண
சந்திரமண் டலமிலங்கும் வகையே போலத்
தனிவிளங்கும் கயிலைபரன் திருமுன் னாகப்
பந்திபந்தி யாகநின்றுத் தரவின் பேரில்
பணிஇன்றார் கண்காட்சி அணிஇன ரே.

பரமசிவனுக்குக் குபேரன்மணக்கோலம்செய்தல்·

விருத்தம்.

கூடிவந்து பணிபவரில் சிலர்க்கு வார்த்தை

கூறியும்பின் சிலர்க்குமந்த ஹாசம் செய்தும்
தேடரிய கடாக்ஷமதால் சிலர்க்குப் பார்த்தும்
சிலர்க்குமணி முடிஅசைத்தும் இவ்வா றையன்
நாடரிய கருணையென்னும் வரிசை நல்கி
நயந்தெழுந்தோர் மண்டபத்தில் சென்றே ஆங்கோர்
பீடமிசை இருந்தருளக் குபேரன் அன்பைப்
பெய்கின்றான் மணக்கோலம் செய்கின் றானே.

அசாவேரி, சாப்பு.

பல்லவி.

மணவாளக் கோலம்செய் தானே முக்கண் வரதன் மனசுக்கிசைந் தானே

அநுபல்லவி.

கணம்கொண்ட மறைகளும் மாலயன் முனிவரும்
காண அரியகை லாச வாசனுக்கு மணவாள

க பூந்துகில் எடுத்துக்கொய் திடையில் உடுத்திரட்டைப்
பொன்னரை ஞாண்முதல் பூட்டி
வாய்ந்தக ளபம்பூதி திகழ்மெய்க் கணிந்துமுடி
மன்னக்கற் பகமாலை சூட்டி
தோய்ந்த மதிஇரவி போலே செவியில்வன்னத்
தோடும்குண் டலங்களும் சேர்ந்து பளபளென்னக்
காந்தி நிறைந்தமதிக் கணம்கொண் டிசைத்ததென்னக்
கண்டிகை ஒளிநீல கண்டம்தன் னிலேமின்ன மணவாள

உ மலைஅரு வியைப்போலே மார்பிடையி லேமுந்நூல்
வலம்கொண்டு கிடந்தெழில் ஆட
தலையில் அணிந்தமதி ஒழுகும் அமுதமென்னத்
தாளமா லிகைஒளி நீட
அலைதரும் பாற்கடல் மீதிளம் கதிர்போலே
ஆரப தக்கம்இருள் அகற்றிட அப்பாலே
வலயம் கேயூரங்கள் நாலு புயத்தின்பாலே
வாய்க்கப் புனைந்துபல பூஷணங் கள்மென்மேலே மணவாள

ங அடுத்தபவித்திரங்கைக் கிசைத்தானைத் தோல்நீக்கி
அணிந்துத்தரியமும் இலங்க
உடுத்தகோவணதிமீல்ஐந்துதலைநாகம்போல்
ஒளிர்பீதாம்பரம்முன் துலங்க
தொடுத்துமாலைகள்தோளில்சாத்திநூபுரம் தொட்டு
சொற்பதம்கடந்தன்பர்க்கடுத்ததாளினில் இட்டு
எடுத்ததன்பதிசெய்தவப்பயன்வெளிப் பட்ட
தென்றனைவரும்சொல்ல இசைந்தடியில்கும் பிட்டு மணவா

ஈசன் மணக்கோலத்துடன் மதுரை நகர்க்கு வருதல்.

விருத்தம்.

மால்அயன்இந் திரன்முதல்தே வர்கள் பலர்க்கும்
மற்றுமுள்ள யாவருக்கும் சுமங்க லத்தைச்
சீலமுடன் வரக்கடைக்கண் அருளும் தேவ
தேவனுமங் கலம்புனைந்தான் போல் மணாளக்
கோலம்இசைந் தமரர்கள்பூ மாரி பெய்யக
குண்டோத ரன்முதுகின் மேல்தாள் ஊன்றி
மால்இடப மீதேறி வழிமேல் செல்ல
மதியுற்றான் தென்மதுரைப் பதியுற் றானே.

தோடிராகம், ஆதிதாளம்.

பல்லவி.

ஈசன் வெள்ளியங்கிரி வாசன் மலயத்துவச ராசன் பதிக்குவந்தானே

அநுபல்லவி.

வாசம் மருவும்கம லாச னனும்வைகுந்த
வாசனும் தேவருடன் வாசவ னும்துதிக்க ஈசன்

சரணங்கள்

அந்தரத் தவர்ஐந்து துந்துபி களடிக்க
வந்தபூ தர்இயக்கர் பந்தமி கும்அரக்கர்
தந்தம்விருது நீட விந்தமுனிவர் கூட
திந்திமிஎனநடிக்க தாளமி சைந்துவிஞ்சையர் பிடிக்க
உந்தி ஆயிரம் குகைக்குள்மென் மேலே ஒலிக்கும்ஆயிரம்கேசரிபோலே
அந்தமேவுசங்கு கன்னஞ்யிரம்சி
றந்தசங்கம்ஊத மிருதங்கம்மோத பாணன்பூத சமேத ஈசன்

சூடும் முடியில்செங்கை கூடிவருமவரும்
பாடி இருகைகொட்டி ஆடிவருமவரும்
தேடிப் புளகம்மெய்யில் மூடிவருமவரும்
நாடியசிவகணரும் மழைபோல ஓடிநீர்வருகணரும்
ஆடும்கங்கைமுதல் நவநதிக் கன்னி அவர்கள் சாமரைகள் சுழற்றவேதுன்னி
நீடும் வெண்குடைகுண் டோதரன் மிகக்கொண்
டாடிக்கொண்டு தாங்க அன்புதேங்க தொண்டர்ஓங்க ராசாங்க ஈசன்

வாசவன் பொன்மணிக்கா ளாசி ஏந்தஅடைப்பை
ஈசானன் ஏந்தவன்னி வாசப் புகை எழுப்பப்
பேசும் வருணன்கும்பம் ஏந்தி வரமாருதன்
வீசிடஆலவட்டம் நிருதியின் மாசகல்ஆடிவட்டம் பிடித்திட
ராசராசன்பொன் மாரிகள் பெய்ய நயந்துகாலன்கஞ் சுகிவினை செய்ய
மாசுகன்றமுடி ஆயிரத்தரகர்
தேசவிளக்கினங்கள் தரித்திலங்க மறைபதங்கள் இணங்க ஈசன்

மின்னும் இடிக்கொடியும் அன்னக் கொடியும்பக்ஷி
மன்னுருவக்கொடியும் துன்னிச் சேவகம்செய்ய
மன்னும் கொடிமத்தியில் பொன்னிடபக்கொடிவேந்
தென்னவருகஒருபால் குடவுதரம் தன்னுடைப்பூதம்ஒருபால்
முன்னவன்அருகில் அரிஅயனடுத்து மூளைத்ததென்னமுத் தலைப்படைபிடித்து
வன்னமேவுபதி னெண்படைக்கலமும்
பின்னிவளைந்துகூட வருகநீட பெருமைநாடக் கொண்டாட ஈசன்
ரு ஏலும் மறைப்பொருளைப் போலே பாடல்செய்தெதி
ராலே புஷ்பதந்தனன் பாலே துதிசெய்யப்பின்
நீலமெய் யுடைத்திரு மாலும் அயனும்இரு
பாலிலும்துதிபெருகக் கரம்குவித்துச சீலமுடனேவருக [இருந்து
மேலும்வெள்ளிமலை தன்னுடன்எழுந்து விரைந்துசெல்வதென விடைமிசை
கோலமேவுதிரு வாலவாய்அரசி
மேலேஆசைஅண்ட மனதில்கொண்ட ஒளிதிரண்ட ஸ்ரீகண்ட ஈசன்

மூவருக்கும் முதல்வனிவ்வா றெழுந்த மாற்றம்
முழங்கியபொற் சின்னமொலித் திடவெக் காலும்
சேவகத்தைக் கன்னியர சியின்பால் நின்று
செலுத்திவரும் மந்திரிகள் பலரும் பூமி
காவலரும் சேனைகளும் எதிரே சென்று
கரம்குவித்து வணங்கியுப சரிக்கப் பூவில்
தேவருல கிற்கிணையாம் மதுரை வீதி
. சேர்ந்திட்டார் தொண்டருள்ளம் சார்ந்திட் டாரே.

வீதியில்வரும்சுவாமியைப்பார்த்துப்பெண்கள்கூறல்.

மதுரைவீ தியில்வருமை யனைச்சார்ந் தவ்வூர்
மாதர்தமிழ் முதற்பதினெண் மாதர் விண்ணோர்
பதியுளமா தரும்மாநந் தனவ னத்தில்
பன்மலர்பூத் திருப்பதுபோல அவர்மெய் யெங்கும்
பதியவே தங்கள்கண்க ளான நீலோற்
பலமலரைச் சாத்தியிரு கையாம் கஞ்சப்
புதுமலர்க ளைக்குழல்மேல் அணிந்து கொண்டு
போற்றுவார் போலிவற்றைச் சாற்று வாரே.

திபதை—எதுகுலகாம்போதி, ஆதி.

க தேவர்கள்தே டரும்கூடல் ஆவணத்தில் வரும்ஐயன்
திருமுகம் காணவந்தார் பலமாதர்
காவலர்மூ வர்நாட்டுக்குள் என்னபுண்யம் செய்ததோயிக்
கன்னிநா டென்றுரைததார் பலமாதர்
உ மங்கைத னக்கிசைந்த புருஷனைச் சேரச்செய்த
மா தவம் யாதோவென்றார் சிலமாதர்

இங்கிவன் தன்னைச்செங்கை பிடித்திட ஸ்வாமிதவம்
என்னமுன் செய்தானென்றார் சிலமாதர்
௩ இந்தமதுரைசெய்த பாக்கியம் என்னேஐயன்
ஈங்குறப் பெற்றதென்றார் சிலமாதர்
சுந்தரம் ஆமிவர்கள் திருமணம் காணநாமுன்
தொகுத்தபுண்ணியம்என்னென்பார் சிலமாதர்
௪ மன்னன்வருந்தியிந்தப் பெண்ணைப்பெற்றேங்கச்செய்த
மகமேமகமென்பார்கள் சிலமாதர்
அன்னமகங்கள்செய்தும் இவர்மணம் காணத்தவம்
ஆற்றிலன மன்னன்என்றார் சிலமாதர்
௫ அதிரூப மாமிவளைக் கல்யாணம் செய்யத்தக்க
அழகனிவனேஎன்றார் சிலமாதர்
மதுராபுரத்துக்கினி அரசிவன் அல்லால்வேறு
மன்னவன் இல்லைஎன்றார் சிலமாதர்
௬ தோகைஅழகுக்கேற்ற சுமுகனைத் தந்ததிந்த
சுமதிவல்லபம்என்பார் சிலமாதர்
பாகுமொழியாள்தன்னைப் பெற்றகாஞ்சனைசெய்த
பாக்யமே பாக்யம்என்றார் சிலமாதர்
௭ சாரிசாரிகளாக உடுக்கைநெகிழநாணம்
தலைக்கொண்டு சாய்ந்துநின்றார் சிலமாதர்
வாரிகுழல்முடித்து மேனிஎங்கும்மன்மதன்
வாளிபுதையச்சோர்வார் சிலமாதர்
௮ வாசமலர்கள்மிக்கத் தேசளி பெற்றிருந்தும்
வாளியாய்ப் பாய்ந்ததென்பார் சிலமாதர்
கேசமிலங்குமுல்லை நீலத்தாரும்வெறுத்துக்
கீண்டெறிந் தோடிவந்தார் சிலமாதர்
௯ மாமைவிழியும்மலர் வதனமும் பல்வரியும்
மன்மதன் வாளிஎன்றார் சிலமாதர்
ஆமென்றவரவர்கள் முகத்தைபபாராமல்தங்கள்
அடிகளைப் பார்த்துச்சென்றார் சிலமாதர்
௰ விடைமேல் இருந்துநமதுள்ளத்தில் மேவும்மாயம்
விமலன்என் செய்தான்என்றார் சிலமாதர்
நெடுமதி என்றெழுந்து நம்மைச் சுடுவதென்னோ
நெருப்பெனச் சோர்ந்துசெல்வார் சிலமாதர்
௧௧ புங்கவன் முடிமேலே இருப்பது போலேநம்மைப்
புதுமதி சுடுமென்றார் சிலமாதர்
அங்கவர்க் கிந்தவெப்பம் கொள்ளுமென் றல்லோகங்கை
அணிந்தது காணும்என்றார் சிலமாதர்
௧௨ கலையும்நாணமும்சோரக் கருத்தும் நிறமும்மாறக்
கண்ணீர் ஆறாகநின்றார் சிலமாதர்

உலையின்மெ ழுகுபோலே ஐயன்ப வனிகண்டே
உருகிமெய்த் தொண்டர்ஒத்தார் சிலமாதர்
கரு கலந்தார்க்கி டுக்கண்வரக் கண்டுகை விடுவார்போல்
கைவளை சோரநின்றார் சிலமாதர்
உலந்தாலும் செய்தநன்றி மறவார்போல் காலில்சிலம்
பொட்டிக்கி டக்கநின்றார் சிலமாதர்
கச வன்னம யிலேஎன்றன் சாமிமுன் தூதுபோன
மனம்வரக் காணேம்என்றார் சிலமாதர்
என்மனம் போயிருக்க உன்மனத் தைஏன்விட்டாய்
என்றுசண் டைபிடித்தார் சிலமாதர்
கரு ஆலத்தை உண்டநீல கண்டன்மேல் ஆசைகொண்டு
ஆவலு டனேவந்தார் சிலமாதர்
கோலமங் கையர்க்கிரங் காதநெஞ் சிரும்பென்றே
குறியிட்ட கறுப்பெனறார் சிலமாதர்
சுக இவனை எழுதித்தந்தால் வேண்டுவ நீவேணென்றே
எழுதவல் லார்முன்சென்றார் சிலமாதர்
அவனை எழுதவல்லார் எவரென்று சொல்லத்தம
தாவிசோர்ந் தார்கள்அதில் சிலமாதர்
கஎ ஆசைமுன் பற்றிக்கொள்ளப் பாசம்பின் பற்றித்தள்ள
அகப்பட்டுக் கொண்டுவந்தார் சிலமாதர்
மாகுணங் கார்முலையார் காஞ்சிந ழுவிக்காலில்
மாட்டுந்த ளையோபோலுற்றார் சிலமாதர்
கஅ மேலாடை சோரக்கலை புரிவளை சோரக்காம
வெள்ளத்தில் மூழ்கிவந்தார் சிலமாதர்
மூலமு தல்ஆனந்த மதுக்கட லைக்கண்வாயால்
முகந்துகொண் டோடிவந்தார் சிலமாதர்
கக கைத்தலம் கூப்பிஇரு கண்களும் பார்த்துமனம்
கரைந்துநா டூஇல்நின்றார் சிலமாதர்
வைத்தமண் பாவைபோலும் சித்திரம் போலும்தங்கள்
வடிவுவே றற்றுநின்றார் சிலமாதர்

விருத்தம்.

இந்தவகை யூத்துதிர்ந்த பொற்கொடிபோல் ஒளிர்மடவார்
இட்ட சங்கும்
விந்தைநறுங் கலைவளையும் அண்ணமும்விண் ணோர்இறைக்கும்
விரைமென் பூவும்
நந்திபக வான்கரத்தின் பிரம்படிவான் அமரர்முடி
நண்ணித் தாக்க
சிந்தினமா மணிக்குவையும் வீதிஎங்கும் குப்பையதாச்
செறிந்த வன்றே.

சுவாமி கல்யாணமண்டபத்துள் எழுந்தருளுதல்.

விருத்தம்.

அரசிலைத ருப்பையும்தோய் கும்ப நீரை
அந்தணர்கள் இறைக்கஅலா மாதர் தட்டின்
விரசுமணி ஆலத்தி சுழற்ற எட்டு
விதமாகும் மங்கலங்கள் எதிர்வந் தோங்க
முரசதிரக் கருப்பூரத் தீபம் ஏந்தி
மொய்குழலார் மூன்றுதரம் வலம்செய் திடப்
பரசுதரன் விடையிகந்தாங் கயனமால் ஈகைப
பற்றினான் உலகம்நிறை சித்தி னானே.

சாவேரிராகம்

பல்லவி.

நாதன் வந்தானே கைலாச நாதன வந்தானே

அநுபல்லவி.

வேதங்களும்தேடிக்காணாமல்உடலிளைத்துப
பாதுகையாகமலர்ப் பாதத்திணங்கப்பெற்று நாதன்

சரணங்கள்.

க துய்யநடைப்பாவாடை பரப்பிநிலம் மறைக்கச்
சுகந்தமதுவினால்சே வடிநனைத்து மணக்கத்
தெய்வமந்தாரமாரி யாலேமுடி நனைக்கத்
திருமண்டபத்துள்எழுந் தருளித்தெனனர் பிழைக்க நாதன்

உ மங்கையர்சூழ்ந்திடக்காஞ் சனமாலை வந்தன பாலே
மருமகன்வரக்கண்டு மனமகிழ்ந்தெதி ராலே
கங்கையில்முகந்தபொற் கலசநீரத னாலே
காலைவிளக்கிஅந்நீர் தலைமேற்கொள்ளமென் மேலே நாதன்

ங பாதகமலஈரம் பட்டால்துடைத்து மாற்றப்
பனிநீர்கஸ்தூரிசேர்த்து குங்குமச்சேறு சாத்த
ஓதுமந்தாரமலர் கொண்டருச்சித்து வாய்த்த
உச்சியில்கைகுவித்தங்குபசாரம்சொல்லிய போற்ற நாதன்

விருத்தம்.

முன்னவனை இவ்வாறு பூசித்தெனரன்
மொய்குழலை மணஞ்செய்திக் கன்னி நாடு
தன்னையும்கைக் கொண்டரசாண் டிருத்தி என்றாள்
சாமியுமுட் கொண்டணிமண் டபத்தைச் சேர்ந்து
பொன்னரியா சனத்திருந்து சூழ நின்ற
பூவயன்மால் உருத்திராதியர்விண் ணோரை
அங்கிலைபொற் றவிசில்இருந் திடக் கடைக்கண்
ஆற்றினார் தேவர்மலர் தூற்றி னாரே.

தடாதகைப்பிராட்டியாருக்கு அலங்காரம்செய்தல்.

விருத்தம்.

சாமியுடன் எவ்வுலகத் தவரும் ஈண்டத்
 தரணிவெளி யாதிருத்தல் முன்போல் கும்ப
மாமுனியை வடதிசையில் இருத்தி னுனே
 மகாதேவன் ஆக்கினையோ அறியோம் ஐயன்
பூமருவும் திருமணத்துக் கிசைந்த ஓரை
 பொருந்துமட்டும் இருந்தம்பாத் திருந்தா னிப்பால்
கோமளமாம் தேவியைச்சிங் காரம் செய்யக்
 கூடினர் சிலதியர்கொண் டாடி னுரே.

சுருட்டிராகம் சாப்புதாளம்.

பல்லவி.

அலங்காரம் செய்தாரே தடாதகைக் கலங்காரம் செய்தாரே

அநுபல்லவி.

அலங்காரத் துடன்வரும் அந்திவண் ணனுக்கேர்க்க
நலம்கா ண எல்லோரும் நாடி மகிழ்ந்து பார்க்க அலங்கா

சரணங்கள்.

க மங்கைமார் திரண்டுபொன் ஆசனத் தின்மீது
 வைத்துக்கஸ் தூரியை அணிந்து
குங்குமக் குழம்பினைப் பூசிவா சநீராட்டிக்
 குளிர்நதவஸ் திரம்உடுத்தி மகிழ்ந்து
அங்கமு டன்அரசர் குலத்துக்குத் தகுதியா
 அநதணர் களுக்கன்பு புரிந்து
செங்கைநி றையப்பொருள் வாரி அளித்தவர்கள்
 சிந்தை மகிழச்செய்யச் செய்தடி யிற்பணிந்து அலங்கா

உ செந்திரு வம்வாணியும் செம்பஞ்சிக் குழம்பினைச்
 சேவடி யிலேபூசி மின்ன
கந்தரம் தனை ஒத்த குழலுக்கு வாசனை
 கலந்தசாந் தைநீவி மன்ன
சந்தனம் தனைப்பனி நீரில்கு ழைத்துப்பூசித்
 தனத்தின் மி சைபளப ளென்ன
சநதகம் மிகுந்தநூ புரத்துட னேபாத
 சரங்களும் கிண்கிணியும் திருவடி யிலே துன்ன அலங்கா

ங விரிசிகை பருமம்க லாபம்மே கலைகாஞ்சி
 சிதம்ஐந்தும் இடைமீதில் விளங்க
வரிவண் டுறையும்காந்தள் போலே மணிஆழிகள்
 வரியால் விரல்கள இலங்க
இருகரத் தினும்வைரக் கடகங்க ளும்புயத்துக்
 கேற்பத் தொடிகளும் பிறங்க
இரவியு டையகிர ணங்களா கும்கைகளை
 எடுத்துக்கும் பிடும்படிக் கணிந்துமி கத்துலங்க அலங்கா

௪ பவளமாலைபொன்மாலை மரகத மாலையும்
பரிந்தணிந் திந்த்ரவிற் போலே
தவளமுத் துமாலையும் மலைஅரு விபோல்கொங்கை
தன்பால் தழுவப்பூட்டி மேலே
குவியுமே ருவைத்ருவ சக்கிரமெ னப்பதக்கம்
கொங்கையைச் சூழவொருக் காலே
செவியுடன் மகரமும் மதியும்பே சவந்தாற்போல்
சேரும் குழைகுண்டலங் களையும் அணிந்தன்பாலே அலங்கார

௫ மழைக்கும் மதிக்கும்இடை வானவில்கிடந்தாற்போல்
மணிப்பட்டம் நெற்றியில் மாட்டி
விழைக்கும் முகிலைஇனிப் பிறக்கும்உக்ரனிவ்வண்ணம்
விலங்கிடு வான்என்று காட்டி
இழைக்கும் முறைமைபோலே வாசக்கருங்குழல்மேல்
எழில்பெரு கிடமாலை சூட்டி
தழைக்கும் கற்பகம்தந்த ஆபர ணங்கள்எல்லாம்
தங்கத் திருமேனியில் எங்கும் ஒளிரப் பூட்டி அலங்காரம்

தடாதகைப்பிராட்டியார் கல்யாணமண்டபம்வருதல்·

பாதமுதல் அலங்காரம் இந்த வண்ணம்
பரிந்துசெய்து சமயம்வரப் பார்த்துக் கஞ்சச்
சோதிமலர் வாணியும்பொன் மகளும் முன்னே
சோபனம்பா டிப்பணிந்து திருக்கை நீட்ட
ஏதமில்நா லெட்டறமும் வளர்த்த கையால்
எம்பிராட் டியும்பிடித்தா ரணங்கள் ஒங்கச்
சீதளவான் மலர்பொழிய இயங்கள் ஆர்ப்பத்
தெருளினுள பந்தரில்வந் தருளி னாளே.

சௌராஷ்டிரம், ஆதி.

பல்லவி.

அம்மை தடாதகைவந்தாளே தேவாதிதேவர் அனைவர்க்கும் காட்சிதந்தாளே

அநுபல்லவி.

வெண்மதிப்பிறை சூடி விமலனிடத்தை நாடி
எம்மண்டலத்தில்உள்ள யாவர்களும்கதிக்கத்
தெனமது ராபுரியில் சேர்ந்துவந்து துதிக்க அம்மை

சரணங்கள்

அடைப்பை இந்த்ராணி தாங்கத் திலோத்தமைகண்
ணாடி கையில்கொண் டோங்கக் காளாஞ்சிரம்பை
மடக்கொடி கையில் இசைக்க உருவசிபொன்
மணிஆல வட்டம் அசைக்கத்
துடிக்கி சைந்தஇடை மேனகை மின்னு

சொர்ணம லரின்தட்டம் ஏந்தியே துன்ன
தொடுத்த பூமகளும் துய்யசெங் கோல்பிடிக்கத்
தொகுத்த பலசனத்தின் நெருக்கம் ஒதுக்கநடந் தம்மை

உ போதுடன் பனி நீரும் பொன்நிறக்கந்தப்
பொடிகொண்டு வருவோரும் நறும்புகைதந்
தாதர வுசெய் வாரும் சுடர்த்தீபம்கொண்
டருகே உவந்து சாரும்
மாதர் சூழப்பனி நீருமன் பாலே
மலரும் தெளித்தநடைப் பாவாடை மேலே
தாதுல வும்கமல மீதில அனத்தை ஒத்துத்
தண்டை முதலஒலிக்கக் கொண்டடி மெல்லவைத்து அம்மை

௩ பூமக ளும்நா மகளும் கைகளைத்தாங்க
பொருளுட னேசகல் விகளும் பெறும்சமயம்
ஆமென் றுரைத்தால் போலும் நூபுரம்காலில்
அலம்ப நடந்திடப் பாலும்
மாமணத் தவிசின் மேலுற நாணி
வணங்கி ஒதுங்கிமெல்ல இருந்தனபு பூணி
சாமியு டனேமண வறையில இருந்து மெத்த
தலைய வணக்கிநிமிர்ந் துலகனைத் தையும் பெற்ற அம்மை

ஈசன்தடாதகைப்பிராட்டியாரைமணம்புரிதல்.

விருத்தம்.

தங்குமல ரும்மணமும் பண்ணும் சொல்லும்
சலமும்தண் மையும்பாலும் சுவையும் செய்ய
துங்கமணி யும்ஒளியும் வேறு வேறு
சொருபம்கொண டிருந்தனபோல் உலகை ஈன்ற
மங்கைதடா தகைப்பிராட் டியுடன செம்பொன்
மணவறையின் மீதில்இருந் தாதி தேவன்
புங்கவர்பூ மழைபொழிய மங்கல யத்தைப்
பூட்டினன் மணமாலை சூட்டி னனே.

சௌராஷ்டிரம், ஆதி.

பல்லவி.

திருமா மணம்புரிந்தாரே கைலாசநாதர் திருமாமணம்புரிந்தாரே

அநுபல்லவி.

வரும்நிலத் ததிபரும் தருநிலத் ததிபரும்
மாதிரத் ததிபரும் பாதலத் ததிபரும்
மாதவ யோகியரும் போதமெய்ஞ் ஞானியரும்
மறைபயில் வேதியரும் பிறவுள சாதியரும்
வானுட்டுத் தேவர்களும் மேனாட்டு மூவர்களும்
வந்தால வாய்கதிக்க எந்தாய் எனத்துதிக்கத் திருமா

சரணங்கள்.

க மாலிர ணியகும்ப நீர்சொரிந்து மலர்க்
காலை விளக்கிச்சந்த னம்பரிந்து
வன்ன மலர்கொண்டருச் சித்துவந்து தூபம்
தன்னுடன தீபமும் சுற்றிப்பணிந்து
மாதவரும் தானும்சதுர் வேதனும் சதமகனும்
வானவரும் நந்தியுட னேதிருந்த
ஓதரும் கணநாதரும் தொண்டரும்அப் பாதநீரை
உள்ளும் புறம்புமேகொண் டன்புபொருந்த
மங்குல்வண்ணன் அய்யன்திருச் செங்கையி லொருகமல
மலர்மிசைப் பூத்தகாந்த ளனவரிய
தங்கைகையை வைத்துமந்தி ரங்களை யுரைத்துப்புனல்
தனைவிடச் சுரர்கள்பூ மழைசொரிய
வரிவிழிஅரம்பையர் பரதவிதம்நடிக்க
அருமையுடன்விஞ்சையர் அமுதகீதம்படிக்கப்
பரவுமுனிவோர்ஹர ஹரவென்றோதித்துதிக்கச்
சுரர்கள்மெய்யிற்புளகம் தோன்றிநின்றுமதிக்க
வந்தேகண்டங் கடாந்தபலகண ருந்தாமங்கைத் தலங்கள்முடியில
ணிந்தானந்தப் பெருஞ்சலதியில மிழந்தேகும்பிட் டெழுந்தஅரசர்கள்
மற்றுமனத்துற தித்தவமுற்றொரு புத்தனெடுத்தெறி வுற்றகலைக்கமழ்
பெற்றமலர்க்கிணை நத்திமுடித்துயர் பத்தர்தமக்கருள் வைத்தவிடைக்கொடி
வாகாபரமஞான யோகாஅழிவில்லாத
தேகாமலைங்கள்தன் பாகாஎழிலமிகுத்த
மாமனுக்கும் காமனுக்கும் பூமனுக்கும் மேல்மிகுத்த
வாமாவென் றுசிபேச ஏமாக்ஷ தைகள்வீசக்
கோமான்மதுரைவாச ஸ்ரீமானென வுல்லாச திருமா

உ காமரு வும்சுரபி யருள்பாலும் சருக்
கரையும்தே னும்கிருத மும்காலும்
கற்பகக் கனியுடன் மென்மேலும் கலந்
தற்புத மாமைந்தமு தைச்சாலும்
காசுலவும் நவமணிப் பாசனத்தி லிட்டுமலர்க்
கரம்வைத் தருளுவீரென் றுரைநாட
வாசமிகுந் தவமுதை நேசமுட னேயருந்தி
மந்தஹாசம் புரிநதய்யன் அருள்நீட
கற்பினில் மிகுந்தெழில்ப ரப்பியதே வர்முனிவர்
கன்னியரனைவர்களும் சுபம்கூட
பொற்புறும் திருமகளும் அற்புதவா ணியும்சொன்ன
பூவையரு டனேசோ பனம்பாட
கந்தமலரயன்ப யந்தகா சிபர்முதல்
மைந்தருடனேமகுண் டந்தனைச்சூழ்ந்துவேத
மந்திரமொ ழிந்துநெய்சொ ரிந்திடக்கிளம்பிவ
லஞ்சுழித்தெழுந்தோமச் செந்தீமி கச்சொலிக்க

கஞ்சன்சொல்மந் திரத்துநாதமும்செஞ்சொல்லின்பண் ணிசைக்கும்வேதமும்
கங்கெங்குஞ்சங் கொலிக்குமோதமும் புங்கங்கொண்டங் கொலிக்கவேபல
கற்றவர்கற்றவர் சுற்றிலுமொய்க்கவே பொற்றிருவுற்றகயிற்றையிசைத்துல
கத்திலெவற்றையும் பெற்றுவகுத்துவ ளர்த்தவள்நற்கம லக்கரம்பற்றிய

கையன்றோனே அக்கிதே வய்யன்றோனேவளர்க்கும்
மெய்யன்றோனேபுசிக்கும் துய்யன்றோனே ஆகிய
காரணத்தன் ஆரணத்தன வாரணத்தின் தோலுடுத்த
காமாரி என்றுதுய்ய பாமாரி வாணர்செய்ய
மாமாரி கொண்டுதொய்ய பூமாரிதேவர்பெய்யத் திருமா

ந பூமனு வோதித்தந் திரம்தொடுத்துச் செய்யும்
நேமமு டனேமண வறைஅடுத்துப்
பூங்கொடி யுடன்பொரி தனைஎடுத்து ஜ்வாலை
ஓங்குமோ மாக்கினி வாய்மடுத்துப்
புங்கவ மறைமுனிவர் தங்களுக்குத் தக்கதானம்
பொருந்தச்செய் தக்கினியை வலமாற்றித்
தங்கமய மாகவேவி ளங்கியஅம் மியில்அம்மை
தனதுசே வடியைக்கொங் கலர்ஆத்தி
திங்களஞ்ச டைப்பரமன் அங்கையில்பி டித்துமந்திரம்
திருந்த மொழிந்துவிதிப் படியேற்றி
துங்கவசி ஷ்டன்மனைவி எங்கேஎன்று ரைக்கஅவள்
தொழுதுமுன் வரக்கடைக் கண்சாத்தி
பூரிபொன் மழைபோலே வாரிவா ரிஇறைக்க
ஆருமந் நிதிஇல்லம் தோறும்கொண் டுநிறைக்க
பூசுமக தம்பப்பொடி வாசமெங் குமஉறைக்கப்
பேசுமங் கலநாதம் வாரிதி மையமறைக்க
புன்னாகம்சண் பகம்குருந்தையும் முன்னரும்வில் வமும் கரந்தையும்
பொன்பூணூரத் துடன் குமுகுமெனத் தண்பூவாசத் துடன் கமகமென
பொங்கொலிகொள்முர சந்தந்தும்மென சங்கமுழங்கொலி பம்பம்பம்மென
அங்கிசை தம்புரு கிண்கிண் கிண்ணென மங்கையர்தெய்வநடம்திம்திம்மென
பூலோக மானவர்கள் மேலோக வானவர்கள்
போலேயா ரும்சிரத்து மேலே கரம்குவித்துப்
போற்றிஇரு நாற்றிசையு மேத்திமணம் பூர்த்திசெயது
பொன்மாலை பெற்றெடுத்த நன்மாதி னைஉயர்த்த
சிம்மாச னத்தில்மெத்த இம்மாநி லம்புகழ்த்த திருமா

விருத்தம்.

திருமணத்தைச் சோமசுந் தரர்இவ் வாறு
செய்துமண வறைநீங்கி மண்ட பம்சேர்ந்
தரிஅணைமீ திருந்தயன்மால் முதல்வா னோர்க்கும்
அங்கணத்தோர்க் கும்பரிசும் விடையும்ம் ஈந்தே
பரவுயிரை ஆட்டிவைப்பான் ஆடிக் காட்டும்

பான்மையைப்போல் அரசருக்கிவ் வரசு செய்து
கருணையுடன் காட்டுவா ளுகி ஆங்கே
கருதினன் முப்புரத்தைப் பொருதி னனே.

ஈசன்சுந்தரபாண்டியனாகி அரசுசெலுத்தல்.

விருத்தம்.

இடபகே தனம்மீனத் துவச மாக
இசைந்தநிம்பன் னகப்பணிபொற் பணிக ளாகக்
கடிதுவிழும் கொன்றைநிம்ப மாலை ஆகக்
காய்புலித்தோல் எழிற்கனகாம் பரம தாக
நெடியமதிச் சடையயிர மகுட மாக
நேர்ந்தால வாயுறையும் நிமல மூலக்
கடவுள்சுந் தரபாண்டிய னாகி நின்று
காட்டினார் மகிழ்ந்துசெங்கோல் நாட்டி னாரே.

திபதை— நாதநாமக்கிரியை, சம்பை.

க துண்டமதிசூடிகொண்ட சொரூபம்தனக்கிசைந்தாற்போல
சூழும்சங்குகன்னன முதல் வாழும்கணதிபரும்
பண்டவரவருக்கிசைந்த வடிவைமறைத்துத்தெய்வ
பாணடியர்தம்பணிவிடையில் வேண்டிநின்றாரே.

உ பூமன்னர்சிவபூசை புரிதல்முறைஎனமறைகள்
புகன்றபடிக்கவரவர்கள் மனம்துணிந்துசெய்யத்
தாமும்சிவபூசைசெய்யும் பொருட்டால்அந்நகர்நடுவில்
சாஸ்திரப்படியேகோயில் வாய்த்திடச்செய்தாரே.

ங அருட்குறியைநிறுத்திஇஹா பீஷ்டேசுவரலிங்கம்
ஆமெனப்பேர்சொலிப்பூசை நேமமுடன்செய்து
மருக்குலவும்கதம்பவன நாதனைமுக்காலும்வலம்
வந்துபணிந்தேஅரசு புரிந்துமகிழ்ந்தாரே.

விருத்தம்.

அரிபிரமர் தேடும்அய்யன தானே பூசை
ஆற்றும்லிங்கப் பெருமைகண்டா ருரைக்க வல்லார்
தரியலர்க்கோர் சிங்கமதா நரர்க்கு வேந்தாத்
தையலர்க்கைங் கணைமதனுப் புவிக்கு மாலாப்
புரிபலமற் றோர்க்கறிவா னந்த மாகப்
பொருந்திஉல காண்டிருந்தான இதைஅன் போடே
உரைசெய்வர்கேட் பவர்கள்மணம் சம்பத் தும்பெற்
றோங்குவார் இருவினையும் நீங்கு வாரே.

ஆக விருத்தம் (உ௫) பேராசிரியம் (க) கீர்த்தனை (கஉ) திபதை (ச) ஆக சஉ

ஐந்தாவது திருமணப்படலம் முற்றும்.

ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசர் திருவடிகளே துணை.

———(0··0)———

௨

ஆருவது

வெள்ளிஅம்பலத் திருக்கூத்தாடியபடலம்.

அவதாரிகை— விருத்தம்.

மதிகுல விளக்கை வேட்டு மணிமுடி புனைந்திப் பாரை
விதிமுறை நடத்தும் ஈசன் விசித்திரம் உரைத்தே னிப்பால்
அதிதவ முனிவர்க் காக ஆனந்தக் கூத்தைக் கூடல்
பதிதனில் ஆடல செய்த பான்மையை இனிச்சொல் வேனே.

ஈசன்மதுரையின்விசேஷம்எடுத்துக்கூறுதல்.

விருத்தம்.

வல்லவன்சுந் தரபாண்டியன் அருளால் பொற்று
மரைபடிந்தந் தரர்வேத முனிவோர் வேந்தர்
பல்லவரும் போசனம்செய திடவ ருங்கால்
பதஞ்சலிவி யாக்கிரபா தருமுன் கூத்தைத்
தில்லையில்பார்த் துண்பதென அக்கூத் திங்கு
செய்குவோ மஃதுலக புருஷற் குள்ளம்
சொல்லரும்இத் தலம்துவாத சாந்த மென்னத்
தொழுதவர்மற் றதுகேட்கச் சொல்லு வாரே.

சௌராஷ்டிரம் சாப்பு.

பல்லவி.

பிரமரூ பத்துக் கங்கம் பிரபஞ்சரூ பமுத் துங்கம்

அநுபல்லவி.

அரைக்குமேல் உலகேழும் அதற்குக்கீழ் ஏழும்கேளும் பிரம

சரணங்கள்.

௧ ஆரூரே மூல ஸ்தானம் ஆனைக்காவே ஸ்வாதிஷ்டானம்
தேருமணி பூரம்ஞானம் தெருளண்ணுமலைநி தானம் பிரம
௨ மதசுள்ளதில ஸ்ஹ்ருதயம் திருக்காளத்தி கண்டமையம்
காசியேபுருவ மத்தியம் கைலைபிர்ம ரந்த்ரம் சுயம் பிரம
௩ இம்மதுரை த்வாதசாந்தம் இதுக்குண்டோசொல் லதிர்ஷ்டாந்தம்
அம்மறைக ளின்சித்தாந்தம் ஆதியில்தோன் றும்விர்த்தாந்தம் பிரம

விருத்தம்.

நிதம்இறைஞ்சு முனிவருக்குச் சுந்த ரேசர்
நெடும்பிரம புருஷனுக்கங் கங்கள் இந்த
விதமெனவே உரைத்தவரோ டெழுந்து வந்து
விடைஉருமா றியதோ அங் கயிலை யோவெண்
கதிர்பெருகும் சந்திரமண் டலமோ வென்னக்
கண்டவர்கள் ஆச்சரியம் கொளவே ஆங்கே

சதமகன்தன் விமானத்தின் கீழ்பால் இவ்வி
தங்கண்டார் வெள்ளியம்ப லம்கண் டாரே.

சுந்தரேசர் வெள்ளியம்பலத்தில் திருநடனஞ்செய்தல்.

கண்டுயர்ந்த வெள்ளியம்ப லத்துள ளேபால்
கடல்நடுவில் முளைத்தகதி ருதயம் தானோ
தொண்டர்இரு தயகமலம் தானோ அல்லால்
சுருதிமுடி தானோவென் றொளிமா ணிக்கம்
கொண்டமைந்த பீடிகைமேல் ஒருகா லத்தில்
கோடிசூ ரியனுதித்தாற் போலே ஏறி
அண்டர்முனி வோர்கள்ஜய ஜயவென ஏத்த
ஆடினார் இளம்பிறையைச் சூடி னாரே

கல்யாணி, ரூபகம்.

பல்லவி.

சுந்தரர் ஆடினரே சொர்ணமாலை மகளைக்கூடி
சுபமங்கள கரம்பண்ணிய சுந்தரர் ஆடினரே

அநுபல்லவி

சிந்தைமெய் மொழி ஒருமிக்கச் சேர்த்து ஞாபகமாக்கேளும்
திந்திமி தோமெனபரத விந்தையா ரஜத வம்பலத்தில்
த்தம்பரவும் பதஞ்சலித்தவ முனிகளும்அடியவர் இனமொடு துதிசெய
முதுதழலெரிவிழி சிதறிடவா யொலிகொணரும்
சீறியமுயலகல முதுகினில்அடியுற
விரிகடல்நடுவினிலெழுந்த ரவியொளிபரவிட
தச்சநதகசந் தசந்தசெர்தரி செகதரிகுகுதரிகிடதகதகணக
டதக தகணகதாந் தகதிந்திம்

தகதரிகிடதக தளங்கு தகததிங்கணமென சுந்தர

சரணங்கள்.

நந்திமிரு தங்கமுழக்க ஞாலமுண் டவன்தாளம் போட
மொந்தை கணங்களடிக்க முறைகந் தருவர்கள் பாடத்
துந்துபி ஐந்துமொலிக்கச் சுருதிமா மகள்இசை கூடக்
கந்தமலரயன்வீணையி சைந்துசாமகான கீதமொழிய
அந்தரத்துடுக்களெனச்செ ரிநதசுகந்தம்நிறைந்திட சுந்தர

வாரிஜத் தாளும்திசை மருவியபத்துக்கையும் படையும்
தாருமுக் கண்ணும்மறைக்கந் தர்மும்பிறைவளர் சடையும்
வார்குழைச்செவியும்உரமும் வாளரலக்கச்சணி இடையும்
பாரிசமொ துங்கும்வல்லிமேல் சாரும்பார்வையும்சிறுநகையும்
சேரும்வதனமதியமும் சீருறும்பேரொளியாரிட சுந்தர

௩ கங்கையு ஊம்பமொலியும் கடுக்கையின்மலர்வண் டொலியும்
மங்களவாத்தியவொலியும் மறைமந்திரமொழி யொலியும்
செங்கைடவணைடையொலியும் திருவடிமலர்ச்சிலம்பொலியும்
எங்கணும்சிரம்பவடியர் தங்கள்காதினில்அமுதெனவ
முங்கிடப்பாதவிதந யங்கள்கலின்கலினென்கவே சநதா

விருத்தம்.

சாமியிவ்வா றிரஜதவம் பலத்தில ஆடும்
தாண்டவத்தைக் கண்டிடர வசமேற் கொண்டு
பூமியின்கண் விழுந்திறைஞ்சிச சுருதி பாடிப்
போற்றினர் பதஞ்சலிவி யாக்கிர பாத
மாமுனிவர் பொருட்டாற்பல் லோரும் கண்டு
வணங்கினர் திருமணத்தைப் பார்க்க வந்த
பூமனித ரும்காணப் பெற்றோம் என்று
புகழ்ந்திட்டார் அவரவர்கள் மகிழ்ந்திட் டாரே

நடனதர்சனம்பெற்ற முனிவர்கள் மகிழ்ந் துதுதித்தல்.

விருத்தம்.

தினம்பரவும் பதஞ்சலி வியாக்கிர பாதர்
ஜகதீசன் திருநிருத்தம் கண்டா னந்தம்
மனம்தனிலே பார்ததுமென் மேலும் பொங்கி
வரைகடந்த வெள்ளம்வழிந் திடுதல் போலே
புனைந்திருவர் திருமார்பில் இலங்குந் துய்ய
புண்ணிய நீறும்கரையப் பொழிகண் ணீரால
நனைந்திடச்செங் கரம்குவித்துத் தலைமேற் கொண்டு
நாடுவார் கடவுளைக்கொண் டாடு வாரே.

திபதை— பரசு, ரூபகம.

க ஆதிதேவ னேதுரியா தீதனே சரணம் சன
காதியோகியர் தேடுளிய அனாதியே சரணம்
உ ஓதும்கூடலில் மேவியஜகஜோதியே சரணம் எப்
போதுமங்கயற் கண்உமைவலப் பாதியேசரணம்
௩ பண்டுமாலயன் தேடரும்நீல கண்டனே சரணம் ஒளி
மண்டும்பிறையும் நதியுமுடியிற் கொண்டவாசரணம்
௪ கண்ணனுக்காழி கொடுத்தருளும்முக் கண்ணனேசரணம் பத்தி
பண்ணும்உளத்தில விளங்கும்அந்தி வண்ணனேசரணம்
௫ அடியுமுடியும் நடுவுமாகும் கடவுளே சரணம் சாமி
படியில்நலமும் தீதுமாகிய விடையனே சரணம்
ஆரணங்கள் தேடுமூல காரணா சரணம் மத
வாரணத்துரி போர்த்திடும்பரி பூரணா சரணம்
மூர்த்தியொன்றும் ஐந்துமாய மைந்தவா சரணம் பின்
அந்தஇருபத் தைந்துமாகி வந்தவா சரணம்

அ சென்றநாளும் இன்றுமாயுறு கின்றவா சரணம் வரு
கின்றநாளும் ஆகியுலகில் நின்றவா சரணம்

௯ சிரித்துமுப்புரம் எரித்துவெற்றியைக் குறித்தவாசரணம் ஒளி
பரித்திடும்செங்க ணொருத்திடைவரும் ஒருத்தனேசரணம்

௰ நயமுறும்சரா சரமுமாம்நிரா மயனேயுன் சரணம் சின்
மயனேநித்தியா னந்தம்அருள பயனேயுன் சரணம்

௧௧ அண்டும்மதனை எரித்திடக்கோபம் கொண்டவா சரணம் மார்க்
கண்டனுக்காயெ மனையுதைத்தருள் கின்றவா சரணம்

௧௨ தூய்யவிபூதிப் பொடியணிந்தருள் மெய்யனே சரணம் கதிர
செய்யும்மழுவும் மானும்விளங்கும் கையனே சரணம்

௧௩ அம்பலத்தினி லாடும்நிரா லம்பனே சரணம் தொழும்
அன்பருக்கருள் பொழிகின்றசிவ சம்புவே சரணம்

விருத்தம்

ஏத்துமுனி யிருவரையும் நோக்கி ஈசனை
யாதுமத பேக்ஷையெனப் பணிந்திக் கூத்தி
க்ஷேத்திரத்தில் மார்கழிஆ திரைநாள் தோறும்
செய்தருள வேண்டும்கண் டோர்க்கு முத்தி
வாய்த்திடவும் வேண்டுமெனத் தொழஅவ் வாறே
வரம்அளித்தார் கணங்களொடு சுரர்கொண்டாடப்
பார்த்திருமா தவர்களையும் புல்லிஸ் தோத்ரம்
பண்ணினார் பலமுனிவர் நண்ணி னாரே

விருத்தம்.

மார்கழிமா சம்திருவா திரைதொட் டும்பின்
மார்கழிமட் டும்பொற்று மரைநீ ராடி
ஏகநா யகன்நடம்பார்த் திருந்தீ ரைம்பத்
தெண்மடங்கைந் தெழுத்துரைத்திந் நிலையில் நிற்போர்
ஆகமதிற் பிணியணுகார் மகப்பே றுண்டாய்
அரியபயன் பெறுவரிதைப் படிப்போர் கேட்போர்
வாருடனே மனோபீஷ்ட மெல்லாம் பெற்று
மன்னுவார் சிவனுலகில் துன்னு வாரே.

ஆக விருத்தம் (அ) கீர்த்தனை (௨) தரு (௧)

ஆறுவது வெள்ளிஅம்பலத்திருக்கூத்தாடியபடலம் முற்றும்.

ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசர் திருவடிகளே துணை.

———(0)(0)———

ஏழாவது,

குண்டோதரனுக்கு அன்னமிட்டபடலம்.

அவதாரிகை—விருத்தம்.

எம்பிரான் திருமணஞ்செய் திருமுனி வருக்கா வெள்ளி
அம்பலத் தாடல் செய்த அருமையை உரைத்தே னிப்பால்
பின்புகுண் டோத ரன்றன் பெரும்பசிக் கன்னக் குன்றை
வெம்பிவந் தருந்தச் செய்த விதமினிச் சிலசொல் வேனே.

போசனம்செய்யத் தக்கபேர்களை வரச்சொல்லும்படி பிராட்டியார் ஸ்வாமியை வேண்டுதல்.

விருத்தம்.

மங்கையருக் கரசிதிரு மனைபு குந்த
மாதவர்அந் தணர்முதலா னவர்க்கும் அன்னம்
தங்கமயக் கலத்திலறு சுவையோ டீந்து
சந்தனம்தாம் பூலமணிப பூணபட் டாடை
அங்கவர்க்குக் கொடுத்துறுங்கால் அட்ட அன்னந்
தாயிரத்தோர் பங்கும்அழி விலையென் றடடோர்
புங்கமிகும் தேவியிடத் துரைக்க அன்பு
பொழிகின்றாள் சாமிமுன்போய் மொழிகின் றாளே.

எமுனுகல்யாணி திரிபுடை.

பல்லவி.

சாமி நீரின்னம் போச னம்செய்யத் தக்கபேரைவரச் சொல்லுமே சாமி

அநுபல்லவி.

நேமிதரிக்கின்ற மாமனும்துய்ய நீரஜத்தில்வளர் பூமனும்
காமனுடனெழுந் தருளிவருவது கண்டதேசமைக் கின்றதே சாமி

சரணங்கள்.

க கணங்கொண்டமரர்கள் பொருதியேசிவ கணங்களுடன்வரக் கருதியே
இணங்கும்சுவைமிகுமன்னம்சமைத்ததற் கெலலையேஅவைக்கிலலையே சாமி

உ தூயமடைப்பள்ளித்தொழிலிலேவலர் சூழ்ந்துசமைத்திடும்தொகையிலே
ஆயிரத்திலொரு பங்கு கூடச்செல வாகவே யில்லை யாகவே சாமி

ந இமயமலை போலே அன்னமும் அதற் கிசைந்தமலைபோலே இன்னமும்
அமையும்கறிமுதல் மிஞ்சியேகிடந் தாறுதேஉள்ள வாறிதே சாமி

விருத்தம்.

இந்தவிதம் தடாதகைவந் துரைத்தி டக்கேட்
டெம்பிரான் தேவியிடத் தன்பி னாலோ
சிந்தைதனி லொருவிளையா டலைச்சிந் தித்தோ
சிறந்தசிவ கணங்களிற்குண் டோத ரன்றன்
விந்தைமிகும் வலியினையன் றுலகில் யார்க்கும்
வெளிப்படையாக் காட்டுவிக்க வேண்டு மென்றே
மந்தநகை புரிந்தம்மை தனதெண் ணத்தை
மாற்றுவான் வதில்மொழிந்து தேற்று வானே.

எதுகுலகாம்போதி, ஆதி.

பல்லவி.

பெண்ணே யுன்னைப் போலே பெருஞ்செல்வத்தைப்
பெற்றதா ருண்டோடா தகையே

அநுபல்லவி.

மண்ணுளும் மும்முடி வேந்தருக் குட்சிறந்த
மலயத்து வசபாண்டியன் அருமைத் தவத்தில்வந்த பெண

சரணங்கள்

க பூமன்ன வர்சம்பத்தும் பொருந்தெண்டிக் கோர்சம் பத்தும்
நீமகிழ்ந் திடப்பெற்ற நெடியசெல் வமனைத்தும்
மாமுனி வோரந்தணர் மன்னவ ருடனே மற்றும்
நாமும் அறியவேண்டி நவின்றதல் லாமல் முற்றும் பெண்

உ உசிதமா கச்சமைத்த ஊணருந் திடச் செல்ல
உயர்ந்த நமதுகணங் களுக்குள் எவரும் வல்ல
பசியாலே களைபோட்டு வாயைவா யை மெல்லப
பட்டினி யாயிருப்போ ரெவருமில் லையே நல்ல பெண்

ங பாலாற் குறையோவில்லை பாக்யத்தால் தாழ்வோ இல்லை
பங்கஜை எட்டுப்பேரும் பணிந்துகேட் பாருன சொல்லை
மேலாகும் உன்றன்பெரும் செல்வத்துக் கில்லை எல்லை
விரித்துவாய்க் குக்கையுப சாரம்தே வை இல்லை பெண்

விருத்தம்.

முடிபுனைந்த திருமணச்சுங் தரிவ் வாறு
மொழிந்தடுக்க நின்றகுண்டோ தரன் வயிற்றில்
வடவையனல் தனைமடுக்க நினைக்கும் போது
வசதுறமக் கனல்மேற்கொண் டுடலம் சோர்ந்து
நடைதளர்ந்து கண்களிருண் டால முண்ட
நலிவினைப்போல மயங்கிவெயர்த் தாவி தனை
நெடியபசி வருத்துதெனச் சாமி பாயா
நின்றிடா வீதெனக்கே தெனறிட் டானே.

குண்டோதரன் வாரிவாரிச்சாப்பிடுதல்.

விருத்தம்.

குண்டோத ரன்சொன்ன மொழிகேட் டிந்தக்
குடையெடுக்கும் பையனுக்கோர் மாங்காய் அன்னம்
உண்டுவரும் படிபுரிவா யென்றே சாமி
உரைத்தருளப் பணிந்தம்மை அவனைக் கூட்டிக்
கொண்டுவந்து சுயம்பாகர்க் குரைத்தாள் அன்னோர்
குறளைமடப் பள்ளியினி லிருத்து முன்னே
அண்டையிலே யிருந்தஅன்னம் முதலாக கைக்கொண்
டடுத்திட்டான் வாரிவாய் மடுத்திட் டானே.

உசானி சாப்பு.

பல்லவி.

வாரியுண்டானே குண்டோதரன் வாரியுண்டானே.

அநுபல்லவி.

காரியம்செய்கின்ற சேடியரிற்சிலர் கண்டுவிலைக்கை நெரிக்கப்பின்னும்சில
நாரியர்கண்கள் புதைக்கச்சிலரஞ்சி நாசியிற்கைவைத்துப் பேசப்பலபல
வாரி

சரணங்கள்.

க குண்டோதரமும்சிவந்த நேத்ரமும் பார்த்தவர்கள்வெ
ருண்டோடும் படிக்கிருண்ட காத்ரமும் தெற்றிபல்லும்
மிண்டான குறளுருவமும் துண்டான நெடும்புருவமும் [டும்
கொண்டாவுடை நெய்யைக்கலம்கொண்டு மொண்டாகுதி செய்யச்சுடர்மண்
குண்டாக்கினி போலேபசித்தழல் உண்டாய் நவத்வாரத்திலும்எழு
ஊழிக் கனல்போலே நாழிக்குள் ளேவாரி வாரி

உ மேலான கைலையைப்போல் அன்னமும் சொர்ணமலைகள்
போலான பருப்புஞ்சித்தி ரான்னமும் கறிவருக்கமும்
மாலாம்பல பக்ஷணங்களும் கோலார்மது சர்க்கரைகளும்
பாலாடைத் ததியின்வளங்களும் நாலாவிதக் காயும்பழங்களும்
காலாக்கினி ருத்திரன்போல்வெகு கோலாகல முற்றுவையும்பெரும்
குன்றை விழுங்கிக்கோர் சுண்டாங்கி போலவே வாரி

ங பேராயி ரம்பயறெள் மூட்டையும் அரிசிப்பொதிபத்
தோராயி ரம்கோதுமைக் கோட்டையும் கடலையுளுந்தும்
நேரார்வெல் லக்குவையும் போரார்கன் னற்சுமையும்
சீரார்பல சித்திஎண்ணெய்களும் ஏராளக் குடத்துளநெய்களும்
போராமற் கடையிலும்இவ்விதம் ஆராய்ந்து கலத்துடனேமத
யானைப் பசிக்கொரு சோளப் பொரிபோல வாரி

குண்டோதரனுண்பதுகண்டு பிராட்டியார்சுவாமியோடுகூறல்.

விருத்தம்.

அருவனமீ கம்தனிலே கறடி வாய்வைத்
துருஞ்சுவது போற்குண்டோ தரனிவ் வாறு
பருகும்அதி சயம்கண்டெம் பிராட்டி ஐயன்
பக்கம்வந்து நிலம்கிளைத்து நிற்க ஒன்றும்
தெரிகிலன்போற் குண்டோத ரன்தான் உண்ட
சேஷம்உன்ன வெகுபூதம் வருவ உன்றன்
திருமனத்தின் படிநடப்பி யெனவெட் கித்துச்
சிந்தித்தாள் நயந்துரைத்து வந்தித் தாளே.

மோகனம் சாப்புதாளம்.

பல்லவி.

ஐயனே சந்திர சூடா அடியாளுன்றன் சோதனைக் கிடா.

அநுபல்லவி.

கையிற்புண் ணுக்குக்கண் ணாடியோ மெய்க்கும்
கள்ளனுமாகி விளக்கும் பிடிக்கும் ஐயனே

சரணங்கள்

குண்டோதரனென் றொருசிறு பூதம் குன்றுதன்றுபக்ஷணம்கறி சாதம்
ண்டது மல்லாமல சம்பாரம் சேதம் ஓதரி தெலலா முனதுவிநோதம்
ஐயனே
வெய்யபூதப்படைக் குள்ளேயுரத்தில் வீரரையின்னம் விடுத்தால்கரத்தில்
வைய முழுதும் எடுத்துதரத்தில் வைத்து மறைபயர் விநாடிநேரத்தில்
ஐயனே மட்டும்
கேவல மாயிவ்வண ணம்கிண்டிவிட்டுக் கேளிக்கைபார்த்தது போதுமிம்
காவல னேகுண் டோதர னைத்தொட்டு கானாக்ஷிருத்ராரு பம்சரிக் கட்டும்
னே

விருத்தம்.

வெட்கமுடன தடாதகையீ துரைக்கும் போது
மிகப்பசித்தீச் சுடக்குண்டோ தரனும் சாமி
பக்கம்வந்தெம் பிராட்டிசமைத் ததெலா முண்டும்
பசியாலா விதுடிக்கின றதெனத் தாழ்ந்து
வெட்கமுடன் முப்புரத்தைச சுட்ட தீயென்
வயிற்றிடையிற் பசியுருக்கொண் டெழுந்த தோவென
றக்கணம்கை அண்டம்வெடி படவேகூவென்
றறைகின்றான் கைகால்சோர்ந் தறைகின றானே.

ஆக விருத்தம் (எ) கீர்த்தனை (௩) ஆக (கக).

ஏழாவது குண்டோதரனுக்கு அன்னமிட்டபடலம் முற்றும்.

ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசர் திருவடிகளே துணை.

——(0)(0)——

உ

சிவமயம்.

எட்டாவது

அன்னக்குழியும்வையையும் அழைத்தபடலம்.

அவதாரிகை — விருத்தம்.

வழுதியாக் கோலம் கொண்ட மாதேவன் குறளை அன்னம்
முழுமையும் புசிக்கச் செய்த முறைமையை உரைத்தே னிப்பால்
பொழியும்வெண் தயிரோ டுற்ற போனகம்நிறைந்த நாலு
குழியும்வை யையும் அருந்தச் செய்தது கூறு வேனே.

ஈசன் குண்டோதரனுக்கு அன்னக்குழிதந்து பசிநீக்குதல்.

விருத்தம்.

உலகீசன் தனதுநா யகியைப் பார்த்துள்
உவந்தன்ன பூரணியை நினைக்கு முன்னே

நிலவுகடு வீண்டுதயிர் பாலோ டன்னம்
நிறைந்தகுழி நாலுவரக் குடை எடுக்கும்
தலைவனைப்பார்த் துன்பசிநீக் கென்றான் பண்டு
ஜலநிதனில் கலக்கியமத் தெனக்கை போட்டு
மலைமலையாய் உண்டைசெய்து வாயங் காந்து
மடுத்திட்டான் தனதுபசி விடுத்திட் டானே.

தரு— புன்னாகவராளி, சாப்பு.

க பன்னகபூஷணன் முன்னேபெருகிய அன்னக்குழிநாலும் உண்டான் சாமி
தன்னடியார்வினை போலேலம்போதரன் துன்னும்பசிநீங்கக் கண்டான்

உ இச்சைப்படிக்கேஎடுத்தெடுத்துண்டும் பெல்லாம்வயிறுகவீங்கினானாண்
மிச்சத்தினாலே நிலத்தில்மலைபோல் விழுந்துதன்ஞாபகம் நீங்கினான்

௩ தாரணிதன்னில் புரண்டுபுரண்டதி தாகம்தாகம்என்று கிடந்தான் தண்
நீரிருக்கும்நிலை தேடியெழுந்து நெடுமூச்செறிந்துடன் நடந்தான்

௪ ஆவிநிகர்வாரை நீங்கும்மடவார்போல் அம்புயங்கள்வாட விடுத்தான் நெடு
வாவிகுளம்கிணறோடைமுதல்வாயை வைத்துப்பசையற மடுத்தான்

௫ மட்டில்லாநீரைக் குடித்துமடங்காமல் வாய்வறண்டுநா உணங்கினான் தனக்
கிஷ்டமுடையபகங் காதரன்சேவடி யேகெதிஎன்று வணங்கினான்

௬ தாழும்குண்டோதரன் தன்பொருட்டாலே தமதுதிருமுடி மீது நிதம்
வாழும்பவானியைஅய்யன்நினைக்குமுன் வந்துபணிந்தாளப்போது

௭ சிந்தைமகிழ்ந்து வரும்திரைமாலிகைச் செல்வியேமாநதி யுருவாய் நீ
இந்தமதுரா புரத்துக்கருகின் றெழுந்ததிவேகத்தில் வருவாய்

௮ என்றுமொழிந்த ஜகதீசன்சேவடி ஏத்திமந்தாகினி தாழ்ந்து சாமி
நன்றுன்அருட்படி செய்கிறேனென்று நவில்வாள்மனத்தொன்று சூழ்ந்து

௯ அன்றுபகீரதன் தன்பொருட்டாலே அவதரிக்கச்சொன்னீர் எனையே இங்
கின்றுமொருநதி யாகவென்றாலவ் வியற்கையைப்போலேஎன்றனைய

௰ சித்தமகிழ்ந்து தரிசித்தவர்பரி சித்தவர்ஆடுவோர் காணும் பரி
சுத்தமதாகிப் பவத்தின்தொடர்ச்சி தொலைந்துகதிபெற வேணும்

சுந்தரேசர் உத்திரவின்படி வையையாகக் கங்கைவருதல்.

விருத்தம்.

மங்கலச்சுந் தரக்கடவுள் தன்பால் இந்த
வகையுரைத்தாங் கருள்வரத்தை வாங்கித் தாழ்ந்து
பொங்குநுரை மண்டியகில்முதலாம் வாசம்
பொருந்தியதெண் டிரைமுழங்க அதிவே கத்தோ
டங்ககனம் தன்னிலிருந் திழிந்திப் பூவில்
அவதரித்து வருபவள்போல் கங்கை என்னும்
மங்கைமா நதியுருவம் படைத் தெழுந்து
வருகின்றாள் வையைஎன்று பெருகின்றாளே.

பந்தவராளி ஆதி.

பல்லவி.

வையை யாகவந்தாளே கூடலருகில வையை யாகவந்தாளே

அநுபல்லவி

வையம் மதிக்கும்கூடல் ஐயன் முடியில்வாழும்
துய்ய கங்கையேஉல குய்யும் வகைஎழுந்து வையை

சரணங்கள

க பொங்கும் அலைவளைதொ டும்கைக ளாகநித்தி
லங்கள் நகையாகஉத் துங்க நுரைகொடிநெ
ருங்குடை இடையாக்க ருங்குழல அறலாக
ஒண்கயல் கண்ணாகஓர் மங்கை வருதல்போலும்

புரிமண மிகும்அகில சாந்த னத்தொடு மரவகைசினை ஒலி ஆர்ந்திடப்பெரு வரைகளிலரைபட வாய்ந்தெடுத்ததி லருகுளசிறுகுடிபோர்ந்திடபொழில் புக்குபிணைக்கலை மைக்களிறுக்கலை மிக்கவிசைக்கொடு நொக்கிஇழுத்தயல் குக்கிஇணக்குப நழ்க்களுடைக்கரு மறகடம்மொய்க்கும ரக்கணமொக்கவே மறிபடஅடியொடு முறிபடவிடுகணை உறுசிலைஅதனொடும் எறிகவணைவைகொடு

வையை

உ பார மலையைஉதைத் தார மடுச்செய்தவை
தார மண்ணினைவீசித் தாரு வினம்பிடுங்கி
வேரை மேலாகக்கரை ஓரம் அதிலேநட்டிய
பாரை முதுகுபிளந் தாரு மலைகளோடு

பாரொலியொடுமணி தாங்கியும்தரி முறிபடஅதிவிசை யோங்கியும்பட தருநுரைமுகபடம் வேய்ந்துறும்கட கரிவருதலைநிகர் போந்துஅன்கருள் பத்தர் தமக்கருள் வித்தகநித்தன்ம திச்சடை உற்றொளிர் ரத்ந மணித்தலை வைத்துநெளித்தயர்வுற்றபதத்தொகை முற்றிலுமொய்த்துபிலந்தினைநறநலி னரவமும்என அதி விரைவொடுவருநதி கரைபுரள்தர இரு வரையிறஉயரொரு

வையை

ங மண்ணில் படர்தலாலும் விண்ணில அடர்தலாலும்
வெணணெய் தயிரும்பாலும் நண்ணி அணைதலாலும்
வண்ண வராகம்உம்பர் எண்ணும் த்ரிவிக்ரமமும்
கண்ண னுகவும்ஹரி பணணவ தாரம்போலும்

மதகரிபரிநதி சேர்ந்துமேவரு வதுகுடதிசையுள வேந்தர்பால்அட வலிகொடுபறிசெய்து போந்துமாபல வழுதியுநிகர்பெறும் ஆர்ந்ததாதகி வம்பவிழும்பனை நிம்பமொ டும்பெரு வெம்புலி பணபுலில் அம்பிலுறும்கய லும்குலவும்திறல் சம்பிர மிகும்தமிழ அம்பதி என்பவர் தம்படையின்புறம் மருவி வருவதென பரவு திரவியம திருப துடனும்அமல் பெருகி மகிமைதர

வையை

வையைநீரைஉண்டு குண்டோதரன்தாகம்தணிந்துக்கொள்ளல்.

விருத்தம்.

வையைநதி இவ்வாறு பெருகிக் கல்லார்
வன்கவிபோற் கலங்கிப்பல் லான்ற கேள்வித்
தூய்யஅருங் கவிபோலத் தெளிநதாங் குள்ள
துறைதோறும் போய்ப்பரந்து நிரம்பி யிந்த
வையகத்தெல் லோர்களும்வீழ்ந் தாடி மிக்க
மாபலனைப் பெறுகவந்த மகிமை யையபார்த்
தையன்அருள் கொண்டுகுண்டோ தரன்சந் தோஷம்
ஆற்றினன் பெருந்தாகம் மாற்றி னனே.

பன்னுகவராளி ஆனந்தக்களிப்பு.

பல்லவி.

வேகவதிநீரை உண்டான்

பெரும் தாகமதைக்குண்டோ தரன்தணிக்கின்றான் வேகவதி

சரணங்கள்.

௧ அகலும்பேராற்றிடை அடுத்து
தாற்றலுடனேகுறுங் கையிரண்டும் எடுத்துப்
பகவான்செயலைநெஞ்சில் தொடுத்து
பக்கமும்கரையேற நீட்டியே தடுத்து வேகவதி

௨. அலைமோதிக்கொண்டோலி பிறந்து பல
ஆனைக்கொம்பகில்அரு நிதியுடன் நிறைந்து
மலைபோலேநிமிர்ந்தெதிர் சிறந்துவெள்ளம்
வரசுகண்டுதனது மதகுவாயைத் திறந்து வேகவதி

௩. விடையவனதிருமணம் காண வந்த
வேதியர்முனிவர்க்கும் அதிசயம் தோணக்
கடலுண்ணும்கருமேகம் நாணத் தன்னை
காய்ந்தவிடாயும் மறைநதோட்டம் பூண வேகவதி

குண்டோதரன் சுவாமியைத்துதித்தல்.

[விருத்]தம்.

சந்ததமும் வையைஎன்று பெருகும் கங்கா
ஜலம்அருந்திப் பெருந்தாகம் தணிந்த போதே
சிந்தைமொழி தெளிந்தறிவு தோனறிஅன்பு
சிறந்துவந்தா னநதவா ரிதியில் தோய்ந்து
விந்தைதரும் உன்னதமாம் உதரத் தோடு
விளங்கியகுண் டோதரன்அன் புருவாய் நிற்கும்
சுந்தரநா யகனதிருத்தாள் முடிமேல் கொண்டு
சூடினன் துத்தியம்செய் தாடி னனே.

மாஞ்சி, சாப்பு.

பல்லவி.

உன்றன்பாதமேசரணம் சாமிசோம சுந்தரேசனேசரணம்

அநுபல்லவி   டர்கள்

உனறன்டிமுடியைக் கந்தமலரயன்வை குந்தனிந்திரனோடே மைந்திடும்விண்ணு
ந்ண்ணுக் கூடல்அண்ணல் அந்திவண்ணு அந்திவண்ணுஅருள்நெற்றிக்கண்ணு

உன்றன்

சரணங்கள்

௧ பருவதராஜகுமாரிமகிழும் பராபரனேகயிலை   வாசா
சருவவேதங்கட்கும்மூலபொருளாய்நின்ற சாம்பிராஜ்ய   உல்லாசா
துர்விர்த்திஅந்தகா சுரனைமார்பைப்பிளக்கும் சூலதரம   ஹேசா
கர்வமிகுமுப்புரத்தெவ்வர்தமைஅடக்கிஎவ்வுலகும்ரக்ஷிக்கும்திவ்யஹாசா
ஜகதீசா பாபநாசா பாண்டியராஜா பாண்டியராஜகுமாரிதன்நேசா   உன்றன்

௨ இகலும்மன்மதனுடல இலவம்பஞ்சுபோல்கண்ணால் எரித்திடும்அகங்காரா
மிகவும்பெருகும்நதி மதிகொன்றைவிளங்கிய வேணிவளர்கெம்   பீரா
சகலபுவனத்திற்கும் தாரகப்பிரமமாய்த் தழைத்திலகிய   நீரா [ல்நேரா
புகலும்எனதுதாப மகலும்படிக்குசசெய்த புனிதாஉனக்கொருவர்சகமதி
சர்ப்பஹாரா அலங்காரா அருளதீரா அருள்தீராதளிக்கும்உதாரா   உன்றன்

௩ அரியினுடையநயனாரவிந்தமதனை ஆச்சிக்கப்படும்   யோகா
சராசரப்பிரபஞ்சத்துக்கஷ்டமூர்த்தியாய்நின்று தாங்கிவரும்வை போகா
நரநாராயணருக்கு வரத்தைக்கொடுத்தவரை ரக்ஷித்தருளும்   ஏகா
பிரகாசமுற்றமுழுமதிநிலவெனப்பூதி பிறங்கிவிளங்கிஎழில்பரவியதேகா
விடைவாகா பேரனேகா நாரிபாகா நாரிபாகாஆண்டெப்போதும்நீகா   உன்ற

௪ வையைநதிக்கரையில்இந்த்ரவிமானத்தில் வசிக்கும்வேத   வேதா
ஐயாகவனம்பண்ணும் அடியார்தமக்கிரங்கி ஐச்வரியம்தரும்   நீதா
மெய்யாமகசாலையில்தீக்ஷாபத்தினிகட்குவிபவம்கொடுக்கும்போதா [பாதா
துய்யசரணங்களைஉயயப்பணிந்தவர்க்கு பொய்யிலினியமோக்ஷத்தையருள்
கூடல்நாதா வெகுவிநோதா லோகமாதா லோகமாதாமீனாக்ஷிசமேதா உன்ற

குண்டோதரன்துதிகேட்டகத்தில்இன்பம்
கொண்டுபலகணங்களுக்கும்தலைமைநல்கிக்
கண்டைவிழியுடன்சிங்காசனத்தில்பூமி
காத்திருந்தான்இவ்விரண்டாடலும்ஆராய்ந்து
விண்டுரைப்போர்கேட்பவர்கள்பசிதாகத்தால்
மெலியாமல்சகலபாக்கியமும்பெற்றிம்
மண்டலத்தில்வாழ்ந்துபின்னர்கதியைப்பெற்று
மன்னுவார்சிவனுலகில்துன்னுவாரே.

ஆக விருத்தம் ௯ கீர்த்தனை ௩ தரு ௧ ஆக ௰.

எட்டாவது அன்னக்குழியும்வையையும் அழைத்தபடலம் முற்றும்.

சிவமயம்.

ஒன்பதாவது,

எழுகடலழைத்தபடலம்.

அவதாரிகை — விருத்தம்.

செழியனுய்ப் புவியை ஆளும் செகதீசனை குறட்கா அன்னக
குழியும்வை யையும்அழைத்துக் கொடுத்தவா றுரைத்தே னிப்பால்
விழைவுறும் செம்பொன மாலை வேலைபுக் காட வேண்டி
எழுகடலையும்அழைத்த தினியது விளம்பு வேனே.

காஞ்சனமாலைக்கு கௌதமமுனிசமுத்திரஸ்நானமகிமைகூறல்.

வேதம்அறி யாதசுயஞ் சோதி தானே
மீனவன்என் றுறுநாளில் ஒருநாட் போந்த
மாதவரில்கௌதமமா முனிவன் தன்பால்
வந்திடக்காஞ் சனமாலை மகிழ்ந்து தாழ்ந்து
மேதகும்ஆ சனத்திருத்திச் சனனம் போக்கும்
மெய்த்தவம்ஒன் றருள்கவென விளம்ப அன்போ
டோதரிய அம்முனிவர் முகம லர்ந்தே
உரைக்கின்றார் விபரமதா வரைக்கின் றாரே.

அசாவேரி சாப்பு.

பல்லவி.

செய்யபொன்மாலையே கேளாய் உனக்குத் தெரியாதில் லையானாலும் கேளாய்

செய்யதடாதகைக் கன்னை ஆவாயே தேவேசனைமருகன் ஆகப்பெற்றாயே [யே
துய்யமலையத்து வசன்துணை நீயே சொல்லும்விரதம்மூன்று விதமாம்கேட்பா

சரணங்கள்.

க மானதம் தானம் தருமம் நினைத்தல் வாய்மை இரக்கம் பொறிஐந் தவித்தல்
மோனமுறக்கட வுளைத்தியானித்தல முதலனந்தம் விதமா யுணர்த்தல
செய்ய

உ வாசிகம் பஞ்சாக்ஷரஜபமீட்டல் மாதருமங்க ளெடுத்தோதிக் காட்டல்
பேசும் சதருத்ரஸ்தோத்ரம்பாராட்டல் பின்னுமிதுபோ லனந்தமாகாட்டல்
செய்ய

ந காயிகம்ஈசன் அருச்சனை ஆற்றல் கங்கைமு தலாடல் பூவலம்வாய்த்தல்
ஆயவே கோயிற் பணிநிறை வேற்றல் அல்லாமலின்னம் அனந்தமாநோற்றல்
செய்ய [உத்துங்கம்

ச செப்பிய மூன்றுக்குள் ளேகாயி கங்கள் சிரேஷ்டம் அதில்தீர்த்த யாத்ரை
அப்பெரும் தீர்த்தம் தனித்தனிச் சங்கம் ஆனதி னுங்கடல் ஆடலே அங்கம்
செய்ய

ஈசன்காஞ்சனமாலைக்காகஎழுகடலையும்வரவழைத்தல்.

விருத்தம்.

மாவிரத நெறிமுனிவர் சொலக்கேட் டுப்பொன்
மாலைகடல் ஆடலைத்தன் மகட்கோ தக்கேட்
டாவலுடன் சுந்தரநா யகன்பக் கம்சென்
றனக்குழிவ் முடன்குறட்கா அழைத்தோய் என்தாய்
தாவுகட லாடவிரும் பினள்என் றோதச்
சலதிஒன்றோ ஏழையும்கீழ்த் திசையி ருந்தோர்
வாவியில்கின றழைப்போம்என் றெண்ணு முன்னே
வாரிதிஏ ழும்சேர்ந்து வரக்கண் டாரே.

நாதநாமகிரியை, ஆதி.

பல்லவி.

வருகுதே ஜலதி வண்ணமேழாகப் பெருகுதே ஜலதி

அநுபல்லவி.

வருகிறவிசைஒலி பரவிடமதுரைத் திருநகர்தனிலுள அனைவரும்காண வரு

சரணங்கள்.

க துண்ட மதிபோல்வளை வுண்டசங் கினங்கள்வாய்
விண்டுடைப் பலநுரை மண்டியே ததும்ப
தண்டரளமணியைக் கொண்டெறி யும்அலைகள்
அண்ட நெடுமுகடு கண்டுள வெழும்ப வருகு

உ மானும் நகர்குளிர்சசி பூண யுகமுடிவில்
பேணும்வே தன்அமைப்புக் கோணுமா றெனவே
தோணும் பொறிஅரவம் பூணுநா யகன்திரு
ஆணையால் அவனடி காணவந் ததுபோல் வருகு

ந தேவர்கோ னுக்கும்வசு தேவன் தனக்கும்பிர்ம
தேவனுக் குமேஆதி தேவன தருளால்
ஆவலு டன்பெரும்சு ராவினங் களும்துள்ளித்
தாவியே குதித்திட வாவியில இருநது வருகு

விருத்தம்.

எண்ணரிய கடலேழும் வண்ண மேழாய்
எழுந்துபொற்று மரையோடே கலந்து பொங்கி
விண்ணவரும் முனிவர்களும் ஜயவென் றேத்த
வெள்ளிஅம்ப லம்தனிலே மாறி ஆடும்
அண்ணலைப்போ லெண்வண்ணம் பொருந்தி டக்கண்
டனைவர்களும் ஆச்சரியம் கொண்டா ரிதை
நண்ணிஉரைப பவர்கேட்போர் போக மோக்ஷம்
நாடுவார் சிவனுலகைக் கூடு வாரே.

ஒன்பதாவது எழுகடலழைத்தபடலம் முற்றிற்று.

உ

பத்தாவது,

மலயத்துவசனையழைத்தபடலம்.

அவதாரிகை — விருத்தம்.

அங்கடலேழுமீசன்அழைத்தவா றுரைத்தேனிப்பால
திங்கள்வங்கிசத்துதித்ததென்னர்கோன்துறக்கம்விட்டு
மங்கைகாஞ்சனையோடேற்றவாரிதிஆடிக்கூடல்
சங்கரன்உருவைப்பெற்ற சரித்திரம்இனிச்சொல்வேனே.

காஞ்சனமாலை கணவனும்மைந்தனுமில்லாமையால் வருந்தல்

விருத்தம்

சுந்தரபாண் டியன்தடா தகைப்பி ராட்டித
துணைவியுடன் வரும்பெருநீர்க் கடல் மருங்கோர்
சந்தனம்பா டலம்வகுளம் முதல தருக்கள்
தழைத்திடுநந் தனத்திடைப்பற் பலவா யுள்ள
கந்தமலர் கொய்திளைஞர் சேடி மாதர்
காட்டஇரண் டறவொன்றாய் மருவி யங்கு
விந்தையுடன் முகர்ந்துபொற்சிங் காத னத்தின்
மீதில்இருந் திலங்கினர்அப் போது தானே.

திபதை—மோகனம், சாப்பு.

க சாமிதடாதகைதன்முகநோக்கியுன தாய்பொருட்டாலெவரும்போராய் இந்த
மாமதுராபுரம் தன்னில்எழுகடல் வந்துதிக்கின்றதைப் பாராய்
உ ஆகையினாலுன்றன் அன்னையைவாரிதி ஆடும்படிக்கழை என்றார் அதைப
பாகுமொழியா ளுவந்துதனதன்னை பக்கத்தில்வந்துபு கன்றாள்
ங வாரிதிவந்த வகையைத்தனது மகள்வந்துரைத்திடக் கண்டாள் மனம்
பூரித்துத்தேவாமுதத்தைப்புசித்தது போலேபொன்மாலையுட் கொண்டாள்
ச கொண்டபின்தாயைத்த டாதகைவாரி குதிக்கும்குளக்கரை மீது வந்
தண்டையில்சூழும் மறையோருடனகடல் ஆடவிடுத்தாளப் போது
ரு வேதியர்தங்களைக் காஞ்சனைநோக்கி விரதநெறிஎனக் கேட்க ஈங
கோதப்பெருங்கடல் ஆடும்விதிதெளிந் தோதவேணும்எனக்கேடக
சு கற்பில்மிகுந்தபொன் மாலையேநாயகன் கையைப்பிடித்தாட வேணும் பின
பபடிக்கில்லாமல்போனால்சுதன்கைதொட் டாடவும்செய்யலாம் காணும்
தோன்றலுமில்லாதவராவின்கன்றின்வால்தொட்டாடவேண்டுதலாமே இந்த
மூன்றில்ஒன்றங்கை பிடித்துநீராடுதல் முக்கியம்என்றோதிடத் தாமே
கற்றோர்விதிமுறை ஆய்ந்துமொழிந்திடக் கண்டபின்காஞ்சனமாலை கொண்ட
பர்த்தாவுமைந்தனுமில்லாப்பெருங்கொடும் பாவிஎனக்கினிமேலே [பெற்ற
அ தேனுவின்கன்றின்வாலல்லாமல்வேறு செயலேதெனக்கண்ணீர் துளிக்கப்
மீனவிழியாளுடன்சொல்லித்துக்கித்து மிக்கமனதுதத் தளிக்க [தினமு
ய புண்டரீகன்மால் பதம்வேண்டினோர்க்கருள் புண்ணியனுக்குயிர்த்துணையாய்

கெண்டைவிழிதன தன்னை மனக்குறை கேட்டெழுந்தன்னத்துக் கிணையாள்
கக வந்துகணவனைத் தாழ்ந்துதன் அம்மை மனக்குறையோதிட ஓர்ந்து தெரிந்
தந்தமொழிக்குள மகிழ்ந்துபெருந்தகை ஆணதகையோடன்பு கூர்ந்து
கஉ வாசவனோடே சரியாயிருக்கும் மலயத்துவசனென்னும் மன்னன் தனைக்
காசினிதன்னில் வருகஉளத்தில கருதினன்சுந்தரத் தென்னன்

மலய துவசன் வானுலகத்திலிருந்துவருதல்

விருத்தம்

அண்ணலெனும் சுந்தரபாண டியனிவ் வண்ணம்
அனபுநிறைந தவர் அகத்தில நினைக்கு முனனே
விண்ணகததில இநதிரனோ டொருங் கிருந்து
விளஙகுசிங்கா தனம்நீஙகி விமான மேறி
மண்ணகத்தில் எழுகடலவந துதிக்கும் வாவி
மருஙகிலவரும் போதுகணமப றடைநது பெறற
பெணணரசி யாம்பெறும்பே றெனறதம்தோ்ந தனபு
பேணினன பாணடியா்கோன் தோணி னனே

சாவேரி சாபபு

பலலவி.

மலயத்துவசன்வரக் கணடாள சொா்ன மாலைமனக்குறை விணடாள

அநுபலலவி.

மலையைசிறுகரிநத வாசவனஉலகத்தில
நிலைபெறறெழுநதுவாநது நீளம்விமான ததில மலயத

சரணஙகள

க சாமிதனதுசெங்கோல பூணக் கண்டு தானதொழுவதறகுத் தோண
மாமனெனுமுறையோா்ந தஙகைஅமைததுக்காண
மருகனுடனமகளும் எதிா்நதாதரவு பேண மலயத்

உ அதிா்நதைநதுபோியு முழஙகச் சேனை ஆரவாரததுடன் விளஙக
எதிா்ந்திடும்மகளதன்னைத் தழுவித்தழுவித்துஙக
இமவானைபபோலெக்காலும் குறையாமகிழ்ச்சிபொஙக மலயத்

ந தான்செய்ததவக்குறை நீஙகப் பெற்றதனகுலக்கொடிவளா்நதோஙக
காஞ்சனைமனக்குறை கதிா்முனடனிபோலவாஙக
வாஞ்சையுடனபணிந்து வளருமானந்தம்தேஙக மலயத்

விருத்தம்

வநதமல யத்துவசபாண் டியனைப் பார்த்து
மனைவியுடன் எழுகடலா டுகவீ ரென்று
சுந்தரபாண் டியனசொலக்காஞ் சனைசெங கையில்
சோதிவிளங் கியபவித்தி ரம்பூண்டன்போ
டந்தணா்கள் சூழ்ந்திடசசங் கற்பம் சொல்லி
ஆதிசிவ நாமஎழுத் தைநதும் ஓதி

சிந்தைதனில் உவகைபொங்கப் புகழ்எக் காலும்
தேடினார் எழுகடல்நீ ராடி னாரே.

மலயத்துவசன் சிவசாரூபம்பெற்று சிவலோகஞ்செல்லுதல்.

விருத்தம்.

அம்புதிஇவ் வகையாடிக் கரையே றும்போ
தரனுருவத் தொடுநீலக் கழுத்தும் ஓர்நால
அம்புயமும் நுதற்கணும்முன் னாகக் கண்டோர்
அதிசயிக்கச் சிவபுரத்தில இருந்தப் போதே
அம்பரமீ தினிலிருந்து வழுக்கி வீழ்ந்த
ஆதவன்போல் விமானமொன்று வரக்கண் டாங்கே
தெம்பதியோ டேமலயத் துவச பாண்டியன்
தேறினான் மகிழ்ந்ததனமேல் ஏறி னானே.

மத்தியமாவதி ஆதி.

பாண்டியனேறினானே மலயத்துவச பாண்டியனேறினானே

அநுபல்லவி

ஆண்டவன் அருளாலே அமைந்தவிமான மீதே
பூண்டகற்புவிளங்கும் பொன்மாலையோடபோதே (பாண்)

சரணங்கள்

க தேனின்மழைதுளிக்கத் தேவர்மலர்பொ ழிகக
வானிலெழுர்துந்துபி மஞ்சினம்போலொ லிக்கப் (பாண்)
உ விண்ணோர்துந்துபிமண்ணில் விழுந்ததுவோஎன்றெண்ணிப்
பண்ணுவதுபோலோசை பரந்துவானத்தில் நண்ணப் (பாண்)
ங துங்கமுனிவரேத்தச் சுரர்களதுத்தியம் சொல்ல
திங்கள்வேணியில்சூடும் சிவனுலகத்தில் செல்லப் (பாண்)

கழிநெடில் விருத்தம்.

பாண்டியன் விமானத் திருந்துதன் னுருவம் பண்டுபெற் றரசுபூண் டவர்பின்
பரிந்துதன் வடிவம் தருமரு மகனும் பக்கமே வியதடா தகையும்
ஆண்டவன் கோயிற் புகுந்திருந் திடப்பார்த் ததிசயித் துலகெலாம் பயந்த
அன்னையே மகளா யப்பனே மருகன் ஆகவென் றேற்றதோ வென்று
பூண்டகற் புகலான் போலவே ஐயன் பொன்னடி விடாதுளத் துணர்ந்து
பொன்முடி விமானம் தலைஅடிக் கடிகண் பொருந்திட அஞ்சலித் தெழுந்து
நீண்டமே லேழு லோகமும் கடந்து நெடியவன் உலகமும் கடந்து
நீகந் தானார் உமையுடன் விளங்கும் நெடுஞ்சிவ லோகம்நண் ணினரே.

காஞ்சனமாலைப்பிராட்டியார் சாயுச்சியமடைதல்.

விருத்தம்.

சிவனுலகம் தனில்மலயத் துவச பாண்டியன்
சிறந்திடத்த டாதகைநா யகன்பாற் சென்று

தவமுணர்ந்து தனையீன்றோர்க் காதி வேதத்
தனிப்பொருளின் வடிவளித்த மகிமை யைபபார்த்
துவகைவாய்க் கடங்காமல் வெளிப்ப டும்வா
றெண்குமுத மலரிலிருந் தொழுகும் தீந்தேன்
செவிஇரண்டி னிலும்நிறைப்ப தெனவே சொல்லித்
திகழத்துவாள் துதித்துநின்று திகழத்து வாளே.

திபதை— சௌராஷ்டிரம், ஆதி.

க தீனதயாபரனே சரணம் சத்திய ஞானரூபாத்மகனே சரணம்
உ லோகசம்ரக்ஷகனே சரணம் மாம் பாகிமுத்திபுரேசா சரணம்
ந மறையின்முடியிலுன்றன்சரணம் சிவப் புறநடிக்கின்றவனே சரணம்
ச சீவன்தோறும்வசிப்போய் சரணம் தொழில்மூவகையும்புரிவோய் சர
ரு அரிதேடியபாதனே சரணம் விதிக்கரியமுடியுள்ளானே சரணம்
சு திரிபுரம்எரித்தோனே சரணம் இந்திராதிசுரர்களதொழஅருள்வோய்
எ தக்கன்மகம்அழிததோய்சரணம் என்தனசொற்குக்கருணைசெய்வோய்
அ பரமாத்மசுரூபனே சரணம் லோகம்ஒரூமூன்றுக்கும்நாதனே சரணம்
கூ மன்மதனைஎரித்தோய் சரணம் அடியாள்தன்வசமானவனே சரணம்
ய அர்த்தமதிஅணிவோய் சரணம் விபூதிருத்திராக்ஷம்தரிப்போய்சரண
கக பன்னகபூஷணனே சரணம் அரிதனஞலஅர்சசிக்கின்றவா சரணம்
கஉ சர்மாம்பரதரனே சரணம் பாதிஅம்மேனிகறுத்தவா சரணம்

விருத்தம்

அன்னை இவ்வா றேத்திஎழுதாய் வேணடல் ஒன்றுக்
காழிஏழும் கணவனையும் அழைத்தா டச்செய
துன்னுருவும் மேல்நாடும் அளித்தாய் தென்னர்
ஒணகுலமி றந்ததுபார்த் துலகாளும் போல்
இன்னிலைமைக் கினிஇடையூ றேதெ னத்தாழ்ந
தியம்பஅம் தநிந்தையன் மகிழ்ந்தா னித்தைச்
சொன்னவர்கேட பவர்களிக பரமும் பெற்றுத்
துலங்குவார் எக்காலும் விளங்கு வாரே.

ஆக விருத்தம் எ சுறிநெடில் க கீர்த்தனை உ தரு உ ஆக கஉ.

பத்தாவது மலயத்துவசனை அழைத்தபடலம் முற்றிற்று.

உ

சிவமயம்

பதினோராவது

உக்கிரபாண்டியதேவர்திருஅவதாரப்படலம்.

அவதாரிகை— விருத்தம்.

கருங்கண்டன் அருளால் தென்னன் காஞ்சன மாலை யோடும்
பெருங்கட லாடிப் பெற்ற பேறுமுன் னுரைத்தே னிப்பால்
திரும்பஅம் மன்னன் பெற்ற திருமக ளிடத்தில் கந்தன்
அரும்புதல் வனுமா வந்த அருமையை விளம்பு வேனே.

உக்கிரகுமாரர் அவதாரஞ்செய்யசுந்தரேசர் திருவுளங்கொள்ளல்.

விருத்தம்.

நன்னிலத்தைச் சுந்தரபாண் டியன் அனேகம்
நாள்மனுநூல் கொண்டுசெங்கோல் ஏந்தி யேதன்
பொன்னடிநீ ழலைப்போலே யாவ ருக்கும்
புதுமதிவெண் குடைநிழலைச் செய்தி யங்கும்
மன்னுயிரும் தானாகிக் கருணை கூர்ந்து
வளம்பெறவே இறைமாட்சி புரியும் நாளில்
பின்னுமொரு விளையாடல செய்ய எண்ணம்
பெற்றிட்டான் அவ்வகைந டத்திட் டானே

திபதை—சௌராஷ்டிரம். ஆதி.

௧ பன்னகபூஷணனே சுந்தர பாண்டியனாகஎந் நாளும் உயர்
தென்னவர்குலம் வளரச்செய்திடும்திருவிளையாடல் கேளும்

௨ மாலயன்மக வான்மறைமுதல வருந்தியும்காண அரிய தன்னைக்
கோலும்அன்பருக் கெளிதிலேகாணக் கூடும்என்பது தெரிய

௩ பாணடியனுக்கும்காஞ்சனைக்கும்தன பத்தினியைப்பெண் ஆகத் தந்து
மீண்டும்தானுமே மருமகனாகிமேதினிக்கர சாக

௪ விதிமுறைப்படி நடத்திடும்முடி வேந்தருக்குள்மேன மேலும் துய்ய
மதிகுலம்பெரி தாகஉலகில மகிமைபெற்றது போலும்

௫ இனியும்பினவரும் குறையைநீக்கிட எணணியேஅருள கொண்டு மாயை
தனைவென்றவனசெய் யும்விசித்திரம் தனைமொழிவதார் கண்டு

௬ இந்திரஜாலம் காட்டுவானென வேதனக்குநே ராக வளர்
பைந்தமிழ்உரைக் கும்சரவண பவனேயேபிள்ளை யாக

௭ இவ்வுலகத்தைப் பயந்துளம்மகிழந் திடும்தடாதகை மாது அவள்
தன்வயிறறில்வந் தவதரித்திடத் தான்நினைந்தான்அப் போது

தடாதகைப்பிராட்டியார் ஷண்முகதேவனைக்கருப்பம்தரித்தல்.

திருஉளத்தில சுந்தரபாண டியன இவ் வாறு
சிந்திக்கச் சண்முகனஅவ் வண்ண மாகக்
கருவில்வரு முன்தடா தகையைசசூழ்ந்து
காத்திருக்கும் சேடியர்உன் அழகுக் கேறப
வருகருட்பக் குறிஅழகும் திங்கள் தோறும்
மங்கலமும் காணஎங்கட் காசை என்று
அருமையுடன் பணிந்துரைக்க மகிழ்ந் ததைக்கேட்
டனபுற்றாள் கருப்பவடிவம்பெற் றாளே

கல்யாணிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

ஆனாள் தடாதகைதிவ்யம் ஆனாள் அற்புதம் ஆனாள்

அநுபல்லவி.

மேனாள்அசுரகுல காலன்என்றமைந்ததேவ
சேனாபதி யானஷண்முக தேவனை மாவலனைக் கொர்ப்பம் ஆறு

சரணங்கள்.

௧ கருமணித்தூ பிவிளங்கும் செம்பொன்மலை என்னவே
திருஅமுதம் பெய்திலங்கும் செப்பினைப்போல்மின்னவே
வருமுலைசு மந்திடையும் வருந்துவெளி துன்னவே
சிரம்நாலவனைச் சிறைசெய்துகல்வி தேறும்வாறு கூறுவோனைக் கொர்ப்பம் ஆறு

௨ பூவில்இனி யதும்திங்கள் தோறும்உண்ணத் தேடவே
தேவர்அமு தும்பன்னகர் திருஅமுதும் கூடவே
மேவியகணங்கள்கொணர்ந் தீந்தெதிர்கொண் டாடவே
நாவுக்கினிய சுவைமேல்மனம் நாடவேடர் தேடுவோனைக் கொர்ப்பம் ஆறு

௩ வேதபண்டி தமுனிவர் வந்தினிமை கூறவே
ஓதுமன்ன ரும்நகருள் ளோரும்களிப் பேறவே
மாதருமத் தாலேகன்னி நாடெவைக்கும் மீறவே
சோதிபெருகிய வடிவேலனைத் தோகைவாகன் ஆகுவோனைக் கொர்ப்பம் ஆறு

ஷண்முகதேவர் உக்கிரகுமாரனாக அவதரித்தல்.

விருத்தம்.

கூறும்ஆ லத்தைஅமு தாஅ ருந்தும்
குன்றுவில்லி அருளால்இவ் வாறு பூமேல்
தேறுதவம் புரிமலயத் துவச பாண்டியன்
செல்வி தடாதகைதிருஉ தரத்தில் நின்றும்
பேறுபெறுங் கால்பெற்ற சேய்போல் கண்ணீர்
பிலிற்றஇளம் செங்கதிர்போல் காந்தி வீச
ஆறுமுக ஸ்வாமிஒரு முகரு பம்கொண்
டெடுத்திட்டான் அவதாரம் எடுத்திட் டானே.

தோடி, சாப்பு.

பல்லவி.

ஷண்முக னேஉக்கிர வர்மனாகஅவ தரித்துவந் ததைப்பாரும்

அநுபல்லவி.

கண்மூன்று டையகரு ணாநிதி அருளாலே
தண்மதிக் குலமன்னன் பெண்வயிற் றிலேஆதி ஷண்

சரணங்கள்.

௧ மாசற்றயோகியர்உள்ளத்தைப்போல்நெடு வானம்பிரகாசத்தைஅடுக்கஜக
நீசனுக்குற்றதி ருவாதிரைநாளில் இந்துவாரம்சுபம் தொடுக்கப்
பூசுரர்மெய்க்கும் சுபதினத்தில்புகழ் பூணும்சாம்பிராச்சியத்தைக்கொடுக்க
தேசுலவும்லக்னகேந்திரத்திலேதேவ தேசிகன்தனதொளிவிடுக்க ஆதிஷண்

உ மாமறைநாலும் முழங்கஅமரர்பூ மாரிசொரிந்துகொண் டாட நறும்
தேமலர்க்கொம்புபோல் எட்டுத்திசையிலும் தெய்வப்பெண்கள்நடம் ஆடப்
பூமகளும்நா மகளும்மனமிகப் பூரித்துச்சோபனம் பாட அரி
தாழெனும்துந்துபி ஐந்தும்ஒலிப்ப தவனிஉள்ளோர்காதில் கூட ஆதிஷண்

ரு அந்தணர்சிந்தை மகிழ்ச்சிபெருகச்சி வாகமநூல்மொழிந்தொலிக்க திவ்ய
மந்திரயாகம் புரிந்தெழும்செந்தீ வலங்கொண்டெழுந்தது ஜொலிக்கத்
தந்திகள்எட்டுடன் சேடனும்தம்பொறை தன்னை இழந்துகெக் கலிக்க வாழும்
இந்திரன்மேரு சமுத்திராசன் இவர்கடகிடதுதோள் சலிக்க ஆதிஷண்

விருத்தம்

மைந்தன்இவ்வா றுதித்திடப்பார்த் தெம்பிராட்டி
மலர்க்கரம்கொண் டணைத்துமுகந தவள்தன் காந்தன்
செந்தளிர்க்கைக் கொடுத்துவந்து வாங்கிப் பாலால்
திமிர்ந்தொழுகும் கொங்கையைச்செவ் வாயில் வைத்துக்
கந்தமிகும் குமுதமிசை வெண்ணி லாத்தன்
கதிர்பரப்பு வதெனஅளித் திருந்தாள் இப்பால்
அந்தரத்தோ ரும்புவிமன் னவரும் மேற்கொண்
டாடினர் மதுரைவந்து கூடி னரே.

மத்தியமாவதி ஆதி
பல்லவி.

வந்தார்வந்தார் ஆலவாயில் வந்தார்வந்தார்

அநுபல்லவி.

வந்தார்மலயத்துவசன் மகள்வயிற்றிலேநாடிக்
கந்தன்அவதரித்த காக்ஷிதனைக்கொண் டாடி வந்தார்

சரணங்கள்.

க ஓதும்மால்அயன்இந்த்ரன் உம்பர்முனிவர் தங்கள்
மாதரசிகளுடன் வானகத்தில் விளங்க வந்தார்
உ சோழன்சோனை முதல் சொல்லும்மன்னவர் திரண்டு
சூழும்இ[illegible] கொண்டு வந்தார்
ங திரைகடல்ஒருநாலு திசையும்பரந்து பொங்கி
வருவதுபோலவே மாநகரை நெருங்கி வந்தார்

விருத்தம்.

தேவர்முனி வோர்கள்மன் னவர்கள் எல்லாம்
திருமதுரா புரந்தனில்இவ் வாறு வந்தே
ஆவலுடன் சுந்தரபாண் டியனைச் சந்தித்
தனைவர்களும் முறைமையினால் பணிந்து வாழ்த்தி
நாவில்அமு தொழுகிடமங் கலச்சொல் ஆற்றி
நற்கருணை பூண்டதடா தகைப்பி ராட்டி
சேவடியில் தொழுதுதம திருக்கை நோக்கிச்
செல்லும்போ தவரவர்கள் சொல்லு வாரே.

திபதை—புன்னாகவராளி, ஆதி.

க வழுதியர்கோ னிடத்திற்குகன் வந்துதித்தான் என்பார்
பழுதறும்காஞ் சனைசெய்த பாக்யமிதே என்பார்
௨ அனங்கனும்கண டாசைப்படும் அழகில்மிக்கோன் என்பார்
கனங்கொணடெழு வையகமும் காக்கவல்லோன் என்பார்
௩ மானிடர்கள் செய்தபெரு மாதவமோ என்பார்
வானவர்கள் வருந்திச்செய்த வான்தவமோ என்பார்
௪ வேள்விமறை யோர்கள்செயத மெய்த்தவமோ என்பார்
கேள்விமுனி வோர்கள்தவம் கிடைத்ததோ என்பார்
௫ தருமம்செய்த மாதவத்தின் நற்பயனோ என்பார்
பொருள்புரிந்த தவத்தில்வரும் புண்ணியமோ என்பார்
௬ கூடும்இன்பம் செயததவம் கொண்டபயனோ என்பார்
வீடுபெறி புரிநததவ மெய்ப்பயனோ என்பார்

மதுரைநகரத்தார் நெய்விளையாட்டுவிளையாடுதல்.

விருத்தம்.

புக்கமுடன் அவரவர்கள் இந்த வண்ணம்
புகளுறுதங்கள் தங்கள் இருப் பிடத்தில் சென்று
மங்கலவாத் தியமுழங்க நகரம் எங்கும்
மகிழ்ச்சிகொளச் சுந்தரபாண் டியனஅப் போது
மங்கைதடா தகையுடனே மறையோர்க் கீந்த
மாதான நீர்பெருகிக் கடலோ டொளுறத்
துங்கமுடி வேந்தர்முத லாச்சி றப்புச்
சூடினார் நெய்விளையாட் டாடி னாரே.

நாதநாமகிரியை, ஆதி.

பல்லவி.

நெய்விளையாட்டுவிளையாடினரே மதுராபுரவீதியில் நெய்விளையாட்டு விளையா

அநுபல்லவி.

நெய்விளையாட்டு விளையாடினரே சைவசமயமகி மையைக்கூடினரே
தெய்வலோகமும்புகழால்மூடினரே சைவடிவேற்குமரனைப்பாடினரே

சரணங்கள்.

க முன்னவன் திருமனையும் பொன்னடி யவர்மனையும்
மன்னவர் அரண்மனையும் பின்னுளவர் கள்மனையும்
மின்னவே பளிங்கு போலே இழைத்துவாசல்
திண்ணைமுதல் ஒருக் காலேகொண்டாடிக்கொண்டு
நன்னயம்செய் துமென்மேலே இலங்கும்பஞ்ச
வன்னவிசித் திரத் தாலே சிங்காரம்செய்து
கன்னல்கமுகுவாழை கட்டும்கொடிவிளங்க நாட்டித் தூகிஸ்மார்தழை
துன்னிடவேமகர தோரணங்களில்தொங்க மாட்டி இரதத்துடன்

மன்னியகஜதூர காதிகளுக்குமணி பூட்டிக் கண்டவர்களி
தென்னஅதிசயமென் றவரவர்உரைத்துப் பாராட்டிக் கொள்ளமன்னவர்
பன்னிழைஆயிரம்பொன் பட்டிடையில்வைச்சு வரித்து துராய்களுடன்
சென்னியிலேசரிகைப் பாகைமெய்க்கங்கியும் தரித்துக் கைமோதிரங்கள்
சொர்ணமுத்தாரங்கள் கடுக்கன்முதற்கொண்டலங் கரித்து இதுவல்லாமல்
இன்னமும்பலஅலங் காரங்கள்சொல்லொணாது விரித்து இந்தவிதம்கொண்
டிந்நிலம்புகழமது ராபுரி கொழிக்கப்
பொன்னுலகிதுக்கிணை அலவென்று பழிக்கப
பன்னகபூஷணன் தன்னருள் பொழிக்கத்
தென்னவர்கோன்திரு மகள்மகன் செழிக்க செய்

உ கங்கைமதி யைத்தரித்த சங்கரனி டத்திலுற்ற
நங்கைதடா தகைபெற்று புகழ்கவம்கொண் டுமிகுத்த
மங்கையர சிக ளிணங்கப் பட்டாடையைம
ருங்கில்உடுத் திக்கொண் டிலங்க அஞ்சனம்கொண்டு
கண்களுக்கெ ழுதி முயங்கத் திலகமுடன
பங்கயவ தனம் விளங்க அவதரித்த
பைங்குழந்தையைக்காண வேணுமென்றுவல் படர்ந்து விலைமிகுத்த
குங்குமம்கஸ்தூரி சவ்வாதுபுனுகுடன் அடர்ந்து புதைத்தெழுந்த
கொங்கைகுலுங்கமகத ஹாசம்செய்தவர்கள தொடர்ந்து கனிவர்க்கங்கள்
செங்கைதனில்எடுத்துக் கொண்டதிவேகமாய் நடந்து இருகாதிலும்
தங்கமணிஇழைத்த தோடுகுண்டலம்ஒளி வீசக் கண்டத்திலேஇ
லங்கியசந்திரஹார வஜ்ரப்பதக்கமுதல் வாசக் கொழுந்துமருத்
தங்கியஜாதிமுல்லை மல்லிகையும்அணிந்துல லாசத் துடன்இருபா
தங்களில்தண்டைசிலம் பணிந்தெங்கும்கல்லென்று பேச அவரவர்கள்
வங்கணமாகவே கும்பலாச் சேர்ந்து
அகைமுடனேதிரு அரண்மனை சார்ந்து
திங்கட்குலதிலகன்புகழைஆ ராய்ந்து
மங்களவார்த்தையை மொழிந்துளம் தேர்ந்து செய்

௩ செந்திருஒத் தமங்கையர் மந்தரம்ஒத் தகொங்கையர்
செந்தளிர்ஒத் தசெங்கையர் சுந்திருவா தம்நங்கையர்
வந்ததுக்கி ணையதாக வந்தவர்தங்கள்
சிநதையில் மகிழ்ச்சியாக ஆடவர்க்காசை
தந்துபர வசமாக இணங்கிமிகச்
சிந்துகள்பா டிஅனேக வாத்தியம்ஒலிக்கக்
கந்தமிகுந்ததயி லமும்பனிநீரும்விலை யேறும் சாந்துகளுடன்
சந்தனம்புனுகுகஸ் தூரிமுதல்களபச் சேறும் இன்னமும்பொரி
யும்துவெள்ளரிசியும்பொடிவர்க்கமும்கலந்து கூறும் தலங்களுக்குள்
முந்திமுளைத்தமது ராபுரவீதிகள் தோறும் சித்தசாரணர்
அந்தரர்கின்னரர் வந்ததுபோலஅக லாதே உச்சாகம்கொண்டு
தந்திஅனையவரோ டொருவர்க்கொருவர்தங்கள் மீதே பொன்தூருத்தியில்

தந்திரம்செய்துவட்ட ரந்தரக்குழல்கொண்டுதப் பாதே விளையாடும்போ
தைக்துகளையவனும் மாறிமாறி ஆடஅப் போதே இப்படிப்பல
விந்தையுடனேவிளை யாடியே நல்ல
பைந்தொடிமார்களும் புருடரும் வெல்லச்
சுந்தரபாண்டிய ராசற்குச செலவ
மைந்தன்பிறந்தமகி மையைஎங்கும் சொலல மெய்

உக்கிரகுமாரனுக்கு சாதகாறுதி செய்ததுகூறுதல்·

மெய்விளையாட டிநதவிதம் செய்தா ரிப்பால
நிறைநதஇந்து வாரம்ஆ திரைநல நாளில
தெய்வகுரு லக்கினகேந் திரத்தில் மேவத்
தேவபாண் டியன்தனது சேய னுக்கு
மெய்வளரும் சாதகர ணுதி செயது
மேருமக வான்சலதிக கசசய் தோறறற்
கெய்வதுகொண டுக்கிரவர் மனனைப் பேரிட்
டேத்தினர் அப்படிக்கே வாழத்தி னரே.

தியனத— ரீதிகௌளை, சாப்பு.

க நிர்மலமான மதிகுலத்திலவநது வாழும் உக்ர
வர்மசேழியன் மகிமைஇனிச்சொலலக் கேளும்
உ கேளுடன்தாயும் தகப்பனும்பார்த்தன்பு சிறநதார் தேகம்
நாளொருவண்ணம் பொழுதொருமேனியாவளர்நதான
ந தங்கமணித்தொட்டில அங்கமுடன்மகிழந் தேற்றினர் நாலாம்
திங்களில்சந்தி மிதிக்கும்திருவிழா ஆறறினர்
ச வேதனும்மாலும் முனிவரும்வநதுசீ ராட்டினர் ஆறும்
மாதத்திலேசுப மங்கலம்செய்தன்னம் ஊட்டினர்
ரு வேண்டும்பணிகள்தினம்தோறும்வெவ்வேறு பூட்டினர் ஓர்
ஆண்டின்திருவிழாச் செய்தனைவோரும்பா ராட்டினர்
சு மூன்றுவயதில் குடுமிக்கல்யாணம் நடத்தினா ஐந்து
தோன்றுவயதில்நூ லாறுமுதற்கொண் டுணர்த்தினர்
எ தாரணமாகிய பூணூல்கலியாணம் முடித்தார் உடனா
ஆரணம்சாகை பதம்கனம்யாவையும் படித்தார்
அ வெற்றிவில்வித்தையும் சத்திரவித்தையும் தெரித்தார் பரி
மத்தகஜத்தை நடத்தல்முதலிய விரித்தார்
கூ பேசஅரிய கலைகள்முழுதும் பொ ருத்தினன் தேவ
தேசிகனை வியாழபகவான் வ ருத்தினன்

உக்கிரகுமாரர் திருவிளையாட்டு·

விருத்தம்·

அருமைகொண்டுக்கிர வருமன் இந்த வண்ணம்
அறுபத்து நாலுகலை களையும் நெஞ்சத்

தொருமையுடன் எண்வயதில் அறிந்தி சன்பால்
உரைக்கரிய பாசுபதாஸ் திரமும் பெற்றுத்
திருஉருவும்பேரறிவும் பலமும் மீறத்
தெரிவையர்கண் டகமகிழ்ச்சி கொள்ள வேதன்
குருஅடிதாழ்ந் தரசிளங்கு மார ரோடு
கூடிவிளை யாடல்செய்ய நாடி னானே.

சுருட்டி சம்பை.

பல்லவி.

திருவிளையாடினவிபரம்கேளும் உக்கிரவருமன் திருவிளையாடினவிபரம்கேளும்

அநுபல்லவி.

திருமதுராபுரத்தில்உள்ள ஜெனங்கட்கானந்தம்துளிக்கத் திரு

சரணங்கள்.

க கஜத்தினுடனேகஜத்தை முட்டவிட்டுச்சயம் தொடுத்து
அஜத்தினுடனேஅஜத்தைத் தாக்கத்தட்டிக் கொடுத்து
இசைத்தகுக்குடத்துடனே குக்குடம்பொருத விடுத்து
இசைத்தமணிப்பலகைநான் குறப்பாடல்செய அடுத்துத் திரு

உ காற்றினும்கடியகுதிரை ஏறிப்போய்த்திரும்பி வந்து
கூற்றினும்கொடியயானை நடத்திவையை அடர்ந்து
ஆற்றினும்உய்யானத்தினும் அகத்தினும்இன்பம் பரிந்து
வேற்றிளைஞரொடுமல்லமர் விளைத்துவெற்றிபெறமகிழ்ந்து திரு

ங சந்தனமரங்கள்நிறை பொதியமலைதனை நாடி
அந்தணருடன்பிரசங்கித் தாசீர்வாதம் கூடி
கந்தமிகும் கனிஅருந்திக் களித்துநறுமலர் சூடி
இந்தவிதம்ஐந்துமூ வாண்டுசெல்லக் கொண்டாடி

திருவிளையாட் டிந்தவிதம் செய்தான் இப்பால்
தேவர்பதி அயன்நெடுமால் சூழ்ந்து போற்றக்
கருமுகச்கு ரனைத்தடிந்து மயிலும் வேலும்
கைவிடா மல்காக்குத வரதே போல
ஒருமுகவே லவனுகப் பருவம் மேற்கொண்
டொண்டொடிமா ரும்விழியும் மருக்கு மொய்ப்ப
வருகுமரன் திறமையைத்தேர்ந் துவந்து தாதை
மனம்பெற்று லோசனைசெய் தினம்பெற் றானே.

உக்கிரகுமாரர்சாமுத்திரிகாலக்ஷணத்தைச் சொல்லுதல்.

கழிநெடில் விருத்தம்.

செங்கம லம்போல காலும்நீண் டுருண்ட செங்கையும் வட்டமாத் தோற்றும்
திருமுழந்தாளும்துதிக்கைபோல்துடையும் திரட்சியாயிலங்குசிற்றிடையும்
தங்கிய சிறிய தாகிய வயிறும் தாழ்ந்தநா பியும்அகல் மார்பும்
தனிஇசை வீணைத்தண்டுபோல் கரமும் தங்கவெற்பிரண்டுசேர் தோளும்

சங்கம்நேர்த் தெழில்கொள் கண்டமும் செய்ய தாமரை மலர்நிகர் முகமும்
தண்ணளி பொழியும் நீர்க்கலோசனமும் சலந்தரம் போல்மயிர் அழகும்
அங்கமா விளக்கும் செல்வனைத் தாதை அடிக்கடி நோக்கிநன் னூல்பார்த்
தறிந்தவ ரிடத்துக் கேட்கஅப் பயனை ஆய்ந்தவர் எடுத்துரைத் தனரே.

க பூண்டுவரும்புகழ்ச் சுந்தரபாண்டிய பூபதியேவலி சூழும் உக்ர
பாண்டியன்சாமுத்ரிகாலக்ஷணத்தின்பயனைச்சொல்வோமதைக் கேளும்
உ மன்னியநாசி லலாடம்புயம்குக்ஷி மார்புகையடிஇவ் வாறும்
உன்னதமாக இருக்கையால்வாளை வுற்றசெல்வம்வளர்ந் தேறும்
ந பார்க்கும்வரிக்கண் கபோலம்கைநாசி பரந்தநெடியோர்பில் வைந்தும்
நீர்க்கமதாக இருப்பதனாலே ஜயமாலைதோளில் பொருந்தும்
ச அறியவேசெங்கை நாககுமுதநிது அல்லாமல்கோசம்இந நான்கும்
குறுகிஇருப்ப தினாலேசெல்வம் குபேரனிலும்வளர்ந் தோங்கும்
ரு கைத்தலம்கால்கடைக்கண் இதழ்அண்ணம்நகத்துடன்நாஇந்த ஏழும்
ரத்தநிறமா யிருப்பதினாலே லம்செயசுகம்மிகச் சூழும்
சா அம்புவியோர்கள் புகழும்வலிஒசை அலைமாமல்உந்திஇம் மூன்றும்
கெம்பீரமாக இருப்பதனால்அதற் கேஉத்தமனாகத் தோன்றும்
எ உத்தமமாகும் சிரசுலலாடம்என் றேதும்உறுப்பிவ் விரண்டும்
விஸ்தாரம்ஆனத னாலேமனுக்குள் விசேஷமாகப்புகழ் மண்டும்

விருத்தம்.

நல்லஇலக் கணமுப்பத் திரண்டும் நோக்கி
நறகுணமும் நோக்கிஇந்த ஞாலம் காக்க
வல்லவனென் றிலக்கணம்சோ தித்தோர் உகிர
வர்மனுக்கம் முடிசூட்ட லாமெனக்கேட்
டல்லணிகந் தரன்அவ்வாற திருர் தம்மோ
டாலோசித் திருந்தனன்இக் கதைப்போர் கேட்போர்
செல்வமகப் பேறுசௌபாக் கியம்ஆ ரோக்கியம்
சேருவார் சிவனுலகைச் சாரு வாரே.

விருத்தம் கஉ, கீர்த்தனம்ரு, தருசு ஆகஉக.

கக வதுஉக்கிரகுமாரதேவர்திருஅவதாரப்படலம்முற்றும்.

௨

பனிரண்டாவது

உக்கிரகுமாரனுக்குவேல்வளைசெண்டுகொடுத்தபடலம்.

அவதாரிகை— விருத்தம்.

உக்கிரச் செழியன்இவ்வா றுதித்ததை உரைத்தேன் இப்பால்
முக்கணெம் பெருமான அந்த முதல்மையாம் புதல்வனுக்குத்
தக்கமல் மணம்புரிந்து தனதுவேல் வளைசெண் டீந்து
மிக்கசெங் கோலும் ஈந்த விசித்திரம் இனிச்சொல் வேனே.

திபதை— ஆனந்தபைரவி, ரூபகம்.

க சாமிசுந்தர பாண்டியன்செய்த சரித்திரம்இன்னம் கேளும் இந்த
பூமிதுதிக்கும் பாண்டியன்குலம் புகழ்பெருகஎந் நாளும்

உ மலயத்துவசன் தவத்தில்உதித்து வரும்தடாதகை மாது பெற்ற
குலமகனுடன் மகிழ்ந்துசிதம்பும் குலவி இருக்கும் போது

ந தனதருமைம கனுக்குக்கல்யாணம் தன்னைவிரைந்து செய்ய நினைத்
தினமதாகிய அமைச்சர்அறிஞர் இவர்களுடனே துய்ய

ச நிலமும்குடியும் குலமும்புகழும் நிறைந்தவேந்தரை எண்ணிப் பெற்ற
தலைமகனுக்குச் சரிஎவரென்று சார்ந்தாலோசனை பண்ணி

ரு உத்தரத்திசை தன்னிலேமண ஊர்என்றுரைக்கும் புரத்தில் பிர
சித்தமாகவே சூரியகுலத்தில் செனித்துவந்தவள் நலத்தில்

சா வேந்தனாகிய சோமசேகரன் மெய்த்தவத்தில்வந் துதித்து வளர்
காந்திமதியைத் தம்மகனுக்குக் கலியாணம்பண்ண மதித்து

எ ஏகநாயகன் ஆலவாய்விடுத் திரவினில்வழி கூடிச் சோம
சேகரமன்னன் கனவில்வநதொரு சேதிசொலவிட நாடி

அ இந்நிலம்புகழ் மதுரைத்தலத்தில் இறைவனுக்குநா மென்று நினைந்
துன்மகள்காந்தி மதியைஅங்கவர்க் குறவுடன்தேடிச் சென்று

கூ மாற்றலர்மணி முடிகள்இடற மழுங்கியகழற் காலன் உனக்
கேற்றசுந்தர பாண்டியமன்னன் ஈன்றஉக்கிர பாலன்

ய அவனுக்குத்திருமணம்செய்துகொடென றருள்பொழிந் துரைத்து உடன்
கவனமால்விடை வாகனமீதில் கரத்தெப்போதும்போல் வந்து

கக இருக்குமுன்சோம சேகரன்விழித் திருகையும்குவித் தெழுந்து அருள்
சுரக்கும்கடவுள் கருணைஎளிதில் தோற்றியசெயல் நினைந்து

கஉ உள்ளம்முகம்கண் ஆகும்தாமரை ஒருங்கேமலரப் பரிந்து அன்பின்
வெள்ளம்பெருகச் சூரியனுதிக்கும் வேலைவந்திடத் தெரிந்து

கந நித்யகன்மம்செய் தமைச்சரும்சில நிருபரும்கூடி இணங்கத் தன்னை
சுற்றியசது ரங்கமுடனே துலங்கும்பல்லியம் முழங்க

கச மங்கலம்பெறும் தன்மகளுக்கு மணக்கோலம்புரிந் தோது பல
மங்கைமாருடன் தேரிலேவைத்து மதுரைக்குவரும் போது

கரு அந்தவேளைமுன் யோசித்தபடிக் கமைச்சர்சுற்றமும் சேர்ந்து கொண்
வந்துமணவூர் நோக்கிவரவும்மன்னனுக்கெதிர் நேர்ந்து

கசு தென்னர்கோன்மகனாகியஉக்ரச் செழியன்தனக்கு வேட்க முடி
மன்னர்துதிக்கும் மன்னனேஉன்றன் மகனைத்தாவெனக் கேட்க
கஎ கொன்றைவேணியன் கனவிலேவந்து கூறினதெல்லா மொழிந்து மிக
நன்றென்றுரைக்க ஒருவர்க்கொருவர் நயப்பஆநந்தம் மிகுந்து
கஅ .தேவபாண்டியர்க் கிந்தக்ஷேமத்தைத் தெரியத்தூதரை விடுத்தார் விடுத்
தாவலுடனே மதுரைமாநகர்க் கவர்களும்வந் தடுத்தார்

திருநகர் அலங்கரித்தல்·

விருத்தம்

சோமசே கரனிந்த வண்ணங் கூடற்
றென்னகரிற் சுந்தரபாண் டியன்பால் வந்தே
தாமமுடி வணங்கிடப்பார்த் தவனும் நேரே
தழுவியுப சரித்திருக்கை அளித் திருந்தான்
மாமதிமந் திரிமார்கள் திருமு கத்தை
வரைந்தரசர்க் கனுப்பிஅவர் வருகு முன்னிப்
பார்மகிழும் நகரைஅலங் காரம் செய்யப
படித்திட்டார் மணமுரசம் அடித்திட் டாரே.

சிந்து— புன்னாகவராளி ஆதி.

க திருமணமுரசடித்தார் சுந்தரத் தென்னவனருளியமொழிபடித்தார் [டார்
தெருவெங்கும்பந்தலிட்டார் மாடங்கள பெருகியமனைதொறும்கொடிகளைட்
உ கதலிகமுகுகட்டினார் தூணகளில விதம்விதமாகப்பொன் தகடொட்டினார்
மதிஇரவியைநிகர்த்த ஆடிகள் புதிதுபுதிதாஎங்கும் பதியவைத்தார் [தார்
௩ மகரதோரணம்தொடுத்தார் தேவருலகமிதுக் கிணையோவென் றளவெடுத்
வகைமணிமாலைசோத்தார் பொற்குடம்தகதகென்றொளிரமகிழ்நதுபார்த்தார்
௪ கோயிலெங்கும்விளக்கினார் கோபுர வாயிலும் மதிலுமிகத் துலக்கினார்
தூயமலர்கள்முடித்தார் பொன்னுல காயிழை மார்பா தங்கள் கடித்தார்
௫ வாசப்பொடிகளிறைத்தார் செம்பட்டுத்துசணியாலுடலெங்குமறைத்தார்
ஈசனருளைத்துதித்தார் திருமண வாசகம்தெரிந்தனைவரும்கதித்தார்[த்தார்
வேதிகைசமைத்துவைத்தார் விளங்குபொற்சோதிசெய்பாலிகையமைத்துவை
போதகம் அலங்கரித்தார் கதிகொளும் மாதுர காதிகட் கெழில் விரித்தார்
எ விருதுக்கொடிகள்பறக்க நரகெச மேளம்உடுக்குமொந்தைதாளம் சிறக்கப்
பெருகும் சின்னங்கள்முழங்க துந்துபி பேரிமல்லாரிமுதலாக இலங்க
அ சதுரங்க த்துடன்சேரன் செம்பியன் சாளவர்கொங்கணர் மாளவரும்
நிதிவளர் கேகையரும் சிங்களர் நேரியர் கோசலர் ஆரியரும்
௯ குச்சரர் ஒட்டியரும் சோனகர் கொங்கர்கலிங்கர் குலிங்கர்களும்
மச்சரர் பாஞ்சாலர் வில்லவர் வங்கர்மராடர் தெலுங்கர்களும்
௰ பின்னுள அரசர்களும் சுந்தரத் தென்னவன் திருவடி தன்னைக்கண்டு
நன்னய த்துடன பணிய வருகின்ற ராசர்கள் வரிசையை ஏது சொல்வேன்
கக தொட்டமுப்புரிநூலில் தொடும்கலைத் தோலினரும்கிஞ்சுகக்கோலினரும்
வட்டவாய் நீர்க்கலசம் கைக்கொண்ட மாதவரும் குண்டலக் காதவரும்
கஉ ஓமவன்னியயைடக்கும்கோல்கையிலுடையவரும்புலித்தோலுடையவரும்

நாமமும் செய்துசீற்ற நீற்றினை மதித்தவரும் நெற்றியில் பதித்தவரும்
கூட குண்டிகைக் கையினரும் தண்டினில் கோவணம் வீக்கிய மாவலரும்
கண்டுமெய்யினையுணர்ந்து பொய்யினைக் காய்ந்தவரும்பலநூலாய்ந்தவரும்
கூ ஆதிசைவரைமுதலாம் சைவர்கள ஒவரைமுதற்பல சைவர்களும்
காதனஞ்செழுத்தோதும் புண்யமெய் ஞானியரும் விபூதி மேனியரும்
கரு அரிஅயன்முதல்எவரும் இந்திரனோடண்டர்களும்திருத் தொண்டர்களும்
வரிவரியாயப்பதினெண் கணத்தினமானவரும்சித்தரானவரும் தார்
கக சாமிகல்யாணத்திலே இந்நகர் தானே தனக்கொப்பாகத் தாம் அமைத்
ஆமதற்கதிகமென்றும் வந்தவரனைவரும்சொலஅலங்கரித்தனரே திரு

காந்திமதியின் சாமுத்ரிகாலக்ஷணத்தைச்சொல்லுதல்.

சகலரும்இப் படிமதுரை சேர்ந்து சிங்கா
சனம்தனிலே தடாதகைப்பி ராட்டி யோடே
அகமகிழும் சுந்தரபாண்டியனைத் தாழ்ந் தேத்த
அனைவருக்கும் வரிசைபுரிந் திருக்கும் போதே
சகமகிழும் சோமசே கரன் பயந்த
தையல்வனப் பனைத்தும்அறிந் துவகைபூண
மகிமைதரும் வியாழபக வான்சோ தித்து
வரைக்கின்றான் விபரமுடன் உரைக்கின் றானே.

திபதை— மத்தியமாவதி சாப்பு.

க மாதரசாகிய காந்திமதியைஉன் மைந்தனுக்குத்திருக் கல்யாணம்செய்திட
மாதனேசாமுத்ரி காலக்ஷணத்தின்
நலத்தின்வகைபாராய் அதன் பலத்தின்வகைபாராய் [ய
உ வாசம்பொருந்தி நெருங்கிமெலிந்து வணங்கிஅளிபோல்கறுப்பாய்விளங்கி
கேசஇலக்கணத் தாலேபெரும்பொருள்
கிட்டிவரும்பாராய் கணவனைச் சுட்டிவரும்பாராய் (சென்னி
ங தக்கமதயானை மத்தகம்போலே தரங்கொண்டுயர்ந்து திரண்டெழிலும்
லக்கணத்தாலே கணவனுக்காயிசு
நீளத்தரும்பாராய் புவிஅர சாளத்தரும்பாராய்
ச அர்த்தசந்த்ரன்போல் மயிர்நரம்பின்றிமூ வங்குலவீதி தசைத்து விளங்கிய
நெற்றிஇலக்கணத் தால்அன்பனுக்கம்பொன்
நேரும்வகைபாராய் ஆரோக்கியமும் சேரும்வகைபாராய்
ரு சிலைக்கிணையாயிருபாலும் வளைந்தெழிலொத்துக் கறுப்பாய்விளங்கிய
புருவலக்ஷணத் தாலேபதிக்குப்
புகழைத்தரும்பாராய் விசயம் திகழத்தரும்பாராய் [முத்
சு க்ஷீரமதுபோல் வெளுத்துக்கடைக்கண் சிவந்துநடுக்கண் இமைமயிரும்க
காரும்நயன இலக்கணத்தால்அன்பர்க்
காகும்வகைபாராய் நலமேஉண் டாகும்வகைபாராய்
எ வாசவழித்துளை ஒத்துருண்டுதா மரையில்திலத்தின் மலர்போல் விளங்கிய
நாசிஇலக்கணத் தாலேகணவற்கு

நாடும்வகைபாராய் மங்களமே நீடும்வகைபாராய் (மும்பெற்ற
அ கூறும்வள்ளையைப் போலேவளைந்துமுன் தள்ளியும்தாழ்ந்தும் அழிகல
காதின் இலக்கணத் தால்அன்பற்குச்சுகம்
டட்டும்வகைபாராய் எக்காலமும்ஈட்டும்வகைபாராய் (லம்போலொத்த
வன்னம்படர்ந்தே உயர்ந்துமிருந்துக்கொண்டு வட்டமாய்க்கண்ணுடிமண்ட
கன்ன இலக்கணம் பர்த்தாகினைக்கது
கைவருரும்பாராய் என்றும்உவ கைதருரும்பாராய் (லங்கிய
ம கோதறும்கொவ்வைக் கனிபோல்திரண்டு குவிந்திருபாலும் எழில்பெற்றி
ஓதும்அதர இலக்கணத்தின்பலன்
ஒத்துவரும்பாராய் ராஜஸ்த்ரீயாய் பெற்றுவரும்பாராய் (ல்போலும்
கக ஏதுமிடைவெளி இல்லாமல்கீழ்மேல் இரண்டுவரியும் ஒழுங்கொத்துப்பா
நாலிருநாலுபல் லக்ஷணத்தால்வரும்
நன்மைதனைப்பாராய் பட்டஸ்த்ரியாம் தன்மைதனைப்பாராய்
கஉ பூவில்மிருதுவாய் மெலிந்துசிவந்தெழில் பூண்டுமனோகர மாகவிளங்கிய
நாவின் இலக்கணத் தாலேகணவற்கு
நண்ணும்வகைபாராய் புகழ்சேரப் பண்ணும்வகைபாராய்
கங சுபகரம்கொண் டுயர்ந்திரண்டங்குலம் சோபிதமாக வளைந்துவிளங்கிய
சிபுகலக்ஷணத் தாலேபதிககிசை
செலலும்வகைபாராய் அதின்குணம் சொல்லும்வகைபாராய்
கச அகல்நிலவொழு கும்மதிபோலவும் அல்லியந்தாமரை போலும்விளங்கிய
முகஇலக்கணத் தாலேகணவற்கு
மோகம்தரும்பாராய் சாம்பிராஜ்யவை போகம்தரும்பாராய் (ரைந்திட்ட
கரு குண்டலமாகத் திரண்டுநாலங்குலம் கொண்டிடையில்மூன்று ரேகைவ
கண்ட இலக்கணத் தால்அன்பற்குச்செயம்
காணும்வகைபாராய் நெடுந்தினம் பூணும்வகைபாராய்
கசு கோளறஎன்பு மயிர்நரம்பில்லாமல் கோமளமாகத் திரண்டுபணையொத்த
தோளின்இலக்கணம் அன்பனுக்குத்தம்
சூடும்வகைபாராய் மனோகரமீ நீடும்வகைபாராய் (றுத்திடும்
கஎ பெய்யும்எழில்கொண் டிருண்டுகணுக்கள் பிறங்கிடநீண்டடை வாகச்சி
கையின்இலக்கணத் தால்அன்பனுக்குக்கண்
காடசிதரும்பாராய் உலகர் சாக்ஷிதரும்பாராய்
கஅ பார்த்தவர்உள்ளம் கவர்ந்துசராசரப் பன்றிஉருண்டு மனோகரமாயெழில்
ஏற்றபுறங்கை நகத்தின்இலக்கணம்
யாதும்தரும்பாராய் சுபம்கொண்டெப் போதும்வரும்பாராய் (றகைத்
கக மலரின்மெலிந்தி டைவெளிஇல்லாமல் மத்தியம்உயர்ந்துவரை நகைத்
தலஇலக்கணத் தாலேசுபம்மிகச்
சாரும்வகைபாராய் கணவற்குச் சேரும்வகைபாராய்
உ௦ சீர்பெறும்அங்குலம் மூவாறகன்று செழிப்பாய்மிதந்து மயிர்நரம்பில்லா
மார்பின்இலக்கணத் தாலேபதிக்கு
மகிமைதரும்பாராய் மிகுந்த தகைமைதரும்பாராய் (கும்ப
உக மோதிப்பருத்துநே ரொத்திறுமாந்து முகிழ்த்துக்கடினமும் வட்டமுமா

யோதரலக்ஷணத் தாலேகணவனுக்
கொண்மைதரும்பாராய் அபீஷ்டத்தின் வண்மைதரும்பாராய்
உ௨ அண்பிம்ளறும்புபோல் ரோமவரிபெற் றயலில்மயிர்நரம் பன்றிமெலிந்தி
பண்டிஇலக்கணத் தாலேபிருஷ்டான்னம்
பருகவரும்பாராய் மேன்மேலும் பெருகவரும்பாராய் (லாத
உ௩ சோபிதம்கொண்டு பிரதக்ஷணமாகச் சுழித்துக்குழிந்து மயிர்முடிச்சில்
நாபிஇலக்கணத் தால்அழியாப்பொருள்
நற்றிவரும்பாராய் கணவனைச் சுற்றிவரும்பாராய் (ம்சேர்
உ௪ அத்திதன்மத்தகம் போலேஎழில்மிகுந தாமைமுதுகுபோ லேயும்படிவ
ஒத்தஙிதம்ப இலக்கணத்தால்சுபம்
உண்டென்பதும்பாராய் பதிக்கிது நன்றெனபதும்பாராய் (ஙகிய
உ௫ வாரணக்கைபோலும் வாழைமரம்போலும் மயிர்நரம்பற் றிணங் கிவிள
ஊருஇலக்கணத் தாலேபதிக்குத்
யோகம்தரும்பாராய் தேவேந்திரவை போகம்தரும்பாராய் (பெற்ற
உ௬ தங்குமயிர்நரம் பிணறிச்சிறுத்ததில் சற்றேஉருக்ஷிகொண் டொத்தழகு
செங்கைஇலக்கணம் படடஸதிரிஎன்பது
செப்பும்வகைபாராய் நூலோர்களும் ஒப்பும்வகைபாராய (ருமுழங
உ௭ கேளும்உள்ளென்பு மறைந்துசதைப்புற்றுக் கேசம்நரம்பற்று வட்டம்த
தாளின்இலக்கணத் தாலேபதிக்குத்
தழைக்கவரும் பாராய் நலங்கள்விழைக்கவரும்பாராய் (ம்புறங
உ௮ மேலும்நரம்பென் பகன் றுதிரண்டெழில் மேவியும்ஆமை முதுகொத்திடு
காலினஇலக்கணத் தாலேபதிக்குத்
கதிக்கவரும்பாராய் பெருமை மதிக்கவரும்பாராய் (ம்விரல்
உ௯ செங்கழுநீரிதழ போலும்நகம்பத்தும் திங்கட்பிளவொத்துயாநெதழிலு
தங்கும்நுனிக்கால் இலக்கணத்தால்பொருள
தந்துலவும்வாராய்கணவற்கு வநதுலவும்பாராய் (ந்தகம்
௩0 கோலம்புனைந்து சிவந்துமிருதுக்கொண்டு குற்றம்அகனறு சமமாத்தசை
காலின்இலக்கணத் தாலேவல்லாண்மை
கருதும்வகைபாராய் பதிக்குப் பொருதும்வகைபாராய் (ணமாப்பெற்ற
௩௧ மாபசும்பொன்போலும் மாந்தளிர்போலும்சி வந்துநிதம்வெயர் வற்றுஷ்
ரூபஇலக்கணத் தாலுத்தமசுகம்
நோக்கிவரும்பாராய்கணவற்குண்டாக்கிவரும்பாராய்
௩௨ வாசக்குவளை செம்பாதிரிதாமரை மலலிகைசம்பக மாமலர்போலவும்
வீசியகந்த இலககணத் தாலே
விளங்கவரும்பாராய் சௌபாக்கியம் துலங்கவரும்பாராய் (வும்பேசிய
௩௩ பொழிலில்மாங்குயில் போலவும்பைங்கிளி போலவும் வீணையைய போல
மொழிஇலக்கணத் தலேசௌபாக்கியம்
முழுதும்வரும்பாராய் சுபமெப பொழுதும்வரும்பாராய்

உக்ரகுமாரருக்கு காந்திமதியைக்கல்யாணம் செய்வித்தல்.

விருத்தம்.

தேர்ந்துகன்னி வடிவமெலாம் தெளிந்து தேவ

தேசிகன்சொற் கேட்டெவரும் மகிழ்ந்தார் ஐயன்
வாய்ந்திடும்உக் கிரகுரன் வையையாடி
மணக்கோலம் பூண்டுதிங்கட் செல்வன்போலப்
பூந்தவிசின் மீதிருக்கச் செய்து வந்து
புதுமணநீ ராடிஅலங் காரம் செய்து
காந்திமதி யைக்கொணர்ந்து வலப்பால் வைத்துக்
கலியாணம் நடத்தியது காணு வீரே.

மோகனம் சாப்பு.

பல்லவி.

கல்யாணத்தைச் செய்வித்தாரே யாரும் கண்டுவகைமிகுத்தாரே

அநுபல்லவி.

உல்லாசமாச்சோம சேகரன்கன்னியை
வல்லாருடன்உக்ர வர்மனுக்குத்திருக — கல்யாணம்

சரணங்கள்.

க பங்கயன்மாலுடனிந்த்ராதிதேவர் பரிந்துதவஞ்செய்முனிவோருடன்ஒத்து
அங்கமுடன்விர தாதிபுரிந்துபின் ஆகும்சமாவர்த்தனமும் நடப்பித்து
மங்கையுடன்சோம சேகரமன்னன் மனத்தில்சிவனும் உமையுமாப்பாவித்து
மங்கலநீரால் அடியைவிளக்கி மருமலர்மாலைசந் தனம்கொண்டர்ச்சித்து (து
பொங்குமதுபருக்கம்கொடுத்துபபெற்ற மங்கைகையைமருகன்கையிலேவைத்
தங்குசுபமுகூர்த் தங்கொண்டுயர்ந்தக்கிர
கங்குலவும்லக்கி னம்கூடும்வேளையில்
திங்கள்குலத்தை விளக்கிடவேவரும்
சேயனுக்கென்றன் குமாரத்தியைஅரும்
புங்கவர்காணக் கொடுத்தேன்எனப்பெரும்
பூமிபுகழ்ந்திடத் தானம்செய்யத்திருக் — கல்யாணம்

உ வன்புறும்சிங்கத்தின காலூசலைநது வயிரப்பலகை மணிவடமும்தொட்டு
தண்பஞ்சணைகளி ரைந்தனனத்தூவி தளித்ததிலேபைந் துகிலும் விரித்திட்டு
செம்பவளவாய்ஒளிருமலர்க்கண்சிறந்திடச்செய்தபொற்பாவைவிளக்கெட்டு
அம்பொற்கலங்கள் சமயனுக்காகஈ ரைம்பதணியணி யாக அடுக்கிட்டுச்
செம்பொற்காளாஞ்சி ஏழும்பொற்கவரிஎட
டும்பொற்கிண்ணம்பல வும்பலபொட்டிநூ
றென்பததனுட னும்பொன்னிழைஆயி
ரம்பட்டுப்பேழை நிரம்பமுந்நூறுடன்
கொம்பனைச்சேடியர் தாமைந்தெழுநூறு
கோடியிரண்டுசெம் பொன்னும்விழைவேறும்
திண்புவிமூன்று கிராமத்துடன்பேரும்
சீதனமாகக் கொடுத்திடஇவ்வாறு — கல்யாணம்

ரு வாத்தியகோஷம் கடல்போல்ஒலித்திட வானவர்மந்தாரமாரிஎங்குந்தூவ
(மூர்த்துதாவ
பூர்த்தியாம்மங்கல வேள்விச்செழுந்தீ பொலிந்துவலங்கொண் டெழுந்தே

காற்றிசையுநின்று தெய்வமடந்தையர் நாவிலினிக்கின்ற சோபனத்தைக்கூவ
(மேவ

பார்த்தவர்கண்களெல் லாம்பெற்றபாக்யம் பலித்ததென்றெங்கும் பகர்ந்துபுக
வாய்த்தஅருந்தவம் நோற்றவர்கைதொட்டு
வாழ்த்தியமங்கலம் சாற்றிக்கையோகை
கோத்தெரிசூழ்ந்தம்மி ஏற்றிப்பொரிசொரிக்
தாற்றிஅருந்ததி பார்த்திடச்செய்தெங்கும்
பூத்தபொன்மாரி வழங்கநலம்பெற்ற
பூசுரர் ஆனந்தம் கொள்ளமகிழ்ந்துற்ற
சாத்திரம்சொல்லும் கிரியைமுழுதுமுற்றச்
சந்திரவம்சம் தழைக்கும்படிக்கொத்த கல்யாணம்

உக்ரகுமாரன் பவனிவருதல்.

விருத்தம்.

குலம்பெருகும் உக்கிரவர் மனுக்கிவ் வாறு
கூர்ந்திரவி குலமன்னன் தவத்தில் தோன்றும்
நலம்பெருகும் காந்திமதி யைக்கல் யாணம்
நன்மறைநதன் ஒழுக்கமுறை நடத்திப் பின்னும்
சலம்பெருகும் உடுக்களும் வெண் மதியும் கோளும்
தவழ்ந்துசெல்ல ஓங்குமணி மாட வீதி
வலம்புரிந்து வரும்போ தனேக மின்னார்
வருகின்றார் பவனியைப்பார்த் தருகின் றாரே.

திபதை— நாதநாமக்கிரியை, சம்பை.

க தேவர்புகழும்மதுரை ஆவணத்தில்வருகும்உக்கிரச்
செழியன்தனைத்தேடிவந்தார்கள் சிலமாதர்
தாவும்கடும்கோடைதன்னில் பூஉலவும்ஓடைகண்ட
சாரங்கம்போலோடிவந்தார்கள் சிலமாதர்

உ நூலிடைவருந்திடக்கண் டோலமிடுவதுபோலே
நூபுரங்கள்புலம்பிடவந்தார்கள் சிலமாதர்
மேலும்அதின்பாரம்கழிப் பான்போலேஉடுக்கைகள்அ
விழ்ந்திடச்செய்தாரெனவந்தார்கள் சிலமாதர்

ங தாளொருங்கும்பாரம்கழிப் பான்போலேகவர்ந்தானென்று
தோள்வளைகள்நீங்கிடவந்தார்கள் சிலமாதர்
நீளும்மனப்பாரம்கழிப் பான்போலேநிறைகவர்ந்து
நீதிநெறிசெய்தனனஎன்றார்கள் சிலமாதர்

ச சேனைமன்னர்தழுவமத யானைமிசைபவனிவரச்
சிங்கஏறெனக்கண்டுரைத்தார்கள் சிலமாதர்
ஆனைமகள்தனைமணந்து வரும்குமரன்பவனிவரும்
அழகிதுக்கேசரியென்றுரைத்தார்கள் சிலமாதர்

———(*)———

உக்கிரகுமாரனுக்குவேல்வளைசெண்டு கொடுத்தபடலம்.

சுந்தரபாண்டியர் தன்குமாரருக்கு புத்திமதிசொல்லுதல்.

விருத்தம்.

பைந்தொடியார் உருகவலம் வந்தே இந்திரன்
பழிதவிர்த்த நிமலன்அடி பணிந்தே ஈன்ற
தந்தைதாய் அடிவணங்கி இருக்க அன்னம்
சாப்பிடத்தக் கோரைஎலலாம் புசிக்கச் செய்து
வந்தவர்க்கு வரிசைசெய்து விடையும் ஈந்து
வானவர்க்கும் விடைகொடுத்து விளங்கும் நாளில்
சுந்தரபாண் டியன்குமரன் முகத்தை நோக்கிச்
சொல்லவேண் டியதெடுத்துச் சொல்லு வானே.

மத்தியமாவதி—ஆதி.

பல்லவி.

மைந்தாஎந்தன்சொற்படிசெய்வாய் புத்திமிகுந்த மைந்தா

இந்திரன்கடல்மேரு இனிஉன்பகையாமுன்பு
சுந்தரேசர்அடியே துணைஎன்றெப்போதும்நம்பு மைந்தா

சரணங்கள்.

க தத்திஅலைகள்அண்டம் முட்ட எழும்பியிந்த
முத்திபுரத்தைச்சூழ்ந்து கிட்ட கொர்ச்சனைகொண்டு
கத்திவருகும்பெரும் கடல்போலிந்தப்பெருத்த
சத்தியினாலெதிர்ந்த தனையடக்குவாய்பெற்ற மைந்தா

உ அந்தரத்தவர்முடி தாழச் சேனையுடனே
இந்தநகரைவந்து சூழப் பொறாமைகொண்டு
சிந்தையிலேபகைமை செய்யவருதல்குறித்
திந்திரன்முடிசிதற இந்தவளைகொண்டெறி மைந்தா

ந மண்டலத்தில்உத்தண்டம்பூணும் முடிவிளங்க
அண்டர்உலகம்மட்டும் நீளும் கருவம்மிகக்
கொண்டவடமலையைக் கோபம்கொண்டெழுந்திந்தச்
செண்டினாலேயடித்துச் செகத்தில்புகழ்பொருந்த மைந்தா

இந்தவிதம் மொழிந்தயில்வேல் வளைசெண் டீந்தே
இதயம்மகிழ்ந் துக்கிரபாண் டியன்என் றியாரும்
அந்தமுடன் புகழ்ந்திடப்பல் லிய முழங்க
அரசளித்து முடிகவித்துச் சுமதி என்னும்
மந்திரிகற் றோர்களைப்பார்த் திமைகண் போலெம்
வள்ளலைக்காத் துறுவதுங்கள் கடனென் றோதி
மைந்தனுக்கும் அவர்உரைகேட் டொழுகி என்றும்
வாழ்கெனச்சுந் தரபாண்டியன் வாழ்த்தி னானே.

இதுவுமது.

சுந்தரபாண் டியன்மகனுக் கரசை ஈந்து
 சூழ்ந்தகணங் களுக்கும்பண் டுருவம் தோன்றத்
தந்தடா தகையுடன்பொற் கோயி லுக்குள்
 தான்புகுந்து மூர்த்திகரம் கொண்டான் இப்பால்
கந்தனைப்போல் உக்கிரபாண் டியன்வே தத்தில்
 காட்டியவா றறத்துடனிவ் வுலகம் காத்தான்
இத்தஆ டலைமொழிவோர் கேட்போர் மூன்றும்
 எய்தியபின் அரனுலகும் எய்து வாரே.

ஆக விருத்தம் ௮, கீர்த்தனை ௨, தரு ௬, ஆக ௰௬.

பனிரண்டாவது, உக்கிரகுமாரனுக்கு வேல்வளைசெண்டுகொடுத்தபடலம் முற்றும்.

———(*)———

௨

சிவமயம்.

பதின்மூன்றாவது,

கடல்சுவறவேல்விட்டபடலம்.

அவதாரிகை—விருத்தம்

பூண்டவேல் வளையும் செண்டும் பொருந்துமைந் தனுக்குத் தேவ
பாண்டியன் அருளிச் செய்த பாங்குமுன் உரைத்தேன் இப்பால்
ஆண்டவர் திருக்கும்உக்ரன் ஆழிமேல் கந்தன் போலே
நீண்டவேல் எடுத் தெறிந்து நீக்கிய தினிச்சொல் வேனே.

உக்ரகுமாரன்பரிமேதம்செய்வதுகண்டுஇந்திரன்ஆலோசித்தல்.

விருத்தம்.

உக்கிரபாண் டியன்தாதை மொழிந்த வாறிவ்
 வுலகநெறி செயதுவீற் றிருக்கும் நாளில்
தக்கவர்கள் புடைசூழ்ந்து போற்றச் செய்யும்
 தருமவேள் விகள்பலசெய் ததும்அல் லாமல்
மிக்கவரும் பரிமேதம் தொண்ணூற் றாறு
 விளங்கிடவே செய்துவரத் தெரிந்து நெஞ்சம்
திக்கெனவே இந்திரன்பொ றாமை பெற்றுச்
 சிந்தித்தான் மனக்கவலை முந்தித் தானே.

தசாபந்தி ஆதி.

பல்லவி.

இந்திரன்செய்ததைக் கேளும் சூழ்ச்சிசெய்தொரு
தந்திரம்செய்ததைக் கேளும்

அநுபல்லவி.

சுந்தரபாண்டியனுக்குக் மைந்தன்உக்கிரன்விளங்க
அந்தமுடன்செய்மகங்கள் சிந்தையில்பொறாதுபொங்க இந்திரன்

சரணங்கள்.

க மன்னியநாடுமென்மேலே செழிப்பம்கொண்டு பொன்உலகம் அதுபோலே
நன்னயம்பெற்றதால் மண்ணில் உன்னதவேள்விகள் நண்ணி
மன்னவன்செய் தானென்றெண்ணி தனதுளேயோசனைபண்ணி இந்திரன்

உ தனக்கிடர்வருகும்பினனேபுத்திகெட்டொருவனுக்கிடர்நினைப்பார்முன்னே
எனக்கவலைகொண்டுகோபித் தினிக்கரவுள்ளத்தில் மேவித்
தனித்தரங்க முடனதாவித் தொனிக்கும்வருணனைக்கூவி இந்திரன்

௩ தாழும்உலகேழும்கூடி அலலாயதும்மேல் ஏழுலோகங்களும்மூடித்
சூழும்உருவம் எடுத்தூகேளும்மகிமை தொடுத்து
வாழும்மதுரை அடுத்து வீழஅமர்செய்ய விடுத்து இந்திரன்

வருணன்மதுரையைவளைந்துகொள்ளல்.

இந்திரன்சிந் தித்துரைக்கக் கேட்டு வேலைக்
கிறைவனினி வருவதறி யாமல் தானே
அந்தவண்ணமேபுரிந்து வருகு வேனென்
றாலவாய் வளப்பதிமேல் எழுந்து பொங்கி
சிந்தையகம் கொண்டிடர்செய் திட நினைந்து
திண்ணமுடன் பேயகளும்கண் ணுறஙகும் போ
வந்தடர்ந்து குருட்டிருட்டு வேலை பார்த்து
வந்திட்டான் சுற்றிலும்வ ளைந்திட் டானே.

பந்துவராளி ஆதி.

பல்லவி.

உததிமன்னவன்கடு கடுத்தானே திருமதுரைநகரைவளைர் தடுத்தானே

அநுபல்லவி.

சதமகன்அனுமதி தன்னைப்பூண்டு கதிக்க
தனக்குவரும்கெடுதி தனைஅறியாமல் மிக்க உததி

சரணங்கள்.

கொந்தளிக்கும்அலைகள் அண்டகோளத்தின் பாலே
சொதித்தெழுந்தாழிநாளில் உலைக்கவந்தது போலே
இந்துமண்டலம்தொடும் கருமலைபோல்மென் மேலே
எழுந்துவின்னும்மண்ணும்பார்த் தருண்டிடஒருக் காலே உததி

வாளையேகத்தியாக ஆனமகேடயம் ஆக
மகரங்கள் ஆனையாக அலைகள்பரிகள் ஆக
நீளும்தோணிஇரத மாகத்தானேஅ னேக
நீடும்வழுதியின்மேல அமர்க்கெழுந்த வேக உததி

௯ வெண்மதிதன்னைராகு விழுங்கவந்தது போலும்
மேகக்கூள்ஏழும்மன்னை மூடவந்தது போலும்
வேழைகொண்டுவருதல் வேடுனதனைப் போலும்
ஓதுதற்கொக்கும்என்ன ஏங்கிவந்து மென்மேலும் உததி

விருத்தம்.

வருணன்இந்த விதம்மதுரா புரத்தின் மேற்கோர்
மலைபோலே வரும்போது பாதி ராவில்
இரசதஅம் பலநாதன் சித்த ரூபம்
எடுத்தெழுந்துக் கிரச்செழியன் கனவில் வந்தன்
புரம்அழிக்க வரும்ஆழி வேந்தன் ஓடப்
பொருந்திவேல் எறிந்துவெற்றி பெறுகென் றன்பு
புரிதல்இள நகைதோன்றக் கருணை வெள்ளம்
பொழிகின்றார் முன்னிருந்து மொழிகின் றாரே.

உக்ரபாண்டியன் கடல்சுவற வேல்எறிதல்.

இதுவுமது.

கருணைவள்ளல் ஓதும்வண்ணம் உக்கிர பாண்டியன்
கனவுதெரிந் தஞ்சலிசெய் தேத்தும் மாவும்
திருமணமும் பூண்டுவந் தெழுந் தமைச்சர்
சேரவெழுந் தலகிடந்த தென முழங்கி
வரும்உததிக் கெதிர்நிற்கும் போதி ராவில்
வந்துரைத்த சித்தர்அந்த க்ஷணமே நாடி
தருணமிது வேலைஎடுத் தெறிஎன் றோதத்
தாகஇன்ன் கனைக்கால்நீர் ஆக்கி ஞனே.

கல்யாணி சாபபு.

பல்லவி.

வடிவேலைஎறிந்தானே வருணன்மன வலிகெட்டுமுறிந்தானே

அநுபல்லவி.

அடல்தக்தெழுந்துசீறும் ஆழிநடுங்க உள்ளத்
திடமுடனேஉக்கிரச் செழியன்விசயங் கொள்ள வடி

சரணங்கள்.

௧ கழுதுகித்திரைசெய்யும் இருட்டிடையிலே வல்ல
கடதுருப்பெற்றுவந்த சத்துருவினை வெல்ல
பொழுதுபோக்குவதேனென் றன்புபெருகி நல்ல
பூமிக்கழிவுதீர்ப்பாய் என்றுசித்தரும் சொல்ல வடி

௨ செஞ்சொல்மகம்தப்ப தன்றிஉலக ழிக்கச்
செய்தஇந்திரனுக்காக வந்தவலிஒ ழிக்க
வஞ்சகருக்குநன்றி செய்தபெயர்வி ழிக்க
வலிஇழப்பதென்றைக்கும் உள்ளதெனஉப ழிக்க வடி

௩ சுற்றிவளையும்பெரும் நீரைமுனையால் சோகச்
சுறுசுறென்றுறிஞ்சிடச் சுருங்கிவடிந்து போக
வெற்றிஇழந்தடியில் வணங்கிவருவ தாக
வேலைவறண்டுகேளைக் காலின்மடடன வாக வடி.

உக்ரகுமாரனுக்குச் சிவபிரான்தமதுதிருஉருவம்காட்டிமறைதல்.

இத்திறம்வே லாற்புணரி சுவற விட்ட
இறைவழுதி பக்கத்தில் மண்ணில் நின்ற
சித்தர்வா னிடைஎழுந்து புயங்கள் நான்கும்
திரிவிழியும் மதிஅணியும் சடையும் நீலம்
வைத்தகழுத் துடன்உமையோ டிடவ மீதில்
வாய்த்திடப்பார்த் தஞ்சலிசெய் தேத்திப் பின்னே
நத்திரில மிசைநடக்க விசும்பா றாக
நாடினர் அபலத்தில் கூடினாரே.

பூரிகல்யாணி, சாப்பு

௧ வெற்றிவிடைமீதில் நாடினர் சேல் விழிமின்னுளுடன் கூடினர்
சுற்றிலும்வேதங்கள் பாடினர் மலர் தூவிஅமரர்கொண் டாடினர்
௨ துர்தபிஐந்தும்கொண் டடிக்க மேகம் சோர்ந்துபயந்தோட்டம் பிடிக்க
தந்திரகீதங்கள் படிக்க திசை தனனில்அரம்பையர் நடிக்க
௩ கோரும்சிகரங்கள் துலங்க ஒளி நீளும்பொற்கோயிற்குள் விளங்கப்
பாரிற்பணிந்தெழுந் திலங்க உக்கிர பாண்டியராசன்வந் திணங்க
௪ கோயிற்குள்ளேசென் றுபணிந்தான் விடை கொண்டன்புபூரிக்கநடந்தான்
தூயமங்கலம்கண் டுவந்தான் மாடம் துன்னியமாளிகை புகுந்தான்

திருமாட மாளிகையில் புகுந்த உக்கிரச்
செழியன்மது ராபுரிக்கும் கடற்கும் தப்பன்
வருநிலமும் விளைவயல்கள் முதற்கொண் டியாவும்
மாறிகடிக் கின்றவர்க்கே மான்யமாச் செய்
தொருமையுடன் உலகம்காத் திருந்தா னிஃதை
உரைப்பவர்கேட் பவர்ஆபத் திடுக்கண் நீங்கி
இருதயத்தில் நினைத்ததங்கைக் கனியைப் போலே
எய்திஇருந் தரனுலகில் இருப்பர் தாமே.

ஆக விருத்தம் (எ) கீர்த்தனை (௩) தரு (௧) ஆக (௧௧).

பதின்மூன்றாவது கடல்சுவற வேல்விட்டபடலம் முற்றும்.

ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசர்திருவடிகளேதுணை.

[illegible]

இந்திர[illegible]கொத்தப்பட[illegible]
[illegible]ம்

உக்கிரச செழியன் வேலா[illegible] உவரியைச் செய்வித்துக் கூடல
முக்கண்ண அருளா[illegible]கரத்த[illegible]ளிப்பால
மிக்கபொன நகரை ஆளும்[illegible]வர்த்த[illegible] ம[illegible]ந்தச்
சக்கர வளையால் வென்று [illegible]கை இனிப் புகறுவேனே

அகத்திய முனிவர் மழை இல்லாமைக்கு காரணம் சொல்லுதல்.

விருத்தம்

கலமிருந்த உக்கிரபாண டியனபா ராளும்
நாளையிலே கிரகபபிழையால மழை இலலாமல
நிலமிசையைங் கூழும் அறறுப பசும்புல தீயநது
நெருக்கமுறறு முநநாடும் வாநதக் கணடு
குலம்வளரும் மும்முடிமா னவரும் கூடிக்
குறுமுனியைச சாாநதுரைககத் தோநது கோளிண
பலனறிநதிப போதுமழை இலைஅம் மூலப
பாஙகறிமின எனஅவர்ககுப பகருவாரே

மத்தியமாவதி ஆதி

பலலவி

கேளும்வேநதர்களே மழைஇல்லாமை கேளும்வேநதர்களே

அநுபலலவி

கேளும்உலகம்எங்கும் வாழும்அரசியலைக
கீர்த்திபெருகச்செய்யும் பார்த்திபர்களேசொல்லக் கேளும்

சரணங்கள்.

சூரியனுடனேஅங் காரகனமுன்நடக்கச்
சுக்கிரன்பினதொடர்ந்து வககிரம்கொணடதாலே கேளும்
புங்கமிகும்பலத ரங்கக்கடலைஉடை
பூண்டஉலகில்பனனீ ராணடுவரைக்கும்கண்டு கேளும்
பின்னறம் பொருள்இன்பம் இனைவளாக்கும்மழை
பெய்யும்படிக்கருளிச செய்யுமவனாநாடிக் கேளும்

அகத்தியர் சோமவாரவிரதவிதிகூறுதல்.

விருத்தம்

கும்பமுனி இவைஉரைக்கக் கேட்[illegible]
கொறறவரும் யாங்களசெய்யும் வ[illegible]
[illegible]னபதற்குத் தக்க[illegible]
[illegible]பின் விரதசெ[illegible]ளி[illegible]

[illegible] அருளைப் பெற்றே
[illegible] சென்றே
[illegible] ஆராய்ந்து
[illegible].

[illegible]

பல்லவி.

இந்[illegible] தன் செங்கோல்
எந்[illegible] கேளும்

அநுபல்லவி.

மந்த்ரம்காசியாதிஸ்த லங்கள்நாடிச்செய்வதிலும்
மதுரையில்செயில்கோடி அதிகம்அதென்னவெனில்
மால்அயன்அமரர் மூலமுனிவரும் வந்துதேடரிய சுந்தரர்க்குரிய இந்

சரணங்கள்.

க மங்களம் மிகும்விருச்சி கந்தனுசில் லாதல்லை திலோந்து அமா (ஆ[illegible]
வாசைவரு மாசம்தன்னி மற்றதில்முன் பக்ஷமாதி வாரத்தில் இரவா[illegible]
அங்கம்நிலத் தில்ஆயின்றெ மூந்துமைபாகன் அடியைநினைந்து நீர் (யஅ[illegible]
ஆடும்முறை செய்துகாமக் குரோதமுத லாகஒழித் தம்பொனவாரி[illegible]
செங்கையில்ப வித்திரம்பு னைந்துசங்கற்பம்மொழிந்து
தீர்த்தமெல்லாம் ஆடும்பலன் வாய்த்திடுமெ னப்பணிந்து
செய்யவிதிமுறை தூய்யநீறணிந்து
சீலமுடன்அக்ஷ மாலையும் அணிந்து இந்

உ பத்தியுடன் மல்லிகைமந்தாரம்சாதியாதிமலர்கொய்துதந்த(க்கம்[illegible]
பாணிபூசை செய்துபின்பு துவாதசாந்த மூர்த்திதன்னை பரமஞாந[illegible]
மிருத்திகைமு தல்சிவம்வ ரைக்கும்லிங்க மூர்த்தியைவைத் துய்து [illegible]
விதிமுறையா லேந்தமுதம் கவ்வியம் கனிதேன்கந்தம் விளைசலத்தா[illegible] மெய்
சுத்தவெள்ளைப் பட்டணிந்து சந்தனம்சாந்துகர்ப்பூரம் [குளிர[illegible]
தூயமலர் ஆரமுத லாயபணி பூட்டி மலர்
துங்கஅடிமுதல் அங்கபூசை முற்றும்
தொடுத்துளத்திலஅன்பை அடுத்துசசெய்துஇ.ன்னம் இந்

ந சேல்விழி உமையையவ்வா நீசனைஐந்தெ ழுத்தமையக் கூட்டிப்பூசை(ட்டி
செய்துபாய சர்திகருப் பூரதாம்பூ லமுதலா சேரவே நிவேதனம்செய்து
ஆவலுடன் தூபதீபா ராதனை வகைவகையாக் கோட்டிக்கண் (ட்டி
ஆடிமுத லானஉப சாரம்பதி னாறுடனே அருள்சுரக்கும் ஐயன்முன்பு கா
பூவிதழ் சுருங்கல்மடங் கல்மயிர்சி க்குண்டல வாடல்
பூச்சிகள் புழுக்கடிகள் நீக்கி நல்லதாய் எடுத்த
[illegible]வில்வம் கங்கைஅணி பெயர்
[illegible] செய்[illegible] இந்

ச [illegible]க்கனந்தமாகும்[illegible]
நீலவிஷத்தை[illegible]

என்றெழுத்[illegible]மை யங்கள் அடியில் வணங்கித்தோறும் படிக் (ண்டப்பூணும்
கேத்தியேவ ல்[illegible]ரித்து வன்மனம்க ளையவுள்ளத் தொண்ணியவ ரங்கள்வே
மன்றமணப் பேறுமக்கட் பேறுதெய்வ மாதரின்பம்
வாக்கறிவு கல்விபகை நீக்கல்முத லாக இன்னம்
மண்ணரசியலும் கண்ணிவரும் பின்னும்
மனத்திலேஉவந்து நினைத்ததுவும் தரும் இந்து

(ரு) கருதிஅனுஷ்டிப்பதற்குப் பாதைஐந்து விதமாகத் திருந்தல் உச்சிக்
காலமருந்தலிரவருந்தலிரண்டுமெகற்றல்கண்ணுறக்கங்கொண்டிடாமலிருந்தல்
ஒருமையுடனேசிவார்ச்சனைகள்சாமம் நாலும்செய்து வருந்தல் இதில்
ஒன்றினுக்கொன் றேஅதிகமாகுமென்ற திந்நோற்ப துண்மையாதி னைசை[illegible]
வருடமொன்றி ரண்டுமூன்று பன்னிரண்டு வருடமுள்ள (லில்பொருந்தல்
வாழும்நாள் அளவிவற்றுள்த் தாழுமைஇல் லாதகத்தில்
வாக்குமெய்யறிவோ டேக்கமதுகொ ண்டு
மண்டலத்தில்நீல கண்டனேதெய்வ மென் றிந்து

சோமவாரவிரதோத்யாபனவிதிசொல்லுதல்.

விருத்தம்.

இந்துவா ரத்தில்நோற்ப திவ்வகை யாகச்சொன்ன
ஐந்தினி லொன்றினுக்கொன்ற திகமா மிவகைநோற்று
வந்ததிற் செய்யத்தக்க வண்ணமெய் யளவைஎண்ணி
மூந்திஉத் யாபனம்செய் முறைகும்ப முனிசொல்வாரே.

கேதாரகௌளை, ஆதி.

பல்லவி.

சோமவாரவிர தோத்யாபன விதி சொல்லக்கேளும் மன்னவோரே

அநுபல்லவி.

மாமண்டபம்குண்டமும் வகுத்து நாரிபாகனை
வளம்சிறந் துயிர்வெள்ளி களஞ்சிமுப் பதாற்செய்து சோம
சரணங்கள். (ற்றி

க காலைதொடுத்து நித்திய கன்மம்செய் துபுராணைக்கதைகள் செவிக்கமுதாஏ
மாலைதொடுத்துச சாமம் தோறும் உமாபதியைமண்டலத் திலேபூசை ஆற்றி
மூலமந்திரம்நூற்றெட்டும் மொழிந தாகுதிமுறையாய்ஓமத்தீயில்நெய்ஊற்றி
சாலும்வில் வதளமோ ராயிரம் நாமம் சொல்லிசாமம்சாமம்தோறும் சாத்தி
மேலும்பஞ்சாக்ஷர விதிமுறையால் அடுத்து
விளங்கும்ஐந்தெழுத்துரு வனுக்கருக்கியம் விடுத்து
ஏலுமூலமந்திரம் முதல்மந்திரம் தொடுத்து
ஈசன் வேள்விமுடிவில் பூர்ணாகுதி கொடுத்து சோம

உ போதுவிடிந்து நித்தியகருமம்செய்து [illegible]
மீது வெள்ளிநிறைவுந்தினிய கறிகாய்முதல்வேண்டின [illegible]
ஆதரும்பாலில்பதி மூ[illegible]றைத்தல் அரிசிமேல்[illegible] [illegible]

ஓதும் சிவனடிக்கன் பணிந்து சிவார்ச்சனைக் குரிய வேதியர் [illegible]
காதுகைக கணிஆடை முதல்அலங் காரம் பண்ணி
கந்தமலர் அர்ச்சனை செய்தரளுக எண்ணி
பாதரக்ஷை விசிறி குடைதெக்ஷிணையும் நண்ணிப்
பாங்குடனேபலவும் தானம்செய் திந்த மண்ணில் சோம

ங. ஆசாரியனை மனைவியுடன் ஆசனத்திருத்தி ஆடைஆபரணங்கள் பூட்டி
வாசமாமலர்கொண் டருச்சனை பண்ணிஉமா வல்லவராகவேபாராட்டி (த்
பூசை புரிந்தப்பிரதி மையுடன் செம்பொன்பதாதி பூமி முதலனைத்தும்கூட்டி
தேசுலவும் கொம்பணி மாலைவஸ்திரம் பூண்டதேனுமுதல்தானம்செய் திட்டி
பேசும் அடியார் சுற்றமுடனே அமு தருந்தப்
பெருகும் இவ்விரதமுன்மாலயனும் திருந்த
வாசவன்முதலக்கணத்தோரும்செய்தார்வருந்த
மனிதரும் செய்துபோக வீடடைந் தார்பொருந்த சோம

விருத்தம்.

இந்துவாரத்திலுத்தி யாபனம் செய்
திந்தவிதம் நோற்பவர் வெம் பகையும் பிணிணும்
சிந்தை வருத்தமும் தீர்நதாயிரம் சென்மத்தில்
செய்வினையும் தீர்ந்தெடுத்த சென்மந்தன்னில்
முந்துசிவ கதிஅடைவார் இதனைக் கேட்போர்
மொழிந்தவர்தம் மனைவிமக்க ளுடனும்வாழ்ந்து
இந்திரனே மிரண்டுபட்டம் வரைதுறக்கத்
திருப்பரென் றேஅறவோ ருரைப்பர்தாமே.

சேரசோழபாண்டியர்சுவர்க்கலோகம்செல்லுதல்.

இதுவுமது.

கும்பமுனி இந்தவண்ணம் உரைக்க மூன்று
கொற்றவரும் விடைவாங்கி ஆலவாய் வந்
தம்பொன்அம் புயவாவி நன்னீ ராடி
அங்கயற்கண் மணவாளன் அடியில்ப் போற்றித்
தென்புமிகுந் திந்துவாரத்தில் நோற்றுச்
செயும்பூசைத் தொழில்முடித்து வரம்பெற் றேகிச்
செம்பொன்உல கில்ச்செலஆ லோசித் துள்ளம்
தேறினார் விண்வழிக்கொண் டேறினாரே.

திபதை— ரீதிகவுளை, ஆதி.

க இன்னம் முனிவர்களே கேளும் கடந்தவர லாறு மூனறு
மன்னவரும் இந்திரன் உலகைக் குறித்தந்தரத் தாறு
உ வருவத றிந்தமரர் கோன்அவர் களுக்குவெவ் வேறு
தவிசளிக் குத்தாழமூன் றுசனம் செய்துவைத்தான் மாறு
ங. [illegible] முடி மன்னவரும் துறக்க [illegible] மீது புகுந்
இந்திரன் தரும்ஆசனத் திருமன்ன ரும் [illegible] போது

௪ மைக்கடலைச் சுவறச்செய்து விசயமாலை சூடி நின்ற
உக்கிரபாண் டியன்இந்திர னுடனேசிங் காசனத்தில் கூடி

௫ இருந்திடக் கண்டுளம்பொ றாமைபூண் டொருபத்து நூற்றுக் கண்ணன்
அருகிலி ருக்கும்சோழ னசேரனிருவரையும் பார்த்து

௬ இக்குலந் தியம்பு மென்றுபசாரமுடன் கேட்க இப்போ
தெங்கள் நாட்டில்மழைஇல லாமல அடைந்திட்டோமென் றேர்க்க

௭ இந்திரன் மகிழ்ந்திருவர் நாடுமேட்டும் மழைஉண் டாகத் தந்து
மூர்த்தி வரிசைசெய்து விடைஅளித் தபின்னவ ரேக

௮ பின்னும் இந்திரன்பாண்டி மன்னனைபெற் றிருக்கும்பிர தாப்பும் உயர்
தன்னரி யாசனத்திற் சரியாயிருக்கும் இறு மாப்பும்

௯ மேலும் தனக்குமழை வேண்டா திருக்கும் வீறும் தூக்கி சிங்கம்
போலிருக்க கக்கண்டொன்றும் புரியாமலே இந்திரன் நோக்கி

௰ அழகு பெறவரிசை செய்வது போலேஒரு ஆரம் அது
பழகி அளவிறந்தோர் தாங்கி வலிஇழக்கும் பாரம்

௧௧ நண்ணி அதைஅளிக்கப் புஷ்பஹாரம்போல் வாங்கிக் கொண்டு நயந்
தண்ணி மகன்தனது கழுத்தில அணிந்திருக்கக் கண்டு

௧௨ ஈங்கின்று முதல்நிம்ப மாலைஅணிந்திலகும் , தென்று ஆரம்
தாங்கும் பாண்டியனென் றுன்னைத் தரணிபுகழுமெனச்சொன்னான்

சந்தவிருத்தம்.

வாசவ னிப்படி யோதவும் உக்ரகு மாரனு ளத்தது மருவாமல்
மாமது ரைத்தலம் மேவி யிருக்கமு மாரி செழித்திட இருநாடும்
மீசுர முற்றது போலே தனக்குள மேதினி முற்றுமெ ழிலிவாரா
மேல்மல யத்தினி லேவிளை வுற்றிடு வீர வரிப்புலி முதலாக
நாசமுறச் செயும் வேளையில் அத்தலை நாலு முகிற்கள தனில்மேய
தாடி அவற்றினை ஓடி வளைத்துற மாவினை விடுத்துயர் களிறேபோல்
வீசி மறித்துட னேசிறை யிட்டதை வேக மதிற்சில ருரையாலே
வேய் விறலிற்கனல் பாயுத லொபமென மேல்உலகுக்கிறை வெகுள்வானே.

உக்ரபாண்டியனுக்கும்இந்திரனுக்கும்உயுத்தம்.

விருத்தம்.

கடல்சுவறச் செய்ததுவும் ஆரந் தாங்கும்
களிப்பும்முகி லைத்தளைபூட் டிடும் செருக்கும்
படியிலொரு மனிதனுக்கித் திறம்யா தென்று
படையுடனிந் திரனெழுந்து கடலைச் சூழ்ந்
தடல்புரிய வந்ததுகேட் டுக்ரபாண் டியன்
ஆங்காரத் துடன்தனது சேனை சூழக்
கடுகிமத யானையின்மே லெழுந்து வந்து
தடுத்திட்டான சண்டைசெய்யத் தொடுத்திட்டானே.

அசாவேரி—சாப்பு.

பல்லவி.

தேவராஜனும் பாண்டியராஜனும் செய்தாரே சண்டை

அநுபல்லவி.

தேவ் சேனையுடனே திரண்டெதிர்த் தொருக் காலே
காவலன் சேனையும் கைகலந்ததுமென் மேலே

சரணங்கள்.

அடுத்துவின்னவர் கூடி ஆயுதம்பல
எடுத்தெறிந்தனர் கோடி வில்லிலேஅம்பை
தொடுத்தாழி மழைபோலே தென்னன்படைமேல்
விடுத்தாரே எதி ராலே அதனைக்கண்டு
தடுத்துப்பாண்டியன் சேனை ஈட்டினார் பல
சாபம்வளைத்துக்கணை பூட்டினார் பட்டுத்
துடித்துவானவர்சேனை களைக்க மார்பும்
தோளும்பலபாலவாத் துளைக்க மண்ணில
படுத்துக்கைகால்தலை தோளறுந்துயிர மாயப்
பரந்திரத்தவெள்ளம் புதிஅடைந்து பாயப்
கழுத்துக்கூழிபருந்து கழுகுகள் செறிந்திடக்
கடுவன்முன்எலிபோல் இந்திரன்சேனை முறிந்திட்
களத்திலபலபல கவந்தம் ஆடவும்
காளிக்கூட்டங்கள் தாளம் போடவும்
வளைத்துப்பேயினம்சூழ்ந்து களிக்கவும்
வாரிப்பிணமலை யாகக் குவிக்கவும்

பொங்குதன்படை யிறக்கக் கண்டுவாசவன்
கண்களில்பொறி பறக்க தூயபஞ்சின்முன்
அங்கியதெனப் பகைக்க வெகுண்டுதெய்வத்
துங்கப்படையால் வதைக்க நினைத்துடனே
செங்கதிர்ப் படையைவிட் டேற்றினான் தென்னன்
திங்கட் படைவிட்டதை மாற்றினான் இந்திரன்
சிங்கப் படைஎடுத்துத் தாக்கினான் சரபத்
தேவன் படைவிட்டதை நீக்கினான் பின்னும்
வலகையுடனே இந்திரன் மோகனாஸ்திரம்போட
வழுதி வெகுண்டு ஞானாஸ்திரம்தொடுத் ததைச்ச
அங்கத றிந்திந்திரன் போரில் மதிமயங்கி
அழரினைத் திளைப்புக்கொண் டிருந்து நிலைகலங்கி
ஆழும்துயரமோ டுள்ளம் வெதும்பவே
ஆயிரம்கண்ணும் நீர் ததும்பவே
தேனும்இந்திரன தெறிபட் டோடவும்
கீர்த்திபாண்டியன் பங்கில் கூடவும்

பலமிகுந் திடம்வீரன் திருமதுரைத்
தலமதில் அதிகாரன் புகழ்பெருகி
நிலமிசை உயர்சூரன் விளங்கும்சந்திர
குலம்வளரும் கம்பீரன் தன்னுடன்மி னும்
வலனைவென்றவனுரம் பேசினன் நேரே
வச்சிரமெடுத்தவன்மேல் வீசினன் அதின்
வலிகொண்டெதிர்வர்க்கண் டிழிந்தான்தென்னன்
வீளை ஆயுதம்சுழற்றி எறிந்தான் அது
தலையைவிடுத்துமணித் தலைப்பாகுடனேபோகச்
சாற்றும்முனிவர்முன்னே மொழிந்தது நிசமாக
சொலிகொண்டுவரும்வச்சிரம் தனைஅவித்திடக் குன்னித்
துயரத்துடனேநின்ற பாகசாசனன் சென்னி
துலங்கும்மணிமுடி தகர்த்துச்சிதைத்திடச்
சூழ்ந்தபேர்பர தவித்துப்பதைத்திடக்
கலங்கிஇந்திரன் ஓட்டம் எடுக்கவும்
கரைந்துவானவ ருலகில்அடுக்கவும் தேவ

விருத்தம்.

இந்திரன்சண் டைக்காற்று தோடி விண்சென்
றிருந்துவிரு த்திரனிலுமா வலிய தென்னன்
சிந்தைவெருண் டெறிந்தவளை தனது சென்னி
சிதையாமல் மணிமுடிமட் டோடும் போதச்
சுந்தரநா தன்கருணை தானென் றெண்ணித்
தொன்மதுரை நாட்டில்மழை பொழியச் செய்வோம்
எந்தன்மே கங்களைவிட் டிடவென் றெலை
எழுதினன் வழுதிபெயர்க் கெழுதினனே.

இதுவுமது.

முடங்கல்வனை ந்தனுப்பிடத்து துவர்போய்த் தென்னன்
முன்புவைக்க அதின்வரலா றறிந் ததற்குத்
தடங்கல்சொல த்தெரிந்தொருவே ளாளனென்றும்
சதமகனுக் கிஷ்டம்அவன்பிணையினலே
அடங்கியகார் களைவிடுத்தான் பகடு போரிலே
அவைமீண்டிந் திரன்விடையால் திங்கள் தோறும்
குடமதனல் சொரிவதுபோ லெழும்மாரி
சூழ்ந்துபெய்ய யாவர்களும் தேர்கதிட்டாரே.

விருத்தம்.

மடுக்களும் குளமுமாறும் வாவியும் புனலாற் பூரித்
தெடுத்தசெந் நெலும்கரும்பும் ஈண்டப்பா ண்டியநா ட்டைப்
படிப்பவர்கேட் போர்தன்பம் புறக்தறம் முதல்நாலும் சேர்ந்
தடுத்து வாழ்ந திருப்பர் பின்னே அரனுலகதி ற்செல்வாரே.

ஆக விருத்தம்(ம) சந்தவிருத்தம்(க) தரு(க) கீர்த்தனை(ச) ஆக (கசு). முற்றும்

௨

பதினைந்தாவது.

மேருவைச்செண்டாலடித்தபடலம்.

அவதாரிகை—விருத்தம்.

பாவலர் துதிக்கும் கூடற் பரமனார் அருளால் உக்ரன்
தேவர்கோன் மகுடம்சிந்தச் செய்தவா றுரைத்தே னிப்பால்
மாவலம் பெற்றமன்னன் வடமலை நாடிச் செம்பொன்
ஆவல்பூண் டதனைச் செண்டால் அடித்தவா றினிச்சொல்வேனே.

ஆநந்தபைரவி—திரிபுடை.

பல்லவி.

கேளும் முனிவரே கேளும் இவகதை கேளும் முனிவரே கேளும்

அநுபல்லவி.

வாழுமுக்ரபாண்டியனென்னுமன்னன்மலயமுனிவர்தமக்குமுன்னமேசொன்ன
சூழும்தூய சோமவாரவிரதம் துலக்குமன்புட னேபுரிந்து வருகக் கேளும்

சரணங்கள்.

௧ மாதரசா யவளர் காந்தி மதிவயிற்றினில் விஜயம்பெற் றேந்தி
ஓதியமகன் பிறக்க மென்மேலே உம்பர்கோன் ஜயர் தனைப்பெற்றாற்போலே ஆ
ஜாதகாணம்செய்துபின்நாமதேயம் தழைக்கும்வீரபாண்டியனெனச்சூட்டினன்
வேதமுதலாப் பலகலையுணர்ந்துவில் வித்தைமுதற்கற்றதனைக்கண்டுவகையில்

௨ நாட்டினிலே வருமழைதேய்ந்து நதிமுதற்பல குளங்களும் காய்ந்து
வாட்டிடப்பல உயிர்களும்மெலிய மன்னன்பொருட்கு வகைஇன்றிநலிய ஆ
காட்டவும்பிரம கற்பமளவும்எல்லை கண்டறிந்தவர் முன்புமன்னவன்வெல்லக்
கேட்டிராவியைப் பார்த்துக்கோ ளிருப்பதால் இடையாதொருவ ருஷம்மழை
[என்றுசொல்லக்—கேளும்

௩ மக்கள்படும் துயர்த்தைக் கண்டு வருந்திடும்தாய் போல்மன்னன் சென்று
முக்கண்ணர்முன்பிருகணீர்பொழிய முனைந்துலகமெலிவதனைமொழிய (மித்திட
அக்காலத்தைக் குறித்தன்புக் கெளியவன் அன்பிலாதவ ரெனமோனம் தொ
மிக்காம்துயராயெ கடலிலே வீழ்ந்திரவில்தன இருக்கைவந்தடுத்திடக்—கேளு

௪ மன்னுமுயிரைப் பசிப்பிணி வருந்த ரட்சனந்தனைக் கொள்ளைகொண்டிருந்து
உள்ளமதிலா லோசனை பண்ணி உழந்துவிலக்கொ ணுக்குறை நண்ணி ஆ
பள்ளிஅறையைத் தள்ளியே தனித்தொரு பாரிடமாக நித்திரை செய்கையில்
வெள்ளியம்பலத்துடையவரேசித்தவேஷம்பூண்டவன்கனவில்வந்துநித்திடக்—

விருத்தம்.

கனவில்வந்த சித்தரிரா சனைப்பார்த் திந்நாள்
காலமழை பெய்வதரி ததனை வேண்டி
மனம்வருந்த வேண்டாம்பொன் மலைக்குச் சென்றம்
மலைச்செருக்க டங்கிடவுன் செண்டால் தாக்கி
கனநிதிசேர் தொருகுகையும் மலையில் உண்டு
காய்ந்துனதாக் கினைசெய்துபொன் எடுத்தவ் வாயை
முனமகற்றும் வாறடைத்துன் குறிவைத்துப் பின்
மூடென்றார் பெரும்புகழைத் தேடென்றாரே.

உக்கிரபாண்டியன் மேருமலைக்குச் செல்லுதல்

விருத்தம்.

சித்தரித்த வாறுமொழிந் தகன்றார் தூக்கந்
தெளிந்து விழித் தெழுந்திரவி உதிக்கு முன்னே
நித்தியகர் மங்களைசெய் தங்கயற் கண்
ணேசன்மல ரடிவணங்கி வலமாய் வந்து.
மெத்தவெற்றி தரும்சேனை கடல்போற் சூழ.
மேகமண்ட லம்தொடும்கீழ் வாசல்த் தாண்டி.
அத்திசைநோ க்கிச்செழியன் தேரின்மேற் கொண
டடர்ந்திட்டான் வீரமுடன் நடந்திட்டானே.

சுருட்டி—ஆதி

பல்லவி.

நடந்தா னுக்கிரபாண்டியன் படர்ந்தபொன் மலையில்வைப்
படர்ந்தெடுத்துக் கொண்டு வந்தானே

அநுபல்லவி.

அடர்ந்தபேரிகை முதற்கொண்டடிக்க அண்டகடாகங்கள் வெடிபட
ஆன்சஅதிர ஓசைமுழங்கிர அரசர்களும்முன் கண்டு வரிசைதரும்பொன்கொண்டு [நடந்தான்

சரணங்கள்.

சககரவாளக் குடைமுதற்பல சகலவிருதும் நீடத் தூய்ய
சாமரைபல சுழற்றிடவுமெச் சரிக்கைபட்டுக்கள்நாட நேம
முக்கியஅந்தணர் ஆசீர்வசனம் மொழிந்தக்ஷதைகள்போட செய்ய
முத்தமிழ்க்கவி வாணர்கள்கவி மொழிந்தவரவர் பாடக் கரு
மைக்கடலினும் மலையினும் நிலம்போற்கதி விளங்கச் செல்லும்
வயப்பரிகட்டும் தேரணி அணியாகவே நெருங்கப் புலி
குக்கிழிய வாம்பரித்தேரை கூசெலுத்துமுன் னிணங்கத் தனுக்
கொடியும்வெம்புலிக்கொடியும்சூழ்கயல்கொடிமிகத்துலங்கப் பெருகும்
தெற்குக்கடலுத் தரத்தைநோக்கிச் சென்றெழுந்தது போலத்தாக்கி
மிக்கப்பரைகொண்டறையத் திக்குத்திசையும் மறைய
தக்கபடையும் நிறைய மொய்க்தப்புகழ்வந் துறைய நடந்தான

நத்திப்பாண்டிய நாடுகடந்து சோழநாடு கடந்து. தண்ட
காரண்யந்தெலுங்க நாடுகன்னட நாடுநாடு கடந்து பிர
சித்தமாளவ தேசம்விராட தேசம்சென்று கடந்து. மத்திய
தேசங்கடந்து கங்கைவளரும் காசிதேசம் கடந்து கடந்
தெத்திசைபடிப்ப மலையிடையல யோசனை கடந்து சிங்கம்
யாளிவிளங்கு மனிதரண்டோண் ணுவிடம் கடந்து மக
றற்றதாகவைந் நூற்றியிரண்டு யோசனை கடந்து பின்
இருக்குமலையும் பொழிலும்செறிகு மரிகண்டம் கடந்து இன்னம்
மற்றதுபோலெண் மடங்குகடந்து வரைந்தபாரத கண்டம்கடந்து
சுற்றிக்கரியும் திரள தத்திப்பரியுந்திரள
பத்திப்படையும் திரள வெற்றிக்கொடியும்திரள நடந்தான்

௩. புரியும்பார்த கண்டம்விட்டுய ரிமயமலையைக் கடந்து இம் புருடகண்டத்தைக் கடந்தப்புறம்போ ேமகூடத்தைக்கடந்து. அரி வருடகண்டத்தைக் கடந்தப்புறம்போய் நிஷதகிரியைக் கடந்து இற்றி லாவிருதவர்ஷத்திற்படையை நிறுத்தியவ்விடங் கடந்து நாவத் தருவிலிருந்து வீழ்ந்திடும்பல பலகனி யுடைந்து அதன் சாறுவலமாயோடும்சாம்பூ நதக்கரை யடைந்து அதற கருகேசாராறு மாற்றுயர்ந்தபொன் னரணியம் அடைந்து அடைந் தவிடத்திலுள்ள பூதமைநோக்கிச் சூழ்ந்தவர் தடைந்து அகை வரையிலப்பெரு நிதிகளைடுக்க வந்ததற்குத்தென் பாலவந தடுக்க கருமுகிலும் கண்டஞ்சத் திரைகடலும் கண்டஞ்சச் சுரபதியும் கண்டஞ்சக் கிரிபலவும் கண்டஞ்ச கடந்தவன்

உக்கிரபாண்டியன்மேருவைச்செண்டாலடித்தல்.

விருத்தம்.

அடரவந்திப் படிமேரு மலைக்குத் தென்பால்
அடுத்தெதமைஎன் றவன்செங்கைச் சிலையே கோளும்
சுடரும்வானத் திடுந்தேவா லயமே என்றே
துதித்திடவும் சேர்ந்துவரா திருக்கக் கண்டு
திடமிகுந்தன் வெகுளியும்அம் மலைச் செருக்கும்
தீரும்வகை கருதிஅதன் சிகரம் தன்னில்
புடைபரந்த வாசவன்மா மெளலி சிந்தப்
பொடித்திட்டான செண்டதனால் அடித்திட்டானே

கல்யாணி சாப்பு.

பல்லவி.

செண்டுகொண் டடித்தானே பெருகும்உக்கிரச் செழியன் மேருவைத்தானே

அநுபல்லவி.

செண்டினாலே அடிக்கச் சிகரபந்தி துடிக்க
அண்டர்பதிலும் மாடம் அடுக்கடுக்காவெ டிக்கச் செண

சரணங்கள்.

கருதி அசைடாநிலை கலங்கஅடித்தெழுந்த
கனகப்பாத துபோபோலே எழும்ப அதைவளைந்த
பருதிமண் டலம்விண்டு ளாயப்பொடிந்து விந்தப்
படியில் விழுந்தாற்போலே பலமணிகளும் சிந்தச் செண்
அடைகல்லா இருக்கின்ற மலைநாலும் ஒடுங்கிட
அல்லாமல் ஒருநாலு திடக்கவை நடுங்கிடத்
தடமலர்ப் பொழில்ஒரு நாலுமேசாயங்கிடத்
தருக்கள் நாலும்அதனின் வேரோடே பிடுங்கிடச் செண
சுற்றி இருக்கும் எட்டுக் கிரியும் எழுந்து துள்ள
சூழும்சாம்பூநதம் தளம்பித்தன் நிலை தள்ள
சித்தசாரணர் முத லோர்கள் மனமும்தெள்ள
சேடன் முடிமணியும் சிதைந்து விளக்கம்கொள்ளச் செண்

மேருவெதிர்வந்துஉக்கிரகுமாரனுக்குநிதிஅளித்தல்.

விருத்தம்.

செண்டுகொண்டிவ் வாறடிக்க விளம்பி மேரு,
தெய்வமணி முடிநாலும் கிரீடமும் போல்
கொண்டுயர்ந்த திண்புயமும் சோதி மேவும்
குடையும்பெற் றுருத்தெழுந்து நாணி நிற்கக்
கண்டுசினம் தணிந்திது வரைக்கும் வாராக்
காரணமே தெனஉக்ர வர்மன் கேட்கப்
பண்டுதனக் குளபிழையை வித்தகா கேட்
பாயெனவே நியாயமுடன் பகரும்தானே.

திபதை— ஆகிரி, காம்போதி. (ஏகதத

௧ வாருமையா தேவ பாண்டியகுமாராஎன் வர்த்தமானம்சொல்லக் கேளும்
தாரணியோர்கள் துதிக்கும் கயற்கண்ணி தன்னுடன்கூடவில்வாழும்
௨ சோமசுந்தரக் கடவுளைநித்தம் தொழுதிந்த ரூபத்தைக் கொண்டு வெகு
சேமமுடனே வருகையிலேஒரு நேரிழையாள் தனைக் கண்டு
௩ காமம்தலைப்பட் டானடியைத்தொழு காமலர்சேமத்தை விட்டேன விட்ட
நிமைமித் தத்தினாலேஉனதுகைச் செண்டினால் தண்டிக்கப் பட்டேன்
௪ ஈசன் அடிக்கப ராதம்புரிந்ததை எனதுக்கில்லாமல் நீக்கச் செய்த
ர்சனேஎன்னை ஒருபொருட்டாயிங்கு நாடியதென்னென்று கேட்க (ர்ண
௫ மாநிதியைக்குறித்திங்குவந்தேனென றுமன்னவன்சொல்லமுன்னாலே சொ
மாநிழலுக்கு ளிருக்கினறவைப்பைஅம் மாமலைகாட்டக்கை யாலே
௬ காட்டியசெம்பொன் அறையைத்திறந்து கனகங்களைப்பல கோடி எடுத்
திட்டத்தனது பெயராலேமுத்திரை இடுவிப்பின் அவ்வகை மூடி
௭ மீண்டுபடையுடன் தென்திசைநோக்கி விரைந்துநடக்கும்தேரூர்ந்துஒளி
நீண்டவரையை விடுத்துமனிதர்கள் நீடியபூமியில் சார்ந்து
௮ அந்தந்ததேசத்து மன்னவர்தங்கள் அனிகத்துடன்அன்பு கூர்ந்து எதிர்
வந்துபசாரம் புரியத்தமிழின் வளம்தரும் நாட்டைச் சேர்ந்து
பொன்எயில்சூழும் மதுராபுரக்கோபுரம்கண்டுதேரைவிட் டிழிந்து மணி
பன்னகபூஷணன் தன்னை அஷ்டாங்கம் பஞ்சாங்கமுடன்பணிந் தெழுந்து
௰ துய்யமறையோர் துறந்தோர்அறத்துறைத் தொண்டர்முதல்எதிர்வந்தார்
வையைநதியைக் கடந்துதமது மதுராபுரம்வந் துவந்தார் (வர

விருத்தம்.

மேருமலை அளித்தபொருள் அனைத்தும் அந்த
வியன்மலைபோற் குவித்தந்நா ரூ ளோர்களும்
நீரமுடன் உக்கிரனீந் துலகா ளுங்கால்
செகதீசன் அருளால்பாண் டியநா டெங்கும்
காருலவி மழைபொழியப் பயிர் தழைக்கக்
கண்டோர்ஈ துரையபவர்கேட் பவர்துன்பம் தீர்ந்
தாகுமிக போக சம்பத்தடைந்தந் தத்தில்
அரனுலகைஅடைந்திருக்க லாகும் தானே.

ஆக விருத்தம் (௬) கீர்த்தனை (௩) தரு (௧) ஆக (௰). பதினோராவது முற்றும்

௨

பதினாறாவது.

வேதத்துக்குப்பொருள்அருளிச்செய்தபடலம்.

அவதாரிகை—விருத்தம்.

மேருவைத் தாக்கி உக்கிரன் வியன்முடி மகனுக் கீந்து
சீருறும் பரமனோடு சேர்ந்தவா றுரைத்தே னிப்பால்
வீரபாண் டியன்தன நாளில் வேதத்துட் பொருளை நைமி
சாரணி யருக்கீசன்வந் தறிவித்த தினிச்சொல் வேனே.

நைமிசாரணியமுனிவர்வேதப்பொருளறியாமல்மயங்குதல்.

இதுவுமது

நண்ணிய தருக்கள் சூழும் நைமிசா ரணியம் தனனில்
கண்ணுவ முனிசாண் டில்லியர் கருக்கரை முதலோர் வேதத்
துண்ணிறை பொருளை ஆராய்ந் துள்ளமும் முகமும் வாடிப்
புண்ணிய குருவைத்தேடிப் பூசிக்க யோசிப்பாரே.

மோகனம்—சாப்பு.

பல்லவி.

இந்தவிதம்என்ற றியாமலேமனமும் ஏங்கிஇருந தனரே

அநுபல்லவி.

சந்ததமும்சக தீசனுக் கன்பு
தழைக்கும்தவத்தை இழைக்க முனிவர்கள • இந்த

சரணங்கள்.

பூதங்கள் ஐந்தும் இடம்தமோதிப்
புவனங்க ளோடயன் மாலிந்திரபதமும்
வேதங்க ளும்முதல் உண்டானதுபோலவே
வீயும் படிகசூழ் காலம்அறிகின்ற இந்த
வாலிரவிமுன் கமலம்போல்சோதிமுன
வையகமுற்றும் மலருவதால்பண்டு
போலவே முத்தொழில் செய்திட மெய்ப்பொருள்
புநிதியிலே அருள் பூண்டிருக்கின்றதும் இந்த
மயூடை காயிக் கமலத்தில்மேவிய
வண்டுபோலேபிர மாவந்தமைக்கும்போ
தாலம் அயின்றவன் வாக்கில்பிரணவம்
அம்மந்தநில்வேதம் உருக்கொண்டெழுந்ததும் இந்த

அரபத்தமுனிவர் மற்றுனிவர்களதுவ்ருத்தத்தைமாற்றுதல்.

விருத்தம்.

புங்கவமா முனிவரிக்தப் படிமயங்கும்
போதில்அர பத்தன்என்றோர் முனிவரக்தன்

டங்கவலர வணங்கிடப் சரித்திடுங்கால்
அம்முனிவர் விருப்புவெறுப் பிகந்திருக்கும்
உங்கள்முகம் வாடியதே தென்னவேதத்
துட்பொருள்தோ ணாமலிருப் பதனால்யாங்கள்
சங்கையுற்றோம் என்றிடக்கேட் டவரைநோக்கிச்
சாற்றுவார் மனமயக்கம் தேற்றுவாரே.

உசானி ரூபகம்.

பல்லவி.

கேளும் கேளும் முனிவரே கேளும் கேளும்

அநுபல்லவி.

வாழும்நைமிசா ரணியம்தனில்நித்தம் மாதவம்செய்து மகிழுமுங்கள்சித்தம்
சூழும்மயக்கங்கள் நீங்கும்வழிதேடி சொல்லுகிறேன்ஒரு விபரம்அதைநாடிக்
கேளும்.

சரணங்கள்.

க மாதவம்புரிந் தறிவதல்லது மற்றொன் றாலறியக் கூடுமோ என்றும்
நிதை தகற்று மத்தவமும்புண்ணிய க்ஷேத்திரத்திலே இருந்துசெய்தல்நன்று
ஓதும்புண்ணிய க்ஷேத்ரத்திலுமிக உறுதியாம்சிவ ஸ்தலத்திலசெயச்சென்று
ஆந்தலாலசிவ ஸ்தலத்தின்வலிஅறிந தடுத்துச்செய்தற்கிணைதொடுப்பதில்லைக்
கேளும். (கண்டு

உ அம்புவியிலரியதலமியாதெனில் அகிலமனைத்தும்த னங்கமாச் சொல்லும்
சம்புவின்தலைக்கா றிரண்டுவிரற்கடைதன்க்குமேலாக விளங்கியே மல்லும்
உம்பர்மாமுனி வோர்கள்முதற்றலுத் துறுதியாலதின் பயனடைந்து வெல்லும்
தென்புமிகுந்தறம்சாஸ்திரமுரைக்கின்ற சீவன்முத்திபுரமேவிச்செய்யச்செல்
கேளும் [லும்

ந அந்தத்தலத்தினிலொளிவிடும்விமானத் தருகுதென்றிசைவடநிழலிருந்து
சந்ததமும்வழி படுமுனிவருக்குச்சகலவித்தையும் போதித்தருள் தந்து
சுந்தரம்பெருகுமூர்த்திஉங்கடகுச சுருதிப்பொருள்கண்டு சொல்லுவனுவந்து
சிந்தைமகிழ்ந்தவன் முன்னேதவம்செய்வீர்சீக்கிரம்மனமெய் வாக்கதுகுவிந்து
கேளும்.

விருத்தம்:

அடைவுடனீ தரபத்த ரைக்கக் கண்ணு
வாதிமுனி வோர்களவ ருடனெழுந்து
படிபுகழும் கூடலிற்சென் றம்பொற் கஞ்சம்
படிந்துசிவ தரிசனம்செய் துருத்திராக்ஷ
வடமுமறைப் புஸ்தகமும் விழிமூன் றும்நான்
மலர்க்கரமும் போதமுத் திரையும்பூண்டு
வடதருக்கீழ அமர்ந்திடுமூர்த் தியையும்போற்,
றிகையுடனே தவம்புரிந்து மகிழ்ந்திட்டாரே.

தெக்ஷிணாமூர்த்திவருதல்.

இதுவுமது.

தவமுனிவ ரிந்தவிதம் மறைமுதல்மே
தாமனுவெழுத்திருபத் திரண்டு மோர்க்கச்
சிவபத்த முனிவரால் தெளிந் தறிந்து
தேள்முதல்மார் கழிவரைக்கும் நியமம் பூண்டு
கவனமுடன் தருப்பணமோ மாதி செய்தா
காரமுதல் தவிர்ந்துதவம் புரியும் போது
நவமறையின் பொருளாதி மூர்த்தி ஆங்கு
நாடினார் குருவடிவைக் கூடி னாரே.

புன்னாகவராளி சாப்பு.

பல்லவி.

தக்ஷிணா மூர்த்திவந் தாரே

அநுபல்லவி.

விருக்ஷத்தடியில்மோனம் விளங்கிக்கொண்டிருந்த தக்ஷி

சரணங்கள்.

எதிர்கொண்டு முனிவோர்கள் துதிக்க முப்பத்
திரண்டிலக் கணங்களும் குறைப்பாயலு கதிக்கப்
பதினாறு வயதெல்லை ரேக்க . வேதப்
பண்பு பெருகுமறை யோன்வடி தக்ஷி
புண்டரம் ஐக்கிடம் துலங்க காதில்
பூண்டகுழையொளிகண் டிருள்வலி விலங்க
கண்டருத் ராக்ஷமுத் திலங்க தொண்டர்
கர்மமறக்கும்பாச பந்தம்கண் டொதுங்க தக்ஷி
உரத்திலே தவளநூல் மின்ன வெண்பட்
டுத்தரியம்வலமா யொளிஎங்கும் பன்ன
கரத்தணிதோளணி மின்னப் பட்டி
கையுந்தரித் திடையிற்கோ வணமது துன்ன தக்ஷி
வண்டுகளொலிப்பது போலே செந்தா
மரையடிமேற்சிலம்பொலியும்தன் னாலே
தொண்டர்மனத்திருளப் பாலே ஓடத்
தூரத்தும் கண்டாமணியு முழங்கமென் மேலே தக்ஷி
வலக்கையில் பவித்திரம் நீடப் போதம்
வரைந்தபுஸ்தகம்இடக்கரத்தினில் கூடப்
பலத்தமுனிவரும்கொண் டாட வேதம்
பாதுகையாயிரு மலரடி சூடத் தக்ஷி
கறைமதுகரங்கள்விஸ் தரிக்கச் செழும்
கமலத்தேனுண்டொலிப் பதுபோலே சிறக்க
மறையோசைசெவிவழி நிறைக்க பத்தர்
மனவயல் ஆனந்தப் பெரும்பயிர் வளர்க்க தக்ஷி

விருத்தம்.

தெக்ஷிணு மூர்த்தியிந்த வகையாத் தோன்றச்
செழுமதியைக் கண்டொலிக்கும் கடலைப் போல
அக்ஷமதாற் கண்டிவகை வெள்ளமேற் கொண்
டடெம்கூற்றை உதைத்ததிரு வடியி ற்றாழ்ந்து
ரெக்ஷதரும் பலகலைக்கா தார மாகி
நிறைநதமறைப பொருளாகி நின்றே யெம்மேல்
பக்ஷமுறும் எனமுனிவர் சரண மென்றே
பாடினர் மெய்புளக மூழ்ந்தரே.

தக்ஷிணாமூர்த்தி முனிவர்களுக்கு வேதப்பொருளருளிச்செய்தல்.

இதுவுமது.

சீலமுனி வர்கள் துதிக்க உங்களாசை
செப்புவீ ரெனயாங்கள் விழையும் வண்ணம்
ஞாலமுழு தும்பிழைக்கும் வண்ண மாதி
நான்மறையின பொருளையுரை செய்வீ ரென்ன
கோலமுடன் பந்தவினை தவிர்க்க வந்த
குரவன்மன மகிழ்ந்தவர்க ளுடனே கூடி
மூலலிங்கம் தனக்குமுனபோய் வேதார்த்தத்தை
மொழிகின்றா் கருணைமழை பொழிகின்றாரே.

புன்னாகவராளி ரூபகம்.

அந்தணரே கேளும்மறை அரும்பொருள்க ளெல்லாம்
அறிந்ததனற் போகமுத்திக் கதுகருவிச் சொல்லாம்
இந்தவுல கிற்சுயமாய் எவைக்குமிது தங்கம்
என்றிலங்கும் தத்துவமாம் இச்சுயம்பு லிங்கம்

நித்தியமாய்ச் சுருதிக்கெல்லாம் நீதியாய்மெய்ப் பொருளாய்
நிச்சயமா யத்துவிதமாய் நிருமலமாய்த் தெருளாய்
மற்றும்நிறை ப்ரம்பரமாய் மாசகன்ற மணியாய்
மன்னியவிஞ் ஞானநிரா மயமாய்நூல அணியாய்

அறையும்பரப் பிரமமிதே ஆமெனவே முழங்கும்
ஆதிமறைக் குட்பொருளே அதின்வடிவா யிலங்கும்
உறையுமிந்தப் படிவமொனறே உறுதியொன்றே நன்னூல
ஓதியுணா்ந் தறிவுடையார்க் கொக்குமிதே முன்னால

ஆகையினல் வேதமொன்றே அதன்பொருளும் ஒன்றே
அனந்தவிதச் சாகைதழைத் ததில்விளைந்த தன்றே
ஏகனிவ ளுக்கிளையால இவ்வுலகெங் நாளும்
எடுத்தல்அளித் தல்முடித்தல எனும்விபரம் கேளும்

விதியுருவாய்ப் படைத்துலகை விண்டுருவாய்க் காத்து
மேலஅரனு யழித்திவைமூவ் விபுதருக்கும் மூத்து

அதிபரமா காசசரீ ராதுபடைத தநதி
அந்தமிலலா லிக்கமதில் அதிலுறையும் சோதி

௬ அடியின்முத லான்மதத்துவம் ஆனஅயன் யாகம்
அதில்நடுவித் தியாதத்துவம் ஆனஅரி பாகம்
முடியில்சிவ தத்துவமாம் முக்கணரன் பாகம்
மூன்றினுக்குள் தத்துவங்கள் முளைத்தெழும்அ மேகம்

௭ ஆத்துமதத் துவந்தனிலே அகரஉருப பிறக்கும்
அடுத்தவித்தியா தத்துவமாம் அதில்உகரம் பிறக்கும்
வாய்த்தசிவ தத்துவத்தில் மகரஉருப் பிறக்கும்
வந்திதுமூன றும்பிரணவ வடிவம்கொண்டு சிறக்கும்

௮ பிரணவத்தில் காயத்திரி பிறக்கும்ஒரு மூன்று
பின்னும்பத பேதத்தினால் பிறந்திரண்டாத் தோன்றும்
ம்யா தெனச்சமஷ்டி யெனும்வியஷ்டி யென்னும்
இரண்டும்உல கினிலெவைக்கும் ஏதுவாக மன்னும்

௯ திரிபதையிரண் டிலும்இவன்றன் திருவருளவலி யாலே
செப்பரிய மறைநாலும் செனித்திடும்தன் னாலே
வருமறைநா லுக்குளிந்த வள்ளலஅரு ளாலே
மட்டடங்காப் பிரணவமுதல் மந்த்ரமுண்டா மேலே

௰ சொன்னமுதற் றாகத்தில் தோன்றும்அக ராதி
தொடங்கும்எழுத் துக்களெலலாம் தோற்றிவரும் இயாதி
பின்னும்அந்த அட்சரத்தில பெருகும்சிவ ஞானம்
பிறக்கும்இவன் நடுமுகத்தில் பேசுமேதி தானம்

௧௧ கீழ்முகத்தில் இருபத்தொன்றுக் கிளைக்கும்முதல் வேதம்
கேளும்தென்பாற் சதஉருவாய்க் கிளம்புமிரண்டாம் வேதம்
மேல்முகத்தா யிரம்உருவாய் விளையும்மூன்றும் வேதம்
மேல்வடக்கில் ஒவ்உருவாய் விளங்கும்நாலாம் வேதம்

௧௨ அம்மறைநா லால்வருணம் ஆச்சிரமமும் நாலாம்
அறம்தரும்யா காதிகருமம் ஆமிரண்டு நூலாம்
கன்மவழி நடக்கச்சொல்லிக் காட்டும்முதற் காண்டம்
கைவல்யமெனு ஞானவழி காட்டும்இரண்டாம் காண்டம்

௧௩ அந்தமுதற் காண்டம்சிவார்ச் சனைமுதலா நிறையும்
அவ்வினையைச் செய்யச்சொல்லி அறிவிக்கும்வா றுறையும்
இந்தவகை யன்றியும்பின் இனியொரு காண்டத்தும்
இவன்வடிவி லாவடிவை யேதெளிந்து ணர்த்தும்

௧௪ வேரிலேதண் ணீரெடுத்து விட்டிவரா லாலே
மேற்கவையும் தழைத்தோங்கி விளங்குவது போலே
பாரும்இவ னைக்குறித்துப் பண்ணும்உப சாரம்
பங்கயன்மால் முதலெவர்க்கும் பரவுமதின் சாரம்

௧௫ ஓத்தமகிழ்ந் தனுதினமும் செய்தமமூ. விளக்கும்
செல்வமும்நற் கதியும்பெறச் செய்யும்இவர்க் களிக்கும்
இத்தரையி லுள்ளசிவ லிங்கமெல்லாம் தழைக்கும்
இச்சிவகோ சம்மேவைக்கும் ஏதுவாக இழைக்கும்

௧௬ புரியுமறை பலமுகத்தால் புகழ்ந்திளக்கும் நெறியைப்
பொருதிநிறைந் தகண்டபரி பூர்ணமாமிக் குறியை
கருமநெறி யாலும்ஞானம் கதிக்கும்நெறி யாலும்
கருதரிய மறைப்பொருளைக் காட்டிச்சொன்னே மேலும்

௧௭ கருமத்தினல் ஞானமுண்டாம் கருமம்சித்த சுத்தி
கதிக்கும்சித்த சுத்தியினல் கருதும்தர்ம பத்தி
தருமத்தினற் சாந்தியுண்டாம் சாந்தியினல் யாகம்
தழைக்கவரும் கிரியையினல் தான்வரும்வி வேகம்

௧௮ ஞானமதாற சிவதரிச னதிபத்தி பூசை
நற்சிவலிங்க ப்பிரதிஷ்டை நல்லடியார் பூசை
ஆனருத்ரா க்ஷம்தரித்தல் அரியகுரு பத்தி
அனைத்தினையும் தெரியல்ஆகும் ஆமெனன் சித்தி

௧௯ வேதமொழி மதங்கட்கெல்லாம் வேதமேபி யாணம்
விளங்கும்அதன பின்தொடரும் ஸ்மிருதிகள்பு ராணம்
ஓதும்அததற்கினமாய் உரைக்கும்அந்த ஸ்மிருதியே
உண்மையினல் ஸ்மார்த்தமென்ப துயர்ந்ததுமு றுதியே
உறுதியெனு மார்த்தவழிக் கொற்றுமையாம் துறையே
உலகத்திலே வைதிகமென் றன்றத்திமிம்இம் முறையே
முறைநெறியே மறைபுகலும் மொழிக்குள்ளிதே தீர்க்கம்
மௌனமுனி வோரேயிது முற்றும்சுத்த மார்க்கம்

விருத்தம்.

தெருளிம்போ கம்வீட்டுக் கேதுவாயும்
சிவஞான மயமாயும் நிறைந்தவேதப்
பொருளைமொழிந் திப்பொருளைச் சொல்வதெல்லாம்
பொருளிலையென் றுரைத்தந்த வழிதப்பாத
ப்ரமுனிவர் முதுகில்மலர்க் கரத்தால்நீவி
மதுரேச னிலிங்கத்துள் மறைந்தானித்தை
உரைசெய்வர்கேட் பவர்கள்பர சிவஞா னம்பெற்
றுறைகுவார் சிவனுலகைப் பெறுகுவாரே

ஆக விருத்தம் (அ) கீர்த்தனை (௩) தரு (௫) ஆக ௧௨

பதினொருவதுவேதத்துக்குப்பொருளருளிச்செய்தலீலைமுற்றிற்று.

——(0)——

சிவமயம்.

பதினேழாவது

மாணிக்கம்விற்றபடலம்.

அவதாரிகை—விருத்தம்.

மண்ணினி லுயரும் கூடல் வாழுமுக் கண்ணன் அன்பால்
நண்ணுவ முனிசாண் டில்லியர் கருக்கன் முதலோர்க் காகப்
பண்ணுறும் வேதார்த்தத்தைப் பகர்ந்தவா றுரைத்தே னிப்பால்
நண்ணிமா ணிக்கம்விற்ற நலமினிப் புகலு வேனே.

மோகனம் சாப்பு.

பல்லவி.

இன்னம் அறிந்திடுவீரே — ஜகதீசன் திருவடியாரே (இ

அநுபல்லவி.

இகநிலம்காத்து வரும்வீர பாண்டியன் தன்னை மருவும்வைப் பாட்டியர்குமரிய
மன்மதன்போலேகு மாரர்உதித்தவர் வல்லாயிர்க்குக் கலைபோற்கதிக்கையில் (இன்னம்

சரணங்கள்.

பின்னும்தனக்குக் குலமகன வேண்டுமென் றெண்ணி தன்
பிரியமுள்ள தேவியுடனங்கயற் கண்ணி
அன்னையுடன் சுந்தரேசரை உத்தேசம் பண்ணிப் பணிந்
அஷ்டமியிந்துவா ரம்முதல் நோற்பது நண்ணி
முன்னவனின்னரு ளாலேசிலநாள்
முயன்றபின் கர்ப்பமிருந்தாள் வயிற்றினில
சின்னதொரால்மேவித் தெனமூனைத்தொரு
சேயன்தரணியை ஆளவந்துற்றபின் இன்னம்

அத்தனிச்செல்வ மகனுக்குநான்முறை யாலே ஜாத
காதிகருமம் நடத்திவளர்கையில் மேலே
மற்றுமொருதினம் வேட்டைக்குச்சென்றாழி னூலே மன்னன்
வன்புலிவாய்ப்பட் டிறந்தானதுகண்டிப் பாலே
சிற்றிடைமங்கையர் மொய்த்தேயுரந்தனில்
செங்கையெறிந்தவர் தங்கள்வரிக்கணீர்
முத்துமுத்தாகவ ழியப்புலம்பவே
மூன்றுரிலுள்ளவர் யாரும்வருந்தவே இன்னம்

முந்தியுதித்தவைப் பாட்டிகுமாரர்கள் நோக்கி முழு
மோசத்தொழிலுக் கிதுவேசமயமென் றூக்கித்
தந்திகுதிரை நிதியாபரணமும் ஆக்கி ராசன்
தன்மகுடத்தையும் கொண்டொளித்தோரிடத்தாக்கி
சந்தோஷமாக இருக்க அமைச்சர்கள்
தக்ஷணமிராஜனுக் குக்கருமாதிகள்
மைந்தனைக்கொண்டு நடத்தியம் மைந்தற்கு
மாமுடிசூட்டி வணங்க நினைத்தபின் இன்னம்

பொக்கிஷம்தன்னிற் புகுந்துமணிமுடி தேடிப் பல
பூஷணத்தேர்டதில் லாமலநிகைத்துள்ளம் வாடி
மிக்கபகைவ ரெடுத்ததென்றுண்மையைக் கூடி முடி
வேறொன்றமைக்க மணிவேண்டுமேயென்று நாடி
இக்காசினிக்கர சில்லாதுபாய்மரம்
இல்லாதகப்பலைப் போலேஅலையுமென்
றக்கார் அணியும் சடையானருளை
அறிகுவோமென்றே அமைச்சர்யோசிக்கையில் இன்னம்

சுந்தரேசர்வணிகராகவருதல்.

விருத்தம்.

மந்திரிகள் இந்தவிதம் எல்லையில்லா
மாதுயரக் கடலிலமிழுந் தாலோசித்துச
சுந்தரநா தன்திருச்சன் னிதியிற்சென்று
சொல்லிமுறை யிடுவோமென் றெழுந்திராசன்
மைந்தனையும் ஏந்தியுயர் கோபுரத்தின்
வாயிலுக்குட் புகுந்தவர்கள் வருமுன ஆங்கே
அந்தமிகுந் திடும்வணிகன் போல்வே ஷம்பூண்
டய்யன்அவர்க் கெதிரேவந் தடுக்கின் றாரே.

முகாரி ஆதி.

பல்லவி.

சாமிசுந்தரனே வணிகவேடம் தரித்தெதிர்வந்தனனே.

அநுபல்லவி.

மாமன்அட னும்தேடும் மதுராபுரத்தில்நீடும் சாமி

சரணங்கள்.

பரநதிடையிற்கோவணம் பட்டாடை பின்னப்
புரந்தரன்விற்போலேமார்பிற் பொன்னாரம் அன்ன சாமி

புயதிலகசுதமிரவி போலொளி விளங்க
அயத்திலைத்தப்பொதிகள் அணியாக நெருங்க சாமி

ஓதும்பரிநூல்வலம் ஒதுங்கிடக் காங்க
காதிற்குண்டலம்தோளிற் கதிரொளி யோங்க சாமி

பூரணமான அன்பு பொழிந்தருள் பாய
ஆரணம்தேடரிய அடிநிலம் தோய சாமி

திருவளரும் வணிகரைப்போல் அடியார்க் காகத்
திருவேடம் புனைந்துவரும் பகவான் நேரே
வருகும்அமைச் சரைநோக்கி நீர்ம யங்கி
வருங்கருமம் யாதெனமுன் னடந்த தெல்லாம்

தெரியமொழிக் கிடஅவரைப் பார்த்தே எம்பாற்
செம்பொன்கோ டிரம்பத்துக் கோடி பெற்று
ஒருமணிபோற் பலமணியுண் டென்று துன்பம்
ஓட்டுவார் தரம்தரமாக் காட்டு வாரே.

வலாசுரன்மகிமைசொல்லுதல்.

விருத்தம்.

புங்கவமாக் கரும்படத்திற கிழக்கு நோக்கிப
பொருந்தவிருக இந்திராதி திசைக ளெட்டும்
மங்கலமுத் தாதிசொரிந் திடைமா ணிக்கம்
வைத்துவலா சுரனுடற்சின் னமிதென் றோத
அங்கமணி யானதென்ன அவன்யா ரென்கட்
கடிவரலா றுரையுமென அமைச்சர் கேட்கச்
செங்கைகமழு மாமொளித்த வணிக ராயந்து
செப்பியதன் விபரமவர்க் கொப்பிப் பாரே

அடாணா ஆதி.

பல்லவி.

வலாசுரன் மகிமையைக்கேளும் மந்திரிமாரே வலாசுரன மகிமையைக்கேளும்

அநுபல்லவி.

சந்திர கலாதரன் அருளாலமரர்க் களத்தெவரா லும்நசித்தல
இலாவரம்பெற் றாழ்வதால்மெய் எங்குமணி களாயபெற்ற வலா

சரணங்கள்

வரமடைந்தெழுந்தபோதே அமர்குறித்து
வானவருலகின்மீதே சென்றுவிண்ணவர்க்
கரசனுடனேதப்பாதே புரிந்திட்டதேர்ந்
தமரர்கோனெதிர்நில்லாதே தோற்றுப்போனவன
சுரருடனதிரும்பிவந்து சூழ்ந்துபோர்செய் யாமற் கொல்லைத்
கருதியேவஞ்சிதன்வலி காசினியெங்கெங்கும் சேலைத்
தருகுவேன்வேண்டியவரம் தனைக்கேளென்றிந்திரன் சொல்லப
பொருதியேநகைகொட்டியிடி போலேலகைத்திட்டான வலை வலா

உ இந்திரனைப்பார்த்துமுன்னாலே கண்டோர்சிரிக்க
எடுபட்டோடிப்போனதாலே உன்னுடையபுகழ
இந்தஉலகத்தின மேலே வீணாய்ப்போலநீ
ஈயும்வரமும்என் பாலே ஆகுமலோமல
என்றனக்கீசனிடத்தில ஏறிடும்வரமிருக்க
உன்றனிடம்வாங்கத்தக்க தொன்றுமிலலைநீ இரக்கத்
தந்திடுவதேயெனக்குத் தருவ லாமலே மிக்க
கீர்த்தயாம்புகழ்மூடிக்க நினைப்பதேசவெனறான கதிக்க வலா

தேவர்கோனதனைக்கேட்டுக் கைகூயிலயாகம்
செய்யநாம்தவசம்காட்டும் போதிலாவாக
வாவெனத்தவத்தை நீட்டும் தநிசிமுனி

வரன்புகழுடம்பொன்றீட்டும் அவ்லாயிலென்போல்
மாவிசயத்தாலும்தேக மணிகளாலுமேயி ரண்டுண்
டாவதாலநட்டவன்நீயே அமரருடன்கூடிக் கொண்டு
யாவரும்புசிப்பதாலே எனக்கநம்புகழைக் கண்டும்
ஈவதேபெருமையாமென் றிசைநதளிதீதுவகை மண்டும் வலா

விருத்தம்.

வலனுவந்திவ் வரமளித்திந் திரனைநோக்கி
மைந்தனுக்குத் தனதரசீந் துயர்ந்தவிந்த,
மலையெனவே நிமிர்ந்துமகச சாலைவாயில்
வந்தெனையூ பந்தனிற்டக் திப்பீரென்னக்
குலிசதரன் கண்டுதிக் கவும்விண்ணோர்பைங்
குசைக்கயிற்றாற் கட்டவும்கண் டரவம்போல
நிலைகொளத்தேர்ந் தவன்வாயைப் புதைத்துயிர்ப்பை
நீக்கவும்சத் தியவுலகைத் தாக்கினனே.

ஆனந்தபைரவி ஏகதாளம்.

பல்லவி.

இன்னமும்கேளும் அமைச்சரே இன்னமும்கேளும்

அநுபல்லவி

இன்னமும்கேளும் பசுவாம்வலாசுரன்
சென்னியின்பக்கத் திருந்துயிர்கொன்றவன்
தன்னுடைவச்சிர வேலால்வலனுடல்
பின்னம்படவே பிளந்தவன்செய்ததை . இன்ன

சரணங்கள்.

இத்தகையாகும் பசுவைச் சுருதியு
ரைத்தபடியே வபையை எடுத்துக்குண்
டத்தெரிதன்னிலோ மஞ்செய்து தேவர்கள்
சுற்றினு மொய்த்து மகத்தைமுடித்தபின் இன்ன.
உம்பர் துதிக்கும் படிக்குப் பசுவாக
அன்புபெருகு வலனசோரி மாணிக்கம்
என்பதுவச்சிரம் பித்தம்மரகதம்
வெண்பலனுமுத்து மயிர்வயிரியம் இன்ன
தங்கும்நிணம்கோமே தகம்தசை பவ
ளங்கபமேபுரு டராகமாவிரு
கண்களும்நீலம் இப்படிநவ ரத்தி
னங்களுலகில் விளங்கும்விபரத்தை . இன்னம்

விருத்தம்.

மனிதனங் கத்திற்றோன்றும் மணிகளுக் கசுத்த முண்டாம்
எனிலறத் தாலேசீவன் இறந்தபுண் ணியவான் தேகம்
தனிலுதித் ததனாற்பூணத் தக்கதென் றமைச்ச ருக்கு
மனமகிழ்ந் தயனை வசியர்தேர்ந் துரைக்கின் றாரே.

மாணிக்கவரலாறுகூறுதல்.

விருத்தம்.

ஓதரிய நவமணியும் வலன்அங் கத்தில்
உதித்திருளை முகம்பிளக்கும் ஒளிசேர்ந் திந்த
மாதலத்தில் இருக்குமிடம் நிறங்கள் சாதி
வரும்தெய்வ மொளிகுற்றம் நீக்கி நன்றாய்ச்
சோதனைசெய் தணிவோர்க ளெய்து மேன்மை
தொடுத்துவரும் பயன்முதலாக் கேளுமே யென்
றுதியிலமா ணிக்கவர லாறமைச்சர்க்
கறைகின்றார் தொண்டருளத் துறைகின் றாரே.

காம்போதி, ஆதி.

பல்லவி.

மாணிக்கவர லாறுசொல்வேன் மந்திரி மாரேகேளும் மாணிக

அநுபல்லவி.

ஊணிக்கேளும் வலனுடலத்திலதோணிப்பெருகும் குருதியிடத்தில்
உதிக்கும் கதிக்கும் மதிக்கும் விதிக்கும் மாணிக்க

சரணங்கள்.

ஆதியில் கிருதயுகமுதல் நாலு யுகமும்வழியே மக்கம்
அங்கமிருந்தக ளம்புரம்தும்புரு சிங்களமிந்நாலு தேசத்திடைப் பட்டுச்
சோதியொன் பதுபிறந்தது கேளும். தீபங்கமலங் கோபம்
துங்கமிகும்மாது ளம்பூவிரையமுல் செங்குவளைமின்மி னியுடுப்போலதிற்
சாதிநா லாய்பிரிந்தது கேளும் பிரமசாதி முதலா (க்
சாதரங்கம்குரு விந்தம்சௌகந்திகம்.மீதுகேவாங்கம்எனும் பெயர்பெற்றது
கேதமில் லாநிறங்களைக் கேளும்வேதியனுக்கோ ரைந்திரண்டுநிறம்
நீதிமன்னர்க்கு நாலிரண்டுநிறம் ஓதும்வசியன் மூவிரண்டுநிறம்
கோதில்சூத்திரன் ஈரிரண்டுநிறம் வாய்க்கும் ஆர்க்கும் ஏற்கும் நோக்கும் மா
உமுந்திய சாதரங்கம்கோபம் தழலிரவிகச் சோதம்
முளரிகீரர்விளக் குக்கருமெய்தலமா துளம்விரைமலர் போலப்பற்றும் குரு
விந்தமோ செம்பருத்திசிந் தூரம் காயும்பொனமுயல ரத்தம் (ம்சௌ
வெளளிவோத்தம்பூதி லதம்பலாசரர் ஒள்ளியகுன் றியெட் பிவிதம்கொள்ளு
கந்திகத் தின்நிறத்தினைக்கேளும் ஒளிரும்பொன்னில வம்பூ (ம்
கருங்குயிற்கண் அசோகமலர்செம்பஞ்சொருங்கதாகுமை வண்ணமெனவுமா
பிந்திய கோவாங்கநிறம் கேளும் சந்தமிகுந்த குசும்மை மலரும்
ஐந்துவண்ணமலருமொளிரும். வெநதசெங்கல் பொடியு மவிழும்
அந்தமிகுங்கொவ் வைக்கனிநிகரும் ஈனும் தோனும் காணும் பூணும் மாணி
கூ அருமையா யுறுதிகொண்டு கீழ்மேல் சுற்றொளிவிடல கன்று
ஆதின்மேலுத்தமம் கீழ்மத்திமம்பக்கம்அதமமென் றகுணம்கண்டறிந்துமுன
உரைசெய்சா தரங்கத்தைஅணி வோர்க்குஅன்னம்கன்னிகை முதலா
உளசகலதா னமும்பரிமேதவளமகமுதற் செய்பல னும்கொள்வர்

குருவிந்தம் தரிப்போர்உலக முழுதும்ஒருகுடையிலே ஆண்டு (துவர்
கொள்வர்விளங்குசௌகந்திகம்பூண்பவர் செல்வம்புகழ்முத லாம்பயனெய்
தரிகொள்கோவாங்கத்தைஅணி வோர்க்குதிருமனையிலெ ந்நாளும்பாலும்
பெருகும்சாலியை முதலெக்காலும்பரவும்பலபண்டங்கள்நாலும்
திரவியமுத லாமென்மேலும் சீரும் சேரும் பாரும் நேரும் மாணி

விருத்தம்.

பொருவிலதிம் மணிமாசு நீக்கி நன்றுப்
பூண்பவர்பால மற்றிருநால் மணியும் சேரும்
திருமகளும் மகிழ்ந்தொருபாற் கட்லைப் போலே
சிறந்திடுவ ளுலகமெலாம் குடைக்கீழ்த் தங்கும்
அரவுசிறு தெய்வம்விலங் கலகை பூதம்
அக்கினிநோய் தரித்திரம்கூற முணுக வொண்ணுப்
பெருமைதரு மெனமழுமான திருக்க ரத்தில
பிடிக்குமையன் வசியரொனட் படித்திட்டாரே.

முத்தின்வரலாறுசொல்லுதல்.

அங்குமல ராகவள முரைத்தே னிபபால்
அவனியில்நித் திலம்சலசம் தலச மென்றும்
சங்கமுகில் இப்பிவே யானை பாம்பு
சாலிமீன் கரும்புபன்றிக் கொம்பு கற்பின்
மங்கையர்கந் தரம்கொக்கின் கழுத்தை வாய்மான்
வகுத்திடுமிப் பதின்மூன்றில் கடையில் மூன்றும்
விங்களித்தை யிரண்டிடத்தும பிறந்த தய்யன்
விரிக்கின்றார் அமைச்சருக்குச் சரிக்கின்றாரே

மாஞ்சி, சாப்பு.

பல்லவி.

முத்தின்வரலாறதுகூறுவேன்கேளுமே உத்தமமகதிரி மாரே.

அநுபல்லவி.

இத்தரணி முற்றுமகிழ் வுற்றவலன் பெற்றிடுதக
தத்திலேசெ னித்துவுல கத்திலேமி குத்தவரும் முத்தி

சரணங்கள்.

சங்கமதில் மாடப்புறா முட்டையைப்போ லேதிரகூடி
தந்துவெண்மை யாகவரும் பாரும்
பைங்கிளைசெ ழிக்கவுயர் மூங்கிலிலுண் டாகியது
பாரில்ஆலங் கட்டிபோலே நேரும்
தண்கயலில் பாதிரியைப் போலேவரு குங்கரும்பு
தன்னிலேபொற் கொனறைநிறம் சேரும்
அங்கமிக வும்கருமை தங்குமெனச சிங்கமதில்
செங்குருதி யின்கதிரி னங்கொளிவி ளங்கச்சாரும் முத்தி

மைப்புயலி லேபரிதி போலேயொளி தந்துலகில்
மன்னிவரும் இந்தமணி காணும்
சர்ப்பமதில் நீலநிற மாகவரு கும்வளரும்
சாலியிலே பசுமைநிறம் தோணும்
செப்புமத வாரணத்தில் செம்பொனொளி தங்கிவரும்
செய்கையிதல் லாமல்இன்னம் பூணும்
இப்புவியி லப்பிலுறும் இப்பியிலு திப்பொளிப
ரப்பியசெ ழுப்பனிம திப்ரபைநி கர்ப்ப மாணும் முத்தி

பணபுதரும் வெள்ளைநிற மேவருண தேவனெனப்
பாரும்நீலம் விஷ்ணுதேவன் கேளும்
இன்பமிகும் பச்சைநிறம் காலதேவ னுகுமின்னம்
இரவிநிறம் சூர்யதேவன் நாளும்
செம்பிரபை சேர்ந்துதிரம் போலேநிறம் வாயுவெனும்
தேவனுக வேபுகழ்ச்சி நீளும்
அம்பொனிற மம்பரமெ னும்பதிய வன்பெயர்பூண்
அம்புலிநி றம்பனியிந் தென்பவுய ரும்பர்வாழும் முத்தி

கூறியஇம் மணியுடுக்கள் போலும் காட்சி
கொண்டிருட்சி திருக்கரத்தி லெடுக்கிற் றிண்மை
ஊறியமா சின்மைகண்ணுக் கினிமை நேர்மை
உரைத்தகுண மாறுமுள்ள தணிவோன் றன்பால்
சீறியநோய் வறுமைமுதற் றுயரம் நீங்கும்
திருமருவும் செல்வமும்வாழ் நாளு மோங்கும்
மாறுபடா தென்றமைச்சர் தமக்கா ராய்ந்து
வழுத்தினர் திருநீலக் கழுத்தினரே.

வச்சிரவரலாறு சொல்லுதல்.

இதுவுமது.

மூத்திவ்வ வாறிவகை சொலித் ததிசி
முனிவனென்பும் வலாசுரன்றன் என்பும் வீழ்ந்த
இத்தரையிற் சிலசிலதே சத்திற் றேன்றி
இயம்புமணி களுக்குமுதற் சாதி யாகப்
பொத்தலிடு வதலாமல் தனக்குத் தானே
பொத்தல்செய்யும் ஊசியாத் தனிவி ளங்கும்
உத்தமவச் சிரமகிமை தமக்குத் தாமே
ஒப்புவார் விபரமுடன் செப்புவாரே.

மத்தியமாவதி, சம்பை

பல்லவி.

வச்சிரவரலாறமந்திரி மாரேசொல்கிறேன்கேளும்

அநுபல்லவி.

இச்சகத்திற் புகழ்சிறந்த ராசர்முத லணியப்பிறந்த வச்சி

சரணங்கள்

க கருதுங்கோசல தேசத்தினிலேவரு கையின்பூநிறமாய் அடுத்தது
மருவுமாதங்க தேசத்திலேவாச மல்லிகைப்பூநிறம் கொடுத்தது
புரியுங்கலிங்க தேசத்திலேசெம் பொற்கொன்றைநிறமா எடுத்தது
சொரியுமிமய கிரியினருகிற் றூயவெண்ணிறமாத் தொடுத்தது வச்சி

உ இன்னமுமகா ராஷ்டிரதேசத்திலே இரத்தவருணமா யுதித்தது
கன்னல்செழிக்குஞ்சௌவீரதேசத்திலே கறுப்புநிறமாப்பதித்தது
பன்னரும்பவுண்டரதேசத்திலேநீலோற் பலமலர்போலிலகித்தது
நன்னிலந்தன்னிலே இந்தவிதமாகநண்ணியேபலவா விதித்தது வச்சி

ந மூத்தசாதிவெண்படிகம்போலுமன்னன் முயலிரத்தம்போற்பகுத்தது
வாய்த்திடும்வசிய சாதிகதளியின்மாமலர்நிறம்போல் தொகுத்தது
சூத்திரசாதிநற்சாணையிற்பிடித்துச்சொலிக்குங்கத்திபோல்வகுத்தது
ஏற்றநாலும்வேதி யருக்காகுமற்றோர் இனம்போலேபூண் மிகுத்தது வச

ச பூருவந்தரு நிலத்துமன்னவன் பூணவெகுசெல்வம் குவித்தது
சாருமிகலதை அறுத்துலகெங்கும் தன்பெருங்குடைக்குட் கவித்தது
பாருமிருகம்பல் பூதகணதிகள் பருநோயண்டாமல். அவித்தது
ஆரும்நடுங்கிடும் காலமிருத்தியுவை அணுகொட்டாமற்சம் பவித்தது வச்

விருத்தம்.

புகலுமிந்த வச்சிரத்தின் காந்தி பேதம்
புள்ளடிதா ரகம்புள்ளி ரேகை யென்னும்
வகையுடனெண் குற்றமது தேர்ந்து நீக்கி
மதிக்கவொண்ணு விலையுளதா யிலேச தாகி
மிகவொளியாத் தெளிவுளதா யணிவோர் போரில்
வெற்றிகொண்டு செருமகளுக் கன்ப னாகத்
தகைமைபெற்று வாழ்குவரென் றமைச்ச ருக்குச்
சாற்றினார் வாரணத்தோல போர்த்தினாரே.

மரகதத்தின்பெருமைகூறுதல்.

விருத்தம்.

வச்சிரத்தைச் சுமங்கலிக மூத்திற் பூணும்
மங்கலத்திற் பதித்தணியக் கூடா திப்பால
பச்சைவர லாறுரைப்போம் வலன்பித் தத்தைப்
பருந்தினங்கள் தமதிரைக்கா வாயிற் கவ்வித்
தச்செயலாய்ப் பறக்கையிலித் தரையில் வீழ்ந்து
தங்கியதோர் தோற்றமுண்டா மலாமல் வெவ்வே
றிசகத்தி லுதித்ததுவும் புகழ்ந்த காலை
ஏறுமையன் அமைச்சருக்குக் கூறுவாரே.

பைரவி, ஆதி.

பல்லவி.

மரகத்தைப் பாரும் மந்திரிமாரெல்லோரும்

அநுபல்லவி.

தரணிபுகழுமரசர் தமக்கணியத் தக்கதிந்த மரகத

சரணங்கள்.

க காணும்அருணனுதித்த முட்டையோடடை வினைதமாது
கருடனுக்கிடையில்அணிந்த மாற்றம்
பூணுமோட வனசுரபி லிருந்துதப்பிவீழ்ந்த திருதப
புவியில்உதித் ததொரு தோற்றம் திவ்ய மரகத
உ அரிஅணங்கா வரகும் அரன தேய்ந்தரிய ரகுமரன்
ஆதியுண்டாம் விந்துவைஇப பார்மேல்
கருடன்கொளவித் திருக்கநாட்டும் கடலினும்வி டுகுமிடத்தில
கதித்தெழும்கருடப்பச்சைஇ தாமே திவ்ய மரகத
ங அரியகாடம் சுப்பிரம்காள மெனும்குணமூன் றிற்காடத்தில்
ஆறுகுண மைந்துதோஷம் உதிக்கும்
தருகுணமோ ராறும்காடம் உல்லசிதம் பேசலம்பித்
த்கீமுத்தம்பி ருதுகமென்றே கதிக்கும் திவ்ய மரகத
ச பின்னும்காடம் அறுகிதழாம் உல்லசிதம் மெலியதாகும்
பேசலம் சாலிநுனிபோல் விளங்கும்
மன்னும்பித்த கம்கிளிச்சிறைமுத்தம் துளசியிலே
மற்றதுதா மரைஇலைபோல் துலங்கும் திவ்ய மரகத
ரு தோஷலே சாவிதம்துஷ்டம் தோஷமூர்ச்சி தமிதமறித்
தோஷலேசம் மஹாதோஷம் சிறக்கும்
தேடுமெனு மிச்சைஅர ளிருவளேமு ளரிஇலை
சிகியிறகைத் தாமதுபோல் சிறக்கும் திவ்ய மரகத

நீலத்தின்மகிமைசொல்லுதல்·

உச்சரிகின்ற தோஷம் ஓரைநதும்விலக்கி நன்றும்
பச்சையைப் பூண்போர்நாலு பங்குடைச் சேனே யோடும்
இச்சகத் தினிற்சுகம்பூண் டிண்டவாழ்ந் திருப்பா ரப்பால்
மெச்சும்நீலத்தின்வண்மை விரித்தையன் உரைக்கின்றனே.

கல்யாணி ஏகதாளம்.

பல்லவி.

நீலமகிமை கேளுமமைச்சரே விலையில்லாத நீலமகிமைகேளும்

அநுபல்லவி.

ஏலுமசுர னுனவலன்கண் இந்திரநீலம் மகாநீலமென்னும்
ஆலமுண்டவன் கழுத்தொளிபோலே அவனியிலேசம் பவிதமாகிய

சரணங்கள்.

௧ பாரும்இந்திரன் விசுவரூபனைக் கொன்று வரும்
பழிவிலக்கிடச் செய்யும்பரிமேத மென்று
சாருமகத்திலே மப்புகைமுன நின்று விழி
தமைஇமைக்கவொண் ணாமனுலகத்திற் சென்று
ஊறுமப்பரி விழியிலேயிருந் தொழுகும்பீளைசிந் தியநிலத்திலே
சேரவுற்றதி னாலேஇந்திர நீலமென்றொரு பெயர்விளங்கிய நீல

௨ கதிரவன்தனைத் தழுவமனைவி பயந்து தவம்
கருதித் தனதுநிழலைஉருவா நினைந்து
பதிகொளத்தெரிந் திரவிவர்க்கண டறிந்து பெண்
பரியும்அவ்ரும் பரியுமாயோடித் தொடர்ந்து
இதயத்தில்மய லடக்கவொண்ணமல் இந்திரியமெ மூக்குசிந்தவும்
சிதறும்புலத்தினிடையிலேவந்துசெனித்துமாநீலமெனப்பெர் கொண்ட நீல

௩ வெண்மையைக்கலந் திருக்கில்அந்தணர்க் காகும் அருண
மேனியைக்கலந் திருக்கில்மன்னவர்க் காகும்
ஒண்மையெரிபோற் கலக்கில்வைசியர்க் காகும் செம்பொன்
ஒளிகலந்திருப் பிற்சதுர்த்தருக் காகும்
நன்மைபெருகத் தரவருமிந்தநால்வருணத்தின் பேதம்தெரிந்து
ண்மைபெருகும் அமரர்களுடன மனிதர்களுமெய்க் கணியச்சொல்லிய நீல

கோமேதகமகிமை கூறுதல்.

விருத்தம்.

ஓதுமிந் நீலம்பூண்போர் உற்றிடு வோர்கல் யாணம்
ஆதலா லிந்திரநீல மணிவோர்பாற் பாக்கியந் தொட்
டேதமில்லாமலோங்கும் என்றையன் மொழிந்திப் பாற்கோ
மேதக முண்டானத்தை விரித்தவர்க் குரைக்கின்றாரே.

சிஞ்சுடி, ரூபகம்.

பல்லவி

கோமேதக மகிமைகண்டு கொள்ளும் மந்திரிமாரே

அநுபல்லவி.

பூமேவலம் மாமேல்நிணம் தாமேஇந்தப் பூமேல் கோ

சரணங்கள்.

௧ ஒளிமேவுநெய்த் துளிபோலவே தெளிவாவடி வுளவாம் கோ
௨ மேனின் றிழி தேனின் றுளி போல்நின்றொளிர் காணும் கோ
௩ பாரும்பசு நீரின் துளி சேரும்ஒளி யாரும் கோ
௪ மெலிதாயொளி நலதாத்திணி யுளதாம்குணம் நலதரும் கோ
௫ மின்னும்பசும் பொன்னின்கதிர் மன்னும்பின்னும் இன்னம் கோ

புருடராகமகிமைசொல்லுதல்.

அரியகோ மேதகத்தை யாராய்ந்து பூண்கின்றோருக்
கிருளெனவ ரும்பாவம்தேய்ந் தெப்போதும் பரிசுத் தத்தை

தருகுமியா வருக்குமென்று சாற்றினா ரய்யனிப் பால்
புருடரா கத்தின்செய்கை புகழ்ந்தவர்க் குரைக்கி ன்றாரே

அடாணா, ஏகதாளம்.

பல்லவி

புருடராக மகிமைகேளுமே மந்திரிமாரே புருட

அநுபல்லவி

இரணியாக்ஷ னுயிரைக்குடித்து நரசிங்கம்வாயைத் திறந்துசிரித்துத்
தரணியிற்பொன்போல் கக்குமிட்டத சுரனகம்விழுந் துதித்துக்கதித்த

சரணங்கள்.

க கிட்டிவருஞ்சூரியருள்கண டோட்டவே ஒளிதருதுச்சி வட்டமாக மெலிதுமாகவே
சுட்டகனகம் போலொளிவளர்ந் திட்டவிரெரி யெனவமைந்தொள்
இடமெனம்கவர்ந் திலகுகும்பெருமை தொடமுகிலவந் துருவமெடுத்த புரு

உ வந்துபரிரி யாத்திரிமலையிலே கொடுமுடிபோ லவ ளர்ந்திலங்கும் வடக்குத்
மந்தரமலைச் சாரிலேமயன் இந்தமணியி னாலமிருத்த (தொலையிலே
இந்திரனுக்கோர் நகருமரசும் தகதுலவுமணை டயமும்சமைத்த புரு

ங பத்தியுடனிம் மணியைபபூண்பரே ரனதானியசம் பதுமுதலா வளரக்
யுத்தகளத்தி லேஎதிர்த்திடும் சத்துருக்களை வேரறுத்தவர் (காண்பரே
வெற்றிமாலையும் சூடுவீரெனறு இத்தரையிலவல் லோர்களுரைக்கும் புரு

வைடூரியரத்தினத்தின்மகிமைகூறுதல்.

விருத்தம்.

புருடரா கத்தன்மை மொழிந்தோ மிபடால
புரியும்வலன் கேசமிளா விருதகண டத்தில
உருவெடுத்துச் சிங்களம்கோரக்கம் சீயம்
ஓங்குமலை யம்மகதம் திரிகூ டாதி
பெருகியதே சம்தீபம் கடலி னுள்ளும்
பிறந்திறுதி முகில்டிக்க நிறம்வெவ் வேறாய
உருவுறுவை டூரியத்தின் மகிமை கூற்றை
ஒடுக்கின்றார் அமைச்சருக்குத் தொடுக்கின்றார்

சாவேரி, சாபபு.

பல்லவி

வயிடூரியவர லாறும்மந்திரி மாரேசொலகிறேன் உளம் தேறும்

அநுபல்லவி

வியனுல கும்புகழும் வெற்றிபெ றுகுமர
சியலைநடத்தும்வேந்தர்க்கோர்க்கும்வி லைமிகுத்த வயி

சரணங்கள்

க பூனைவி ழியைப்போலும் பொருவில்வே லைபோலும்
கானம யிற்பிடரிக் காந்திபோ லும்நிறத்த வயி

உ கண்ணுக்கி னிதாயுளம் கவரும்குணமுளதாத்
திண்ணிக்கை யுமுளதாத் தெளிவாவிலைமிகுத்த வயி

மெய்யொளி வலமிட மேலகீழ்விடக்கண்டது
செய்யஅந்தணர்முதல் தெரிந்தணிந் திடவுற்ற

பவளமகிமைசொல்லுதல்.

விருத்தம்.

வயிரேரி யத்தினவளம் புகன்றே மிப்பால்
வலன்தசைதென் புலத்தவரை அயன்ப டைக்கச்
செயுமிடத்தும் மதுகைட வாளை மாலோன்
செகுத்தொழுகும் குருதிதங்கு மிடத்தும் இந்திரன்
சயிலமதின் குலத்தைஇற கரிந்த சோரி
தங்குமிடத் தும்வீழ்ந்து பவள மாகப்
புயலிசேர் அமைச்சருக்குண் டான வாறு
போதித்தார் தக்கன்மகம் சேதித்தாரே

புன்னாகவராளி, ஆதி.

பல்லவி

செம்பவளவளமைபாரும் இந்த

அநுபல்லவி.

அம்புவி புரக்குமன்னர்க் கணியஅரி தாரும் செம்பவ

சரணங்கள்

தண்மையுடன்மொழிந்து பறக்கும் இளியின
தனமூககுப போலும்கொவ்வைக் கனிபோலும்சிறக்கும்
செம்முருக்க மலர்போலும் நிறக்கும் ஒளிரும்
செவ்வரத்த மலர்போலும் குணவிப்ரம் பிறக்கும் செம்பவ
இன்னமும் கேளும்வெளி வுற்றல திருகல
இடைசிறுத்தல் பூண்போலே இருதலைத டித்தல்
பின்னும்கோணல்புழுஅ ரித்தல் தமர்க்கண
பிசுகல்முக மொடிதல்எனும்குற்றம்அறி வித்தல செம்பவ
மங்கும்தரித்திரநோய் நீக்கும் திருத்தா
மரைமகளும் மனமகிழ்ந்து பெருநிதியைச் சேர்க்கும்
மங்கைமார்கள்தமககே ஏர்க்கும் தரிக்கில
மைந்தன்முதற் பேறுகள்மென் மேலும்வசதண் டாக்கும் செம்பவ

நவரத்தினங்கள்அணியும் முறைமைசொல்லுதல்.

விருத்தம்.

நீடியமா ணிக்கமுத்து வயிரம் பச்சை
நீலமேதக்கம்புருட ராகம் துபபு
கூடியவை ரியமா மென்இவ் வண்ணம்.
கூறியஒன பதுமணியின் குலம்குணங்கள
நாடியவா ரம்கிரகம்தெயவம் பூசை
மண்ணுமல ராதிவெள்ளி அம்ப லத்தில்
ஆடியசுந் தரநாதர் வணிகரா வந்
தாற்றுவார் அமைச்சருக்குத் தேற்றுவாரே.

சுருட்டி, சாப்பு.

பல்லவி.

ஒன்பது மணிகளும் அணிகின்ற முறைமைதேர்ந்
துரைக்கக் கேளும் மந்திரி மாரே

அநுபல்லவி.

உம்பர்வேள் வியில் மூந்த உரைத்தவ லன்சிதைந்த
தம்புவி யில்வி மூந்த தநிலுல்வந் துபிறந்த ஒன்ப

சரணங்கள்.

முந்துவா ரத்தில்மாணிக் கத்தைசசூரியனாக
முளரிம லரைக்கொண்டு சூடி
இந்துவா ரத்தில்கித்தி லத்தைச்சந் திரனாக
இசைத் தாம்பல் மலரினால் நாடி
உந்தும் பௌமவாரத்தில் துப்பைஅங் காரகனென்
றோங்கும் வாழைமலரைக் கூடி
வந்து சௌ மியவாரத்தில் பச்சையைப் புதனாக
மல்லிகை மலரால பூசைசெய் துகொண் டாடி ஒன்ப

குருவாரத் தில்புருட ராகத்தைக் குருவாக
கோகன கவிதழ றாறும்
பிருகு வாரத்தில்வச்சி ரத்தைச்சுக் கிர னாகப்
பெருகும் செங்கழுநீர்ப்பூ வாலும்
திரவாரத் தில்நீலத்தைச் சனியாக மந்தாரச்
செழிக்கும் தூயமல ராலும்
இரவிவா ரமேதகம்இந்துவா ரம்வைரியம்
ஏர்க்கும்கமல மாம்பல் பூக்கொண்ட ணிந்து மேலும் ஒன்ப

வச்சிர முத்திரண்டும்வே தியனாக மாணிக்கம்
பவளமிரண் டுமன்னனாத் தேர்ந்து
இச்சைத ரும்புருட ராகம்மே தம்வைரியம்
இதுமூன்றும் வணியனென் றேர்ந்து
பச்சை நீலமணியி ரண்டுஞ்சூத் திரனாகப்
பாரில றிந்தோர்சொல்வர் கூர்ந்து
இச்சகத் தினில்யாரும் மெச்சும்படிக்கொண்டதென்
றிலங்கும் காலுசாதியாத் துலங்குமகிமை யோர்ந்து ஒன்ப

ஆணித் திலம்பச்சை இரண்டும்சத் துவகுணம்
ஆகுமென் பதறிந்து தேறும்
மாணிக்கம் பவளம்கோ மேதம்பு ருடராகம்
வயிரியம் வயிரம்இவ் வாறும்
ஊணிக்கே ளும்ராஜத குணமாகு நல்லால்நீலம்
ஒன்றும்தா மதகுண மீறும்
தோனும்நவமணியின் குணமிந்த வகையென்று
சொல்லும்பொ ருளுமாய்ந்த வல்லோரு ரைக்குமாறு ஒன்ப

விருத்தம்.

நவமணிபூண் விதியுரைத்தா சனத்தின் மேலே
நடுவேமா ணிக்கமணி வைத்தெண் டிக்கும்
தவளமுத்தா திகளைரவி மண்டிலம் போல
தகவமைத்தி ரவிமுதலொன் பதுகோ ளாகக்
கவனமுடன் முன்னுரைத்த மகுடமொன் றும்
கையிலெடுத் துத்தரம்பார்த் தீசன தானே
புவிபுகழும் வணிகரா யிருந்து பூசை
புரிந்திட்டார் குடதிசைபார்த் திருந்திட்டாரே.

வணிகராக்வந்தகடவுள்மறையப் பாண்டியனுக்கு முடிசூட்டல்.

இதுவுமது.

இம்முறையாக கதிர்மணிமுடியும் பதையும் பூசித்

மனமகனுக் காயுசும்செல் வமுமென் மேலும்
வளர்ந்தேறக் கடவதென்றே பரிந்து வாழ்த்தி
அம்மணியைத் தனிவணிகர் கொடுத்தார் முன்னே
அண்டமுட்டும் இந்திரவிமா னத்தை நோக்கி
மைம்மலிகண் டனைபணிந்து இருகை யேந்தி
வாங்கினன் வழுதிமகன் ஓங்கினனே.

திபதை — சௌராஷ்டிரம், ஆதி.

க பாருமீசனுக் கன்புசெய்துயர் பண்புசேர் முனிவோரே கொன்றைத
தாரையமைத்த வணிகர்மணிதந் தபின்கதைஅறி வீரே

உ தென்னனமைந்தனை சகுழுமமைச்சர் திருமுகங்களை நோக்கி இந்த
வன்னமணியி னாலேஇழைத்து மாமவுலிஉண் டாக்கி றும்

௩ குழந்தைச்சிங்கம்போ லேவிளங்கும்இக் குமரன்சென்னியில் சூட்டி என
பழுதில்லாதிவன் பெயர்அபிஷேக பாண்டியனென்றுபா ராட்டி

௪ அம்புவிபாரு மென்றுவணிகர் அகமகிழ்ந்தே தும்பினனே உயர்
செம்பொன்னளந்து கொணர்ந்தமைச்சர்கள் செலுத்தநின்று பார்மேல்

௫ அகமலர்ந்தருள் பொழிந்தங்கிருக்கும் அரசிளம்பாலன மீது அருள்
நகைபுரியும்வ ணிகரையங்குகா ணுமற்றிகைக்கும் போது

௬ அமையும்சபையி லோருருவாக அடுத்தவணிகர் தாமே பினனும்
உமையவளுட னிரண்டுருவாக உயர்ந்தவிடையின் மேலே

௭ தஞ்சமென்றவர்க் கருளுமுக்கண்ணும் தலைமுக்கூநலுசெங்கரமும் புயங்
தஞ்சம்தேவரைக் காக்குமாறு ஆலமெழுகந் தரமும்

௮ தெரியவேவந்து வாயைத்துக்குள் சென்றுநுழையப் பார்த்தார் இங்கு
பரியும்வணிக ரிவரேயென்றுபின் படர்ந்துசன்னிதிக் கேற்றார்

௯ திங்களணியும் வேணியன்மலர்த் திருவடியிலே தாழ்ந்து எழுந்
தங்கைகுவித்துத் துதித்துப்பெருகும் ஆனந்தக்கட லாழ்ந்து

௰ யானுமெனது டலுமென் பொருளும் யாதுமுனதென் னய்யா — உயர்
வானுதவுதற் கிவ்வுலகங்கைம் மாறென்செய்யு மய்யா

கக என்றுபோற்றவும் தென்னனமகனுக் கெழில்மணிமுடி தரிக்க — வெள்ளி
மன்றவனருள் மணிதந்தானென்று வல்லவர்களுச் சரிக்க

கஉ சிவனேமணிதந்த தினாலே இந்தச் செகத்திலமகிமை யேற — தென்
புவிஅனேகநா ளாளுவானென்று புகழ்ந்துபெரியோர் வாழ்த்த

கங மதுரைநாதனுத் திரவுபெற்றுசீர் வசனமுனிவோர் கூறத் — தென்னன்
புதல்வனமைச்ச ருடனரண்மனை புகுந்துசந்தோஷம் மீற

கச வந்திருக்கையில் பரிசைகூடதெரிந்த மந்திரிகளும் கண்டு — அய்யன்
தந்தமணியை நோக்கியேஅதி சயித்துசசந்தோஷம் கொண்டு

கரு சம்புவானவர் உடுக்களையும் கோள் தமையும்கொண்டொளி விரிக்க — மிகப்
பண்புபெருகும் நவமணியாகப் பண்ணினரேயென் றுரைக்க

கசா துலங்கும்தாளிலும் மார்பிலும்சாமி தோளிலும்காந்தி கதிக்க — அணிந்
திலங்கும் பன்னக மணியேயாதந்தது யாதேயென்றுள மதிக்க

கஎ தெய்வலோகத்தி லும்இம்மணிபோல தேடருமொளி அடுக்கத் — தந்து
கைவருமணி யெனவேபரிக்ஷைக் காரர்கள்சொல்லிக் கொடுக்க

கஅ அம்மணிகளை வாங்கிமப்பனுக் கதிகம்கலவியில் பதித்து — வாளும்
கம்மியராலே எழில்பெருகிய கதிர்மணிமுடி சமைத்து

க௯ செழியனமகனுக் கபிஷேகம்பண்ணித் திருமுடிமாலை யணிந்தார் — சாமி
மொழியும்வண்ணமே நாமதேயத்தை முதுமறையவர் புரிந்தார்

உ௰ வீதிவலம்வந்த தமைச்சர்களுடன விமலனடியைச் சார்ந்தார் — மந்
நீதியரசர் புகழ்ந்ததமது நெடுமாணமனை சேர்ந்தார்

விருத்தம்

இரதவிதமணிமுடிபுனைந்துசெருமகளபுயத் திசையபிஷேக பாண்டியன
இரதகஜதுரகமனனவர்கள்மணிமுடிகள்தன திருசரண மலரணியவே
அநதமுடனமனுநீதி செய்துபுயலபைங்கூழ ஆதரிக்கின்ற முறைபோல
அருள்தந்துவையகம் தன்னை இறைமாக்ஷிசெய் தாணடுவருகின்ற நாளில
தநதைமகிழவைப்பாடி மைந்தராகியகொடுந் தறுகண்ணரைப் பிடித்துத்
தனதுமுடிமுதலமீள வாங்கினுனெளிபரவு சந்திரகுலம் பெருகவே
புந்தியினுவந்திதைச் சொலவர்கேட்பவர்களசம் புத்திரசம்பத் தின்பமும்
பூணுமணி ஆரோக்கியமும்பூணடிவேர்பின புராரியுலகம் புகுவரே.

ஆகவிருத்தம் உஉ கீர்த்தனை ௰ச தருக ஆக கூஎ

பதினேழாவது முற்றும்.

உ

சிவமயம்.

பதினெட்டாவது

வருணன்விட்டகடலை வற்றச்செய்தபடலம்.

அவதாரிகை — விருத்தம்.

நதிமதி அணியுமீசன் நவமணி வழுதிக்கீந்த
கதைசில வுரைத்தேனிப்பால் கருமையாத் தமதுசென்னி
வதிதரு முகிலையேவி மதுரைமேல் வருணனவிட்ட
உததியை வறப்பச்செய்த உண்மையை இனிச்சொலவேனே.

அபிஷேகபாண்டியன்சோமசுந்தரர்க்கபிஷேகம்செய்தல்.

இப்புவியைப் புரக்கும்அபி ஷேகபாண டியன்
ஈசனுக்கு நிதமுமபி ஷேகம் செயது
கர்ப்பூரக் குழம்பணிநது பார்த்து நீயே
கர்ப்பூர சுந்தரனென் றேத்தி வாழ்த்தி
அற்புதமா வருநாளில் மேட மாதத்
தடுத்துவரும் சித்திரைநாள் மதியம் தன்னில
னட்புடனே அபிஷேக சாமான் கொணடு
கணணிஞன் அபிஷேகம் பண்ணி ஞனே.

தோடி ரூபகம்.

பல்லவி.

அபிஷேக பாண்டியமன்னவன் அபிஷேகம் சோமசுந்தரர்க
கதிசய மாகசசெய்திடும் அருளமை அறிவீரே.

அநுபல்லவி.

அபிஷேகம்பரிநதுருத்திர ஜபஹோமாதிகளுடனேசை
வாகமத்தின் முறையாகவே ஆர்க்கும்தவ முனிவோர்களே

சரணங்கள்.

எண்ணெய நெய்தயிர் பால்மது எலுமிச்சங் கனிரதமும்
கண்ணும்கந்த ஜலமும்இட்சுரசமும்ஐந்த முதமும்
தண்ணரும் கர்ப்பூரோதகம் தருமந்திர ஜலமினமும்
நிர்ணயமில் லாச்செவ்விள•நீரும்பன் னீரும்பொன் னீரும்மன் னீரும்கொண்
டபிஷேக
நல்வஸ்திர மணிபூஷணம் நற்சந்தனம் கருப்பூரம்
சவ்வாதுகுங் குமப்பூமுதற் சாத்தி அலங்காரம்
வில்வமுதலாம் பத்திரம் வெவ்வேறர்ச் சித்தாயிரம்
சைவவட்டமும் நீர்ப்பூ தருப்பூசெடிப்பூ கொடிப்பூ முதலணிந்து அபி

தோயும் தயிர்பால்தேன்இருதம் சூபமுடன் திவ்வியான்னம்
ஆயும்பல கனிபக்ஷணம் அக்காரம்சித் திரான்னம்
சாயும் தென்னங்காய் பானகம்தாம்பூலம்தக் கோலமினனம்
ாயசங்கள் முதலாப்பல பாத்திரம்பூர்த்திசெய் தாற்நிவேத்யம்செய்
தபிஷேக
சேரும் நறும்புகையும்பல தீபாரா தனை நிரையும்
பாரும்மணிக் குடையும்சூரிய பானுவெணசா மரையும்
சோராமலே கானமுடன் தொந்த்துசசெய்யும் பதினறுப
சார்முட னேபலபல தாளங்களமேளங்கள் காளங்கள்கோஷிக்க அபி

விருத்தம்.

சிந்தைமகிழ்ந் தபிஷேக பாண்டிய னெனனும்
சிவபக்த சிகாமணிபூ சிக்கும் போதே
இந்திரன்வச் சரம்தோறும் பூசைசெய் வான்
இயற்கையினு லன்றவனவந ததனை நோக்கி
அந்தமட்டும் தாழ்ந்துபொற்று மரைநீரில தோய்ந
தம்மலரும் பறித்துப்பூ சனைசெய் தேதநி
புந்திமகிழ்ந தவனிருக்கும் சபையில வநது
புக்கிருந்து பாண்டியனை மெய்க்கின ருனே.

இந்திரன் வருணனுக்கு முந்தி ரந்தின் பெருமை கூறல்.

விருத்தம்.

தேவர்கோன் மெய்க்கையிலவா ருணன்வந தேத்திந
திருமுகம்பார்த் தினறிளைபபுற் றிருக்கும் வாறுண
டாவதே தெனக்கேட்கத் தென்னவ பூசை
ஆகுமட்டும் காத்திருந்து மதுரா நாதன
சேவடிபூ சித்துவநத இளைப்பென் ருேதத
திரும்பியுமவ் விலிஙகநதான பெரிதா மோவென்
ருவலுடன் கேட்கவிருத் திரன்றனைச்சங
கரித்தவன தின்புகழ்ச சரிக்கின ருனே

சௌராஷ்ரம்டி, சாப்பு.

பல்லவி.

முத்திபுரம்போலே உத்தமக்ஷேத்திரம் மூவுல கத்திலுணடோ.

அநுபல்லவி

சிவ பத்தசிகாமணி என்னும்பெரும்புகழ் பெற்றுயர் பாணடியன்வாழும் கதம்
பத்தருமேவிஎந் நாளும் வன மத்தியிலேவளம் நீளும் முத்திபு

சரணங்கள்.

க மந்தரம்வெள்ளி மலைமேருவர்திஇம் மாதலங்கட்குமுன் தோணும் அன்றி
முத்தியுகத்தெம்மால அர்ச்சிக்கும்சுந்தர மூர்த்திக்கிருப்பிடம் காணும் எமை
வந்துதொடரும்கொடும்பழியோடுபாவங்களைபபோக்கிமுன்மாணும்வெள்ளைத்
தந்திக்குத்துர்வாச ரிட்டகொடும்சாபம் தன்னையுமாய்த்தின்னம் நீணும் பல
ப்ரதவிளையிருள் நாணும் துவாத சாந்தமெனுமிசை பூணும் முத்தி

உ அங்கயற்கண்ணைத் தெரிசிக்கில செல்வம் அனைத்துமேவந்துகைகூடும் செ
பங்கயவாவியி லாடிடிற்புத்திரசௌபாக்கியமுதலாக நீடும் மூல (ம்பொற
லிங்கதரிசனைத் தாலேளப்பாவமும் நிலலாமலேவெருண் டோடும் துய்ய
க்னகமுதலாக ஆயிம்பலனும்ம கப்பலனும்தரும் வீடும் செம்
பங்கயக்கண்ணனும் நாடும் மலர்ப புங்கயனுதிகொண் டாடும் முத்தி

௩ மூர்த்தியும்தீர்த்தமும் க்ஷேத்திரமும் இந்தமூன்றுலகத்திலும்ஓதும் சிவ
க்ஷேத்திரமாயிரத் தெட்டினிலும்சென்று தேடினாலும்கிடை யாது என்று
சாத்திரம்வேதாகமங்களும்கூடித்தனித்தனியேதுமெய போதும் புத்தி
வாய்த்தபிரகஸ்பதி யாலுமளந்து மகிமைமொழியக் கூடாது உற்றுப
பார்த்தாலி தற்கிணையேது கலம் பூத்தபுவந்தனில் மீது முத்தி

விருத்தம்

ஆலவாய மகிமையைவா சனைசொலக் கேட
டம்புதிமன னவனுமந்தப படியா னாலெனை
பாலுறும கோதரவியாதி தெய்வப
பண்டிதர்க்கும் அரியதுநீங்கிடுமோ வென்ன
மாலயனு லும்தீராப பிறவி நோயை
மாற்றுவர்க்குன நோயகற்ற லரிதோ ஆங்கே
நீலகண்டன செயுமவிளையா டலையினமேற போய்
நீ அறிவாய் எனவருணன நிகழ்த்து வானே

மதுரைமாநகர் வருணன் கடலை விடுத்தல்.

இதுவுமது.

வானவர்கோனையுனது சபையை நோக்கி
வருகையில்பாலொழுகக்கண் டுடனே காம
தேனுவரப் பார்த்தசகு னத்தா லிந்த
திருமொழிகேட் டேனென்றுத் திரவு பெற்று
மாணணியும் கடவுளவிளையாடல பார்த்து
வயிற்றுவலி அகற்றவெண்ணி வருணன தென்னர்
கோனிருக்கும் மதுரையைசூழக தழீயென்று
கூவினன அலைகடலை யேவினானே.

வியாகடை;

பல்லவி.

அடுத்தானே மதுரைமேற்கடலை விடுத்தானே வருணன

அநுபல்லவி.

அடுத்தா மக்கணியும் சாமிவரிப்புலித்தோல்
உடுத்தாடிடும்வெள்ளி யம்பலவாணனன்பு
தொடுத்தநாரும் புகழும் பாண்டியமன்னனுக்கருள்
கொடுத்தாடியதிரு விளையாடலைச்சோதிக்க

சரணங்கள்.

கொதித்தெழுந் துபல்பல மரங்களை வேருடனே
கொண்டுதிக் கெங்கும் மறைக்கப் பருபதங்களை
அதிர்த்தெழுந் தடியோடே பறித்துமுன் சொன்னதற
கப்பாலேஎங்கெங்கும் நிறைக்கக் கோட்டையின்மேலே
எதிர்த்தெழுந் தேயுயரும் மாடங்களில்கவாக்ஷம்
எங்குந்திவலை இறைக்க யுகாந்தத்திலே
உதித்தெழுந் துவருதல் போலேவரக்கண்டோருள்
ளோர்களும்கண்டு விறைக்க இவ்வகையாக
கதிக்கும்பல நுரைகள் வளைமச் சங்கள சங்கம்
கட்செவிகள்மகர மச்சங்க ளாமை வங்கம்
டதிக்கும்நவமணிக ளிவைகளுடன்த ரங்கம்
புருவதம்போலெழுந்து பயங்கரமாமு ழங்க அ

உ பிரமப்பிரளயத்திலும் அழியாதிருக்குமிந்தப்
பெரும்பதிக் கிடையூறு வந்திடும்போதே
சுரருலகம்தனக்கும் வருமோவராதோவென்று
துணிந்திருப்ப தெவ்வாறு என்றுநினைந்து
பரபரப்புடனெழுந் திதோவந்துவிட்டதென்று
பயம்பிடித்து வெவ்வேறு ஆலத்தைக்கண்டு
விரைவாயமரர்முன்னே ஓட்டம்பிடித்ததுபோல
வீதிக்கு வீதி தோறும் கந்திருவர்கிம்
புருடர்கின்னரர்சித்த சாரணருடன் கூடிப்
பூமண்டலத்திற்சேரும சுந்தரேசரை நாடிச்
சரணம்சரணமென்று துதித்துமிகக்கொண்டாடித்
தத்தளிக்கும்படிக்கும் இரணதிலசயு டூடி அ

௩ மூலமுனிவர்தொண்டர் புண்ணியவிருத்தர்முத்தர்
முதலனைவரும் பயந்து பயந்ததென்ன
காலம்மோ[illegible] காலம்மோஅல்லதென்ன
காரணமோவென [illegible] [illegible] [illegible]
சேலநிகரும்விழி மணவாளனேதனது
திருவிளையாடல் நினைந்து கற்பித்துவிட்ட
சிலமோகாமுன்செய்த தீவினைதானோவென்று
இரண்டுவேதங்கள் பொழிந்து என்னென்றுசொல்வேன்
ஆலமுண்டவன்திருச் சந்நிதிமுன்னே சந்தித்
தபயமபயமென்று துதித்தனைவோரும் வந்தித்
தோலமிடக்கண்டானதனை அறிந்து சிந்தித்
துள்ளம்நடுங்கும்படிக் கந்நேரத்தி லுந்தி அடுத்த

விருத்தம்.

மாலையில்இவ் வாறுததி வரக்கண் டஞ்சி
மன்னன்முன்னு ளாலமெழும் பிவரும் போதே
ஓலமிடும் மால்போலும் காலனைப் பார்த்
தோடிவரும் மார்க்கண்டன் போலும் சார்ந்து
மூலலிங்கம் தனைப்பணிந்தோ லமிடத் தேர்ந்து
முறுவலித்தருளித்தமது முடிவாழ் மேகம்
நாலினையும் விடுத்தாழி வறக்கும் வண்ணம்
நாட்டிஅப்பன் அவைக்கிரையா யூட்டினனே.

விருத்தம்

சென்றானு மெழுந்ததிநீரை வாயைத்
திறந்தருஞ்சும் போதீசன் அடியார் சென்ம
முந்நீர்போற் பசையறவற் றிடபபார்த் தும்பர்
முதலோரும் பாண்டியனுமி யாருமாங்கே
முன்னவனு டலேநோக்கி மகிழ்ந்து பாடி
முகமலர்ந்திருப்பயமா யிருந்தா ரித்தை
சொன்னவர்கேட் பவர்களிகம் பெற்றந் தத்தில்
தொல்வினைதீர்ந் தரனுலகிற் செல்வர் தாமே.

ஆகவிருத்தம் அ கீர்த்தனை ஆக—கக
பதினெட்டாவதுபடலம்முற்றும்

மதுரைக்காண்டம்
முற்றுப்பெற்றது.

ஸ்ரீமீனாக்ஷிசோமசுந்தரேசர்திருவடிகளே துணை.

௨

சிவமயம்.

கூடற்காண்டம்.

பத்தொன்பதாவது

நான்மாடக்கூடலானபடலம்.

விருத்தம்.

அரனவ னாலவாய்மேல் ஆழியை வருண னேவக்
கருமுகில் நாலால் வென்ற கதையுரைத் தேனவ் வாறே
பெருமழை யேழுமேவப் பிறகநான் முகிலாற் றனே
அரியமான மாடக்கூடல் ஆக்கிய தினிச்சொல் வேனே.

மதுரையையழிக்க வருணன் மழையைப்பெய்தல்.

விருத்தம்.

அலைகடலமன் னவன்முன்னுள அபஜ யத்தால்
ஆத்திரம்சேர்ந் திருவிழியும் சிவக்கக் கோபம்
நிலைகொளவுள் ளம்கொதிக்கக் கடலும் யாறும்
நெருப்பெழவே யோங்கியுட னெழுந்தா னிப்பால்
குலமுகிலே ழையும்கூப்பிட் டுததி வற்றக்
குடித்தெழுந்து மிகவிடித்துப் பாண்டி நாட்டில்
புலமுயரும் திருவால வாயிற் சென்று
பொழியென்று னிக்கணம்போ யழியென் றனே.

வண்ணத்தரு — சௌராஷ்டிரம், ஆதி.

க திருவால வாயின்மேலெழு முகிறகளும்கன முழக்கமாயகழ்
தரும்வாயைத் திறந்துவாரிதி வறந்திடப்புவி தெரிந்திடப்பெரும்
ஜெலமுழு தும்பருகி உடலம துகருகி
திசையும்விண் ணுமதிர விசையுடன மேவி

உ விரிபாரும் பிலத்துவாரமும் கிழிந்திடக்கடி தெழுந்து மாலவரை
இருநாலும் வெடித்திடத்தனி மேருவும்தலை சாயவூழியில்
வெடிக்குமண் டகடாகத் தொலிக்கிணை யாகமிகத்
தடித்தந்த ரத்திலிருந் திடித்திரள்வீழ

௩ இடிகேட்டா யிரந்தலைப்பணி மணிக்கணங்களும் தெறிக்கவேதிகழ்
படிதாங்கும் சேடனும்முடல் நெளித்திடத்திசை பொறுத்தயானைகள்
இருக்கும்நிலைகலங்கித் துதிக்கையெடுத்துச்செவிக்
கிணைத்துத்து ணித்துப்பெரும் துணுக்கத்தைப் பூணப்

௪ பரும்பூசணிக் காயைப்போலவே கதித்தஆலிகள் உதிர்த்திடக்கொளும்
அரும்பாரைத் துளைக்கவௌளரியந் தூணகளபோல்விழும் தாரையிறசர
பதிகொளு மீனினங்கள் குதிகொண் டெழுந்ததெனப்
பரந்தமழையிலசல சரம்துள்ளி வீழ

ரு உடுப்போலே கதிக்கும்நித்திலம் நீலம்மரகதம் ஆடகத்துகள்
சுடர்போலும் சிவந்தமாமணி கொடிப்ரவாளமும் சலந்துசிந்திய
தும்பர் அரிவையர்கள் தம்பதிகளோடே
அம்புவி யிலெறியும் பொன்பணி போலும்

சா விதியாலுற் றிடும்சராசரம் எவற்றையும்உரு மறைத்தடர்ந்துச
லதிகுழவை யகத்தையுண்ணத் தொடுத்தமாயனை நிகர்த்திருண்டுயர்
விண்ணுல குந்திசையும் மண்ணுல குமிதென்று
கண்ணுழை யாமலிருள் வண்ணம தாகக்

எ கடுகால்சுற் றிலும்விழுந்தரண போலெங்கும்மென மூடவேமணி
முடிசூடிய தென்னனுமந்நகர் உள்ளயாவரும் நடுங்கியேயிது
கடம்பவ னத்துக்கின்று அழிம்புவருமோஎன்று
கலங்கிம யங்கியுளம் தயங்கிஎல் லோரும்

அ தீராத வினைக்கு இன்னமும் தெய்வமேதுணை யென்றுகொன்றையம்
தாராடும் வேணியன்சந்நிதி புகுந்துஇந்த்ரவி மானமீதுறை
தேவதே வனைக்கண்டென செய்குவ மென்றுமுனம்
செய்திடும் விளையாடல் சைகண்டராஜன

கூ விடையோனைக் கறைக்கழுத்தனை நீண்டமேருவைவளைத்திடும்தனு
உடையோனைக் காலகாலனை தொண்டருக்கருள் அந்திவண்ணனை
வேண்டியெங் களுக்கன்பு பூண்டிர க்ஷித்தருளும்
ஆண்டவ னேயென்றோதும் பாண்டியற் காக

ய வெகுநாட்கொண் டடுத்திடும்துயர் தீர்க்குமுன்னவ னேமுன்போலவே
முகில்நாலையும் அனுப்பிஅந்நகர் எல்லைநாலகினும் சூழ்ந்துகொண்டிடை
வெளிதெரி யாமலெங்கும் பொழிய முகிலேழையும்
விலக்கி விடவேவிரைந் தனுப்பியபோது

கக திருநாலு மாடமாகி உயர்ந்துசுற்றும் வளைந்துசந்துகள்
தெரியாமல் இணங்கிநட்டகூ டாரமென்னவே போர்த்திடசிவ
புரத்தி லுள்ளவரென அமைச்சர்கள் சேனைசரா
சரத்துட னேமுன்னிலும் மிகுத்தின்ப மேவ

கஉ மலைமேலுச் சியில்சொரிந்தது என்னவிண்ணவர் மாடமீதுதி
வலைவீசி யெறிந்திடத்துளி உடைந்துதுள்ளச் சொரிந்துவாரிதி
வறட்கும் முகிலுடலம் வெளுக்கப் பொழிந்துவெட்கம்
பிறக்கத் தலைகுனிந்து கரக்கசென்றோட
வருணனும் கண்டுமனம் வெட்கினன்.

வருணன் சுந்தரேசரைப் பூசித்தல்.

விருத்தம்

சத்தமே கங்களும்பெய் திளைக்கக் கண்டே
சலாதிபனச் சம்பூண்டு நடுங்கிப் பின்னும்
சித்தமதி லேயொருசந் தோஷம் தோன்றச்
செழும்பொருனை மணிக்கரையுற் றிடுமுன் தன்னைச்

சுற்றிநின்றவயிற்றுநோ யெரியைக் கண்ட
துய்யபஞ்சு போல்மறையத் தெரிந்து தோய்ந்தே
நித்தனைச்சார்ந் துறறதுபெற் றிடலா மென்றே
நேசிப்பான் விதிமுறையால பூசிப் பானே.

சுருட்டி, ருபகம்.

பல்லவி

வருணன்பூசைபுரிந்தானே சுந்தரேசனை வருணன்பூசைபுரிந்தானே

அநுபல்லவி.

ஸ்ரீ வருண பதுமினி யாயு வாக்குமனமெய் கூடி
திருநீறிட டுக்கொண் டாடிச் சிறநதருத் ராக்ஷம் சூடி வருண

சரணங்கள்.

கங்கைய முனைவாணி முதலாம்நதிப் பெண்கள்பலரும் தோணி
தங்கள்குடம்நெடுக்கத் தண்ணீர்வாசம்தொடுக்க
கங்கணம் பூண்டடுக்க கையைநீட் டிக்கொடுக்க வருண

இன்னம்சந்தனவிழுதும் மதுவொழுகும் வனமலர்கள் முழுதும்
பொன்னுடை யும்கனக பூஷணமும் அணிகப்
பின்னுள்ள தும்கற்பகம் பெருக்கமுடன்தருக வருண

ஐந்துகனியைநதமுதம் கவ்வியம்விநதை விநதையாயமுதுசிதம்
கந்தமிகுந்த தூமம் கதிர்விளக்குகள் நேமம்
சிநதைபெருகக் காம தேனுவளிக்க நாம வருண

வருணன்சுந்தரேசரைத் தோத்திரம்செய்தல்·

விருத்தம்.

வருணதே வனுமிந்தப் படிசை வாக
மந்தனிலே சொல்லியவா றியைந்து பூசைக்
கொருமையுடன் வேண்டியசா மக்கிரியம் சேர்த்
துணமையுடன் செய்துதிக்கும் வெள்ளி போலே
அருமைதந்து நிலவொழுகும் நித்தி லங்கள்
ஆயிரம்கொண் டகமகிழ்ந்தீ ரைந்து நூறு
திருநாமம் சொல்லிஅருச் சனை புரிந்து
திகழுவான் பணிந்தெழுந்து புகழுவானே.

சுருடடி, சாப்பு

பல்லவி.

சாமிசோம சுந்தரா தழைக்கும்நீல கந்தரா

ஸ்ரீமதுரை நாதனே சேல்விழிச மேதனே
நாமன்தேடும் பாதனே மன்னும்தத்வ போதனே சாமி

சரணங்கள்

அர்த்தநாரி பாகனே அறிவில்லாத தேகனே
சத்தியசைவ யோகனே தவளநந்திவாகனே சாமி

௨ காலனுக்குக் காலனே கண்ணிலங்கும் பாலனே
ஆலமுண்ட சீலனே ஆதிதேவ மூலனே சாமி
௩ தொண்டருக்கு நேசனே தேசுறுசிம்பு தேசனே
பிண்டமண்ட வாசனே பிறவித்துன்ப நாசனே சாமி
௪ வரமருள்பிர தாபனே மதனைவெல்லும் கோபனே
பரபிரமஸ்வ ரூபனே பாண்டியவம்ச தீபனே சாமி
௫ மானணிந்த கையனே மதிமுடிக்கும் ஐயனே
ஞானமீயும் துய்யனே நம்பினோர்க்கு மெய்யனே சாமி
௬ இந்திரவிமா னத்தனே இசையும்ஐந்தெ ழுத்தனே
ஐந்துமாமு கத்தனே அளக்கொணாப்ர சித்தனே சாமி
௭ மலைவளைத்த தீரனே மங்களஉதாரனே
பொலியும்நாக ஹாரனே புரமெரித்த சூரனே சாமி

சந்தவிருத்தம்.

வருணனிசை கூறவீசன் உனதுமன தாசையாது
வகையுடனே யோதுவாயெ னவுமோத
மடியினுமதி தீதிலாத உதரவலி சாதரூப
மரையிலுடல தோயலால்வி லகலானேன்
அரிபிரமர் காணொணாத உனையளவு காணவோதும்
அடல்புரிய லானதீது நலமாக
அணிவதடி யார்கள்பாலுன் அருள்செயமு கோவிலுடன்
அதிபதிசொ லாலேகாண வரலானேன்
இருவிழியினாலேசாமி தரிசனம தாலேசூழும்
இருவினைகள் ஆகநீடி வருநோயும்
இவைகளுமலாமல்வாழும் உரியமணியாதியாலும்
இகழ்வதரி தானநோயும் இறலானேன்
தரணிதனில் ஈடிலாத அடையவரி தானவீடு
தனையுமுற லானதாலே கனிபோலே
தருமமுத லானகாலும் ஒருமையுட னேகைமேலே
தருகுமிது போலேகாணல் அரிதாமே.

இதுவுமது

சலபதியின் வாருணாதிசைக் குறுமிரண்டும்
கூடிமித்தருள வேண்டுமெனாத் தாழ்ந்தெழுந்து
பலவரமும் பெற்றேதன் பதிபுகுந்தான்
பகவன்விடு முகில்நான்கும் கூடலாலே
குலவுமிசை சேருமதுரையுநான் மாடக்
கூடலெனவி ளங்கினதி துவரபோர் கேட்போர்
நிலமிசைபோ கமும்பெற்று முடிவில நெற்றி
நேத்திரன்பொன் னடிநிழலில் நிலைகொள் வாரே

ஆக விருத்தம் (௩) சந்தவிருத்தம் (௧) கீர்த்தனை (௧) தரு ௨) ஆக ௬)
நான்மாடக்கூடலான படலம் முற்றும்.

உ

சிவமயம்.

இருபதாவது.

எல்லாம்வல்லசித்தர் திருவிளையாடற்படலம்·

அவதாரிகை—விருத்தம்.

நாடுமுக கண்ணன வேணி நான்முகி லால்நான மாடக்
கூடலாப் பெயரமைந்த கொள்கைமுன் னுரைத்தே னிப்பால
தேடிவந் தெல்லாம் வல்ல சித்தராய்த் திருவே டம்பூண
டாடிய விளையாட்டத்தின அருமையை யினிச்சொல வேனே

சுந்தரேசர்சித்தராகவருதல்·

விருத்தம்.

முத்திபுரம் தனனில்விமா னத்துள் வாழும்
மூவருக்கும் முதலான மூர்த்தி நாளும்
பத்திமிகுந தபிஷேக பாண்டிய னுக்கும்
பட்டணத்துள ளோர்களுக்கும் அடியாருக்கும்
நித்தியகல் யாணமும்சம் பத்துமென் மேல்
நிலைகொளவும் நற்கதியைப பெறவு மன்பு
வைத்தவரெல லாம்வல்ல சித்த ராக
வருகின்றார் கருணைமிகப பொழிகின்றாரே.

பந்தவராளி, ஆதி

பல்லவி.

மதுராபுர நாதர்வந்தாரே சித்தவேஷரா மதுராபுர நாதர்வந்தாரே.

அநுபல்லவி.

மதுரா புரவீ தியிலே அரிநால வதனனுக்குமரிய பதம்நிலத்திற்படிய மது

சரணங்கள்.

க வட்டமான சடை யாருமா முடி இலங்க இருகாதினி லுமதொங்க
விட்டவார்குழையின் சோதிகண்டிருள் பதுங்கத் திருநீறணி நெற்றியில்
சட்டமாத்திலதப் பொட்டெதிர்நதவர் மயங்க ஒளிசூழவு மேயணி
நட்டியாலப்பத்த னத்திறலிடை விளங்கப் பெருகும் யோக
பட்டமேவியுரம்தொட்டபூணலசிவந திட்டகையிலணிகட்டுவாங்கமுடன
மதுராபுர

உ பாதமீதணியும் வேதகிண்கிணி சிலம்பய் லைக்கையினிலேதொடும்
சாதகும்பமய மாயொளிவீசு பிரம்பும் வெண்ணிறழி படவர
மீதிலேபடிக மாலையாடிய தழும்பும் கருணாரசம் பெருகிய
போதமேவுதே னுண்டொழுகு முகத்திலனைபும் பொலிந்திலங்கத்
தாதுலவியசெழும்போனதநிகரடியிலஒருமுபனிடபாதுகையையணிந்து
மதுராபுர

புளளிமேவுகொம் வீரவேங்கையை யுரித்து உடைகேவண மாயிடை
நளளவேயிடது தோளிலபடிகை விரித்து யோகாதிசயந்தனைக்

கொள்ளவேவலது தோளில்பொக்கணம்பரித்து உலகின்றவ ராகி
வள்ளலேயிவரென் றெண்ணவேஒளி தரித்து வந்ததோ வென்ற
குள்ளபேர்பலருமுள்ளவேயுயரும்வெள்ளிமாலவிடையைத்தள்ளிவீதியில
மதுராபுர (ட

மதுரைவீதியில் சித்தர்விளையாடுதல்.

மதுரைநா யகனிந்த வாறு சித்த
வடிவம்பூண் டிளநகைபூண்
மதிமுகத்தில் குறுவெயர்வு பூண்டு நீண்ட
மாளிகையுப் பரிகைமுந்நாற் சந்தி நாலு
விதமுலவும் சித்திரகூ டங்கள் வீதி
வீதியிலுள் ளோர்தமக்கா காச கங்கை
குதிகொண்ட தெனவுவகை கொள்ள வந்து
கூடினர் பலபலசித் தாடி னரே.

வண்ணத்தரு. — நவரோசு.

பூங்கதம்ப வனத்துநாதரிவை பாகநேகொண்டுயர் தெற்குவீதியிடை
நிலைபெற்றும்வட திசையுற்றும்பொலி
வொடுமற் றருணக் கதுபெற் றவர்பச்
சிமமடைந்துவெகு ஜனங்கள்கூடவும்
வீழ்ந்தபல்லும் நரைத்தகேசமொடு சூழ்ந்திசைந்த விருத்தர்தாருணிய
அடையச் சென்றெதிர் மொழியச் சிந்தையில்
அருள்வைத் தவர்கட கெழில்மத் தகமத்
தியில்பிரம்பைவரு டியன்புபூணுவர்
சேர்ந்தஅம்முது மக்கள்ரூபமதை ஊர்ந்தவங்குத லைக்குமாரர்மிசை
வருவித்தும் மல டிகளுக்கும் தனை
யர்கள்பெற் றிடவெட் பொடிநெற் றியின்மத்
தியிலணிந்து கருணைதந்து நாடுவர்
மாதாட்சி பெற்றுவளர் பாகனார்

உ பூண்டிடும்இழ வர்க்குமேபருவ மீண்டுவந்து சிறக்கவேயவர்கள்
மனைவிக்கும் இள மையினைத் தந்தெழில்
பெருகக் கருவற் றுமகப் பெறவைத்
தொளிசிறந்த பொடிஎறிந்து மேமிக
வீங்குகொங்கை யுருக்கள்மாறி யழ கோங்கிடும் புரு டர்க் குநேரிசைய
வடிவொக் கும்படி செயவித் தும்புரு
டரையத் தெரிவைக் கிணையொப் பவுருக்
கொடுவமைத்து வர நினைந்துமே பொருள்
தாங்குசெல்வர் மனைக்குளானதனம் ஏங்குகின்ற தரித்திரர்ள்பவனம்
அடையத்தந்துள மிகவிஷ்டங்கொளும்
இருவர்க் குமனப் பகைமுற் றிடமெத்
தவர்கைகொண்டு மிகவிலங்க வேசெய்வர்

மால்பூட்டும் வெள்ளைவிடை வாகனனார்

௩ ஆன்றுவந்தடர் குஷ்டமானதறு மூனறுகுன்ம வயிற்றுநோயொடுத
லைவலிக்கும் நய னவலிக்கும் கா
ணவலிக் குமதற் றுளவுச் சிதமைத்
துகளொறிந்து விலகவும் செய்தே ஒளி
தாழ்ந்துகணைகுரு டேற்றபேர்செவிடு தீர்ந்திடும்படி சித்தமேயருளி
முடவர்க்கும்முடல வலிவர்க்கும்குறள
உருவர்க் குமவை தொலையக் கூனவைத்
தவைபிரம்படியில அகனறுபோகவே
தாங்தெரிந்து படித்திடாமலிருள் ஆர்ந்தசிந்தையர் சுத்தஞானயுளா
றுவர்திக் கிளறமொ ழியினர்க் கும்பல
கலையொட் டுமெய்த் துவுரைத் திட ற
கருணைதந்து பொடிவழங்கு நாயகர்
வாதாட்டமுன்னிட மாடினார்

௪ வாங்குமம்பர மத்திமீதுகடு வாங்கமூர்த்தி நிறுத்தியூசிய நின்
மிசைநடடும் பெ ருவிரலைவைத்தும் கா
கரணசசுழலப் பணிமத் தகம்வைத்
திருபதங்கள சுழ லவும் செய்தே யுயர்
பாம்பதிணைபகை வற்குநேரவெளி தாம்பரந்து தடிந்துமேகமிடி
யொடுகைக் கொணடேபி றிபுனற கணடதி
சயமுற் றிடமற் றவையைக கதனத்
திசைஅமைந்தி டவி டவுஞ்செய்தே வெயில
காய்ந்திடும்பக லுக்குளேஇரவிவ ஆர்ந்திடும்பொருள் முற்றுமேதெரிய
வருவித்தும் பக லினிலமெய்க்கும் பொருள்
களைமிக் கவிருட டினடமெத தவெளிப்
படவமீத அதிசயங்க ளேசெய்வர்
மாமோக்ஷ மெய்மைதரும் ஈசனார்

௫ வாஞ்சைமிஞ்சு மதிர்சியமாகருஷ ணஞ்சனங்கிரியை ஒத்தவாதவசி
அவயஸ்தம்பமி வைகளமெய்க் கும்படி
அறிவித் தவர்பற் பலசித் திணையக்
கணமிணங்க வெகு விதம்செய்தே கதி
வாய்ந்திடும் குதி ரைக்குநேர்கழுதை ஈண்டிவந்துரு வொக்கவே விரைய
நடையிடடும் நெறி தனிலொக்கும் படி
கருதிக் கழுதைக் கிணையப் பரியைத்
திரியவிந்தைபல புரிந்துமே வலி
பாய்ந்தெழுந்த மதத்துயானைதலை சோர்ந்தஅங்க மிளைத்தநூனை வடி
வமதொக்கும் படி தெரிவித்தும் கடு
வனைமற் றவனைப் புலியொத் திடவைத்
துளமகிழ்ந்தி வைகள செயும் தயாபரர்
வானோர்க்கு முள்ளரிய நாளினார்

சித்தமதா னாம்போய்க்காண் போமென் றுள்ளம்
சிறந்திருக்கும் குறிப்பையறிந் ததற்கு முன்னச்
சித்தர்விமா னம்தனக்கு வடமேற் றிக்கில்
திருந்தினார் சிவயோகம் பொருந்தி னாரே.

கல்யாணி, சாப்பு.

க ஆனந்தச்சித்தர் சரித்திரம்இனனம் அறிந்துகேளும் முனிவோரே வி
மானந்தனக்கு வடமேற்கிருக்கின்ற வாரணம் பார்த்திருந் தாரே (ய
உ அப்போதபிஷேக பாண்டியனதைத்திங்க ளாறுதிக்கின்றதைநாடி செய்
பொற்பங்கயத்தடம் ஆடிமதுராபுரேசனதிருவடி தேடி (ன்
ங பத்தியுடனேவணங்கிப்ரதக்ஷணம் பணிவருநகால்முன் னாலே மதோ
மத்தர்களாகிய கிங்கரர்கூடி வரும்போ தவர்க்கெதி ராலே (யை
ச வீற்றுற்றவெம்புலித்தோலிலேயோகம் விளங்கக்கடவாங்கத்தினமீது கை
ஏறிட்டுக்கொண்டு சிவயோகம்சாதித் திறமாநதிருந்தாரப போது
ரு புத்திதெரியாத சித்தாளழுந்தப்போ போவெனறடிக்கடி கூறக் கண்டு
சற்றுமசையாமல் சிவயோகசமாதியிலிருக்கின்றார் ஆனந்தம் மீற (ன்
சா பினனும்வெகுண்டுநெருங்கிககளகப பிரம்பாலேதண்டிக்கநினைநதார் உட
பினனேவருகினறபாணடியனன்பு பொருகவந்தணடையி லணைநதான
எ நிச்சலமாக இருக்கினற சித்தரை நேரிட்டுக்கண்ணாரககணடான் கண்டு
மெச்சியமனனன திசயம்பூண்டபின மெளமேலுமானந்தம் கொணடான்
அ தேவரீராரெந்த நாடெந்தவூரும் திருநாமமேமதெநத ஊரில வந்து
மேவியதெனன வரும்வித்தைதான் னெனறு மீனவனகேடடதனபேரில்
கூ நாநாதேசத்திலும் நாடுபுரத்திலும் நாடிவரும் சித்தர் ஆமே இபபோ
தானாலும்காசிமீர தேசததிலகாசி அதனிலவசிக்கினற தாமே (சை
ய மற்றுமநாதன்தனித்துப் பிச்சைபபெரு வாழக்கைகசேர்நதிநகிலம் பகழும்
வத்தலமெங்கும் திரிந்துவநதோமிஙகும் வநதடுத்தோம் ஞானம்திகழும்
கக முத்திபுரத்திலவசிக்கினறமாணிடர் முற்றும்சிறக்கவைநதடுத்தோம்எநதம்
சித்துவிளையாடல காட்டிஅவரவர் சோதித்தவாறெலலாம் கொடுத்தோம்
கஉ காணுமறைமுதல நாலிரணடெட்டுக் கலையினும்எம்போலிப்பூமேல கலவி
ஆணவம்பெற்றோரொருவருமிலலையெல் லாம்வல்லசித்தர்நாமமே (கை
கங ஈண்டெமக்குனறனாலேபெறததக்கது யாதுமிலலையெனறுமொழிநதார்ந
பூணடகத்தானநதசசித்தரிவ்வணணம்பொருநதியிருநதருளபொழிந்தார்

விருத்தம்.

பகவனும் சித்தரிவ்வா றுரைக்கத் தென்னவ
பார்த்தெவ்வா றிவரையளப் போமென் றெண்ணி
மிகவுமியோ சிக்கையிலோர் உழவன் வேந்தன
மெல்லடிதாழ்ந் தொருகரும்பீ திடவே வாங்கி
அகமிகும்வல் லவர்களிலவல லவரே இக்கல்
ஆனையைக் கரும்பருநதச் செய்வீ ராகில
சகலகலா வல்லவரும் பெருமானும் நீர்
தாமென்றான் கேட்டதீய வாமென் றானே

கல்லானைக்குக் கரும்பருத்தியது.

விருத்தம்.

செலவிலங் கிடவனிவ் வாறு கூறச்
சித்தரிள நகைபுரிந்துன் றலை மக்கோன
றொலவும்வகை யாதுமில்லை கண்டாய் நாமே
உனதாசை தீரஅருள வதலாற கற்ற
வல்லவற்கி தொருபெரிதோ மோவென் றெண்ணி
மனம்கொண்டு கடைக்கண்ணால நோக்க வேயக்
கல்லானை யக்கரும்பைக் கடித்தருந்தக்
கண்டிட்டான ஆசசரியம் கொண்டிட் டானே.

தோடி, ஆதி

பல்லவி.

கல்லானைக்குக் கரும்பருத்திய வல்லாண்மையைக் கேளும்

அநுபல்லவி.

கல்லாக்கலை கற்றவரிவரென்று பல்லாரும்துதிக்க எல்லாம்வல்லசித்தர் கல்

சரணங்கள்

க அடியார்தமக் கருளும்தி ருக்கடைக்கண் ணாலேகொஞ்சம்பார்த்ததி னாலே
மடைவாய்திறந்தாற்போலேமும்மதம் வழிந்துபெருகிடமென் மேலே
இடிபோலதிர்ந் தம்பரம்பிளக்க முழங்குகர்ச்சனைகொண்டிட பாலே
நெடிதாகிய துதிக்கையை நீட்டிப்பாண்டி
திருபன்கை யிலிருந்து சுவைமிகுந் தெருக்காலே கல்லானை

உ பற்றிபறித் தகலும்கடைவா யிரு பாலும். சாறுவழிந் தோட
சுற்றிப்பல வரிவண்டினங்க ளுண்டு சூழ்ந்து மயங்கிஇசை பாடத்
தித்திக்கக்க டித்திர சத்தையுண்டு திரண்ட துதிக்கையூச லாட
வெற்றித்தருக் கடைந்து வெறித்தங்குதன்
மெய்திமுற் கண்டுசீறி வெகுண்டுகர்ச் சனைபோட கல்லானை

ங மதியாமலே பரிசோதனை செய்த மன்னன்மனத்திலையம் மாற
விதிமாலுக்கும் காணவரிய திருவிளையாடலென்றுபலர் கூற
மதிசூடிய நமதுசோமசுந்தர வள்ளலோவென்றுள்ளம் தேற
மதுராபுரத்தனை வோரும்இவரேயெல்லாம்
வல்லசித்தரென்றேசொல்லியானந்தம்மீறக் கல்லானை

சித்தர் பாண்டியனுக்குப் புத்திரபாக்கியங்கொடுத்தல்.

விருத்தம்

கன்னலைக்கல் லானையுண்ணச் செய்த சித்தர்
கடைக்கணாலே மறுபடிநோக்க கிடஅவ் வானை
தென்னவனகண் டத்தணிமாலையைப்ப றிக்கத்
தெரிந்ததன்மேல் கஞ்சுகர்க ளெழுந்து சீற்றம்

தன்னுடனக் களிற்றையடித் திடக்கோ லோங்கச்
சமீபத்தி லுளவரும்கண் செவந்துநோக்க
மன்னனும்கண் செவந்தவர்மேல் மிகவும் கோபம்
மன்னினான் மன்னியவனை துன்னினானே

யமாவது சாபபு. (சூழந்து

௧ தென்னவன்ஆனந்தச் சித்தரைப்பார்த்துச் சினம்பூண்டிருக்கைப போதும்
தன்னருகேநிற்கும் சிங்காரசித்தரைத் தண்டிக்கவந்தார்போது
௨ சித்தரிளநகை செய்துகைநீட்டிச் செறிநதோரை நில்லுமின்எனறார் அவா
வைத்தடிபேர்க்கவொண ணுமலே சித்திரம் மன்னியதுபோலநினறார்
௩ மன்னவனந்த மகிமையைஅறிநது மகிழ்ந்துவெகுளியைமாற்றினான் சித்தர்தன்னை
பொன்னடியிற்பணிநதென்றன்பிழையைப்பொறுத்திடவேணுமென்றுரைத்தினே
௪ பத்தபராதீன ரனபுற்றரசனைப்பார்த்துனனபீஷ்டமேதென்றார் மன்னன
புத்திரபாக்யத்தைக் கேட்கததமதருள் பூரிததவ்வாறளிக்கினறார் (து
௫ பாலுறும்யானைமேல பின்னுங்கடைக்கணபதிககது திக்கையினுமேல முத
மாலையைநீட்டிக் கொடுத்திடவேநதன் மழைக்கையிறபூண்டானிய பாலே

அபிஷேகபாண்டியன் சுந்தரேசரைத் தோத்திரம் செய்தல்.

விருத்தம்

நித்திலமாலையைவேநதன வாஙகு முனனே
நேரிருந்த சித்தர் திரு வுருவம் காணுன
வெற்றிமத யானைமுனபோ லாகக் கணடான்
வெருவியடி யவர்க்காயிவ் வாடல செய்த
நித்தனெதிர் சென்றுனதா டலைசசோதித்த
நேரமெனமேற் றுதித்திடா தருளாவா யென்று
பத்தியுடன அபராதம் எநதிலைறஞ்சிப
பரிகின்றான் எழுந்துதுதி புரிகினறானே.

முகாரி, ஆதி

பல்லவி

சாமிசதாசிவஸ்வரூபா அடியேன்பிழை சகிக்கவேணும்யோகப்ரதாபா

அநுபல்லவி.

மாமுசுகுறப்புரீடும் மதுராபுரத்திலாடும் சாமி

சரணங்கள்.

௧ மத்தகஜத்தை உரித்தோனே பஞ்சபாணனை நெற்றிவிழியாலெரித்தோனே
பத்தர்க்கிவநிற்கிறவப பசுவானயெனெயெனறானை சாமி
௨ பரிபூரணனே சதானநதா சர்வக்ஞபரா பரமேநித்தனே சிதானநதா
அரியமுத்திகொடுக்கும் அருளவாரிதியேஎனறன சாமி
௩ ஆலமுணடும்பரைக் காத்தோனே காலதலையை மாலயனுங்காணப் பெம்மா
காலன்தனைக்கடிநத கதம்பவனேசாளனறனை சா (னே
௪ பரமானந்தம் அருளவைபோகா தென்னனருகயிந தரணியாளவைடவாவிடை
வரைஅரசனுக்குற மருகனேஐயாஎனறனை சாமி (வாகா

புரத்தைச்சிரித்தெரிக்கும் தீரா நம்பிரானவர்க்கு வரத்தைக்கொடுத்தருள்
பரத்துடனே இகசம் பத்தை அருளுமென்றான சாமி (கெம்பீரா

விருத்தம்

மிக்கவனபோ டேகதிஅரசன் மனை புகுந்து
விக்ரமனைப் பயந்துபண்டுள உலகம் காத்துத
தக்கவரோ டம்மகனுக் கிறைமை ஈந்து
தழைக்கும்எல்லாம் வலசித்த நருளாமோகத்தால்
நற்கதிசேர்ந் தாரெயபி யதகபாண டியன
நம்பியிதைப படப்பவர்மகட பவர்கள் டிந்து
ஓககவும்போ கழுமடைந்து ஞான பமர்கொண
டோங்கியந்தத் தனுலகைக் காணுகு வாரே

ஆக விருத்தம் ... தத்தினை உருட ஆகக்க
கல்லானைக்குக் கரும்பருத்தியபடலம் முற்றும்

உ

சிவமயம்

இருபத்திரண்டாவது

யானையெய்தபடலம்.

அவதாரிகை — விருத்தம்

கருத்துடன் கேளு ஈசன கரும்பதைக்கல லானைக் கீந்த
சரித்திர முரைத்தே னிப்பா றசமணர்பாண் டியனமேல விட்ட
பெருத்தயா வேழம் தன்னைப பெருகுமுப் புரத்தை முன்னாள்
எரித்தவெங் கணையால வென்ற திறியதை விளம்பு வேனா.

கல்யாணி, சாப்பு.

பலலவி

விக்ரமபாண்டியன் செங்கோலசெலுத்திய விதமொழிந திடக்கேளும்

முக்கணுடையோர்தன் முன்செய்த தொழிலும்
கடகாலமும்தெரி சனம்செய்து பணிந்து விக்ரம

சரணங்கள்

மன்னர்பணிந்துதரும் கடடமுதலா மிக்க
வளர்ந்துசெம்பொனமேரு மலைபோல் குவிக்க
அநயாயம்செய்யும் கயவர் டலைகளைய மறைக்க
ஆறிலொருபஙகுகொண டவனியெஙகும் செழிக்க விக்ரம

சதிசெய்யமணர்முத லாகும்கனை கடிந்து
தருமாகமப்பயிர் தழைத்துயரச் சிறந்து
ஆதிலேவிணையும்பயன் ஆரும்கொளள உவந்து
அரசர்க்குரியமனு வசனபபடி நடந்து விக்ரம

௩. சித்தனிருந்திலங்கும் நீடிய விமானத்துக்
குத்தரபாகத்தில ஓராலயம் அமைத்துச்
சித்தசாமியாகிய திருவுருவைத் தாபித்துப்
பத்தியுடனிதமும் பணிந்தெழுந்து தரிசித்து விக்ரம

சந்தவிருத்தம்.

விக்கிரம நாளிலோது கசசிநகர் மீதுவீறு
மிக்கமணர் பாதைகூடி ஒருசோழன
வெறறிவளர் மாறனோடெ திரககவெரு ளாலேகுது
வித்தைகளி னாலேதானே இகலகோலி
அக்கிரம மாகவேசெ ருத்திடவு நீலமாதி
அஷ்டகிரி மேலும்வாழ மணர்பேரால்
அக்கரையி னலவெவேறு வக்கணையொ டோலைகீறி
அச்சமறு ஞாதராலே விடமேலே
சிக்கெனவே நாலிராயி ரத்தவரும் ஏகமாக
செக்குரால்கள போலேகூடி நிரையாக
திக்குலவு நீலமேக மொக்குமவர் மேனிபோலே
சித்தமிருள் மூடவேய வனிமீது
ஒக்குதலி லாததாத கித்தொடையன் வாயிலாளி
உத்தரவி னாலேபிலி யதனோடே
உட்புகவ மேமகிழநது கொற்றவனி லாவுதானம்
உற்றுறைதல மேயினர்கள் முறையாலே

சமணர்கள் ஆபிசாரஹோமஞ்செய்தல்.

விருத்தம்

மண்டிவநத சமணர்களெல லாரும் சோழன
மாமுடிமேற் பீலிகைளைத் தாசி கூறக்
கண்டவரை நோக்கிவசிய முனனுறும் கை
கண்டவரே நீங்களபாண் டியன்தன் பேரைக்
கொண்டாபி சாரம்செய் தவன்பி ராணன்
கொளளுறுங் களுக்கெமது நாட்டிற் பாதி
விண்டுதரு வோம்விரைநது செய்வீ ரெனறே
விதிக்கினுன் அதற்கவர்சம் மதிக்கினுரே.

காபி, ஆதி.

பல்லவி

ஆபிசாரஹோமம் செயதாரே சமணரெலலாம் ஆபிசாரஹோமம்செய்தாரே

அநுபல்லவி.

பாபஹோ துவாம்வலல பாணடியன் தன்னைக்கொல்ல ஆபி

சரணங்கள்.

க பாலாற்ற திரோத்திலே மூன்றுகாதம் சாலைவிஸ்தாரத்திலே
கோலியோசனையிடை குழியைக்கலலியவற்றுள்
மேலும்அஷ்டகோணமா வேள்விக்குணடமமைத்து ஆபி

பொல்லாஎட்டிவிறகென்னைக் கிம்பநெய்விராய் நல்லபாம்பினைகறியங்
எல்லாம்முதலாகச்சேர்த் தெரிகுண்டத்தைநிறைத்து (நெட்
கொல்லாவிரதம்பூண்டார் கொடியபழி நினைத்து ஆபி
தங்குள்வனமும்கருக நந்தனவனம் தங்கியசோலையும்கருக
கொங்கலரும்பூவோடை குளம்வாவியும் வெதும்ப
மங்குலும்தீயச்சிகை வளர்ந்துகுடைந்தெழும்ப ஆபி

விருத்தம்

சித்தமிருண்டமணர்கள் வாருபிசாரம்
செய்தெழுந்தாருதிசெயுங்காலக்குண்டத்தினின்
மத்தியிலேயிருந்துமதனெழுந்தாற்போலும்
மைம்மலைபோலும்மதநீரொழுகவாயில
குத்தியகொம்புகளிடையில துதிக்கையாட
கோலியகாற்றெழுருசெவியிரண்டுமாட
மத்தமதவாரணமொன்றெழுந்துசீறி
வரக்கண்டார் நகர்க்குக்கெதிக்கண்டாரே.

சமணர்ஏவியயானை ஆலவாய்மீது வருதல்.

விருத்தம்

மதசலஞ்சொரல மேதினியதிர
மனைமெழும் யானையை யாவர் அமணர்போயகள
மதுரையுள பாண்டியனைச் செருக்கநீபோய
மலைமைசெய் வாயெனவிட்டவர்கள் பின்னே
சதுரமுள சேனையுடன் வருமுன் சென்றுத்
தந்திகமிம் கோடையிடி யிடித்தாற்போலே
அதிர்கொண்டே சர்ச்சனையிட்டொலித்தவாறே
ஆலவாய்ப் புறத்துவந்தத்தந்துமே

வியாகடை — ஆதி

பல்லவி

ஆலவாயமீதினிலே யானைவந்ததே

அநுபல்லவி

ஆலவாய்நகரைச்சுற்றிக் கோலியெழுந்தமுனைனிலே
மாலயன்நடுங்கவரும் ஆலமது போலேயெழுந்தாலவா

சரணங்கள்

அடியாளவதாழும்நாகலோகமட்டும் நாடவே
அந்தரமட்டும்உயர்ந்தெழுந்தமுடி நீடவே
இடிவிழுந்தாற்போல்ஒலிக்கின்றதசெவியிலகூடவே
எழுமேகமும்பயம்பெற்றேதிலைவிட்டோடவே
முடிவில்வரும்பெருங்காற்றிருகாதிலும் பிறக்க இரந்தகரம்
மடியுமோவென்றனைவோர்களுக்கும்உயிர் பறக்க மூன்றிடத்திலும்
கடகடெனவொழுகி வருமதநீர்மடை திறக்க அதுசிதறி
டபடெனவேபெருமழையபதுபோலவே சிறக்க வரக்கண்டவர்

நெடியபயம் பிடித்துள்ள நீலகிரி போலேநள்ள
படியிரண்டாகவேவிள்ளப் பண்ணுமோவென் றெண்ணம் கொள்ள ஆல

௨ காரைவயிற் றைக்கிழித்தனை ஞைநதுரீ குடிக்கவே
கையெடுத்துக்களை உதிர்த்திடத் துடிக்கவே
சேரும்சந்த்ர சூர்யரைக்க ளமாய பிடிக்கவே
நீடியகொம் பாலெணமலை தனையும் இடிக்கவே
வீரமுடனேயெதிர் வருவதுகண்டிம னத்தில பயமிகுந்தெல
வொருநிதெனவைஊறி காலம்மாவெனக்கக மூதில முடமிமலையை
மேலருடனே நிங்கிநிறு மகையாகதனை பறறி முன்னுளிற்பெரு
வாரிதியிற்கடையுமத்துப்போலசு ழறறி திரிக்ககணு
வாரணங்க ளெட்டும் வாடி மயங்கிமுகி லமூம் கூடி
ஒருருவ மாகச சாடி உலவிலவந்து போல நாடி ஆல

௩ சணடமத னதெியிரு காதையும் புடைதக்கவே
தாவெியி டிவிமூரு போலவே பதைக்கவே
கொணடிமீறி டோயொருகா லையெடுத்துதைக்கவே
கூறும்ஆதி சடைமுடி தனமரிசி வதைக்கவே
அடியாருக்கனச செவிகரும்காறுகள மூடிக்க எரிவிழியி
னைடினுமிருசெமூசெதுபலவைபடு பொற தெறிக்க அதைவிண்ணவர்
கண்டேகிசாிதுதெவா காரணமெ ஆபாப தூக்க மதநாற்றங்கண
டொடிசயிலுமுளள யானைகளதிரிக்கொனறுவெறிக்க பராபத்துடன
வணடாம் சனர் லைல லதுபுரிநதுபின மெலல
மணடிவநத தெனசசொலல வடைவயனல போலெகொலல ஆல

சுந்தரேசர்வேடுருவம்கொண்டுவருதல்.

விருத்தம்.

ஆனையிநத வகைகரத்தேர்ந தரசன் கூடல
ஐயனமுனபோய் முறையிடஅம் பரத்தில நின்றும்
மாநகரின கிழக்காக வோரட் டாள
மண்டபம்செய நாமொருசே வகனு வந்து
மானமிலாச் சமணர்விடும் கரியைக் கொன்றான்
மனக்கவலை நீக்கிடுவோ மெனக்கேட் டவ்வா
றனதொரு மண்டபத்தை வகுக்கு முனவந
தடுத்திட்டான வேடுருவம் எடுத்திட்டானே.

மத்தியமாவதி, ஆதி

பல்லவி.

வந்தானே சேவகனைந்தானே சோமசுந்தரன் வந்தானே

அநுபல்லவி.

வாசுகானெனிரு சகிரணபோலே வார்செவிமேற்சங்கம் புட்டிமுன்னைலே
வர்குயாவும்தேகடிச்சா ணைமுடிமேலே மயிலிறகணிநதிலங் கிடஒருக் காலே
வநதானே.

சரணங்கள் (து

௧ வாரிதிமத்தியில்முளைத்து வரும்ரவிபோல் மருங்கிற்செங்கச்சையைவரித்
சோரிவாளிடையிற் கட்டியேபுட்டில் துலங்கமுதுகில்விசித் தணிந்துபகட்டி
ஆரும்வீரகண் டாமணிகட்டி ஆரணம்தேடும்இரு காலும்சில முட்டி
வந்தானே (தொங்கமாட்டி

௨ மேலும்த டங்தோளிலேகோட்டிச சிலைவார்பூட்டும் வில்லொன்ற திலே
பாலுமையுமையொருபாதியிலமன்ன பரந்துவளர்ந்திருப்பதோவென்றுதன்ன
மாலொருபாதிபெற் றிசைந்ததோ வென்ன வனமேனியெங்கும்பசநதொளி
வந்தானே (மின்ன

௩ கண்டுகாமனும்ஆசைகொள்ள எழில்பெருகும் காளைப்பருவமொடு நள்ள
மண்டலமளந்திடு மாயன்போல்வநது வழுதிதன்னிடுக்கத்தைத் தீர்க்கநினைந்து
மண்டபத்தேறியானை தனனை எதிர்நது வரவுபார்க்கும்சிங்கம் போலே எழுந்து
வந்தானே

ஆனை இறந்துவிழுதல்.

விருத்தம்

மாதேவன் வேடுருவம் பூண்டிட் டாள
மண்டபத்திற் சேர்நதியானை வரவுபார்த் தெண
மாதிரவா ரணம்நடுங்கச் சிங்கம் போலே
மாமுழக்கம் காட்டிவில்லில் நெடுநாண பூட்டி
நாதமதுண் டாக்கிஇடக் கரத்தி லேநதி
நாரசிங்கக் கணைதொடுத்திட டிடக்கால் முன்னால்
காதளவும் வாங்கிவிட அதனால் மஸ்த
கம்பிளந்தக் கரிஇறக்கக் கண்டிட் டாரே.

காம்போதி, ஆதி.

ஆனை விழுந்ததைப் பாரும் சமணர்விட்ட ஆனைவிழுந்ததைப் பாரும்
அநுபல்லவி.

ஆனை தன்னுயிர் பதறி அவையவமெல்லாம் உதறி
வானில்மேகம்போற்கதறி மஸ்தகம்ரண்டும் சிதறி ஆனை

சரணங்கள்.

௧ தெண்டிரைசூழ்பூமி வெடிக்க சேடனாயிரம் சென்னியும்சிதைநது துடிக்க
அண்டமும்விண்டதோவென்ன ஆனையெட்டும்திடுக்கென்ன
பண்டருண்டதுபோயமுன்னம் படைத்தவீறுடனோ மன்ன ஆனை

௨ கரியுரித்தவன்தா ளாலே உதைக்கவிழும் காலனைப்போலேமண் மேலே
இருள்முகம்பிளநதொதுங்க எழுமிரவிபோல இலங்க
குருதிநெற்றியிற் பிதுங்கக் குறித்தசெம்படனைவிளங்க ஆனை

௩ புன்னெறியமணராலே சொல்லும்நெறியைப்பூணடசோழன்கொடுங்கோ
தன்னிருகொம்பாகவெலலத் தாஙகிவநதமரில நலல (லை
தென்னன்கோலையன் னல்ல சிஙகவாளியாகக் கொலல

பாண்டியன் சமணரைத்துரத்தியடித்தல்.

விருத்தம்.

மலையிலிடி வீழ்ந்ததெனக் கணைபாய்ந் திட்ட
வாயிலும்வா யிலும்குருதி சோரவே இந்
நிலமிசைவீழ்ந் திறந்தவா ரணத்தைச் சூழ்ந்து
நெருங்கிடும் சனம்பிசா சுகள்பூ தங்கள்
மொலுமொலென மொய்த்திடச்சே னையுடன் தென்னன்
மூயனைறவ்வா னையின்பின்சா ரமணப் பேய்கள்
தலைதடுமாற் றத்துடனே டத்துரத்தித்
தடுக்கின்றான் சிக்ஷைசெய்து முடுக்கின்றானே

நாதநாமக்கிரியை, ஆதி

க இந்தவி தம்தென்னனு வந்தடர வமண்டபத்
திருக்கும் வீரனருள்தன் மேலே நாடவே
கந்தரம் போற்கறுத்து வந்தம ணர்படைகள
கடுவனைக்கண்டவெலி களபோ லோடவே
உ தடிகொண் டெறிந்தவரை மறித்தவர்கைப்பீலியைத்
தட்டிபப றித்துப்பின்னும் கோப மூட்டினார்
இடையி லுடுத்தபாயு முடனேபிடுங்கிக்கிழித்
தெறிந்தாற்றில்விட்டவமா னம்செய் தோட்டினார்
ந செய்த மாயமிழந்து சேனையுடன்முறிந்து
திராப்பாவத்தில்மூழ்குண் டே யொதுங்கினார்
வைதெல் லாரும்பழிக்கத் தலையானபேரும்தங்கள்
மானம்கு லைந்தோரிடத்தே யொதுங்கினார்

விக்கிரமபாண்டியன் நுதி.

விருத்தம்

வீரமுடன் சமணரையிக் கோல மாக
வெருண்டோடச் செய்தபின்விக் கிரமத் தென்னன்
வாரணத்தைச் சங்காரம் செய்தட் டாள
மண்டபத்தில் இருக்குமய்யன் தன்னை நாடிப்
பூரணமாக் கருணைசெயதெக் காலு மிங்கே
பொருந்திவா யாரணத்துக் கருத்தம் சொன்ன
காரணனே என்றுசொல்லி மனத்தி லன்பு
ததிக்கின்றான் அஞ்சலித்துத் துதிக்கின்றானே

பலகரி, சாப்பு

க அட்டாளசந்தரனே மனமொழிக் கெட்டாமைக்கந்தரனே
உ மேருவளைத்தவனே ஷட்டா தாரமா யுற்றவனே
ந சந்த்ரகலாதரனே கருணை சிந்துவா கும்பரனே
ச முத்தொழிலபூண்டவனே தொழும் பத்தரையாண்டவனே

௫ ஆலம்அயின்றவனே அடியார் கோலமா கின்றவனே
௬ சோகநிவாரணனே லோக மோகன காரணனே
௭ சுத்தவித்யாதீதனே பரி சுத்தகுரு போதனே
௮ தீனதயாபரனே மழு மானணியும் கரனே
௯ முப்புரம்சுட்டவனே அடியார்பிறப்பறுத் திட்டவனே
௰ கங்கைமுடித்தவனே அயன் கங்கைப் பிடித்தவனே
௧௧ ஆனையுரித்தவனே ஐங்கணை யோனை எரித்தவனே
௧௨ பன்னகபூஷணனே உயிர்தோறும் மன்னிய முக்கணனே
௧௩ கண்ணன்தேடும்தாளனே கயற் கண்ணி மணவாளனே
௧௪ முத்திபுரவாசனே சீவன் முத்தி தரும்ஈசனே
௧௫ சண்டனைமாய்த்தவனே மார்க் கண்டனைக் காத்தவனே
௧௬ பஞ்சபூதாத்மிகனே சாமின பஞ்ச விதமுகனே
௧௭ முக்குணம்போனவனே தூய நிர்க்குண மானவனே
௧௮ உம்பர்கள்தேடுவோனே வெள்ளி அம்பலத்தாடுவோனே
௧௯ பூர்ணசதானந்தனே பரி பூர்ணசிதானந்தனே
௨௰ சஜ்ஜனரக்ஷகனே வணங்காத் துர்ச்சன சிக்ஷகனே
௨௧ [illegible]குலசேகரனே! பூதல வம்சரக்ஷாகரனே

விருத்தம்

விகடமதப் பாண்டியன்சூர் தானை எற்றி
வெருவாம்பொற் றலவாய்ப் பிரானைத் தாழ்ந்து
திகைகளெல்லாம் புகழ வருநாள் ராச
சேகரனைப் பயந்துலகாண் டிருந்தா னிப்பால்
நக்னர்விடும் கரிமலையிற் செய்புளாகி
நரசிங்க வடிவமுமா கியதே யித்தை
மிக்கவுரைத் தோதுவர்கேட் பவரபீ ஷ்டம்
மேவியிருந் தரனுலகிற் சேர்வர்தாமே

ஆக விருத்தம் ௯௰ கழிநெடில் ௧ கீர்த்தனை ௬ தரு ௧ ௨௨ வது முற்றும்.

உ

சிவமயம்.

இருபத்துமூன்றாவது

விருத்தகுமாரபாலரானபடலம்.

அவதாரிகை — விருத்தம்.

திருத்தன்சே வகனுவந்து நிசம்கெட்டசமண ரேவும்
பெருத்தவா ரணத்தை வென்ற பெரும்புக ழுரைத்தே னிப்பால்
விருத்தராக் காளையாய்ப்பின் விளங்கிய குழந்தையாக
உருத்தரித் தாடல்செய்த உண்மையை இனிச்சொல் வேனே.

புன்னாகவராளி, சாப்பு.

க வேதமுனிவர்களே கேளும் விக்கிரமபாண்டியன்பு விக்கரசாய்
நீதிசெலுத்தையிலே புகழ் நீளும்மதுரையில் வாழுகின்றான்
உ பாரும்ஒருமறையோன் விரூபாக்கனெனும்நாம மேற்குமவன
நாரிசுபவிரதை என்னும் நாமதேயம்பெற்ற மாமனையாள்
ந குழவியிலலாக்குறையால அவர் கூர்ந்துபல தர்மம் வாய்ந்துசெய்து
எழுமாதரைப்பணிந்து தவம்ஏற்கச்சிவனரு ளாக்கமதால
ச கேளும்ஒருகன்னியைப் பெற்றுக் கௌரியெனறே அழைத் திவ்வகையா
வாழும்வயதைந்தினில் சென்ம வனபிணிதீர்ப்பதற கனபுடனே
ரு தநதைஅடிபணிந்து இச சனமொழிகக மனனம்செயயும்
மாந்திரம்யாதெனவே கேட்க மாமகள்மேலன்பி னல்மகிழ்ந்து
சா தேவிதனமநதிரத்தை உப தேசக்கிரமத்துட னேசொல்லவே
நாவில்வடுவுறவே இராவும்பகலும தேவிளம்பத்
எ தாதைமகளதவத்தைக் கண்டு சைவஸதலவாசம் செய்பவனுய
ஆதிவருணமதுக் குள்ள ஆரணமாத்யாத பூரணமாக்
அ கறறறிவுளளவனுக் குலம் கண்டா லுயர்ச்சியைக் கொணடிதெல்லாம்
உற்றவற்கேமகளைத் தர உள்ளந்தனிலநேமம் கொளளவமே
கூ கதிக்கும்பிராயமெட்டில் திருக கலயாணத்தைசசெயய நலலதெனும்
ததிக்குள்ஒருபகலில் பிரம சாரிதிருநாம தாரிநித்தம் பார்த்
ய கடைதேடிரும்முட்டிகொள்வோன தன்ன காதனிற்பிச்சைக்கு வந்திடப்
திடவேயுறமுறையார் தன திலலாள்முதலாகச சொலலாமல்
கக ஒலிக்காமலமநதிரநீர் எடுத்து துய்யஅவன்கையில பெய்யவுமே
சலிப்பாகபபந்துக்களும் பெற்ற தாயுமறிந்துளத் தாயாசமாய்ச்
கஉ குலமும்குடிநலமும் கல்வி கோததிரமும்செய்ய சூத்திரமும்
தலமும்அறியாமல் பல சாஸதிரம்ஆராய்நது பார்த்திருந்தும்
கந விதியினவழிமனத்தைச் செலல விட்டுவயிணவப பட்டனெனறும்
மதியாமலபிச்சைகொளள வந்த வற்குத்திருமக ளைக்கொடுத்தால்
கச குற்றம்எனறெண்ணுமல் ஏன கொடுத்தாயெனறே மதித்தாருடன்
பெற்றமகள்விதியும் வீட்டில பிசசைக்குவந்தவன நலவிளையும்
கரு பலலோாகளும்அறிய விரூபாக்கனமனத்தினி லூக்கமுடன
செல்வமிகுமகட்கு ஒளி சேரும்பொன்னுலலங காரம்செய்து
கசா மங்களமாபபிரம மண மாட்சிசெய்தக்கினி சாக்ஷியாக
மென்கைமலர்பிடித்து யாரும் மெய்க்கமருமகன கைக்கொடுதது
கள சகலவரிசைகளும் செய்து தம்பதியோடவன தனபதியாய்.
நகரிற்செலவிடுத்தான பின னடநதவன்வீட்டுக்கு வந்தடுத்தான் வேத

விருத்தம்.

வறுமையுளோன் நிதிகண்ட தென மணந்த
மகளுடன்தன இற்புகக்கண் டவளை ஈனறூர்
பிறருவந்த கௌரிசைவக் குறிபபை நோக்கிப்
பிரித்துவெளி வைத்திகழ்ந்தோர் நாளிற்பூட்டி

நிறைமனத்துக் கவர்அயலூர் உறப்பிக்ஷைக்கு
  நெடுநாமதாரிகள்வந் திடுவ தல்லால்
கறைமலிகந் தரனடியார் வராதா லின்றென்
  கண்மாசு படுவதெனக் கவலுற்றாளே.

சுந்தரேசர் திருத்தொண்டராக வருதல்.

இதுவுமது.

ஆண்டவன்தன் திருவடியார்க்கு தரிசனஞ் செய்
  யாக்குறையால் தளர்ந்தனிய இருந்திவ் வண்ணம்
வேண்டிமன மயக்கமுறக் கவுரி மின்னாளை
  மெலிந்திருப்ப தனைநோக்கி மௌலி வேய்ந்து
பாண்டியரா யிருந்துலகை யாண்ட கூடற்
  பரமனவள் குறைதீர்க்கும் பொருட்டால் வெண்பு
பூணடியார் வடிவேதம் வடிவ மாகப்
  பூண்டிட்டான் விருத்தராத் தோன்றிட்டானே.

மோகனம், ஆதி

பல்லவி

திருத்தொண்டனாகவந்தானே சோமசுந்தரன் திருத்தொண்ட னாகவந்தானே

அநுபல்லவி

திருக்கண்டத் தும்பரத்தும் சிரத்தும் புயத்தும்மலர்க்
கரத்தும் உருத்திராக்ஷக் கண்டிகை யைத்தரித்துத் (திரு)

சரணங்கள்

வெகுநாளாத் தமையொத்த வேதமா புஸ்தகத்தைத்
தகைமையுடன் கைமேலே தரித்துக்கொண் டன்பினாலே (திரு)
தரித்தகோ வணவுடை தளரத்தள் ளாடிநடை
திரிந்துமேனி திரைத்துச் செனனியெங் கும்நரைத்து (திரு)
புயமீதுத்தரியத்தைப் போட்டுக்கொண்டு தண்டத்தைக்
கையிலூன்றிக் கையாலமெல்லக் கவிகையும் தாங்கிநல்ல (திரு)
பூணலமுந் நூல்வலத்தில் பூண்டசைய வுரத்தில்
காணும்விபூதியின்னைக் கனைத்துக் கவிழ்ந்துதன்ன (திரு)

விருத்தம்

விருத்தமறை யவராயிவ் வாறு வந்து
  வெகுநாட்பட் டினிபோலே மயங்கி வாடி
நிருத்தரே கௌரிமின்னாள் இருக்கை தேடி
  நேர்வரப்பார்த் தெழுந்துபசரித்துப் பீடத்
திருத்திவணங் கிச்சிவனை யிருக்கக் காண
  என்னதவம் செய்தேனோ எனக்கேட் டண்டி
அருத்திவிடாப் பசிப்பிணியால் வருந்தி வந்த
  தாமென்றார் நின்பாலவந் தோமென்றாரே.

விருத்தம்.

நீடியபொன் மலைவளைத்துப் புரமெரித்த
நிமலனிந்த வாறுரைக்கக் கௌரி கேட்டென்
வீட்டைத்துப் போயினர்காண் எமர்களென்று
விளம்பிடத் தேர்ந்தனுதுகையால் தொழுமுன்னைக்
கூடியபூட்டுத் திறந்து போம்போகத்தில
கூர்ந்தசனம செய்தளிப்பாய் எனநீராடி
ஆடையணிந்தலவணம்பூட்டுகற்று யாவும
அமைத்திட்டாள் கணபொழுதிற சமைத்திட்டாளே

கலயாணி, சாப்பு.

க மாதவமுனிவர்களுங்களும் மகிழ்ந்து புகழும்
சோதியைகௌரி சமையலைப்பண்ணி யெழுந்து
உ கையிலேசெம் பிற்சலத்தோடன்பு புரிந்தாள் சாமின்
ஐயனேயெழுந்தருளுமென்று பரிந்தாள்
௩ ஆதரவுடனேவரியிலைவரு விரித்து மலர்ப்
பாதம்விளக்கியுளமெய்யவாககொரு பிடித்து
௪ மாளிகைசேர் தன்முடியினைத் தீத்தலை கொண்டாள் பின்னும்
உணவாமுதமெல்லாம் கொண்டே உண்டாள் .
௫ கிண்ணமகிழ்ந்துள்ளமெழுந்து இட்டமேல வைத்து நறும்
சந்தனம் புஷ்பாக்ஷதையாலருச்சித்து
௬ சாலமுள்ள வாழையிலை போட்டு விரித்து அதில்
பாலடிசில வெள்ளிமலை போலே குவித்து
௭ தங்கமலைபோலவே பருப்பு பின்னவே பக்ஷ
ணங்கள் சுபமானமலையாகத் துன்னவே
௮ நெய்யருவி போலமோரு பக்கமும் ஓட அதில்
பெய்ததேனும் பாலுமுதலானவும் கூட
௯ இனசொல்லாலமொழிந்து பசரிக்கை பாராட்டி ஐயன்
தான்செவிக்க முதமாய டிக்கடி யூட்டி
௰ ஆயும்சுவை ஆறுங்கையாலூட்டினுள் மேலே விருந்தர்
ஆயிருந்து முதருந்து வரோ இப்பாலே
கக தேறியவிருத்தரூபம் தன்னை விண்டாரே பதி
றுவய துக்குமாரனாக கண்டாளே

[illegible] குழந்தையாய் வெளிவந்தல்.

விருத்தம்.

அன்னமருந்தையிலப்பூதி கலவையாக
அக்ஷமாலைகளபொன்னாபரண மாக
முன்னுள்ளமுப்பெவ்வனமா கட்டயந் தோர்
மூலையிலே கௌரிநிறைக வெளிக்கவாடம்
தன்னையுடைத் தயனூரிற் சென்றோர் வந்து

தாக்கிடுமுன் இருந்தயௌவனத்தைமாற்றி
அநங்கிலகாப் பணிந்துகுழந் தையைப்போல மாறி
யாடினார் ஓர்வடிவம் சூடினாரே

புன்னாகவராளி, ரூபகம்

பல்லவி

குழந்தை வடிவெடுக்கின்றாரே

அநுபல்லவி.

நிதமும்—விழைந்தானுக் கன்புசெய்து விளங்கும்முனிவோர் குழந்

சரணங்கள்

க சுருதிமணிச்சிலம் பொலித்துக கலிக்கத்
தெண்டருளள மெனும்மலரோ டையிலிலவிக சுந்து
அரியசி வானந்தத்தேன உதித்துத ததும்பும்
அம்புயத்தி லுறும்சிறந்தடிப் பெருவிரல சுவைத்துக குழந்தை

உ மையணிகண ணீர்பெருகக் கொளும் கதறி
வாயவிட்டழு தொருசிறிய பஞ்சணைமல நீளும்
வையகத் தைப்படைத்து நாளும் காக்கும்
வள்ளலன்னை யைப்பிரிந்து கலங்குதல்போல் வாழும் குழந்தை

ந மேலும்அடிக்கடி தாங்கிடுத தேம்பி
வீறிட்டழு துவிறைக்க நோக்கிபரம்மம் தொட்டு
மாலயனுதிகளவாய் விட்டு அழமா
மறைகளழக் கௌரியனபின வலையிலகப பட்டுக குழந்தை

விருத்தம்.

மகவுருப்பெற் றீசனவிலை யாடக் கௌரி
மாமியெனனும் முழுமாயக் கள்ளி மிக்க
வெகுளியுட னிம்மகவே தெனனக் கேட்க
விமலனுக்கன் புடையவளோர் தேவ தத்தன்
மகளிருட னிக்குழந்தை தன்னை யிங்கு
வைத்தெனைப்பார்த் துக்கொள்கென் றகன்றான என்றத்
திகழுமவள் கண்கலங்க வேடனைநாய் போல
சீறினாள் நேர்ந்தபடி கூறினாளே.

விருத்தம்

காட்டுளசாம்பற் பூசியெனபணிமுக கனாணுதற கனபர்சே யினைநீ
காத்ததாலெமக்கா காயெனவெளியே கடததினை ரிரக்கமற் றோர்கள்
ஈட்டுமாதரவில் லாக்குழந்தையைப்பார்த் திரங்கினின்றுலவாய்ப் பிரானை
எண்ணியேகௌரி மநதிரம்செபிக்கவேயமும் குழந்தையின ணிடையில்
காட்டிவெள்விடைமேல அரனுருவாகக கௌரியேஉமைவடிவாகக்
கண்டவர்அதிச யித்திடத்தேவர் சறபக மலர்மழை பொழியத்
தாடிகமாக நடந்தனரிதனை சாற்றுவோர் கேட்பவர்தமக்குச்
சகலஆர்த்தியுநீங கிடுமலாலமுடிவில சங்கரன உலகில்வாழ்குவரே

ஆக விருத்தம் எ) கழிநெடில் (க) கீர்த்தனை (உ) தரு (உ) முற்றும்.

உ

சிவமயம்.

இருபத்துநான்காவது,

மாறியாடினபடலம்.

அவதாரிகை—விருத்தம்.

கூடலெம் பெருமான் மூப்பாய்க் காளையாய்க் குழவி யாயும்
வேடமெ தெடுத்துச் செய்த விசித்திர முரைத்தே னிப்பால்
தேடரும் வெள்ளிமன்றுள் தென்னனுக் காக மாறி
ஆடிய விளையாடடத்தின் அருமையை இனிச்சொல் வேனே

இராசசேகரபாண்டியன் அரசுபுரிதல்.

விருத்தம்.

நன்னிலத்தை விக்ரமபாண் டியனதா னீன்ற
ராசசே கரபாண்டியன திறமை நோக்கித்
தன்னுடைய முடியும்செங் கோலு மீந்து
சதுமுகன்மா யவனுலகம் தனிலு மிக்க
உன்னதமா கியசிவலோ கத்தைச் சேர்ந்தாங்
குமாபதிபொன் னடிநிழல்வீற் றிருந்தா னிப்பால்
இந்நிலத்தை மனுமுறைசெய் தாதிலோர் பங
கேற்கின்றான் குறைவறவே காக்கின்றானே.

சாரங்கம், சாப்பு

பல்லவி.

ராஜசேகரன மௌலி பூண்டனனே திருவாலவாய்
ஈசனடிதொழு துகை யாண்டனனே

அநுபல்லவி.

ஈசனுடிய பாதநூலிலன பிசைந்ததனைக்கற்கொ ளுதெனவொழித்துப்
பேசுமறுபத்துமூன் றுகலைகளும் பிரியமுடனுவந்தொருமையாகக்கற்று ரா

சரணங்கள்

க பொன்னிநாடதனில் மனனும்ஆனைக்காவில் நாளும் வாழு
புண்ணியனைத்தொழுதெக் கலைகளும்கற்றுல காளும்
செம்னியெனும்கரி காலனிடத்தன்பு நீளும் கவ
தேர்கதொருபுலவன் தனதலையில்வந்து கேளும் எ
மன்னவனுக்கெனனென் கலையும்பிர சங்கிக்க
வருகுமுனக்கொன்று வருகாதது மிக்க
என்னவெனிலாடும் டாதம்நீ படிக்க
இலையேஎன் றுதன்னை இகழ்ந்தவனு ரைக்க ரா

உ ஓதும்அறுபுல ஈாவலனைமொழியக் கண்டு மால
ஓங்கவியாகுலம் தனைமனதினிலே கொண்டு

வேதமுடியுறும் சோதிதனைநம்பி அண்டும் தொண்டர்
விரும்பியபடியே அருள்புரியும்புகழ் மண்டும்
நாதனுடலைத் தானுமே தெரிந்து நடிக்கவேண்டுமென் றகத்திலேநினைந்து
ஈதென்குலதெய்வமாகவே பொருந்தும் எம்பிரான்கருணையேஎன உணர்ந்து
ராச

௩ பரதசாஸ்திர நெறிகள்முழுதும் ஆராய்ந்து அதில்
பகர்ந்தபடியாடும் நாடகமுறைமை தேர்ந்து
அருமைசேர்ந்திடும் புலவர்களையன்பு கூர்ந்து தன்பால்
அழைப்பித்தவர்களுக்கு காதரவுபுரிந்து தேர்ந்து
வரிசையாகவே அவருடன் அடுத்து வஜ்ரமணிமுதலளவில்லா தெடுத்து
பரிவுடனேமகிழ்ந்து நடிக்கக் கொடுத்து படிக்கஆரம்பித்திப் படிமுறை தொ
ராச (டுத்து

ஈசன்ஒருகாற்கொண்டே நடிக்கக்கண்டு ராசசேகரன் வருந்துதல்.

விருத்தம்

ராசசேகரனிவகை பாவம் தாளம்
ராகமிம்மூன்றினமுறையாற் பரதமெனனும்
பேசரிய நூலாராய்ந் ததனிற் கூறும்
பிரகாரம் நடித்திடுங்கால் தனதுடம்பா
யாசமிகப் பூண்டிருந்து வருந்தும் வெள்ளி
அம்பலத்தில் ஒருகாற்கொண்டே நடிக்கும்
ஈசனுக்கெவ் வருத்தமதாய் டாகுமோ வென
றெண்ணி னொன மிகவருந்த மெண்ணினனே.

காம்போதி, ஆதி

வருந்தியிருந்தானேதென்னென்ன றுயன்மேலனைப் பொருந்தியிருந்தானேமன்னன

அநுபல்லவி.

வருந்திநான்முகனும் மாயனும் தேடரிய
வள்ளல்காலொன்றேநோவு கொள்ளுமேயென்றோ என்று வருந்தி

சரணங்கள்

க உரியநடநூலாய்ந்தும்ஆடும்வருத்தம் தேர்ந்தும் உணராதுதருமம் ஆமா
அரியபோகமும்வீடும் கொடுக்கும்கடவுள் செய்யும் ஆடலதடுக்க லாமா
எப்படிநானசென — றடுப்பேன் அதைத் தடுப்பேன் துயர் விடுப்பேனஅன்பு
அருந்தவத்தோருளத் தமருமகிமை விண்டு (தொடுப்பேனெனும்
வருந்துமேசரணமென்றுமனத்துட கொண்டு வருந்தி

உ உள்ளநடுங்கியித்தகிழவே துணிவெனறெண்ணியுடனேசென்றனபிலேலே
வள்ளலுக்குற்றசிவராத்திரியிறகதம்ப வனத்தனுக்கு மென்மேலே
வரைவிலலாமல்—மறையாகமமுறையாலொனறும்குறையாமலேநிறைவாகவே
மதிமகிழ்ந்தபிஷேகம்செய்துமலர் கொய்து
விதியிசைந்துசாமம் நாலும்அர்ச்சனைசெய்து வருந்தி

௩ அண்டர்பிரானடியிற் போற்றிப்புகழ்ந்துவெள்ளி அம்பலம்தனை நாடித் தொண்டரகத்தில்மேவும் சோதியாடல்கண்டிஙைபம் தோய்ந்துசந்தோஷம்கூடி கண்புனல்சோர— சூழந்து வந்துதாழ்ந்து மண்ணில வீழ்ந்து அன்பில்ஆழ்ந்து
அங்கமேவுதிரிகரணமொன்றாக் குவித்து
செங்கைரண்டுமிணைத்துச செனனிமீதிலேவைத்து வருந்தி

விருத்தம்

பாண்டியர்கோன் சாமிதிரு நடம்பார்த்துனறும்
பதம்தூக்கித் தூக்கியகால நிலமீ தூனறி
ஈண்டினியான் காணடிடவேமாறி யாடி
எனதுகுறை மாற்றிடுவாய் மாற்றுயாகில
பூண்டவடி வாளமேற்குப புறவீழந தாவி
போக்கிடுவே னெனறுநடடான நடுமுன கூடல
ஆண்டவனப் படிவலக்கா லெடுத்து மாறி
ஆடினுன கருணைமிகக் கூடினனே.

ராசசேகரபாண்டியன் துதி.

வலக்காலை வீசியிடக் காலை யூனறி
மதுரேசன மாறிநடித் திடவும் தென்னன்
விலக்கரிய கவலையுமுப் பாசமும் போய்
மெய்யறிவா னநதவெள்ளத தாழந்தெ ழுந்து
நலக்குரிய கரணமொரு மூனறும் கூடல
நாதனது வேயாகக் குவிய அனபு
பெலக்கவுமே யவ்வடிவத துடனே கணணீர்
பெருகிவரத் தாழநதுதுதித் தருகி னனே.

காம்போதி, சாபபு

க இந்திரனமுதல அநதரர்தொழும்சுநதராசரணம் நீல கநதரா சரணம்
எனறனுக்காகமாறிநடித்து வநதோய் சரணம் கிருபை தந்தோய் சரணம்
உ ஏகநாயக னேஅழிவிலலர்த்தேகா சரணம் சிவ யோகா சரணம்
நாகபூஷண னேகயற்கண்ணி பாகா சரணம் விடை வாகா சரணம்
௩ மாயனுக்காழி கொடுத்தருளியதூயா சரணம் தொணடர் நேயா சரணம்
ஆயுமறையின் பொருள்சொலுமலர் வாயாசரணம் சம்பிர தாயா சரணம்
௪ தணணுலவிய மதியணியுமுக் கணணு சரணம் அநதி வணணு சரணம்
புண்ணியம்புரி யாதவரிடம் நணணுய் சரணம் அருள பணணுய் சரணம்
௫ பாலமார்க்கணடன மேலுறும்காலகாலா சரணம் அநு கூலா சரணம்
ஆலமுணடுயர் வானவர்க்கருள சீலா சரணம் திரி சூலா சரணம்
௬ வெய்யமழுவும் மானும்தரிக்கும் கையாசரணம் என தையா சரணம்
செய்யவிபூதி தரித்திலங்கியமெய்யா சரணம் எனறும் துய்யா சரணம்
எ விரித்தைநதுகணைதொடுக்குமாரனை எரித்தோய்சரணம் ஆனையுரித்தோய
புரத்தையோர்கணத் தெரிககவேமௌனச் சிரித்தோய்சரணம்கஙகை த
அ அத்தமாதிமி கந்தபரமானந்தாசரணம் சிதா நநதா சரணம் (ரித்தோ

சிந்தைதனில்நினை நதிமுன்னி னைந்தோய்சரணம் வளர்ந்தோய் சரணம்
௬ ஓதருமறைமுடிவுறும்பரஞ் சோதியே சரணம் அருநிதியே சரணம்
வேதனும்மாலும் தேடரும்கூடல நாதா சரணம் மலர்ப்பாதா சரணம்

விருத்தம்.

இத்தலத்தி லிக்கூத்தைக் காணுமி யாரு
மேபார்க்க நடித்துவர வேண்டு மென்றே
கைத்தலமேந் திடஐய னவ்வா றின்றும்
காணநின்ற னிராஜசே கரனு னீன்ற
புத்திரனும் குலநாயக னுக்கு மௌலி
புனைந்தீச னடிநிழலிற் கலந்தா னித்தைச்
சித்தமுவந் துரைப்பவர்கேட் பவர்போ கத்தைச்
சேருவார் சிவனுலகைச் சாருவாரே.

ஆக விருத்தம் ௬ கீர்த்தனை ௨ தரு க ஆக ௯. முற்றும்.

உ

சிவமயம்.

இருபத்தைந்தாவது,

பழியஞ்சினபடலம்.

அவதாரிகை — விருத்தம்.

ஆலவாய்ப் பெருமான் தென்னன் அன்பினுக் கிரங்கி மாறிக்
காலெடுத் தாடல்செய்த காதைமுன் னுரைத்தே னிப்பால்
பாலனஞ் செய்யும் தென்னன் பழியஞ்சும் நெறியா ராய்ந்தன்
பாலவன் உளத்தைத் தேற்றும் ஆடலை இனிச்சொல் வேனே.

அந்தணன்மனைவி இறந்தவரலாறு கூறுதல்.

விருத்தம்.

பார்த்திபரேத் தும்குலோத் துங்கன் கூடற்
பரமனைத்தாழ்ந் தரிவையர்பத் தாயிரம்பேர்
வாய்த்தவளம் மாதரிலொவ் வொருத்திக் காறு
மைந்தர்பிறந் தவரில்அருந தகுண னென்னும்
மூத்தமகன் திறநோக்கி யுலகா ளுங்கால்
மொயகுழல்பைங் குழவியுடன் திருப்புத் தூர்விட்
டாத்திரத்தோ டொருமறையோ னலை வாய்வந்
தம்மானைப் பார்க்கவழி யடுக்கின னே.

சாபபு.

பகவான்திருப்புகழைப் பரிந்துபரிந்துகேட்பீர் மாதவோரே முல்லை
நகையாளுடன்மறையோன் நாடிவரும்வழியில் மாதவோரே
தாகமிகுமனையாள் தன்னையத்தடத்திலே மாதவோரே விரி
வாகும்வடதருக்கீ ழுடுத்தவரையிருத்தி மாதவோரே

௩ விரும்பியுண்ணீர்தேடி வேகத்துடனேசென்று மாதவோரே அவனை
திரும்பிமனையாளிடம் தெண்ணீர்கொண்டுவருமுன் மாதவோரே
௪ அப்பெருவடத்தின்மேல ஆரோமுதனுளெய்தோர் மாதவோரே அம்பு
தப்பியோர்கொம்பில்மாட்டித் தளர்ந்தாடியிருக்கையில் மாதவோரே (ன்
௫ மரத்தின்கீழிருக்கின்ற மடநதைகணவனுறங்கையில மாதவோரே காற்றி
உரத்தாலுலைந்தக்கணை யுடனதபபிவிழுநதது மாதவோரே
௬ நித்திரைசெயுமந்த நேரிழைவயிற்றினில மாதவோரே கணை
தைத்துவயிறுருவத் தனதுயிரிழந்தாளே மாதவோரே
௭ அந்தவேளையிலவில்லும் அம்பும்தொட்டொருவேடன் மாதவோரே ஓடி
வந்துவெயிலுக்கஞ்சி வருந்தியோர் நிழலதேடி மாதவோரே
௮ அவ்வாலநிழலைவந் தடைந்தவணிளைப்பாறி மாதவோரே செங்
கைவாளியுடனிறகும் காலந்தம்மறையவன மாதவோரே
௯ தெண்ணிருடனவநதிளஞ் சேயிருக்கமனைவி மாதவோரே ஆருப
புண்ணிரொழுகவுயிர் போய்க்கிடப்பதுகண்டு மாதவோரே
௰ கணையேறுண்டுயிர் விடும் கானமயிலைப்போலே மாதவோரே ஆவித்
துணையேநானிருக்கநீ தொலைநதவிதியேதென்று மாதவோரே
௧௧ கடையுந்தயிர்போல்மனம் கலங்கியறிவழிநது மாதவோரே இந்தக்
கொடியபழியாரேற்றுக் கொண்டாரொன்றாரற்றையில மாதவோரே
௧௨ தைக்கும்கணையேறிட்ட சாபததுடனவ்வேடன மாதவோரே தன்னைப
பக்கந்தனிற்கண்டுபெண் பழிசெய்தோனவனெனறே மாதவோரே
௧௩ வாயில்வந்தபடிக்குப் பேசிமடிபிடித்து மாதவோரே உள்ளம்
காயவெகுண்டவ்வேடன் கன்னத்திலடிக்கின்றான் மாதவோரே

அந்தணன்அரசன்வாசலில்வந்துமுறையிடுதல்.

விருத்தம்

அந்தணனிவ் வாறுழன்றவ் வேடன் தன்னை
அரசனுணையிற்றகைந்து கொணடு மாண்ட
பைந்தொடியைத் தன்முதுகின மேற்போட் டனனை
பயோதரப்பால் குறித்தழும்சே யினையும் கண்ணீர்
சிந்திடவே மார்பிலணைத் தால வாய்க்குச
சென்றுதென்னன் அரண்மனைவா சலிலே வந்து
முந்தியவிந் தவனைச்சட் டகமேல் இட்டு
முறையிட்டான் அநதோவென் றறையிட் டானே.

எதுகுலகாம்போதி, ஆதி.

௧ பூண்டிடுங்கதிர்வேலனே முறையோ குலோத்துங்க
பாண்டியமகிபாலனே முறையோ
௨ மாமதிகுல தீபனே முறையோ செய்யதாமரைப
பூமகள்வளர்மார்பனே முறையோ
௩ நீதிமன்னவர்சிங்கமே முறையோ நீதுறாலை
ஓதியனுருத்துங்கனே முறையோ

௪ சிஷ்டஜனத்தைரக்ஷிப்பாய் முறையோ துவினைசெய்யும்
துஷ்டஜனத்தைசிக்ஷிப்பாய் முறையோ

௫ ஏற்கும்தர்மத்தை யீடேற்றுவாய் முறையோ நித்திரையிலும்
ஆக்ஞையாலுல காட்டுவாய் முறையோ

௬ கீர்த்திமிகுந்த குருதேனனே முறையோ இவ்வேடனையுயிர்
மாய்த்திடாத வரையிலே முறையோ

அரசன் வேடனை உறுக்கி விசாரிக்கல்.

விருத்தம்

முறையிடுமவ் வேளைதனிலே வேந்தன்
முழுவதுங்கேட் டானென்னா யிலிளமுன வருதே
மறவனையும் அழுங்குழந்தை தனையும் கண்டு
மாண்டமனை யுடனெதிரே யழுது நிற்கும்
மறையவனைப் பார்த்திரங்கி யுளக்கிச சோகம்
வந்ததே தெனநடந்த தவனும் சொல்லச்
சுறுசுறெனக் காய்ச்சியவே லதனைக் காதில்
சொருகினாற் போலவருந்தி யுருகி னானே

ரீதிகௌளை, ஆதி.

௧ வேதமுனிவரோய் வேதியன்சொலலறிந்தவ்
வேடனைப்பார்த்திறைவெகுண்டு உள்ள
தோதெனறுகேட்கப்பணிந்த தயாவெம்பிரானேயென்
றொடுங்கியிருகைகூப்பி நின்று

௨ என்றன்மட்டிலேவில்லம் பேந்திவருங்கால்வெயில்
ஏறிவருந்திஅந் நாளே தேடி
வந்துபுகுந்தேனபெரு வழியில் இருக்கும்ஆல
மரத்தின்நிழலில்ஒரு பாலே

௩ ஐயனேயானும்கொன்ற தில்லைவேறொருவர்கொன்
றதுவும்கண்டதில்லைகோமானே இந்தத்
தையலைஅம்பேறுண்டுயிர் போனதால்எதிர்நின்றோர்
தனமேற்சொலும்உலகம் தானே

௪ இந்தப்பழிவிளைந்த வாறொன்றும்யானஅறியேன்
எனறவ்வேடனுரைக்கக் கண்டே பின்னும்
மந்திரிமார்பிறரும் இதுதக்கொலைசெயதிடும்
வன்கணன்மெய்யுரைப்ப துண்டோ

௫ மயிலேமயிலேஒரு இறகுகொடென்றால்அந்த
மயிலிறகீந்துபெறல் ஆமோ உயர்
சயிலநிகர்புயனே கரும்பேகரும்பேயென்றால்
தந்திரசம்கையுறல் ஆமோ

௬ வண்டனிவனையது போலேதண்டிக்காமல்மெய்
வருமோவெனமன்னனிப் பாலே கட்டித்

தெண்டனைசெய்யச்சொல்லி நெஞ்சில்துணிவுடைய
சேவகர்க்குவிளம்ப மேலே
எ பின்னபபடத்தணடித்துக் கேட்கவுமுனசொன்னசொல்
பிசகாமலேசொல்லுவ தலைவால் சாமி
இன்னம்தீரத்தெளிவீ ரென்றவ்வேடனுரைக்க
இராஜன்யோசிக்கின்றுனி தெல்லாம்
அ உள்ளபடிக்குச்சிக்ஷை செய்யஅஞ்சாமற் சொல்லின்
உறுதியும்ஒன்றதாகை யாலே கொன்ற
கள்ளனுகில்வதைத்த குறிப்புமுகம்தனிலே
காணவில்லையேஇவன பாலே
கூ சத்துருவோமிருகமோ பக்ஷியோகொன்றடவி
சாலவழிதனிலே சார்ந்து இந்தப்
பொற்றொடியைக்கொன்றென்ன லாபந்தனையிவ்வேடன்
பூணபானென்றுமனதி லோர்ந்து
ம சதிசெய்தவனிவனே தானேபிறத்தியரே
தானேபின்னொருவேடன் ஆனேன் நின்று
கதியிலொருவிலங்கை எய்தவம்புதப்பியிக்
காரிகைமாய்ந்ததோபின் ஏனோ
கக என்றுநினைத்தரச னிதற்குத்தருமநூலில்
என்சொல்வதுமிக்கோரே என்றுன் அவர்
நன்றிபுரியும்நூலால் அமையாதுதெய்வத்தால்இந்
நாயம்தெளியத்தக்க தென்றூர்
கஉ மன்னனுநிந்தம்மறை யவனையுளக்கவலை
மாற்றிடுவேனென்றன்பு பெய்தான் இப்போ
துன்னரிவைகடனைக் கழித்துவாவென்றனுப்பி
உடன்அவ்வேடனைச்சிறை செய்தான்

விருத்தம்.

மன்னவனிவ் வாறுவிசா ரணைசெய் தொன்றும்
வகைபுரியா துழந்துறுமம் மறையோ னைப்பார்த்
துன்னுடைய மனைவிகடன முடித்து வாவென்
றுரைத்தனுப்ப அவ்வகைசெய் தவனும் வந்தான்
தன்னரண்ம னையினவாயி லவனை வைத்துத்
தன்குடிக்கோர குலதெய்வ மாகு மீசன்
பொன்னடியிற் பணிந்துவனைந் தேத்தி யன்பு
பொழிகின்றுன் மனத்துளதை மொழிகி ன்றுனே

அரசன் அசரீரிவாக்கால் உண்மையறிதல்.

விருத்தம்.

மறையவனில லாளையிவ்வே டன்கொன் றுனே
மற்றொருவர் வேறென்றும் கொன்ற தோ

தற்றூலா லும்புரியாதுழன்றே னுன்றன்
அருளாலே தேற்றுகவென் றிரக்க விண்ணின்
றிறைவா அந்தணனுடனிந் நகர்ப்புறஞ்சென்
றேவணிகத் தெருவினிலே மணமோர் வீட்டில்
உறுவதறிந் தாங்குசெல்லத் தெரியலா மென்
றொருவாக்குக் கேட்டரசன் உவகைகொண்டானே.

மோகனம், ஆதி

க திருவாக்கறிந்தரசன் அந்தணனுடனே சேட்டித்
தெருவிலிருட்டுவேளை கண்டு தனே
திருமாறித்திருமண வீட்டிலொருபக்கத்தில்
உற்றுனங்கிசனருள் கொண்டு

உ கருமலைபோலேபாசக் கையினராயிரண்டு
காலதூதர்வந்தங்கு நின்று நம்மை
தருமராசனிங்கிருந்த மாப்பிள்ளையாருயிரைத்
தரச்சொல்லிச்சொன்னானென்றே என்று

௩ காயத்திலேபிணிகள் ஒன்றுமில்லாமலவேறோ
காரணமுமில்லாமற் கொன்றால் அது
நியாயத்துக்கேலாதென்றே அதிலொருவனிதற்கோர்
நியாயமிருக்கின்றதென் னென்றால்

௪ வட்டருவிலேறுண்ட கணையையோதுங்கவந்த
மறையோனில்லாளெந்த வாறு வீசிப்
பட்டரும்வாயுவினாலே தள்ளிக்கொன்றதுபோலப்
படியிதற்குஞ்சொல்கிறேன் தேறு

௫ இக்கலியாணக்கொட்டு முழக்கத்தினாலேவெருண்
டிசைக்கும்தும்பையறுத்துச் செல்ல அதோ
பக்கமுறும்பசுவை விடுத்திவனைக்கொல்வது
பாயமென்றேகுறித்துச் சொல்ல

௬ அம்மொழிகேட்டரசன் அந்தணனுக்குரைக்க
ஆனாலிவ்வாறிங்கு நடந்தால் கேளும்
என்மனையாளுமிறந்ததுமப்படியேயென்
றிறைவனுடனேருங் கிருந்தான்

௭ கொட்டுமுழக்கத்தாலே வெருண்டுதும்பையறுத்துக்
கொண்டவ்வணம்விரைந்து தாவி வந்து
முட்டியதாலேயந்தத் திருக்கலியாணமாப்பிள்ளைக்கு
முடிந்துபோயிற்றங்ஙனே ஆவி

௮ பாரும்மணக்கோலமே பிணக்கோலமாகமணப்
பறையேபிணப்பறையாய்த் தாக்கக் கொட்டக்
கூறும்கருவிழியார் வாழ்த்தொலிபோயழுகைக்
குரலாகவேமுடிந்து போக

௯ ஓரின்கணத்திலிங்கு பிறந்திழிந்திடுமிந்த
உடலாலவருபயனைக் கண்டோர் உளளில்
பேரறிவுடையவ ரல்லாமலறிவில்லாப
பேதையர்பெறுவது முண்டோ

௰ பார்த்தவேதியனென்ன காரியம்செய்தோமென்றுதன்
பாரிபோனசந்தேகம் மாற்றி உண்மை
வாய்த்தவனுடன்அரண் மனைசென்றமைச்சர்முதல
வருக்கும்அரசனிது சாற்றி

௧௧ மறையவனை அழைத்தே இனனம்உனக்கொருவி
வாகம்பணணிககொளளென்று முனனே கையில்
நிறையஅரும்பொருளை வாரிவாரிக்கொடுத்து
நீடவென்றனுப்பிப் பின்னே

௧௨ சிறையிலவைத்தவேடனைக் காலில்விலஙககற்றச
செய்தவனமேலருள் புரிநது மூலம்
அறியாமல்நாமுனறனைத் தண்டித்திடவும்பொறுத்
தாயல்லவோவென்று பரிந்து

௧௩ வேண்டும்பொருளைக்கொடுத் தவனிடத்துக்கவனை
விடுத்துநிம்பமலர்அ ணிநதானை தன
தாண்டவனதனனருளை வேண்டித்திருவடியில
அன்புசெய்துமனநது ணிநதான்

விருத்தம்.

அநதணனதன்னையும்வேட னையும னுப்பி
ஐயனைத்தாழ்ந் தென்றனுக்காப் பழிகண் டஞ்சும்
சுநதர னலனேயென் றேத்திப் பூசை
தொல்சிறப்பு டனேநடத்தித் திங்கில் லாமல்
இநதஉல குக்குயிரா யிருந்து வேந்தன்
இறைமாட்சி புரிநதிருநதா னிதனைச சொலவோர்
சிந்தையிலன புடன்கேட்போர் மாறுை பாதி
தீர்ந்துசிவ னுலகமதிற் செழிப்பா தாமே.

ஆக விருத்தம் ௭ தரு ௪ ஆக ௧௧. முற்றும்.

உ

சிவமயம்

இருபத்தாறுவது,

மாபாதகந்தீர்த்தபடலம்.

அவதாரிகை — விருத்தம்

பந்தம்நீத் தருளுமீசன பழியஞ்சும் நாதனுகி
விநதையா யாடலசெய்த விசித்திரம்உரைத்தே னிப்பால்
தந்தையைக் கொலைசெய்திட்ட தனயனைத் தொடர்மாபாத
கந்தனை விலகச்செய்த கதையினி விளம்புவேனே.

மோகனம், ஆதி.

௧ தவமுனிவரேகேளும் குலோத்துங்கன் குவலயந்தனையாளும் காலினில்
புவியிலவந்தியென்னும் புரத்தில் இருக்கின்றவன்
கவனித்தறியும்தன்னைக் காயும்சினம் விட்டவன்

௨ ஒருமறையோன்மருவும் நாயகி அருமைரதியும்திருவும் மண்ணுலசெய்த
உருவும்இச்சிக்கும்ரூபம் உள்ளவளாக இந்தத்
தரையிற்சித்திரப்பாவை தனக்கிணையாயி சைந்த

௩ பூவிழைவயிற்றிருந்து மகனென்றோர் பாவிபிறந்துதுணிந்துகொலைமுதல்
தீவினையெலலாம்கொள்ளச் செய்தகப்பலைப்போலே
தாய்வருந்திவளர்க்கச் சதைக்கொழுப்பேறிமேலே (னும்

௪ கோடிகோடிவில்லெடுத்து அதிற்கணை கோடிகோடிதொடுத்து அதில்பின்
கோடிகோடிவிகாரம் கூட்டியாதனை செய்யக்
கோடிகோடிமன்மதன கூடிக்கெண்டுவந் தெய்ய

௫ பதினாறுவயதுதிக்க காமமும் விதியும்மதியைசசதிக்க உள்ளத்தில்
பதியும்நெறிமுறையப் பாலேபோக திரம்ப
அதிபாவிதன்னைப்பெற்ற அன்னைதன்னை விரும்ப

௬ அன்னையென்பவள்பாலே பதிவிரதை என்னும்மொழிமுன்னாலே காப்பாக
மன்னும்மனத்தில்நாணம் மடமுதல் நாலுமாகத்
தன்னைவிட்டகன்றிடத் தானும்ஒத் தவளாக

௭ இன்பமோசிறிதாகும் அதில்வரும் துன்பமோபெரிதாகும் கரையில்லா
அம்புதிபோல்வருமென் றறிந்திடாமற் பொருந்தி
வம்பனுணர்வுகெட்ட மாடுபோலே வருந்தி [லே

௮ சந்ததம்மயக்கத்திலே தாயைப்பு ணர்ந்தொழுகுமச்செயலைக் குறிப்பா
தந்தைஅறிந்தயலார் தமக்குரையாமல் மிக்க
அந்தவிசேஷத்தையுள் அடக்கிப்பேசாதி ருக்க (மேல்

௯ வேற்றொருநாட்சுகிக்கும் சமயத்தில் பார்த்துரையர்மற்சகிக்கும் தகப்பன்
ஆத்திரத்தாலுன்னையிங் கடிப்பேனெனவெகுண்டு
வாய்த்தமகன்கரத்தை மாதாபிடித்துக் கொண்டு (சொல்ல

௰ தாய்கெடஇன்பமுறுவாய் தகப்பனைக் காய்கிலென்பயன்பெறுவாய்எனக்
தியகாமுகர்க்கன்னை செனகனுணடோவெவறெள்ளித
தோயுமன்னையைச்சீறித் தூரபபிடித்துத் தள்ளி (கள்

௧௧ மண்வெட்டிதனைஎடுத்து தகப்பனென் றெணணிக்கைதனைவிடுத்து காமக்
உண்டமயக்கத்தாலே ஒன்றும்தோணுமல் தாவி
துண்டமிரண்டாய் வெட்டித் துணித்துப்போட்டான்மாபாவி தவமுனி

மாபாதகனைப்பிரமஹத்திபற்றிக்கொள்ளுதல்·

காதகன்தா தையைஇரவிற் செகுத்தெ ரித்துக்
கைக்கடங்கும் பொருளையும்தா யையும்கொண் டேகும்

பாதையிலே கள்ளர்மறித் துள்ள தெல்லாம்
பறித்தன்னை யையும்பிடித்துக் கொள இம் மண்ணில்
ஓதுவது தாரென்றை எண்ணத் தெய்வம்
ஒன்றையெண்ணு வதுநிசமாச் சிறந்து போன
தாதைபா தகத்துருவத் துடன்ம கன்பாற்
சாடினான் சாடிவந்து கூடி னானே.

சௌராஷ்டிரம், ஆதி.

பல்லவி.

பாதகத்து ருவாய்வந்து பற்றினானே நேரவே

அநுபல்லவி.

தாந்தையைவெட் டினபழி தானேவந்து சாரவே — பாத

சரணங்கள்.

௧ கோவெனக்கூ விக்கரத்தைக் கொட்டிவந்த டாமலே
பாவம்பாவம் ஐயோவிழல் பாவைபோல்வி டாமலே — பாத
௨ நல்லசிவ க்ஷேத்திரத்தில்நாடவும்ஓட் டாமலே
அல்லதுயர் தீர்த்தங்கள்கண் டாடவும்விட் டாமலே — பாத
௩ கீர்த்திமிகும் நாமங்களைக் கேட்கவுந்தோ ணாமலே
வாய்த்தபெரி யோரிடத்தில் மன்னிடபூ ணாமலே — பாத
௪ பின்னசென்ற வன்கொடுக்கைப் பிடித்துவந் திழுக்கவே
வும்பகலும் தூங்கொணாமல் அடுக்கவே — பாத

மெத்தவடர்ந் திடும்பாத கத்தைக் கண்டு
வெருண்டினியென் செய்வோமென றுலக மெல்லாம்
சுற்றியலைந் தறிவிழந்து மனமு ழன்று
சொல்லரிதைக் கொண்டபா தகன் தனாலே
முத்திபுரம் தனைக்குறுகிக் கொடிய பாவம்
முற்றிடவங் கயற்கணுடன் கடவுளன்பு
வைத்தொருவே டனும்வேடப் பெண்ணு மாக
மனங்கண்டார் அவன்வருகு முன்கொண் டாரே
காமந்தின்கெடுகூறல்.

இதுவுமது.

வேடனும்வே டப்பெண்ணு மாகத் தோன்றி
விளங்கியகோ புரத்வாரத் தருகோர் பொந்தில்
நாடியம்பும் வில்லுமொரு பாற் கிடக்க
நாயொன்று கண்டகனைப் புறத்தே காட்ட
நீடியசூ தாடல்புரிந் திடுங்கால் யார்க்கும்
நினைக்கரிய கொடியமகா பாபியிங்கே
கூடிவரு தலைப்பாரென் றுமையைநோக்கிக்
கூறுவார் மாலவிடைமீ தேறு வாரே.

பந்துவராளி; சாப்பு.

பல்லவி.

காமமேபாவத்துக்குக் காரணமாமே

அநுபல்லவி

மாமன வியாதியை வளரச்செய் திடுவதும் காமமே

சரணங்கள்

உருவிலி யாலே தினம் உயிரைப் புண்டு மனம்
துருவிச்செல்லிட மினம் தோனறவொட் டாது முனம் காமமே
உ குடியொழுக் கம்கா வாது கொலைசெய்ய தம்கோ ராது
உடலுக்கூ னம்பா ராது உயிர்போவ தும்தே ராது காமமே
௩ கள்ளைக்கு டித்தல் லாது கருத்தழிக் கவொண் ணாது
உள்ளக்கா ணவி டாது உருக்குமன மெப போதும் காமமே
௪ கொள்ளைகன்னம்தி ருட்டு கொலைகள்ள ருந்தல் தொட்டு
நள்ளுமல் லாதி ருட்டு நரகிற்கி டத்தும் முட்டும் காமமே

மாபாதகனுக்குப்பிரமஹத்திநீங்கும்வழிகூறல்.

விருத்தம்.

தையலுக்கிவ் வாறுரைக்கும் போது மாபா
தகனொருங்கி வருகையில்வே டுருவம் பூண்ட
ஐயனருட பார்வையினாற் சிலபாவம் தேய்ந்
தறிவுறத்தான் செய்ததெல்லாம் மொழிந்திப்பாவம்
மெய்யுருவாத் தனைப்பிடித்து முன்னெங்கும் போய்
விலகாமல் இங்குவந்தே னெனவு ரைக்க
வையகத்தி லிங்குவிட்டாற் றீரா தென்றவ்
வன்பழிதீர்க் கக்கருதி வழுத்து வானே.

அடாணா; ஆதி.

க வாராயுன்றன் பேர்சொன்னவர் வருக்கத்துடன் சூழ்க என்றும்
தீராநர கினிலேவந்து சேர்ந்தாற்போலே வீழ்க
உ கருதிச்செய்த மாபாதகம் கழிப்போரெவர் உண்டு நம
தருளாலுனக்கெளிதிற்றீர அறைவோம்தேர்ந்துகொண்டு
௩ விசுவாசமா யருளுதைய வேளைக்கெழுந் தாய்ந்து நிதம்
பசுமைத்தளிர் அறுகுகொய்து பசுமாடுகட் கீந்து
௪ சிறப்பாயுய ரிம்மாநகர் திருக்கோயிலை நாடி வெளிப்
புறத்தேதொட்டித்தீர்த்தத்தில்முப்பொழுதும்மகிழ்ந்தாடி
௫ கங்கைச்சடை யோன்கர்ப்பக்ர கத்தைவலம் நண்ணி உவர்
தங்கப்ரத க்ஷணம்நூற் றியெட் டனுதினமும் பண்ணி
௬ ஐயம்புகுந் தொருபோதன்னம் அருந்தல்செய் திப்பூமேல் துய்ய
மெய்யன்திரு வடியாரிட்ட வேலைசெய்யிற் போமே

மாபாதகனுக்கு அநுக்கிரகிக்ககாரணம்கூறல்.

விருத்தம்

இக்நெறி நின்றுமேவோ டிப்பாவம் அறுமென் றய்யன்
சொன்னதற் கன்னை யிந்தத் தூர்த்தனை யளவில காலம்
துன்னிட நரகிற் போட்டும் தொலையாப் பாவிக்கி ரங்கல்
என்னெனக் கேட்கஅன்புற் றேயவட் கோது வாரே

மத்தியமாவதி, ரூபகம்.

௧ பழிசெய்யும்நீச ராயினுமெண்ணிற் பயப்படும்பழிக் காளாய் இந்த
அழிமகன்செய்மா பாதகம்தொலை வதுமிலைஇனிக கேளாய்
௨ வாய்ப்பவேறொரு வழியுமிலலாமல மாய்வனுக்கதை மாற்றி மண்ணில்
காப்பதல்லவோ காப்பதாமெனக் கருணையங்கடல் மூர்த்தி
௩ அவனிமீதொன்றுசெய்தலுக்கும்செய் யாமைக்கும்பின்னும்வேறு நன்று
கவனித்தொன்றுசெய் வதற்குமெதற்கும் காரணராகக் கூறும்
௪ தேவரீர்நினைத் தாலெப்பாதகம் செய்தோராயினும் நல்லோர் அவர்
ஆவதுசெய்வ துமதருளவிளை யாட்டென்றுரைப்ப தலவோ
௫ எனறுளமகிழ்ந் தங்கயறகண இயம்பிடஅன்பு நிறைந்து நெடும்
குன்றிடைவளர் வேட்டுருபத்தைக் கொண்டிருந்தவர்மறைந்து
௬ மேகமறைந்த இடத்திலமின்னும் விடாதுசெலவது போலே நறும்
பாகுமொழியாள் தொடரவெள்ளியம் பலத்திருநதாரிப்பாலே
௭ ஆததாயியும் பார்த்ததிசயித் தாலவாயையன் கேளும் தனக்
கோதியபடிக் கேதவம்செய்ய உறுதியைப்பெற்று நாளும்
௮ பண்ணிவரையில மதியம்மூன்றில பாதகம்நீங்கப் பார்த்தான இந்த
மண்ணிலுயரும் தெய்வப்பிராமண வடிவுள்ளபடி யேற்றான்

விருத்தம்.

பாதகம்நீங் கிடமறையோன் ஐயன் தாளில்
பணிந்தேத்தும் போதரசன் முதலோர் பார்த்திக்
காதகனுக் கீசனய னரிக்கும் கிட்டாக்
கருணைவைத்த தேதெனக்கண் ணீர்து ளும்ப
ஓதியன்னை யைப்புணர்ந்தப் பனைக்கொன் றானுக்
குறுபாவம் நீக்கிவீ டளித்தாற் குட்டம்
ஆதிவியா தியைநீக்கல் அத்தீர்த் தத்துக்
கரிதாமோ என்றுரைத்தாங் ககன்றிட் டாரே.

அந்தணன்மா பாதகம்நீங் கிடப்பார்த்துத் தென்
னவனுமமைச் சருமூரு ளார்மற் றோரும்
அந்தரரும் நோக்கியிப்பா தகனுக் கையன்
அருளியதுக் கேதுயா தெனவே கண்ணீர்
சிந்திடவே திருவால வாய்ப்பி ரான்றன்
திருவடியிற் றொழுதேத்தி யுவந்தா ரித்தைச்
சிந்தையிலன் புடனுரைப்போர் கேட்போர் பாவம்
தீர்ந்துஇக பரமிரண்டும் சேர்வர் தாமே.

ஆக விருத்தம் ௮, கீர்த்தனை ௨, தரு ௩, ஆக ௧௩. முற்றும்

உ

சிவமயம்.

இருபத்தேழாவது,

அங்கம்வெட்டினபடலம்.

அவதாரிகை — விருத்தம்

மாதவ ரேதென்கூடல் வள்ளலோர் மறையோன செய்த
பாதகம் அகற்றிவிட்ட பான்மையை யுரைத்தே னிபபால
கோதறும் கல்விமீந்த குருவின்பத் தினியை மேவக்
காதலகொண் டவனையங்கம் கணடித்த தினிச்சொல் வேனே

சித்தனென்பவன் குருவுக்கு த்ரோகம்செய்தல்

விருத்தம்.

பூதலத்தைக் குலோத்துங்கன் ஆளும் நாளிற
புறத்திருநது வயதினிலமூத் தொருவன கூடல்
மாதலத்தில வந்தரனைத் தினம்ப ணிந்து
வாள்வித்தை பழகவைத்துக் கொணடு வாழ்வோன்
சாதகமா யவனிடததிற் கற்கும் பேர்கள்
தங்களுக்குட் கரையேற்ற முணராப் பாவி
காதகனும் சித்தனென்னு மொருவன் யாவும்
கற்கின்றான் குருவுடனே திர்க்கின் றனே.

கல்யாணி, ரூபகம்.

பல்லவி.

குருத்துரோகிதுர் நடத்தைசெய்தது கேளும் கற்றுக்
கொண்டுண்டவீட்டுக்கி ரண்டுநினைத்தான்எந் நாளும் (குருத்

அநுபல்லவி.

வருத்திவைத்த குருவுக்கிடுக்கத்தை மனத்திலெப்போதும் நினைந்திருக்கின்ற

சரணங்கள்

க ஆயுதவித்தையி னுலேதன்னையாரும் மதிக்கத் தக்க
தானதனுலகம் பெற்றேஆசானினும் கதிக்கத் (த்தை
தியவன்தானு மொருவித்தைக்கூடத்தைச் செய்துபலர்களும் கற்கவும்வாள்வி
ஆயுதகண்டு குருவினும்மேலாக ஐசுவரியம்த னக்குவந்துண்டாகக் குருத்

உ இருவராயுத வித்தியுமொன்றாகச் சேர்த்துக் கொள்ள
எண்ணிக்குருவுரை விட்டோடிப்போம்வழி பார்த்துக்
குருபத்னிஅன்னை யென்னுமுறைமாறிக் கூடிச்சுகிக்கக் கருதிமயலமீறிச் (னும்
செருவுறச்செய்து பெற்றதாயைமுன்னம் சேர்ந்தசுகித்தவ னுக்கனுசனென்

ந எத்தனைதொந்தர வுற்றாலும்பூமியைப் போலே பொறுக்
கின்றவனில்லா விடத்தவன்பத்தினி பாலே (திக்கப்
கத்திப்பரியாச வார்த்தைகள்போதிக்க நடைப்பார்வைபோ லவன்மோனம்சா
பற்றியடுத்தடுத் தஞ்சாதேநீயென று பகர்ந்துபகர்ந்தகல்வானினம்உண்டு குரு

௪ பின்றியொருபகல் வந்தவள்அங்கையைப் பிடித்தான் தள்ளிப்
பெருங்கதவை நெடுந்தாளிழுத்தகம் அடைத்தாள் [லே
சிக்கினைதற்கற்புடை யாள்தன்னெறியாலே சிநதித்துளக்காவல்பூண்டிருக்கமே
அத்தினிலையைவிட் டப்பால்அகன்றிட அனங்கத்தீதன தங்கமெங்கும்சுட குருத்

குருஉருவம்கொண்டஈசன் சித்தனைப்போர்க்குவிளித்தல்.

விருத்தம்.

சித்தனிந்தப் படிசெய்தன் பதிக்கும் சொல்லாள்
சிந்தையில்வைத் தீசனையே நினைத்து நொந்தாள்
மெத்தவுமே புறம்பொருவர் செய்த பாவம்
விலக்கிவைக்கும் கூடல்மகா தேவன் தானே
இத்தரையி லுயிர்தோறும் சாக்ஷி யாக
இருப்பதனுற் றெரிந்துசித் தனைத்தெண் டிக்க
வெற்றிபெறும் கிழக்குருப்போ லுருவம் பூண்டு
வெலனுவான் வந்தவன்பாற் சொலனு வானே.

பாசு, ஆதி.

பல்லவி

சித்தனேவெற்றிவாள் வித்தையைக்கற்றதைத் தேரலாம்ஆமே

அநுபல்லவி

சித்தா மெத்தவில்வித்தை கற்று யெமக்கும்நிகர்
உற்று யெனும்புகழ்ப டைத்தா அல்லவோ அட சித்த

சரணங்கள்

௧ காளைப் பருவம்கொண்டிங் காளிற் புயவலியைச்
சூழத் திறம்பெற்றது நாளைத் தெரியும் அட சித்த

௨ தாடி மரைத்துமூப்பை நாடியிருக்குமெமைக்
கூடிக் களத்திலமை ராடிச்செ யிப்பாய் அட சித்த

௩ என்தன் வலியும்பெற்ற துன் தன் வலியும்காண
இந்த நகர்ப்புறத்தே வந்து சேரடா அட சித்த

குருஉருவம்கொண்டஈசனுக்கும்சித்தனுக்கும்சண்டை.

கழிநெடில்விருத்தம்.

பத்தருக்கெளியோ னிவைசொலநாலாம் பாதகன்சரியென மொழிந்தான்
படிக்கவைத்தவருக் கிடர்தபுரிகதோன் பாதகம்போலிருள் மூடிச்
சித்தனச்சிதைக்கத் திட்டிபவாள்போற் செங்கதிருதிக்குமுன் றிதனைத்
தின்றவன்சண்டி கையப்பணிந்தேத்திச்சிறந்தகச சிடையில்வைத் தணிந்து
வெற்றிவாள்கேட கம்தரித்துரைத்த வெங்களம் குறுகுமுன் தாமும்
வீக்கியேயிடைகசச் சணிந்துவெண்ணீறும் விளங்கிடப்பரிசையா ளேந்தி
நெற்றியிற்கண்ணும் பிறையும்காற்புயமும் நீலகண்டமுமறைத் தெழுந்து
நிகழ்த்தியகுரவன் போர்க்களம்புகுறி நேர்ந்தமராடல்செய் தனனே.

நர்கவெய்தபடலம்

பக்தவராளி, சாப்பு.

பல்லவி

ஆசானுருக்கொண்டு ஐயனுஞ்சித்தனும் அமர்புரிந்தாரே

அநுபல்லவி

வாசாமகோசர மாகச்சினத்துடன் வன்கையைமார்பிலுத் துங்கமுடன்தட்டி
(டுவார் கையில்

சரணங்கள்

௧ எதிர்த்துப்பின்சென் றிருவருங்கோடை இடிபோலொன் றுக்கொன்றதட்
ஏந்தியகேடகத் துள்மறைந்தேயுதித் தேயொளிர்வாளைச்சுழற்றுவார்
மிதித்திடம்வலம் சாரிகைபோய்வீசி வெட்டிவிலக்கித் திரும்பிபக்கம்பேசிக்
கொதித்துவீர் நகைபுரிந்தேவீரம் கூறியேமாறிமே ரேறியிந்தப்படி ஆசா

௨ ஓடிமுதுகிடுவார்போலேபோய்க்கண் ணுருட்டிவிழித்துவந்துதிப்பார்எடுத்
தோங்கியவாளாலே மார்பைப்பொளிசெய் தோதும்குறிதப்பிக் குதிப்பார்
நீடியிவ்வாறிரு பத்துவிதம்ஓதும் நெறியினிருவரும் போர்செய்திடும்போது
ஆடலைநோக்கும் அனைவோருக்கும்காண ஐயனேவெற்றி யடையுங்குறிதோண

௩ தேசிகனில்லாளை யெண்ணிய நெஞ்சத்தைத் தீதாயுரைத்திட்ட நாக்கைப்
செங்கையைப்பற்றி| இழுத்தகரத்தினைச் சேரவேபார்க்கின்றநோக்கை (பினும்
வீசியவாளாலேசொலலிசொலிவைதுவெவ்வேறவைகளைச்சித்ரவதைசெய்து
தீசன்சிரசு முடலுமிரண்டாக நிக்ரகம்செய்தியாருமெய்க்கஅவன்சாக ஆசா

விருத்தம்

கருணைவள்ளல் சித்தனைக்கொன் மகன்று ரத்தைக்
கண்டமா ணுக்கர்பின்சென் றவனில்லாள் முன்
குருவெங்கே யெனக்கோயிற் புகுந்தா ரென்றக்
குயில்மொழிகூ றுங்காலா சான்வ ரக்கண்
டேரமுடைய சித்தனைச்சங் கரித்தீரே ஆங்
குழைக்காணு திங்குவந்தோம் என்ன என்போல்
உருவெடுத்தார் வந்தவனை மாய்த்த தேயோ
உம்பிரகன் செயலோவென் றுரைத்திட் டாளே.

இதுவுமது.

நாயகனீ துரைக்கஇலலாள் சித்தன் தன்பால்
நவின்றதெலாம் சொலத்தெரிந்தர்கண்டன் தன்பாற்
போயிறைஞ்சக் கண்டுகுலோத் துங்கன் கூடற்
புரத்தவரோ டசனரு ளைக்கொண் டோடிச்
சேயனைந்த குணனுக்கு முடிசூட டித்தன்
தேவியுட னரணடிக்கீழ்ச சேர்ந்தா னிதை
நேயமுட னோதுவர்கேட் பவர்கள் பாக்கியம்
நீடியிருந் தாணுலகை நாடு வாரே.

ஆக விருத்தம் ௬, கீர்த்தனை ௩, ஆக ௯.

சிவமயம்

இருபத்தெட்டாவது.

நாகமெய்தபடலம்.

அவதாரிகை — விருத்தம்.

கம்கையில் அணிந்த ஈசன் களத்திறசே வகனு ஆட்கொண்
டங்கம்வெட் டுதலைச் செய்த ஆடலை உரைத்தே னிப்பால்,
திங்கள்வங் கிசமன் னன்மேற் செலலெனச் சமண ரேவும்
செங்கண்வா ளரவை வெட்டும் திறமையை யினிச்சொல் வேனே.

அனந்தகுணபாண்டியன் அரசாட்சி.

மத்தியமாவதி, செம்பை.

பல்லவி.

அனந்தகுணபாண்டியராசன்தானே

அநுபல்லவி

என்றும் — கனந்தருகும்செங்கோலைக் கைப்பிடிக்கின்றானே

சரணங்கள்

க ஆதிநாயகனுருவம் போலே விளங்கும்
ஐந்தெழுத்துடனேஉருத்திராக்ஷமணி மேலே
ஓதரும்வெண்ணீறு முதலாலே வேண்டும்
உறுதியேபொருளென்றெண்ணிஉளத்திற்கொண்டன்பாலே அனந்த

உ ஓரைந்தெழுத்தொலிமிகவும் ஓங்கப்
ஒளியாலும்அகத்திருளும் புறத்திருளும் நீங்கப்
பாரும்தன்னுடெங்கும் நலம் தேங்க
பகவன்திருவேடமாக உலகெங்கும் காண்க அனந்த

ந சந்ததமும்சிவதருமம் கதிக்க அன்பும்
தாங்கிமிகத்தேர்ந்தொழுக லாலெவரும்துதிக்கத்
தந்தைமுதல்முன்னோரினும் மதிக்கத் தேடும்
தலையானகீர்த்தியைக்கொண் டாடிநலம் பதிக்க அனந்த

சந்தவிருத்தம்

அவனியை யனந்தகுண வழுதிமுறை கொண்டுயரும் அரசியல்புரிந்து வருநாள்
அகமிரு ளடைந்துசுண மதனிலுமி ழிந்தகுண வமணர்கள்திரண்டு வெகுவாக்
கவலையில முந்தியொரு புலமதில்ம கஞ்செய்பது கடிகையகல்பந்த லிடையே
கணமதில கழ்ந்தகுழி நடுவிறகி னங்களடு கனலிடையெழுந்த புகைபோல்
புவனமிசை யம்பரம தனிலுடுவி னங்கள்பல பொறிகளெனவுஞ் சிதறவே
புகலருமகஞ்செய்ததில் நடுவினிலெ ழுந்தஎரி பொருதிவளர்குண்ட மதிலே
குவடது எழுந்ததென அசுரனக னென்றுபெயர் கொடுபடம்விரித்த ரவபோல்
குவலயம் நடுங்கவொரு நமனென வெழுந்திவகை குறியுடனெழுந்த ததுவே.

சமணரேவிய அசுரன் மதுரையை விழுங்கவருதல்.

விருத்தம்

மதியைவகிர்ந் திணக்கினது போலே பல்லும்
வன்சினத்திப் பொறிபறக்க விழித்தெ முக்கு
அதிபசித்தி வடவையிலு மிகக்கொ திக்க
அடங்காத தாகமுமேற் கொளமுன் னின்று
சதிகாரர் தமைநோக்கி உங்கட் காகத்
தக்கபணி யாதெனத்தெ னனையடுத்து
மதுரையுடன் விழுங்கிவா வெனஅப் போதே
வந்திட்டான் அவ்வகைவ ளைந்திட்டானே

சௌராஷ்டிரம், ஆதி.

பல்லவி.

ஆசுரனொருவன் அம ராடவந்தனனே

அநுபல்லவி

மாசடைந்திடும்உடல் அமணர்விடுக்க நாக
வடிவதனையெடுத்திப் படியில்ஆலவாய்மீதில் ஆசுரன்

சரணங்கள்

க படியிலிருந் தண்டமட்டும் தோயுமுடல் தெரியவே
பல்லிடுக்கின் துளைவழியே விடம்பெருகிச் சொரியவே
வடவையனல் போலெழுந்து விழியிரண்டும் எரியவே
வல்லிருள்அ டைந்தகுகை யென்னவாயும் விரியவே
அடரும்உழையைத்தேடி ஆர்ந்துமேகங்கள்ண்டும்
இடம்பெருகியமலைக் கிளையாகிமிர்ந்துமண்டும் ஆசுரன்

உ பாதலலோ கத்தில்பில த்வாரம்வெளி காணவே
பாதியுட லழுந்தகிலம் விள்ளுமென்றே தோணவே
மோதிவரும்விழியழல்பார்த்தெதிர்த்தவர்கள்நாணவே
முனைத்துயர்த ருக்கள்முதல் முகங்கருகிப் பூணவே
பாதபங்களில்தங்கும் பட்சிக்கணங்க ளெழுந்
திதிலகபடரு சிறகும்பொசுங்கிவிழ ஆசுரன்

ங பாரதுடுங்கஆதி சேடனும் நடுங்கவே
பகலவன் நடுங்கராகு கேதுவும் நடுங்கவே
சிருயரும் அஷ்டதிக்கின் நாகமும் நடுங்கவே
தென்றிசைக்க திபதியும் பார்த்துளம் நடுங்கவே
ஆரும்வக் ரதந்தத்தை அதுக்கிநகையைக்கூடி
வீரமுடன் நகர்க்கு மேலைத்திசையைநாடி ஆசுரன்

விருத்தம்.

அசுரன்வரத் தெரிந்தால வாயிலுள் ளோர்
அரசன்முன்போய்ப் பெரியவிட நாக மேலைத்

திசையிலண்ட பிண்டமுடன் விழுங்க வாயைத்
திறந்துவரு வதைக்கொல்வா யெனவஞ் சாமல்
இசையமுன்யா னையைவிடுத்தோர் ஏவல்தா னென்
றெண்ணிமதி சூடிஇருக் கின்று னென்று
நிசமுடனே சன்னிதியிற் பணிந் தெழுந்து
நிற்கின்றான் தன்குறையு ரைக்கின் றானே.

அனந்தகுணபாண்டியன்நாகத்தைச்சங்கரித்தல்.

விருத்தம்.

கொடியதா ளாயடிமை செய்திப் போது
சீர்பாம் பிங்கர்மேல் விடுத்தா ரத்தைக்
கடிவதுநின் கருணையென்று கருது மென்னைக்
காத்தருளிச் செய்வதுநின் கடனென் றோதி
அடிபணிந்த னுமதிபெற்று வெளியில் வந்தே
அம்பும்வில்லும் ஏந்திநெடும் கொடிநின் றுடும்
குடதிசையைக் குறித்தரசன் வில்லில் அம்பைக்
கோத்திட்டான் அரவையுயிர் மாய்த்திட் டானே

பந்தவராளி, சாப்பு.

பல்லவி

அனந்தகுணபாண்டியன் தானே வாள் அரவைக்கொன்றுசங்கரித் தானே

அநுபல்லவி

மனந்தனில்அரனடி மறவாமலேநினைந்து
தனந்தனியேநடந்து சாமியுபபலங்கொண் டனந்

சரணங்கள்

க படமதால்கதிரோனைமறைத்து திக்கம் பரமெங்கும்திணியிருள் நிறைந்து
திடமுடன் விஷப்பையைப் பிதுக்கி வக்ர தந்தங்களையுதட்டி லதுக்கி
நெடுமூச்செறிந்துபெரி தானவாயைப் பிளந்து
நீபவனமெங்கெங்கும் ஒருங்காகவே வளைந்து
தடையில்லாமலெடுத்து விழுங்கவந்தது போலே
தானவனுருமாறி வாத்தெரிந்துமென் றோட அனந்த

உ சிங்கமெனமுழக்கம்தொடுத்துத் தீயான திமுக்கென்றுசூடுபசுவில எடுத்து
புங்கமொடிருதலைவளைக்கி நாணைப் பூட்டிஅக்கினிக்கணை இணைக்கித்
துங்கமுடன் விடுக்கக் கணைகள் முழுதும் உண்டு
தூர்த்தன் அவன்வாயாலே கடித்துமிழ்ந்திடக் கண்டு
கங்கையணியும்சுந்த ரேசர் அடி நினைந்து
காத்திரக்ஷிப்பதுந்தம் கடனென்றுளம் துணிந்து அனந்த

ங மின்னும்பிறைவாயம்பென்றோதும் அதை விடுத்தவனுடலதுண்டாம் போ
துன்னுமிடிபோலொலிநீட அனல் சொரியோர்ஆறுக ஓடப் (து
பின்னும்செடியஉடல பூமிதனிலே தாழப்

பிளந்துபாயும்கூர்வாளால் நெளிந்துபுவியில் வீழ
முன்னுள்வருகும்ஆல காலம்போலே நெருக்க
மூடிவருகும்கறை யிருள்போலேவிஷம் கக்க அனந்த

விஷமயக்கம்நீக்கப் பாண்டியன்சுவாமியைவேண்டுதல்·

விருத்தம்.

பகுவாய்நா கம்மடிய விஷம்கி ளம்பிப்
பறந்திடவூ ருள்ளவர்கள் உறங்கினோர் போல்
அகநிலைத விர்ந்துவெயர்த் துடல்தி மிர்ந்தே
ஐம்பொறியும் தடுமாறிக் கபமே லிட்டுச்
சகலரும்நா வறண்டுமூச் சொடுங்கிச் சீவன்
தத்தளிக்கப் பார்த்தரசன் உளம் நடுங்கிப்
பகவானமுன சன்னிதியைத் தேடி வந்து
பணிந்திட்டான அபயமெனத் துணிந்திட் டானே.

மத்தியமாவதி, செம்பை.

க முன்னவனே சரணம் ஆதி முதல்வாநின் சரணம்
இந்நகர்க்கெனறும்அரசா இருபபவனே சரணம்
உ மூலவித்தில லாமல் வந்து முளைத்தவனே சரணம்
ஆலமுணடி தேவர்களுக் கபயஞ்செய்தோய் சரணம்
ங எளியவர்கள யாவருக்கும் இரங்கிடுவோய் சரணம்
வளரும்நெற்றிக் கண்ணுடைய வானவனே சரணம்
ச அடுத்துவந்த சலதிதடுத் தாண்டவனே சரணம்
கடுத்துவநத பெருமழைய கலவிடுத்தோய் சரணம்
ரு மதம்பொழியும் வாரணத்தை மாய்த்தவனே சரணம்
நிதம்பெருக இந்நகரை நிலைக்கவைத்தோய் சரணம்
சா நெடுகவந்த ஆபத்தெலாம் நீக்கிவைத்தோய் சரணம்
விடமயக்க மின்றகற்ற வேணுமையா சரணம்

விருத்தம்

துய்யவனே யேத்தமுடி மதியில் நின்று
சுதைத்துளிவீழ்த் திடப்பாலில் பிரைபோற் சேர
வெய்யவன்முன் இருட்போலே விஷம கன்றார்
மிக்கமலம் பெற்றிடலால் அனேவோ ருக்கும்
ஐயமகன் றறிவுவந்து களிக்கச் செங்கோல்
அனந்தகுணன் பெற்றிருந்தா னிதனைச் சொல்வோர்
வையகத்தில் கேட்பவர் மனோபீஷ் டத்தை
மன்னுவார் சிவனுலகில் துன்னு வாரே

விருத்தம் சா, கீர்த்தனை ரு, தரு சு, சதம் கூ.

சிவமயம்

இருபத்தொன்பதாவது.

மாயப்பசுவைவதைத்தபடலம்.

அவதாரிகை — விருத்தம்.

கடையராஞ் சமணரேவும் கட்செவி யதனைக் கூடல்
உடையவன் அருளால்தென்னன் ஒறுத்தவா றுரைத்தே னிப்பால்
மடையர்பார்த் ததற்குப்பின்னும் மாயமாப் பசுவொன் றேவ
விடையினா லதனைவென்ற விசித்திரம் இனிச்சொல் வேனே.

சமணரேவலால்மாயப்பசுமதுரைமேல்வருதல்.

கழிநெடில்விருத்தம்.

சொலுமனந்தகுண பாண்டியன்பாம்பைத் துணித்தபின் பின்வரும்சமணத்
தூர்த்தர்மா றுறங்கண் டோடுமே கம்போல் தொகுப்படைந் தோடியேபோன
பலரும்வந்திருள்போலஓரிடம்சேர்ந்து படைத்துமுன் விடுத்தவா ரணம்போல்
பாம்பையும்இன்று செகுத்தனர் இனிமேல பண்ணுதல யாதென வோர்ந்து
நலமுறும்பசுவைக் கொன்றிடார் பழிக்கு நாணுவார் ஆகையால் இதுவே
நன்றென இசைந்து சூழ்ந்துமுன் போலே நண்ணியே ஓர்மகம் தனைசெய்
திலகுமக்கினிகுண் டத்திலோர்அசுரன் எழுந்தொருகொடியவெம் பசுப போல
எதிர்வரக்கண்டு பண்டுபோல் மதுரைக் கேகென விடுக்கவந் ததுவே

பந்துவராளி, சாப்பு.

பல்லவி.

மாயப்பசுஎழுந் தாலவாயுள்ளோரைப் பாயபுறப் பட்டதே

அநுபல்லவி

மாயத்தைநீளவும் செய்துமதி கெட்ட தீயச்சமணர்கள் சேர்ந்துவரவிட்ட மா

சரணங்கள்

க மேடையின்மேலேவி ளங்கும்கொடி போலே
மேகத்தைக்குத்திக்கோத் துப்பெருங்கொம் பாலே
சேடன்முடியும்பொ டியாகமண மேலே
சிதிச்சினந்தடி இட்டேவலி னாலே மாய

உ சாயும்மெருமூச் செறிந்து பிறக்கவே
சுராசுரங்களும் ஈபோற் பறக்கவே
காயும்கோபாக்கினிஉ லகம் இறக்கவே
காலாக்கினிவந்த தென்ன நிறக்கவே மாய

௩ கூடிப்பறவை மிருகங்கள் வெருண் டோடக்
கொம்பாலெடுத்தெறிந் தேவாயுப்போற் சாடத்
தேடித்தொடர்ந்துபல் லோருடல்துண் டாடச்
செய்துயிர்வாங்கி இடிபோல்ஒலி நீட மா

கடவுள்கட்டளையால் நந்தி விருஷபமாகவருதல்.

விருத்தம்.

பாருமொரு காலன் வருவதுபோல் மாயப்
பசுவரத்தேர்ந் தனநதருண பாண்டியன் கூடல்
ஊருளதக் கோருடனு லயம்புகுந்தே
உளக்கவலை நீங்குமுறை வேண்டக் கொன்றைத்
தாருடையோன் அருட்கணணால நோக்கி நந்தி
தனையழைத்துத தீப்பசுவைச் செகுத்து வந்து
சேருவாய் எனவுரைக்கக் கேட்டவ் வாறு
திக்கினான் விடையுருவெ டுக்கின் றானே

சங்கராபரணம், ஆதி.

பல்லவி

நந்திபகவானவந்தானே பசுவைவெல்ல நந்திபகவானவந்தானே

அநுபல்லவி

சந்தம்வளரும்சோம சுந்தரமூர்த்தியருளால் நந்தி

சரணஙகள்

க ஏமனும்எதிர்கண்டஞ்சி யேநடுக்கம் கொள்ளவே
மாமலையும்வெஞ்சினத்தீ யாலழன்று பிளளவே
நாமுகம்துழாவக்கடை வாயில் நுரை விளளவே
வியோமமட்டும்தலைநிமிர்ந் தேதுழாவி நளளவே நந்தி

உ நெற்றியில்நிமிர்ந்துமெளி வுறறகொம்பைத்துன்னவே
தொத்தியநவமணிப்பூண் மெத்தவொளி மன்னவே
சுத்தவெண்பிறையைநாகம் சுற்றியதோ வென்னவே
முத்துவெணகதிர்போலசேணம் முதுகிலொளிமின்னவே நந்தி

ந சிறுங்கமாம்பிறையினகிர ணஙகளபோற்று லங்கவே
வெண்கவரிக்கற்றைலலா டந்தனில்இ லங்கவே
துங்கமுகவட்டுநித்தி லங்களால்வி ளங்கவே
தொங்கியசதஙகைபிலபக் கங்கலென்றி லங்கவே நந்தி

ச கண்டத்திற்பாய் புநாவசைக் கிளறதெனத்தோணவே
தெண்டைநாவசைக்கமுத்துத்தணடையாரும்காணவே
மணடியகிண்கிணிக்கோர்வை விண்டவொளி நீளவே
வண்டாளசிலம்புகால அண்டிநாதம் பூணவே நந்தி

ரு தாளெடுத்திந்நிலம்பதித் தாசைதுளால ஊடவே
நீளுமூச்செறிந்துகொம்பி லேகொடிபோ லாடவே
கோளுறுமுகிலைக்குத்திக் கோர்த்துக்கொண்டுகூடவே
வாளிருகண்ணழல்கொட்ட வேபசுவைச் சாடவே நந்தி

மாயப்பசுஇறந்தது

விருத்தம்.

நந்தியிவ்வா றெழுந்துவெள்ளி மலைகாற் கொண்டு
நடக்ததுபோல் சினந்தாவை நாற்றம் பற்றி
வந்துகிழக் கதுமேற்கு வடக்குத் தெற்கு
மாதிரந்தோ றும்மாறி முடுக்கிக் கொம்பால்
கொம்பிமுது கினைக்கிழாத் தள்ளித் தூக்கிக்
குன்றுபோ லெறிந்துவிளை யாடியே தன்
சுந்தரத்தைக் காட்டமலர்க் கணைபட்டாவி
சோர்ந்துவீ ரியம்விடுத்து மாய்ந்த தாமே.

ஆனந்தபைரவி, சாப்பு.

க மாயப்பசுமாளக் கண்டார் ஒரு
மலையாக்கண்டனைவோரும் சந்தோஷங்கொண்டார்
தீயச்சமணர் பயந்தேக நந்தி
தேவன்பேருருவையி டவமலை யாக

உ நிறுத்தியிலிங்கதேகத் தோடே வந்து
நீபவனேசனைப் பணிந்தான் அன் போடே
கறுத்தகந்தரனருள் புரிந்தான் பண்டு
காணுமுருவம்பெற்றிவ ஒருவென்று பரிந்தான்

௩ அனைவருஞ்சன்னிதி யடைந்தார் பாண்டி
அரசனும்நந்தியைத் தொழுதபின் நடந்தான்
மனதி லன்பருக்கருள சுரந்தார் நந்தி
மகிமையைப்பார்த்துமை யுடன்களித் திருந்தார் மாயப்பசு

விருத்தம்.

இந்தவா றமைந்தமலை மேலி ராமன்
இலங்கைநகர்க் கேகிடவா னரங்கள் சூழ
அந்தமிகுந தம்பியனு மான்சுக் ரீவன
அனைவருடன் வந்திருந்தா னதுகண டாங்கே
விந்தமடக் கியமுனிவந் தாலவா யின்
விசேஷமுரைத் திடத்தெரிந்தம் முனிவ னோடே
சுந்தரமூர்த்தியைப்பணிந்து முறைபூ சித்துத்
துதிக்கின்றான் மனத்திலன்பு கதிக்கின் றானே.

பேராசிரியம்

இந்தவகைகோதண்ட ராமன் துதித்துயாள் எண்ணிவருகரும நன்றாய்
இசையும்வாறெவ்வண்ணம் அவ்வண்ணமருள்புரிந் திடுமெனப்பணிய ஈசன்
இரவிகுலராமனே கேளெந்தமக்குநேர் இலகுதென்கீழ்த் திசையிலே
ஏகிவாரிதிசேது பெந்தனஞ்செய்துபின் இராவணனை முடிகள்பத்தும்
சிந்திடச்செய்துனது மனைவியுடனே அயோத் திக்கேகிமுடிபுனைந்து
செங்கோல்செலுத்திவெகு நாளினிதிருந்துமேல் சிறந்தவைகுந்த மதிலே

செல்வாயினிக்கவலை கொள்ளவேண்டாமெனச் செப்புமசரீரி கேட்டுத்
தென்மதுரைநாதனடி தாழ்ந்துபின்விடைகொண்டு திருமனமகிழ்ந் தேகியே
சந்தவேதப்பொருளுரைத்தவன்சொன்னபடி தான்செய்திலங்கையெய்தித்
தசமுகனைவென்றவன் செல்வமெல்லாம்விபீஷணனுக்களித்தெழுந்து
சந்தோஷமாயிராமேசுவரங்கண்டாங்கு சம்புவைப்பூஜைசெய்து
தாழ்ந்துவிடைகொண்டுமீண் டாலவாய்ஐயனைச் சரணம்பணிந் தெழுந்து
அந்தமுடனேதனதுசொந்தநகரெய்தினன் அனந்தகுணபாண்டியனென்போன்
அருமைமகனானகுல பூஷணத்தென்னனுக் கரசுரிமையீந்து பகவான்
அடிபணிந்தரனுலகடைந்திருந்தானிதனை அறைபவர்கேட்பவர்கள் தமதிஷ்
டார்த்தங்கள்பெற்றுமேல் அரனுலகிலேமுடிவில அடைவரென் றறிகுவீரே.

ஆக விருத்தம் ௪ கழிநெடில் க பேராசிரியம் க கீர்த்தனை உ தரு க ஆக க

உ

சிவமயம்.

முப்பதாவது

மெய்க்காட்டிட்டபடலம்.

அவதாரிகை — விருத்தம்.

பாவியாஞ் சமணரேவும் பசுவினைக் கடவுள் நந்தி
தேவனால மாயச்செய்த செய்கைமுன் னுரைத்தே னிப்பால்
காவலன் தனக்காச்சேவ கம்பூண்டு மெய்க்காட் டிட்டு
மேவியோ ராடல்செய்த விசித்திர மினிச்சொல் வேனே.

ரீதிகௌளை, ஆதி.

க மாதவரேகேளும்குல பூஷணபாண்டியன்இந்த
மண்டலத்தை யாண்டுவரும் போது
சேதிராயனென்றொருவில் வேடனகன் கொண்டேசண்டை
செய்யவிடுத் தான்தனக்குத் தூது

உ அந்தவகையறிந்துச வுந்தரசா மந்தசே
னைபதிதன் னுடனேயா ராய்ந்து
இந்தவிஷம்மதை பொன்னறைதிறந்துசெம்பொனை
எடுத்தெவள வுவேண்டினும் ஈந்து

௩ இன்னமும்ப திதாச்சில சேனையைச்சே கரம்பண்ணி
எடுத்தெழுதிக் கொள்ளச்சொல்ல அடுத்து
மன்னவன் சொன்னபடியே பொன்னறைதிறந்துளத்த
வாவடங்க வேண்டும்பொரு ளெடுத்து

௪ ஆண்டவன் ஆலயம்புகுந் தாடகத்தாமரையடிந்
தாலவாய்ப்பிரானடியில் போற்றி
ஈண்டெனத ரசனெண்ணும் வாறுமுடிப் பாயென்றும்பொன்
யாவும்ஐயா னுக்காச்செல வாற்றி

௫ வானளக்குங் கோபுரமும் ஆயிரக்கால் மண்டபமும்
வஜ்ரகோளகையும்விலை யெய்தும்
ஆனகண்டிகையும்முத்துக் கவிகையும் கொடிநிரையும்
ஆதியாப்ப லபலவாச் செய்து

௬ விண்ணவர்க்காகச்சிலது வேள்வியும் சுவையாறுடன்
வேதியர்க்கன் னமும்பிரமத் தியானம்
பண்ணாரும் துறந்தவருக் கையமும் வேறுவேறுக்ப்
பலதருமத் துடன்செய்தான் தான்ம்

சாமந்தன் அரசர்களுக்கு ஓலைஎழுதுதல்.

தருமநெறி யாற்றிடும்சா மந்தன் சைவ
சாதனமுள் ளோரெவரா னாலும் கண்டால்
அரனெனவே நினைத்தசனம் அருத்திச் சேஷம்
அருந்திநின்றைக் காயிரம்நா ளைக்கிரண்டா
யிரமிவ்வா றுகவரும் பொருள்க ளெல்லாம்
ஈவதுமன் னவனறிந்த தறிந்து பன்னாட்
டரசருக்கும் வெவ்வேறுப் பரிசிந் தோலை
அனுப்புவான் போல்பவந்த மாற்று வானே.

சௌராஷ்டிரம், சாப்பு.

பல்லவி.

எழுதுசீக்கிரத்திலே எலலோர்களுக்கும் ஓலை எழுது

அநுபல்லவி.

முழுதும்காத் திரக்ஷிக்கும் முத்திபுரே சனைவேண்டி எழுது

சரணங்கள்

பல்லவர் கொங்கணர் வங்கர் பப்பரர் ஒட்டியர் அங்கர்
வில்லவர் கேகயர் கங்கர் மேதினிபுகழுங் கொங்கர்க் கெழுது
மச்சராளர் கர்நாடர் மாளவர் காஞ்சி மராடர்
குச்சரர் சிந்து விராடர் கொங்கணர் கன்னேசிநாடர்க் கெழுது
மகதர் சிங்களர் கலிங்கர் மதுரைகௌடா குலிங்கர்
குருதர் ஆரியர் தெலுங்கர் குருநாடர் வருமா தங்கர்க் கெழுது

மேவியசா மந்தனெங்கும் இவைபொய் யோலை
விடுத்திருக்கும் போதரசன்திங்க ளாறுய்ச்
சேவகர்வா ராதிருக்கத் தெரிந்து நாளைத்
தினமுதிக்கு முன்சேனை யெல்லாங் கொண்டு
வாவெனவே அழைத்துரைக்க அதற்கி சைந்து
மாறிகட மாடிவிளை யாடு மாதி
தேவனு லயம்புகுந்து சன்னிதிக் குள்
செல்லுவான் பணிந்தெழுந்து சொல்லு வானே.

விருத்தம்.

அண்ணலே யரசளித்த பொருளெல்லாமென்
றும்பணிகொண் டேரேவன் சேனை யீட்டும்
வண்ணமியா தெனக்கேட்க அடியார் துன்பம்
மாற்றுவதே விரதமாப் பூண்ட நெற்றிக்
கண்ணனருளாலே சேனைகளை நாளைக்
காணலாம் நீயுமர சவைக்கெய் தென்று
விண்ணிலெழுந் தெய்வவாக் கறிந்தா னந்தம்
மீறினான் தனதுகுறை ஆறினானே.

ஆனந்தபைரவி, சாப்பு.

க சாமந்தனென்றசேனாபதிஈசனைத் தாழ்ந்துதனதில்லத்துறைந்தான் இந்த
மாமண்டலத்தை விளக்கிடும்சூரியனை மைக்கடலுக்குள்ளே மறைந்தான்
உ மெத்தஇருள்வரப்பார்த்தவனென்றுவிடியும்விடியுமென்றெண்ணினான்பரி
சுத்தமாகித்திரை இல்லாதடிக்கடி தோனறித்தனதிருகண்ணினால் (வரும்
ந விண்ணினுடுக்களை அண்ணாந்துபார்த்து விடியுங்காலாச்சென்றுதளர்ந்தான்
கண்ணுதல்சேனை எழுச்சியைக்காணக் கருதியிரவெலாமளந்தான் (ன்றை
ச ஆரணந்தேடும்பரஞ்சுடர்தாமொருஅன்பன்பொருட்டருள்பொழிந்துகொ
தாரைமறைத்துத் திருவுருவம்கொண்டு தாமேபுரவிமேல் எழுந்து
ரு தானையுடன்வரக் காணவந்தாற்போலே சாகரத் தாடிஅனபாலே இருள்
ஆனதுகளை அலம்பிவிளக்கம்செய்தாதித்தன் தோன்றிடும்காலை
சு அட்டாளசுந்தரநாயகன்முன்பணிந்தன்புடன வேண்டிக்கைஇரந்து சந்த்ர
வட்டக்கவிகை நிழற்றிடவேந்தன்மனைக்குள் வரும்போது விரைந்து
எ மண்டியசங்குகன்னன்முதலானபிரமதகணத்தோட னேகம் பெரும்
குண்டோதரனாதி பூதகணங்களும் கோளுடைக சாவாளர் ஆக
அ கூறும்வடிவாள்கோடாலிவில்தோமரம் குந்தம்முதலாக ஏற்க மூ
வாறுபடையுடன் வாயுவிலும்கடி தாகப்புறம்பெங்கும் காக்க
கூ நந்திபிருங்கிமுதலவர்புண்டரம் நன்னுதலில்அணிந திலங்கப் பெற்றுப்
பந்திபந்தியாவடிவாள்பிடித்துப் பரிச்சேவகராவந் திணங்க (இருந
ய கொற்றவிடையைத்தானேதுய்ய கொய்யுளைக் கோலப்பரியாக்கி மேலே
தொற்றைச்சேவகராமாறிநடிக்கும்ஒருவர்வந்தாரேபின்னாலே
கக பல்லியமள்ளர் புரவியொலிஆரபாரத்துடன்வர லாலே எழு
செல்லொலிமங்கமுன்னாள்நகர்மேல்வந்த சீறியவாரிதி போலே

சாமந்தன்அரசனுக்குச்சேனைவரும்நாட்டுவிவரம்கூறுதல்.

விருத்தம்.

சேனைவரக் கண்டெனசாமந்தன வேந்தன்
திருவடியிற் பணிந்துரைக்க அவன்மகிழ்ந்தாங்
கானதொரு மண்டபத்தி லேறிச செம்பொன்
அரியணைமீ திருந்துபகை வோரை வெலலும்

தானைவரும் சிறப்புறிந்தெத் தேயத் துள்ளார்
சாற்றெனப்பொற் பிரம்புகையிற் றரித்து நீட்டி
நானிலத்தி லவரிருக்கை யொவ்வொன் றாக
நாட்டுவான் அணியணியாக் காட்டு வானே.

சௌராஷ்டிரம், சாப்பு.

பல்லவி.

மன்னுசேனையின் தன்னாட்டிற்சில தென்னுலேசொல்லக் கேளாய்

அநுபல்லவி.

கன்னுவலர்கள் தந்நாவுக்கினி தெந்நாளும்பெற வாழும் மன்னு

சரணங்கள்

கொங்கணரிவர்ஐய சொல்லும் சிங்களர்இவர் ஐய இவர்
அங்கரவர் கலிங்கரவர் தெலுங்கரிவர்கள் ஐய மன்னு
மச்சரர்இவர் ஐய இவர் குச்சரரிவர் ஐய அவர்
இச்சகத்துளோர்மெச்சும்வீரர்கள்நிச்சயமாகும்ஐய மன்னு
பல்லவரிவர்ஐய இவர் வில்லவரிவர் ஐய இவர்
கொல்லரிவர்கள்மல்லமர்செய்து வெல்லுவரிவர்ஐய மன்னு

இன்னவா றுரைக்கவெகு தேசத் தாரை
இங்கழைத்த ததிசயமென் றரசன் சொல்ல
உன்னதரும் பொருள்முழுதும் கணக்கில் லாமல்
உதவினதால் வந்தனரென் றுரைக்கப பின்னும்
மன்னுமிப்ப டையிற்பரிமே லேறுந் தைச்சே
வகராக நிற்பவர்யா ரென்று கேட்கத்
துன்னியஇச் சேனையில்யா ரென்ற றிந்து
சொல்வதெனச் சாமந்தன் சொல்லி னானே.

பூரி, ஆதி.

சாமந்தனிவ்விதம்புகன்றான் அவர் தம்மைஇங்கேஅழைப்பியென்றான்
காமன்தனை வென்றவனபாலே வரக் கண்டரசனுவந்தன்பாலே
ஆடைமுதலளிக்கக்கண்டு உள்ளத் தன்புவிடான்பொருட்டால் கொண்டு
கூடிவந்ததமர்க்கும் அளித்தான் தாமும் கூடத்தரித்துமனம் களித்தான
ஆனவயப்பரியையோட்டிக் கதி ஐந்தும்தனிநடத்திக்காட்டிச்
சேனையுடன்பொருதும்போது வேடச் சேதிராயன்புடவிமீது
வேட்டையாடையிற்புலி யாலே மாண்ட விதத்தைத்தூதர்சொல்லமேலே
ஈட்டுமுகமலர்ச்சிஅடுத்தான்சேனைக்கிறைவனுக்கும்வரிசைகொடுத்தான

பரிசிந்த வாறுகொடுத் திடவே சேனு
பதியுவந்தச் சேனையைமெய்க் காட்டுத் தர்து
விரைவினிலே தங்கள்தங்கள் இருக்கை செல்ல
விடைகொடுப்பான் போல்நிற்க ஆங்கே நின்ற

நவால வாய்ப்பிரான் மனித ரூபம்
சிறந்தசே வகருடனே மறைந்திடப் பார்த்
தாசன்ஐய முறநோக்கி மிதுகம் கூடல்
ஐயன்விளை யாடலென்றே அறிந்திட் டானே.

இதுவுமது.

கண்டுகண்ணீர் வரப்புளக முறத்தனக் கெக்
காலும்உயிர்த் துணையாம்சா மநாத னைப்பார்த்
தண்டர்பிரா னேஉனக்கே எளிதில வந்தான
ஆனதினால் எமக்கவனே யாக நீயே
உண்டெனவே வரிசையளித் துளக்க ளிப்புற்
றுலகியலைச் செய்துதென்னன வாழ்நதா ளித்தைக்
கொண்டுரைபபோர் கேடபவர்அ பீஷ்டம் பெறறுக்
கொளவர்பினபு சிவனுலகிற குடிகொள் வாரே.

விருத்தம் அ, கீர்த்தனை உ, தருரு, ஆக கக. முறறும்.

சிவமயம்

முப்பத்தொனறுவது,

உலவாக்கிழியளித்தபடலம்.

அவதாரிகை — விருத்தம்.

செழியன்முன் பரிமேறறுமோர் சேவக ஞகிமூன்று
விழியுளோன் மெய்க்காட்டிட்ட விதஞ்சில துரைத்தே னிப்பால்
மழைமறத் தயர்வுகொள்ளம் மனனனுக் குலவாச செம்பொற்
கிழிகொடுத் தாடல்செய்த கீர்த்தியை யினிச்சொல வேனே.

குலபூஷணபாண்டியன்அரசுபுரிதல்.

காம்போதி, ஆதி.

பலலவி.

குலபூஷணபாண்டியன் ராஜ்யபாரஞ்செய்த கொள்கைகேளும்முனி வோரே

அநுபலலவி

பலபூவெடுத்தீசன பாதந்தனி லணிந்து
மலபூசனைசெய்திடும் நடத்தையிலே துணிந்து குல

சரணஙகள்

க நவிலும்வ்ருதஙகளுக்குட் சிரேஷ்டமென் றன்பினுலே
நயந்துசோமவார வ்ருதம்தொடுத் தொருககாலே
சிவவ்ருதமுள்ளதெலலாம் தப்பாம லேமெனமேலே
திரிகரணமுமொன்றுச் சேர்ந்துசெய் தானிப்பாலே குல

உ ஈன்றுள்பசித்திருக்க அன்னதானத்தில் மனம்
இசைந்திடுவதுபோலே சதுர்வேதப்பொரு ளினம்

ஆன்றமறையவரை யிகழ்ந்திட்டதாலே கனம்
அகன்றுமழையில்லாமல் போச்சுதேசெந்நி தினம் குன
படிக்குட்பயிர்விளைப்போர் தம்க்குமனம் வெறுக்கப்
பசும்புல்நுனிகருமைற் பல்லுயிரும் மறுக்கக்
குடிக்கத்தண்ணிரில்லாமல் வளங்களெல்லாம் சிறுக்கக்
கூடல்நாடெங்கும்பஞ்சக் கோலம்கொண்டு வறுக்கக் குன
மறையோர்க்குரியவேதம் முதல்மறந்து திருந்த
வானோர்முனிவோர்முதல் வேள்விசெய்ய வருந்தப்
புறநாடணைந்திழிந்த தொழில்செய்தன்னம் அருந்தப்
புகலும்குடியும்அவ்வா றகலும்எண்ணம் பொருந்தக் குன

விருத்தம்.

இந்நிலையா வரும்வருந்தத் தெரிந்து வேந்தன்
இந்துவா ரத்திலம்பொற் கஞ்சத் தாடி
அன்னைமீ னாக்ஷிசுந்தரன்முன் பேசி
அங்கைகுவித் தனைத்துயிர்க்கும் உயிராய் நின்றோய்
மன்னுயிரெல் லாம்பசியால் நோதல் என்னை
வருத்துவதால் மிகக்கலங்கி யேவந் தேன்உன்
தன்னருளால் என்குறைநீக் கிடுவா யென்று
தனதிருகை விரித்தெழுந்து சாற்றி னானே.

இதுவுமது

மன்னவனிவ் வாறிரக்கத் தவறு கொஞ்சம்
மனம்கொண்டு வாய்பேசா திருக்கப் பார்த்துத்
தன்னிடம்சென் றீசனருள் பெற நினைந்து
தரைமீதில் உறங்கஅவன் கனவின் கண்ணே
பொன்னவிர்சங் கக்குழையும் திருவெண் ணீறும்
புனைந்துசரி கோவணமும் தயங்கக் காட்டி
அந்நிலையே சித்தவடி வம்பூண் டாங்கே
அடுக்கின்றார் சாமிசொல்லத் தொடுக்கின்றா ரே

மத்தியமாவதி, ஆதி.

வாழும் பாண்டியமகிபா மணி மாலைதொடு மார்பா நம்மை
சூழும் பலநாளா வேண்டித் துதிக்கும்நல திபா
அனகாபுலிக் கரசேஉல காண்டாய்வெகு நாளா யதில்
இனியோர்குறை உனக்குண்டதை இசைப்போம்கொஞ்சம்கேளாய்
வீட்டுள்திரு விளக்கைவிட்டுவெளிக்குப் பந்தம் போலே விரதப்
ஈட்டித்தினம் புரிந்தேமகம் இகழ்ந்துவிட்ட தாலே
சதுராகமக் கிசையும்சிங்கா சனமாவது மறையே இவ்
அதுவனறிவ மதுபாதுகை யாய்க்காண்பதும் மறையே
மேலும்நமக் கேறும்துய்ய விடையாவதும் மறையே இ
காலுக்கும்நூ புரமாயொலி கதிக்கின்றதும் மறையே

௬ அசையாமலே தரிக்கின்றகோவணமாவது மறையே அதி
விசுவாசமாயதிசம்முடை விழியாவதும் மறையே
௭ மூலமுதலாகின்றசம் மொழியாவதும் மறையே நெடு
மாலோடயன் தேடுமெந்தம் வடிவாவதும் மறையே
௮ மலக்காதேசம் ஆக்ஞாசக்தி வடிவாவதும் மறையே விதி
விலக்காஞானம் பொருத்திச்சகம் விளக்குவதும் மறையே
௯ குலவும்பல உயிர்க்கும்போகம் கொடுக்கின்றதும் மறையே பல
பலபேதங்கள் போக்கும்விதி பகருவதும் மறையே
௰ தகைகொண்டமைப் பிரியாமுத்தி தருகின்றதும்மறையே வளர்
அகிலாண்டமும் செலுத்தச் செஙகோலதுவானதும்மறையே

பாண்டியனை யாகாதிசத்கர்மம்செய்ய ஆக்ஞாபித்தல்.

சித்தரிந்த வாறுரைத்துப் பின்னு மந்தச்
செழுமறைகட் குறுதியா குவரச் சொலலுக
கொத்தபடி கலிநோய்சிந் திடவேள் வித்தி
யோங்கவளர்த் தெம்மிடததி லன்பெக் காலும்
வைத்துயர்வே தியராலே செய்யும் வேள்வி
மழைக்கேது வாகுமிவர் தம்மை மைநதா
அத்தகைமை யோரைநற்றி டாதா லிவ்வா
றுச்சென்றார் கேட்பாயோர் டேச்சென்றுரே

பரசு, சாப்பு.

பல்லவி

பாண்டியபூ பதியே வேண்டுவாய் சுருதியை

அநுபல்லவி

பாண்டியபூ பதியே யினம்தேடிப் பலதருமமும்நாடிப் பண்ணுவாய்நீடிப் பாண்

சரணங்கள்

௧ நன்மகச்செய் மறையோர் தமைக் காணு
கமைப்போல வரைப்பேணு நன்மையைப் பூணு பாண்
௨ தருமநூல் வழியே மனம் சார்ந்து
தழைக்குஞ்செங் கோலேர்து சத்திடம் சேர்ந்து பாண்
௩ வாசவனு தியருக் கவிர் பாகம்
மறையோர்செ யும்யாகம் மழைக்கு யோகம் பாண்

விருத்தம்

திருவருட்கொண் டிவையுரைத்துத் தங்கட் பாளம்
செறிந்தவுல வாக்கிழியொன் றீந்திப் போதிவ்
வரியகிழி தனிலெவள வெடுத்திட் டாலும்
அவ்வளவுக் குக்குறையா திருக்க லாகும்

பொருளிதனைக் கொண்டேனது வறுமை யெல்லாம்
போக்கெனவே யவன்கவலை நீங்கும் வண்ணம்
கிருபனுக்குத் திருநீறிட் டகத்திலன்பு
நிறைந்திட்டார் திருவுருவம் மறைந்திட் டாரே

குலபூஷணன்பொற்கிழியைப்பூசைசெய்தல்

விருத்தம்.

மறைந்திடுமுன் கனவும்நன வாகத் தானே
வணங்கியெழுந் தீசனடி போலே யம்பொன்
நிறைந்தகிழி யைத்தலைமேல் வைத்து வந்து
நின்றோரு கூர்த்தமள வும்கூத் தாடி
அறைந்தகழ லமைச்சர்படைத் தலைவ ராதி
யனைவருக்கும் காட்டியறி வித்து வேந்தன்
சிறந்துயர்சிங் காசனத்தி லேறிச சிந்தை
தேற்றுவான் கடவுளைப் போற்று வானே.

பரசு, ஆதி

பல்லவி.

பூசனைசெய் தானே குல பூஷணன் றானே

அநுபல்லவி

ஈசனரு ளும்கிழியைவைத் தெங்கும்புகழ்ந்திடச் சங்கமுழங்கிடப்

சரணங்கள்

வாய்ந்தவேதங்கள் சொலிக்கவேபல வாத்தியங்களும் ஒலிக்கவே
ஆய்ந்தபூமாலை யணிந்து தூபதீ பாராதனையுப சாரா திகளுடன்

உ கங்கையணியும் சோமசுந்தரக் கடவுளேயெனத்திடமுடன்பணிந் (லமும்
தெங்கணும்புகழ்தயகுமைந் தெழுந் தெண்ணிப்ரதக்ஷணம்பணணித்திகா
பூசனை (கும்

ந அம்பொற்கிழியை யவிழ்த்தந் தணர்க்கும் ஆவலுடனசெய்வேளவிகளுக்
தென்புடனகொடுத்தியாவர்களுக்கும்செல்லும்செலவுக்கீந்தெலலைவரை
பூசனை (யாமற்

ச அடியவருக்குக் கொடுக்கக்கொடுக்க அளவுக்குக்குறை யாமலெடுக்க
முடிவிலலாதபி ரமானந்தம்போலே முத்திபுரதுள்ளோர்திருப்தியடைந்திட
பூசனை

விருத்தம்

இன்னவகை பூசைசெய்தக் கிழிப்பொன் றாலே
ஈசனுக்குத் திருப்பணிகள் முதலாச் செய்து
முன்னவர்துறை யாதந்திக் கடலை மொண்டு
மொண்டுகுல பூஷணமே கந்தான் பெய்ய

மன்னியதெய் வத்தரும்பயிர்க ளோங்க
வாரிதியைக் குடித்துமுகில் சொரித லாலே
கன்னிநா டனைகநகர் போலே யாரும்
கதித்திட்டார் தழைத்தோங்கி மதித்திட்டாரே
புமது
கனையவளர்கண் டன்புகழைத் துதிப்போர் வையா
கரணர்மகத் தீக்களைவாழ் விப்போர் தூய
மறைவல்லோர் மறைமுடிச்சொல லாய்வோ ருண்மை
வழங்குமிரு திகளுணர்வோர் முதலா நீங்கா
துறைதலின்றப் பாண்டியநா டனைக போலே
ஓங்கியே வளர்ந்ததிதைப் படிப்போர் கேட்போர்
குறைவிலாநிறைந்திருக்கும் பொருளா கூதித்துவம்
கூடி வா ரின் ப மி க நா டி வா ரே.

ஆக விருத்தம் அ, கீர்த்தனை ௪, தரு க, ஆக கரு. முற்றும்.

உ
சிவமயம்.
முப்பத்திரண்டாவது,
வளையல்விற்றபடலம்.
அவதாரிகை — விருத்தம்

பூதநாயகன் தென்னற்காப் பொற்கிழி யதனை யீந்தே
ஆதரித்தாடல செய்த அதிசய முரைத்தே னிப்பால்
மாதிருவிளங்குகின்ற வசியர்பெண் களுக்கா அந்த
வீதியில் வளையல்விற்ற விதஞ்சில தினிசொல வேனே.

ஈசன்காபாலியாகத்தாருகாவனத்திற்குவருதல்.

விருத்தம்

சீருயர்பாண்டியகுலபூ ஷணன்செங் கோலைச்
செலுத்திவரும் நாளையிலே முன்னாட் டெய்வ
தாருகா வனத்துமுனி மடவார் கற்பின
தகைமைதனை யளவறிந்து பார்க்க வென்றே
மாரனைநெற் றிக்கண்ணாற் பொடிசெய் திட்ட
மறவ னொருகாபாலி யாகத் தானே
பேருயரும் திருவால வாயை விட்டுப்
போந்திட்டான் அவ்வனத்தைச் சார்ந்திட் டானே.

சௌராஷ்டிரம், சாப்பு.
பல்லவி
தேவதேவோத் தமன்தாரு காவனம்வந் தானேபாரும்
அநுபல்லவி
பூவயன்மால் தேடரிய சேவடிநி லம்படியத்

சரணங்கள்

பாதபங்கயத்தின் பாலே பாதுகைதொட் டொருக்காலே
ஓதுமன்மதனதன் ஞுலே உற்றதவம் பூண்டாற் போலே தேவ
ஒண்மதிமுகம் விளங்க உடம்பெங்கும் நீறிலங்க
உண்மகிழ்ந்து கொண்டுத்துங்க முடனேபார்த் தோர் மயங்கத் தேவ
வேதகௌபீனம் தாங்க மென்கனிவாய் கீத மோங்க
மாதவர்சி னைப்பைக் காண்க மாரீசம்பூண் டையம் வாங்கத் தேவ

முனிமங்கையர்மயல்கொண்டுசுவாமியைப்பின்றொடருதல்.

விருத்தம்

வள்ளலெனு மாலவாய்ப் பெருமான் தோடி
மன்மதா கிருதியாக வருகும் போதே
உள்ளரிய காற்சிலம்பி னொலியும் கீத
ஒலியும்கைத் துடியொலியும் செவிக்கே றக்கண்
டுள்ளமதைப் பிளந்துசிறை கலைநதி மூக்க
ஒண்டொடியா ரனைவர்களும் பலிகைக் கொண்டு
கள்ளவிழ்கூந் தலும்வளையும் கலையும் சோரக்
காண்கின்றார் மையல்மிகப் பூணகின் றாரே

பரசு, ஆதி

பல்லவி

மங்கையர்பின்றொடர்ந்தார் தவமுனி மங்கையர்பின்றொடர்ந்தார்

அநுபல்லவி

மங்கையைப்பாகத்தி லெப்போதும்வைத் தவன்
மாமுடிமீதொரு பெண்ணைமறைத் தவன்
செங்கையிலேதுடி பெற்றுவனம் வந்து
சேர்ந்ததுநுண்ணிடை தேய்ந்துதள் ளாடிய மங்கை

சரணங்கள்

௧ வாக்குமனத்துக்க கோசரமாகிய
மாவடிவம்பெற்ற தேவனைக் கண்ணுறப்
பார்க்கவென்றாசைமுன் பற்றியிழுத்திடப்
பாவோட்டமாத்தாரு காவனத்தி லுள்ள மங்கை
௨ இல்லினைபுறம்வந்த ருந்தவரேபிட்சை
இந்தாரும்இந்தாரும் என்று தரவுடன்
நில்லும்நில்லும்என்று சொலலித்தண்ணீர்மிக
நீடியலைகண் டோடிய மான்போல மங்கை
௩ கையில்வளையும் நழுவஉடுக்கும்
கலையும்நழுவத் தலையில்முடிக் கின்ற
செய்யமலரும் நழுவமயல்பூண்டு
தேனைக்கண் டோடும்வண் டானவைகள் போல மங்கை
௪ புன்சிரிப்புற்ற முகம்கண்டவரைப்
புணரநினைத்தாப ரணமுதல் ஏந்தி

பஞ்சசரனாலே நெஞ்சம்துளைபட்டுப்
பள்ளத்தைக்கண்டோடும் வெள்ளத்துக்கொப்பாக் மங்கை
வைத்தகண்வாங்காமல் பார்த்துமனம்திருப்தி
வாராமலேகமஸ் காரம்புரிந்துசெங்
கைத்தலத்திற்சில வஸ்துக்களும்பெற்றுக்
காற்றுள்ளபோதேநெல் தூற்றிக்கொள்வார்போல மங்கை
௬ ஆண்டவன்தேகத்தைத் தீண்டினாற்போதுமென்
றங்கையிற்சர்க்கரை யுங்கொண்டுளத்தாசை
பூண்டிருபக்கமும் பின்பக்கமுஞ்சென்று
புத்தமுதத்தைஈ மொய்த்தது போற்சுற்றி மங்கை
௭ சாமியைக்கட்டி அணைக்கச்சமீபத்தைச்
சாருமுன்னேநெடுந் தூரம்செல்லத்தங்கள்
மாமோகத்தால்வரும் காமம்வெளிப்பட்ட
மன்னியஆனந்தம் தன்னை மனத்துற மங்கை
௮ பாலும்நெய்யும்தயி ரும்தேனும்நல்ல
பழங்கள்முதலா வழங்கஅவர்மெய்யில்
சாலவும்பூமழை போலிறைத்துப்பூர்ண
சந்திரனைக்கண்ட சகோரங்கள் போலவே மங்கை

முனிமங்கையர் சுவாமியோடு சரசவழக்காடுதல்.

விருத்தம்

தூயமுனி மடந்தையரிவ் வாறு சோம
சுந்தரனைத் தொடர்ந்தவர்க ளேந்தி வந்த
ஐயமுடன் கையம்பொன் வளையும் பெய்வார்
அகத்திலுறும் நாணுமறை நாணும் சோர்வார்
செய்யுமத னம்புடனே மலர்க்கண் ணம்பும்
திரண்டெழுந்த கொங்கையின்மேற் சொரிய மிக்க
மையலடங் காதுபர வசமாச் சித்தை
வாடியே சரசவழக் காடு வாரே.

கல்யாணி, சாப்பு

௧ காமகோடிசுந்தரரேகருணைசெய்தெங்கள் கைவளைதாரும்பெரியோரே தவ மாமுனிமடவீரேயுங்கள்கந்தரத்தல்லோ மற்றதுள்ளதென்றறிவீரே (யோரே
௨ உடும்புவேண்டாம்கையைவிடுமென்றாலபோற்றாருமுடுக்கும்கலையைப்பெரி மெத்த — இடும்புகள்பேசுவீ ருங்கள்முகமதியில் இருக்குதஃதென்றறிவீரே
௩ இளைத்தவேளைதெரிந்ததவுதல்போலமை திடைகண்டிணங்கீர்பெரியோரே அது பளிச்செனமின்போலாவீருங்களுக்கிடைகணாலல்பார்க்கக்காணுதறிவீரே
௪ இலவுகாத்தகிளிபோலானோம்பண்டிருவளித் தினிவிடைகொடும்பெரியோ ரே வம்பு — குலவாமலேபேசுமடவீர்கடலிலேசென் றுறங்குவதனையறிவீரே
௫ கல்லோர்போலிருக்கிறீ ரல்லாமல்எவளவும் கூடுவழக்கில்லைபெரி யோரே

சோதி — நல்லமுருக்குழலீர் கடுவில்லாமையுங்கட் கடுத்ததல்லவோ அறிவீரே
சு காலில்விழுந்துமிரங்காதவுமதுமனம் கல்லுக்கிணையாம்பெரியோரே மிக
மாதுறும்மடவீரும் மார்பின்முலைகளல்லோ வலியகல்லாமறிவீரே (கேளும்
எ சூதகம்நீக்கும்திவ்யதற்கையினைவிடாமல் சுமப்பதேதுக்குப்பெரியோரே
யூதுகுளேநீங்களிடும்பிச்சைகளையெலலாம் வாங்குதற்கென்றறிவீரே [எத்தி
அ மெத்தப்படித்தவர்நீருமதுசெப்பெதுபோல விளங்கிற்றேதும்பெரியோரே
எத்திப்பேசும்மடவீருநகள் தனங்களைப்போல் இருக்கிறதென்றேயறி வீரே
கூ கல்லாக்கலைகள்கற்றீர்கறுத்ததென்னிமித்தமுங் கந்தாமிகபெரியோரே
[illegible] — புலவருமடவீர் பிதற்றுவீரதுமழை பொழிவதற்கென்றறி வீரே
(டும்பெரியோரே நல்ல
ய எமைப்போலும்விழிக்குள்ளே இருக்கும்மடவாருடன் எமையும்சேர்த்தி
துமதுவிழிக்குளெம்போ லேயிருப்பவரைக்கண் ணுற்றுநீர்பார்த்தறி வீரே
கூ செல்லன்சொல்லுக்கஞ்சான் போலேஉத்தரமேது செப்பினீர்காணும்பெ
ரியோரே இது — சொல்லவேணுமோதெற்கி லிருந்துபார்த்தாற்றனே தோ

வேளையெரித் தவருடனிவ் வாறு வாது
விளம்பியெமைத் தழுவாமல விடுவீ ராகில்
மீளவும்நீ ரவிழ்த்தகலை யுடுத்து மெங்கள்
விரகநோ யறிந்தனபர் வெகுளா முன்னம்
ஏளனமாக் கழற்றிவிடும் வளையெங் கையில
எடுத்திடுமென் றனைவர்களும் வேண்ட நோக்கி
நாளைவந்து வளையிடுவோ மெனப்பு கன்று
நடந்திட்டார் தமதிருக்கை யடைந்திட் டாரே

காம்போதி, சாபபு

(தம
க பிள்ளைமதியைச் சடையில்முடிக்கும் பெருமான்மதுரையைச் சேர்ந்தான
துள்ளமும்நாணும்பிரான்கொண்டுபோகத் திருப்பவொண்ணுமலேசோர்ந்தார்
உ தந்தம் மருங்கி லுடுக்கும்கலைகளும் சங்கவளைகளும் துள்ளத் துள்ள
கந்தர்ப்பன்வாளிது ளைக்கப்பசலைதம் காயமெங்கும்மூடிக் கொள்ள
ங புத்திமயங்கி யிருந்தாரிநப்பதைப் போதமுனிவர்கள சண்டார் கண்டு
குத்திரமாகவே பொயித்தவராய்வந்திக் கோலம்செய்தோரியாவர்எனறார்
சு தங்கள்மடந்தையர்கற்பையுநாணையும் சாங்கமாகக்கைப்பற்றிப்போன திரு
டன்கன்னிகாங்கரத்திலேவாழும் கடவுளேயாமெனத் தோண
ரு ஒப்பிற்றவலி யாலேமுக்காலமும் ஓர்ந்தவர்பார்த்தொருக் காலே நிறை
கற்புத்திரிந்தபின் ஞர்களைநோக்கிக் கருத்தழிந்திரத ஞலே
சு கன்னிபுரந்தனில் வாழும்வசியர்கள் கன்னியராகவே நீரே சென்று
வன்னமுடனே யவதரிப்பீரெனறம் மாதவர்சாபமிட்டாரே
எ சாபமடைந்தவ ரெங்கட்கெப்போதிந்தச் சாபம்விலகுமென்றேர்க்க இனி
நீபவனேசனிங் துங்கைதொடும்போது நீங்கிடுமென்றுரை தாக்க

௮ சிந்தைதளர்ந்தம் மடந்தையர்கூடல் திருநகரந்தனில் வாழும் மிக
அந்தமிகுந்த வணிகர்குலத்தில் அவதரித்தார்பின்பு கேளும் (தார்வளர்ந்
௯ கண்ணுக்குணரும் வடிவுநிறைந்தும்பர் நாட்டுள்ள பெண்கள் போல்வளர்ந்
தெண்ணரும்பேதைப் பருவம்சென்றல்கு லிருபுறலகன்றிடத் தளர்ந்தார்

சுந்தரேசர்வளைச்செட்டியாகவருதல்.

விருத்தம்.

பெருந்தவக்கன் னியர்கள்வந்து வசியர் வீட்டிப்
பெண்களாய் மருங்கொசியத் ததும்பி யன்னைத்
தரும்புமுலை வளர்ந்தேறும் பருவ நோக்கி
ஆலவாய்ப் பிரான்புழைய கதைநி னைந்து
கரும்புயல்மே னியனறியாத் திருத்தா ளிந்தக்
காசினிப்பெண் முடிசூட வளைவிற் பார்போல்
சுரும்பிசையும் குழல்மடவீ ரெனக்கூப் பிட்டுச்
சொல்லுவார் ஆவணத்திற் செல்லு வாரே.

கௌளிபந்து, ஆதி.

பல்லவி

வளையோவளையென்றல வாயீசன்வந்தான்

அநுபல்லவி

வளமாம்வேதார்த்தம் சொலலும் மணிவாய்திறந்து வளை

சரணங்கள்

௧ கங்கைமறைத்துநீல கண்டம் மறைத்து உரக
கண்ணமும்மழுவும் மானும் மறைத்து ஒருபால்
மங்கைமறைத்து விடை வாகம் மறைத்து நெற்றிச்
செங்கண்மறைத்துச்சடைத் திங்கள்மறைத்து வளை

௨ சுத்தவெள்ளைவஸ்திரம் அரையில் தரித்து அதுபோல்
உத்தரீயமுமேலொ முங்காய் விரித்து விளங்கும்
மெத்தவெண்பட்டிடையில் சுற்றி வரித்துக் கொஞ்சம்
விருத்தவைசியர்போல வேஷம் பரித்து வளை

௩ சந்தனப்பூச்சுங்கையில் தாம்பூலம் மின்ன முகத்தில்
சிந்துங்குறுவேர்வையைச் சிறுநகம் துன்ன வழித்துப்
பைந்தொடியார்கள்மேலே படவேணும்என்னத் தெறித்து
வந்துதிலதம்நெற்றி மத்தியில் மின்ன வளை

௪ கடகாங்குலிகுண்டலா பரணம் அணிந்து கரத்தில்
குடையும்தாளிலேபாத குறடும் புனைந்து முனிவர்
மடவாரிடமுன்பெற்ற வளையை மகிழ்ந்து தோளில்
அடியார்அணியும்மாலை யாகச் சுமந்து வளை

விருத்தம்.

கங்கைவே ணியணிந்த வாறு வந்த
கன்னியரே வளைகொளுமென் றுரைக்கும் போது
பொங்கிடுங் காரொலிகேட் டெழும யூரம்
போலெழுந்து மாளிகைவாய்ப் புறத்தே வந்து
செங்கைவளை யிடவருவா ரெனவே தங்கள்
திருமனத்தைத் தாம்புரிய வருகின் றாரைக்
கொங்கைகுலுங் கிடஇடைதள் ளாடச் சூழ்ந்து
கொண்டிட்டார் வசியர்பெண்கள் கண்டிட் டாரே.

வளையல் அணிந்துகொண்டமாதர்கள்செய்கைகூறுதல்.

இதுவுமது

கண்டவுடன் கட்டிமுத்த மிட்டுக் கொள்ளக்
காதல்கொண்டு நாணமுதல் நான்கும் நீங்க
வண்டிசையுங் குழல்சரிய மனம் உழன்று
மருவிவிளை யாட்டுக்கா அமையச் சூழ்ந்து
தண்டைசிலம் போலகண்டா பரணம் காஞ்சி
தரித்திடினும் வளைக்கில் லாதே போனால்
ஒண்டொடியார் தமக்கழகுண் டாகு மோவென்
றுன்னுவார் வசியரிடம் துன்னு வாரே.

எதுகுலகாம்போதி, ஆதி.

ஆதிபகவன் தானே வளையோவளையென் றுரைத்
தாவணம்வரக்கண்டார் சிலமாதர்
காதுடன்வாதாடும் வேல்விழியார்சித்திரம்போல்
கண்ணிமைக்காமல்பார்த்தார் சிலமாதர்
தய்வுசெய்தெம்கைக்கேற்ற வளைபோடவேண்டு மென்றே
தளிர்க்கையை நீட்டிவந்தார் சிலமாதர்
கயல்விழிகைப்பிடிக்கும் கரத்தால்விரல்நொடிக்கக்
கருத்தில்ஆனந்தம் கொண்டார் சிலமாதர்
ஐயனிடும்வளையை உடைத்துப்பின்வேறுவளை
அடுக்குமென் றுவந்தார்கள் சிலமாதர்
கையில்வளைபூட்டுதல் போலாசைபூட்டமோகக்
கடலில்வி ழுந்தாடினர் சிலமாதர்
அனங்கன்கணைதுளைக்க வருந்தியெமக்குவளை
அடுக்குமென்றோடிவந்தார் சிலமாதர்
முன்கொள்வளைநழுவல் வாங்கிவேறிடுமென்று
முகிழ்த்தக்கைநீட்டிவந்தார் சிலமாதர்
வளையும்கலையும்சோரச் செய்வதிவ்வளைபோல்முன்
வரக்கண்ட தில்லையென்றார் சிலமாதர்

இளையகன்னியரேகல் வளை இந்தாவென்னவெமக்
  கெமக்கென்றுடிவந்தார்கள் சிலமாதர்
ஏதையாதேகம்மயிர்க் கூச்செறிவதிவ்வளை
  எவ்விடத் துள்ளதென்றார் சிலமாதர்
போதைநிகரும்தங்கள் தங்கள்கைகையைநீட்டுவார்
  போலகைச் நீட்டிவந்தார் சிலமாதர்
செங்கைதொட்டையன் வளை யிடுகிறுற்போலஅதே
  தியானமாக விருந்தார் சிலமாதர்
தங்களாசையைத்தாய்க்கும் தெரியாமலேஅகத்தில்
  தானேமறைத்திருந்தார் சிலமாதர்
தினமும்வரவேண்டுமென் றுரைக்கநல்லதென்றையன்
  செப்பக்கண் டுள்மகிழ்ந்தார் சிலமாதர்
புனையும்வளைக்குவிலை பெறுமெனநாளைவாங்கிப்
  போவோமென் னமகிழ்ந்தார் சிலமாதர்
வீடுதோறும்வளைபோ வளையென் றுரைக்கக்கேட்டு
  விரகத்து டன்பின்செல்வார் சிலமாதர்
கூடிவரத்தொடர்ந்தார் உடலும்நிழலும்போலக்
  கோயில்மட் டும்பின்செல்வார் சிலமாதர்

விருத்தம்

ஒருவணிகரானவள்ளல் போய்வழி மாளத்
  தன்ஒளிசேர் திருவுருக்காண் பித்தார் பின்னே
வருமடந்தை யரும்பலரும் கண்டு முன்னம்
  வளையலிட்ட வணிகர்மங்கை பாகராமென்
றிருதயத்தில் வியந்துவகை வெள்ள மூற்றுற்
  றெழுந்தருமி றியைப்போலத் ததும்பிக் கண்ணீர்
பெருகவதி வாழ்ந்துகளிப் படைந்தார் அந்தப்
  பெரும்பதியுள ளவரும்அவ்வா றடைந்திட் டாரே.

வணிகர்பெண்கள் ஐயன்மலர்க் கையால் தொட்டு
  வளைபோட்ட மூலமவர் கருப்பம்கொண்டே
அணியணியாப் புத்திரரைப் பெற்று வாழ்ந்தே
  அந்தத்திற் சிவபரம்சேர்ந் திருந்தா ரிப்பால்
குணமுடையம் மைந்தர்கள்பே றனைத்தும் பெற்றுக்
  கொண்டிருந்தா ரிதையுவந்து படிப்போர் கேட்போர்
மணமுறவாழ்ந் தவர்முடிவிற் சிவலோ கத்தில்
  மகிழ்ந்தேனர் அருகிருப்பில் வசிப்பர் தாமே.

ஆக விருத்தம் ௫, கீர்த்தனை ௨ [illegible] ஆக ௲ [illegible]

[illegible]

சிவமயம்

முப்பத்துமூன்றாவது

அட்டமாசித்தியுபதேசித்தபடலம்.

அவதாரிகை — விருத்தம்.

முத்தியை விளக்குங் கூடல் முக்கணன் வசியர் வீதி
மத்தியில் வளைபகர்ந்த வளம்சில வுரைத்தே னிப்பால்
பத்திபூண் டிறைஞ்சும் யக்ஷப் பைந்தொடிமாருக் கஷ்ட
சித்தியை யுபதேசித்த திறன்மையை யினிச்சொல் வேனே.

சுந்தரேசர்தெட்சிணாமூர்த்தியாகஇருந்தல்.

விருத்தம்.

திங்கள்வங் கிசக்குலபூ ஷணன்செங் கோலைச்
செலுத்திவரும் நாளையிலே முன்னா ளுண்மை
தங்குமறை துதிக்கஇசைந் தால வாயில்
சத்தபா தலம்பிளந்து முளைக்கும் மூல
லிங்கமே பராபரனா கவும்பின் னுண்டாம்
லிங்கமெலாம் பரனாக விளங்கு மீசன்
ஒண்கயிலை தனில்வடவா லின்பாற் றானே
உருக்கொண்டான் தென்முகமா யிருக்கின்றானே.

பந்துவராளி, சாப்பு.

பல்லவி

தெக்ஷிணாமூர்த் தியாத்தேவ தேவனிருந்தானே

அநுபல்லவி

பக்ஷமாவெள் ளிலைச்சுருள் பார்வதிகொ டுத்தல்கீக்கித் தெக்ஷி

சரணங்கள்

பிருங்கிநந்திமுதலாகப் பெருங்கணத்தோ ருமன்பாக
வருஞ்சனகாதியோக மாதவத்தோரும் முன்பாக தெக்ஷி
தவமிகுத்தவருய்யத் தாளிறைஞ்சிக்கண்ணீர் பெய்ய
சிவகதையாகும் துய்ய செங்கரும்புருந்தச் செய்ய தெக்ஷி
தருமாகமமும்நல்ல தத்துவஞானமும் புல்ல
அருமையாம்நூலுள்வல்ல அரியபொருளைச் சொல்ல தெக்ஷி

விருத்தம்

தெக்ஷிணா மூர்த்தியிவ் வாறிருக்கும் போது
தேசமெங்கும் திருவெண்ணீ றணிந்துள் ளத்தில
பக்ஷமுடன் சிவபூசா நியமம் பூண்டு
படர்ந்தசடை முடித்தவப் வாதி தோறும்
அக்ஷமா லையும்தரித்தே மூர்த்தி முன்னுன்
ஆறிரண்டு கையுனுக்கு முலையீர் றிட்.

யக்ஷமடந் தையரா று பேரு முன்வந்
திணங்கினார் திருவடியில் வணங்கி னாரே.

அட்டமாசித்தியடையப்பார்வதியைப்பூசிக்கச்சொல்லுதல்.

இதுவுமது.

வணங்கியெழுந் திருகைவிரித் தடியேஞ் சென்ம
வாரிதிநீக் கிடுங்கருணா நிதியே சைவக்
கணக்குலவும் ஸ்வாமியஷ்ட சித்தி போதிக்,
காத்தருளு மெனவிரக்க மடியில் மேவும்
மணக்கமழும் குழலிமலை மகளை நீங்கள்
வந்தனஞ்செய் தனுதினமும் துதித்துப் பூசித்
திணங்குமெனத் திருக்கரத்தை நீட்டியே யன்
பீட்டுவார் மொழிந்தவர்க்குக் காட்டு வாரே

சுருட்டி, ரூபகம்

பல்லவி.

இவளைப்பூ சைசெய்கு வீரே அஷ்டசித்தியும் எளிதிலடைகு வீரே

அநுபல்லவி

நவநாத ஸ்வரூபியாம் நாமேயவளேயாக
அவளைச்சித் திகள்வாழும் அஷ்டசித் தியாச்சூழும் இவளை

சரணங்கள்.

௧ சித்திமுத் தியைப்பரிந்து கொடுக்கும்பரா சத்தியென் பதுதெரிந்து
புத்திவாக் குமெய்யொன்றும் போதமுடனே நின்று
அத்வைதை யிவளென்று அரியமலர்கைக் கொண்டு இவளை

௨ அகிலபுவனதாரி நித்யகல்யாணி அகும்நாதவோங்காரி
சகலதுக் கமும்போக்கும் சந்தோஷத் தைஉண்டாக்கும்
பகருமாநுக்கிரகிக்கும் பரிபூரணியாய் வைக்கும் இவளை

௩ ஆதிசத் திபராத்பரி வேண்டிய சித்தி அருளும் திரிபுரசுந்தரி
ஞானரூபி யாகும் பொறை ... சங்கரியாய்
வேதன்மா லும்துதியா விமலையென் ... ஜோதியா இவளை

இயக்கமாதர்களைப்பாறையாகச்சபித்தல்.

விருத்தம்.

குருபரஞ்சோ தியுமிவ்வா றஷ்ட சித்தி
கொள்ளுவதற் குபாயமுரைத் தவர்மே லன்பு
பெருகுமனம் கொண்டுபதே சித்தா ரந்தப்
பேதையரவ் வாறநுஷ்டிக் காமற் றங்கள்
கருமவசத் தால்மறந்தார் பின்பக் குற்றம்
காரணமா யவர்தம்மை நோக்கி மண்மேல்
கருநிறங்கொள் கல்லாகப் போவீ ரென்று
காய்ந்திட்டார் சாபமப்போ தீந்திட் டாரே

அடாணா, ஆதி

பல்லவி.

பாறையாகப்போகக் கடவீரே ஆறுபேரும் வேறேவேறேயாகமடவீரே

அநுபல்லவி

தேறும்பாண்டியராஜ்யம்அதிலே ஸ்ரீபட்டமங்கைகிராமந்தனிலே பாறை

சரணங்கள்

க மேகமண்டலம் வரைக்கும்உயர்ந்து விரிந்தஇலைக ளாலேநிறைந்து
சாகையோசனை தூரம்பரந்து தழைத்திடும்வட தருக்கீழ்இருந்து பாறை

உ காயும்சருகும் பழுப்பும்நிறையக் கனிகளுதிர்ந்து உடலம்மறையச்
சாயும்பக்ஷிகள்கூடியறையத் தருக்கள்செடிகள்முளைத்தங்குறையப் பாறை

ங கொள்ளுமுல்லைக் கொடியுஞ்செறுத்துக் குமுதங்காந்தம்மேலே துறுத்து
உள்ளும்புறம்புந் தமத்தைப்பொறுத்து உங்களுருவம் மறுத்துக்கறுத்துப்

சுந்தரேசர்ஸ்ரீபட்டமங்கைக்குவருதல்.

விருத்தம்

பாறையாச் சபித்திடவும் இயக்க மாதர்
பயந்திதுநீங் கிடுவதெப்போ தெனவும் பத்து
நூறுவரு டமும்நீங்கு காலெம் கண்ணால்
நோக்கியிச்சா பந்தீர்த்துச் சித்தி யெட்டும்
கூறுவோ மெனப்பட்ட மங்க லத்தில்
குன்றாக ஆலடியிற் கிடந்தார் சொன்ன
வாறுநாட் கழிந்து பின்னுங் கயன்மால் தேடும்
மதுரேசன் குருவடிவாய் வந்திட் டானே

மாளவி, ஆதி

பல்லவி.

அந்தஸ்ரீபட்ட மங்கையிலேசோம சுந்தரர்வந்தனரே

அநுபல்லவி

சிந்தையிலன்புபெருகத் திருவாரூராயுதை...
அந்தமுடனே தக்ஷி... ...மூர்த்தியாக அந்த

சரணங்கள்

க மூவிரண் டெக்ஷமடவார் மூளுஞ்சாபந் தீர்க்க
ஆவலுடன்கடைக்கண் ணருள்கொண்டு நோக்க அந்த

உ கொங்கவிழ் காந்தளமெய்தல கொடிமுல்லைகள் நீடிப்
பங்கபமுதற்பூத்த பாறையை நாடி அந்த

ங கரும்பாறையும்பசும்பொன் கதிர்போலொளியோங்க
வரும்பானுமுன்னிருட்போல் வசையது நீங்க அந்த

ச மாலயன் றேடவரிய மலர்த்தாள்நிலம் படிய
ஆலமரத்தடியில் அருள்மழை பொழிய அந்த

ரு சிஷ்டர்கள்புகழ்ந்தோது திருவிளையாடல் பண்ண
அஷ்டசித்தியும்பரிந் தனுக்கிரகம் பண்ண அந்த

யட்சகன்னிகைகளுக்குஅஷ்டமாசித்தியுபதேசித்தல்.

விருத்தம்.

வாழுமிறை யோன்வரச்சா பத்திற் றெட்ச
 மாதர்தவக் கொழுந்தெனப்பண் ணுருவாய்த் தாளில
தாழுமவர் குகற்குழலை யூட்டி னத்தால்
 தமதுமைபோல் சென்னியில்தன் கையால் நீவிக்
கேளும்அணி மாமகிமா லகிமா வோக்கும்
 கிரிமாப்ராத் திப்ராகா மியமீ சத்வம்
சூழும்வசித் துவமிவையெட் டாகு மென்று
 சூட்டுவார் அருளபுரிந்து காட்டு வாரே.

காம்போதி, சாப்பு.

க ஏகமனதாயிருந்தறிவீருமக் கின்னமும்சொல்வோமின்னாரே மகா
யோகியர்க்காகினற அஷ்டமா சித்தியின உண்மையைக்கேளுமின்னாரே
உ ஆனாலும்சின்ன வுயிர்தோறும்தாம்பரமாணுருவாகி மினனாரே சென்று
தானாயிருக்கும்சிறுமையணுமாவாத் தாமறிவீர்களமின்னாரே (ஒன்றி
ந பொறைகொண்டாறு தத்துவத்துள்ளும் புறம்பும்விடாமல் மின்னாரே
நிறையும்மகிமை யைமகிமாவென்று நிசயிப்பீர்கள் மின்னாரே
ச சலமில்லாமலை போலிருக்கும்யோகி தன்னையெடுத்தாலமின்னாரே மெத்த
இலகுவானது லம்போலேதோணுவ திலகிமாவா மின்னாரே
ரு சாரும்பரமாணுப் போலிருக்கும்யோகி தன்னையெடுத்தால்மினனாரே மிக
பாரம்பேர்லொத்தது வேகிரிமாவென்று பார்த்தறிவீர்களமின்னாரே
சா விரும்பிஆழும் பிலத்தினிலேநின்று வேதனுலகில் மினனாரே சென்று
திரும்பியும்பிலத் துக்குவருகின்ற திரமேபிராத்திமின்னாரே
எ வானமீதேறப் பரகாயத்திற்செல்ல வாஞ்சித்தபோக மினனாரே யாவும்
தானிருக்குந்தலத் தெண்ணியவாறு தருதல்பிரகாமிய மின்னாரே
அ ஈசனைப்போல்வேழுத்தொழிலுந்தன திசைபோற்செய்துமின்னாரே எழு
வாசியுடையோல முதறகோள்பணிசெய்ய வாழவதீசத்வ மின்னாரே
கூ புட்களவிலங்கவு ணர்மனிதர்பல பூதங்களோடு மின்னாரே எட்டுத்
திக்கினருநதன் வசமாகக்கொள்கைவ சித்துவமாகு மின்னாரே

நித்தனிந்த வாறுரைத்தெநதமைவி டாமல்
 நினைத்திடும்யோ கியரிவற்றை விரும்பா ரேனும்
இத்தரையில அவரைநிழற் போல்வி டாமல்
 எப்போதும் அவர்மகிமை விரித்துக் காட்டும்
சித்தியெட்டும் தெளிநதறியும் வாறி யக்கத்
 தெரிவையருக் குபதேசம் செய்தப் போதே
முத்திபுரந் தனைநாடி யெப்போ தும்போல்
 முறைகொண்டார் மூலலிங்கத் துறைகின்றாரே.

இதுவுமது.

தேவதே வேசனுப தேசஞ் செய்த
சித்தியைமுன் னுரைத்தபடி தேவி தன்னைப்
பாவனைசெய் தம்மகிமை யாலா காசப்
பாதைசென்றம் மடவார்கள் ஆறு பேரும்
மேவரிய கயிலையிலவுக தெப்போ தும்போல்
வீற்றிருந்தா ரிக்கதையை மொழிவோர் கேட்போர்
பூவுலகில் பலபலசித் திகளும் பெற்றுப்
பொருந்துவார் புகழ்பெருகத் திருந்து வாரே.

ஆக விருத்தம் ௯, கீர்த்தனை ௬, தரு ௧, ஆக ௧௬. முற்றும்.

———0———

சிவமயம்

முப்பத்திநாலாவது,

விடையிலச்சினையிட்டபடலம்.

அவதாரிகை — விருத்தம்.

அஷ்டசித் தியைஇயக்கர் அரிவையர்க் குபதேசித்த
திட்டம துரைத்தே னிப்பால் சென்னிக்கா வடக்கு வாயிற்
சட்டமாத் திறந்தடைத்துத் தம்விடைக் குறியிட் டீசன்
இஷ்டமா யாடல்செய்தற் றிசைந்ததை யினிச்சொல வேனே.

காடுவெட்டிச் சோழன் அரசாட்சிகூறுதல்.

விருத்தம்.

சோமகுல பூஷணன்கா லையிலே முன்னாள்
தோன்றுமுகா தியிலேகாம் பாலனைச் சூழும்
தேமருவும் வனமழித்தா லயமுன் போலே
திருப்பணிசெய் தானடியார்க் கடிமை யாகச்
சோமவா ரவிரதோன் பிழைத்துக் காஞ்சித்
தொன்னகரில் வாழுமக்கா ரணத்தி னாலே
பூமருவுங் காடுவெட்டிச் சோழ னென்றே
போற்றுவார் யாவர்களும் சாற்று வாரே.

மணிரங்கு, சாப்பு.

பல்லவி

காடுவெட்டிய சோழன்அரசியல் கைக்கொண்டிருந்தானே

அநுபல்லவி

பாடும்வண்டொலிக்கிசைந் தாடுமயிலு லாவும்
பச்சைப்பொழில்கள்சூழுங் கச்சிநகரில்வாழும் காடு

சரணங்கள்

சித்தனடியவர்களுக்குத்தமனையும்பத்தி நிறைந்துமகிமைசிறந்து மெத்த
மெத்தமனக்குஞ்சந்த னுதிருசுழவகை மீதிலாசையைத் துறந்து துய்ய

புத்திதெளிந்துகவ ரத்னுபரணமுதற் பூணுவதனை மறந்து பரி
சுத்தவிபூதிருத்ரா ட்சத்தைமெய்க்கணியாகத்
துணிந்தவயவந்தோறும் அணிந்தறிவு பிறந்து காடு
சிவனடியார்களுக்கறுசுவையோடன்னந்தினமும்பரிந்துகொடுத்துமூன்று
புவனம்புகழும்ஏகாம்பரநாதர்திருப்பணி புதிதுபுதிதாத்தொடுத்து அருந்
தவமானதுசிவ விரதமல்லாமல்மற்றோர் தவத்தில்மயக்கம்விடுத்து எழு
பவநாசர்திருத்தாளே தனக்குத்துணையென்றவர்
பாலன்புடனேபூசா காலந்தோறுமடுத்துக் காடு (பண்ணி பர
வேதாகமந்தோறும் விளங்கும்பொருளிதென் றுவிரும்பிச்சோதனையைப்
நாதனேபரதத்வ மாகுமெய்ப்பொருளாக நாடிமனதிலெண்ணிக் கேளும்
ஆதிசிவபூசையும் ஐந்தெழுத்தையும்நிய மாதியாகவே நண்ணி இரு
காதென்னும்வாயாலே ஈசன் கதையமுதைக்
கருத்துக்கினிமையென்றே திருத்தியாவுண்டிம்மண்ணில் காடு

விருத்தம்

காஞ்சியிலே சோழனிவ்வா றிருக்கும் நாளிற்
கம்பநதி யாடவருமுனிவோ ராலே
தீஞ்சுவைத்தே னும்பாலும் கலந்துண் டாற்போல்
திருவால வாய்மகிமை யறிந்தப் போதே
வாஞ்சைகொண்டப் போதுசுந்த ரேசன் தாளில்
வணங்கிடுவோ மென்றுளத்தில் அன்பு பூண்டு
தான்சயனித் தன்னினைப்பே நினைப்பாச் சாக்ரம்
தள்ளுவான் கிடந்துதுயில் கொள்ளு வானே

சுந்தரேசர்உத்தரவால் சோழன் மதுரைக்குச்செல்லுதல்.

செம்பியனிவ் வாறுதுயி லும்போ தாங்கே
சித்தராய்க் கதம்பவன நாதர் தாம்வந்
தெம்பதிக்கு வரக்கருதும் அரசே நீவே
றிலக்கணம்பூண் டொருத்தனுத் தனித்து வெள்ளி
அம்பலத்தில் வந்தெமைநீ யிறைஞ்சு வாயுன்
அகத்திலொன் றிருக்கும்அஞ்ச வேண்டா மென்று
தம்பதிக்கே கினார்விழித்தவ் வாறு செய்யத்
தலைப்பட்டான் சிவனடிக்கு விலைப்பட் டானே

கல்யாணி, சாப்பு.

பல்லவி.

தான்
காஞ்சிபுரத்தைவிட்டுப் புரம்வந்தாள் சோழன் கன்னிபுரத்துக்கருகினில்வந்

அநுபல்லவி,

காஞ்சிபுரம்விட்டுக் கரணமொருமைப்பட்டு
வாஞ்சையுடனிருட்டு வரக்கண்டுள்மகிழ்ந்திட்டுக் காஞ்சி

சரணங்கள்

அரன்றிருநாமமே வாளாக அய்யன் அருளேவழித்துணைக் கேளாக
வருகஅன்பெனும்பரி மாமேலிசைந் திலங்க
பெருகுஞ்சிவஞானமே பிரகாசமாய் விளங்கக் காஞ்சி
வானைத்தொடவளரும் கன்னலும் கூடத் தாறுைத்தெழுந்துயரும் செந்
நெல் பூமியினிடை ஆழிசேரும் அனேக (நெலும்
மாநதிகளுந்தாண்டி வழிக்கொண்டொருத் தனைக் காஞ்சி
உணங்கும்செடிநெருங்கும் பாலையும் கல்லும் இணங்கும்மலையும் கடுங்
கணம்பெற்றமைச்சர்சேனை காலாளையும் விண்டு (சோலையும்
மணங்குலவும்கதம்ப வனத்தன்சொற்படி யண்டும் காஞ்சி

வையைநதிபெருகியதுகண்டுசோழன்வருந்துதல்

விருத்தம்

சோழனிந்த வாறுவையை நதிவ டக்குத்
துறைக்குவரும் போதுகொதித் தெழுந்து பொங்கிக்
கேழிலகுந் தருக்களனே கம்வே ரோடே
கீண்டெடுத்துப் பெருகிவெள்ளம் வரப்பார்த் தேங்கிச்
சூழவரு முடிவொருக்கா லத்து மில்லாச்
சோமசுந்த ரேசர்திரு வடியிற் சென்று
தாழுவதற் கிடையூறி தாச்சென றெண்ணித்
தயங்கினை மிகவருந்தி மயங்கி னனே.

புன்னாகவராளி, சாப்பு.

௧ மாதவரேபெறற்க லத்திலறுசுவை வைத்துண்ணும்போதிரு தண்ணீர் வர
ஓதிவிலக்குவர் போலிந்நதித்தண்ணீர் உற்றுத்தடுத்ததென் றெண்ணி
௨ ஓடியபாம்பைத்தடைக்கடடினாற்போல் ஒடுங்கிக்குறுகுறுத்திருநதா னிவ
நாடிவந்தித்தைவி லக்குவதாரென்று நைந்துமனம்வெறுத்திருநதான் (கு
௩ பாண்டியனல்லாமல் வையையுங்கூடப் பகையாப்பெருகின தாலே விடிக்
தாண்டவனைத்தொழ லாகுமென்றுலதற் கட்டிவருகுமென் மேலே
௪ கோலையிழந்தகு ருடனைப்போற்றனிக் கொண்டேபரதவித்தானே இது
ஆலத்தையுணடவன் சோதனைதானோவென் றய்யனைக்கைகுவித்தானே
௫ எள்ளுக்குளெண்ணெய்போல் எங்குநிறைஜக தீசன்திருவுளத்தறிந்தான்
வெள்ளத்தைநோக்கிநடுங்கியபத்தன்மெலிவையகற்றிடநினைந்தான்(வையை
௬ கனறுக்கிரங்கி வரும்பசுப்போல்முன் கனவினில்வந்ததுபோலே வெள்ளி
மன்றுள்நடிக்கும் ஜகதீசனைசித்த வடிவத்தைப்பூண்டாரிப் பாலே
௭ உள்ளக்கருத்தினைவள்ள லறியுமென் னுண்மைவெளிப்படவாய்த்தார் வந்து
பள்ளத்தைநோக்கிவரும்வையைவற்றும் படிக்கருட்கண்ணாலேபார்த்தார
தம்மையினைந்துருகும்சோழன்பக்கத்தில்சாமிமுன்போலவந்துதித்தார் கண்டு
சென்மக்குருடனுக் குத்தெய்வம்கண்தந்த செய்கைபோலேமனம் களித்தான
௯ வற்றியவையைக் கரையிருக்கும்சோழ மன்னவனைக்கூட்டிக் கொண்டான
உத்தரவாசல் திறந்துநகரத்துக் குள்ளேயிருவரும் சென்றார் (கொண

காடுவெட்டிச்சோழன்றுதி.

விருத்தம்.

வருத்தமுறும் சோழனையிவ் வகையாக் கூட்டி
வந்துபொற்று மனைதன்னி ராடச் செய்து
பருத்தொளிரும் சொர்ணவிமா னத்துள் வாழும்
பராபரனு மியதமையும் பணிவித் திப்பாற்
சரத்தொடச ரத்தையுமீன் றணைத்துங் காக்கும்
சபராக்ஷி யையுந்தொழச்செய் திடவும் நோக்கித்
திருத்தமுடன் சித்தரைத்தாழ்ந்தெழுந்து சிந்தை
தேறுவான் மகிழ்ந்துதுதி கூறு வானே.

எதுகுலகாம்போதி, ஆதி.

பல்லவி.

சாமிசோம சுந்தரப்ரபோ கூடல்வாழும் சாமிசோம சுந்தரப்ரபோ

சாமியடியேன் நேமகப்படியே முடித்திட்டிப்பர்ந்
தாமனேசெய்யும் வாமனே சரணம்

சரணங்கள்

க நீளுமறையெந் நாளுங்கண்டறியா அங்கயற்கண்
ணளிணங்கும ணளனே சரணம்
உ சாத்திரமறை வாய்த்திடுமுனிவோர் தங்களுக்குவே
தார்த்தமொழிந்த மூர்த்தியே சரணம்
ஈ பாவவுடலம் ஓய்வில்லாதெடுத்தேன இனிமேலப்படி
மேவிடாதருள் தாவய்யா சரணம்
ச மண்ணிலிருந்து விண்ணளவுயரும் இவ்விமானத்துள்
நண்ணிவருமுக் கண்ணனே சரணம்
ரு உன்தனடியில் வந்துதாழ்ந்தேன் இவ்வுடலொன்றே
சொந்தமாமெனக் கெந்தையே சரணம்

விடைக்குறிவைத்திருத்தல்கண்டுபாண்டியன்சந்தேகித்தல்.

இந்தவிதம் துதித்துப்பல் வரங்கள் வேண்டும்
இராசனைப்பார்த் தெமைத்தெரிசித் திடநீ யிங்கு
வந்தவகை பாண்டியன்கண் டாற்பொல் லாங்கு
வருமென்றக் கணம்வந்த வழிக்கொண் டேகிச்
சுந்தரஞ்சேர் சித்தர்வவையை வடபால் மட்டும்
துணையாவந் தவனுதலிற் றிருநீ றிட்டுச்
சிந்தைமகிழ்ந் தனதிருக்கை யடைவா யென்று
செப்பிடத்தேர்ந் தவனுமதற் கொப்பி னனே.

ரீதிகவுளை, சாப்பு.

௧ சித்தர்வளவனைச் செல்லென்றவன்மனம் தேற்றினர் மீண்
டுத்தரவாசற் கதவைமுன்போலவே சாத்தினர்
௨ சாத்தியபின்விடை முத்திரைவைத்துடன் கடந்தார் ஒளி
வாய்த்தபொன்மேருவி லோங்கும்விமானத்துள் அடைந்தார்
௩ கங்குலின்கையைக் குறைப்பானெனும் வலியாலே பல
செங்கரம்நீட்டித் தினகரன்தோன்றஇப் பாலே
௪ ஈசன்விடைக்குறி வைத்திருக்கின்றதைக் கண்டார் கண்டு
வாசற்றிறப்போரி தேதென்றுசந்தேகங் கொண்டார்
௫ பின்னுள்ளவாசல்கள் மூன்றிலும்போய்க்குறி நாடினர் நாடி
முன்னுள்ளவாறிருக் கக்கண்டரசன்முன் ஓடினர்
௬ வேந்தேவடவாசல் மீனக்குறியாரோ மாற்றினர் மாற்றி
வாய்ந்தவிடைக்குறி வைத்தனரென்றதைச் சாற்றினர்
௭ அக்கணம்மன்னனும் வந்தவ்விடைக்குறி நோக்கினன் துணிந்
திக்குறிவைப்போர் எவரென்றுளத்தையந் தாக்கினன்

சுவாமி விடைக்குறிமாற்றியவிபரம் பாண்டியற்குத்தெரிவித்தல்.

விருத்தம்.

இந்தவிதம் அரசனுள மூழ்கையங் கொண்
டெழுந்தரண்மனைக்குள்வந்து விசாரிக் குங்கால்
வந்ததுபோ னதுவொன்றும் வெளியா காமல்
மனமருண்டே பூணுமலர்ப் பாயும் நீக்கி
அந்தரணி மேற்சயனித் திருக்கும் போதே
ஆலவாய்க் கடவுள்அவன் கனவிற் றூமே
வந்துசித்த ரூபமுடன் இருந்தை யத்தை
மாற்றுவார் உண்மைசொல்லித் தேற்று வாரே.

மாஞ்சி, ஆதி

பல்லவி.

சோழனுக்காகஞ்செய்த சூழ்ச்சியறிவாய்மன்னு சோழ

அநுபல்லவி

வாழுங்குலபூஷணனே மாமதுரபாஷணனே சோழ

சரணங்கள்

௧ ஆத்திமலர்த்தொடையான அன்பகத்திலுடையான்
அடியவர்க்கநுதினமும் அளித்துவருங்கொடையான் சோழ
௨ கச்சியிலமுன்னாலே காடழித்தெம்பாலே
பட்சமாத்தொழுதெக்காலும்பத்திபூண்டானதனாலே சோழ
௩ எந்தமடிநினைத்து இரவில்வந்தான்தனித்து
இந்தவடவாசல்திறந் தெமைத்தரிசனஞ்செய்வித்து சோழ
௪ மீளவுமேவிடுத்தோம்தானைமுன்போல்தொடுத்தோம்
காளைமுத்திரைவைத்திட்ட தாரணஞ்சொல்லஅடுத்தோம் சோழ

விருத்தம்

சாமிசித்த ராகியிவ்வா றகத்தி லுள்ள
சாதேகம் தனைத்தெளிவித் தகன்ற பினனே
மாமனத்தி லையமகன் றெழுகத ருண்டு
வணங்கியெழுந் துடன்குலபூ ஷணனுந் தென்னன்
கோமனைவிட் டகன்றெளியோர் தமக்கா ளான
கொண்டுசெய்த திருவிளையா டலையா வர்க்கும்
வாய்மலர்ந்து வெளிப்படுத்தித் தெளிவித் துள்ளம்
மகிழ்ந்திட்டான் உரைத்துரைத்துப் புகழ்ந்திட் டானே.

இதுவுமது

சித்தமகிழ்ந் துடன்குலபூ ஷணன்தா னேந்தும்
செங்கோலு மணிமுடியுங் கொடையு மீன்ற
புத்திரனு மிராஜேந்திரன் தனக்கீந் தீசன
பொன்னடியிற் பணிந்துவிணை டேகி வாழ்ந்தான்
மெய்த்தவத்தோ ரேயிதனைப் படிபபோர் கேட்போர்
விளங்கும்வனத் தாலுண்டாம் பயம கன்று
நித்தியமங் களகரமா யுபாதி யற்றே
நீடிப்பின் சிவனடியை நாடு வாரே.

ஆக விருத்தம் ய, கீர்த்தனை ச, தரு உ, ஆக கசு. முற்றும்.

௳

சிவமயம்.

முப்பத்தைந்தாவது,

தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலம்.

அவதாரிகை — விருத்தம்.

சுந்தரன் தனியேவந்த சோழனை விடுத்தவ் வாயில்
வந்துதா னிறுக்கிமுத்ரை மாற்றிய துரைத்தே னிபபால்
சந்ததம் போற்றுந் தென்னன் தன்படைக் காகத் தண்ணீர்ப்
பந்தல்வைத் தருளிக் காத்த பான்மையை யினிச்சொல் வேனே.

காடுவெட்டிச்சோழன்செய்தவஞ்சனையைக்கூறுநல்

பைரவி, ஆதி.

பல்லவி

காடெறிந்த சோழனுசெய்த காரணங்கேளுமுனிவோரே

அநுபல்லவி

நாடுங்குலபூஷண பாண்டியராசகுமாரன்
ராஜேந்திரபாண்டிய ராஜனெனுங்கம்பீரன்

நீடும்புகழுடையோன் சுந்தரமூர்த்திதாளில்
நிதமும்வணங்கியா சியலைநடத்துநாளில் காடெ

சரணங்கள்

க வரவரவெளிப்படை யாய்த் தானே கதம்ப
வனத்திலவருகமெள்ளத் தொடுத் தானே இப்பால்
உருசைகண்டபூசை உறியைஉறியைத் தாவும்
உவமைபோலடிக்கடி அடுத் தானே ஈசன்
சரணம்பணிந்தவரும் போதுபாண்டிய னுக்குத்
தரும்வரிசையனுப்பிக் கொடுத் தானே அந்த
வரிசைகளுங்கைக்கொண்டவ்வழுதிதனக்கனுப்பும்
வரிசையும்பெற்றுத்தூது வரப்போகவிடுத் தானே காடெ

உ பின்னுஞ்சோழன்றயந்தத் தென்னனுக் குத் தனது
பெண்ணைக்கொடுக்கத்தூது புரிந் தானே தான
சொன்னபடிக்கவனும் சம்மதிக்கின்று னென்று
தூதுவர்வந்துசொல்லத் தெரிந் தானே பாண்டி
மன்னவனுக்கிளைய ராஜகேசரி யந்த
வகைகண்டாலவாய்விட்டுப் பிரிந் தானே அண்ணன்
தன்னையறியாமலே தானந்தப்பெண்ணைக்கொள்ளச
சதுரங்கத்துடனகாஞ்சிப் பதிவரப்பரிந் தானே காடெ

ந நாற்றிசையும்படையோ டடுக்கும்ராச சிங்கனை
நாடியெதிர்சென்றழைத்துத் திட் டானே உடன்
வாய்த்தஅரண்மனைக்குள் ளேயாசனத் திருத்தி
வரிசைசெய்துபசரித் திட் டானே பண்டு
மூத்தவனுக்கிசைத்த பெண்ணைப்பின் னவனுக்கு
முயன்றுமணம்நடப்பித் திட் டானே தனக்
கேற்றமருகனுக்கவ் வரசுரிமை யளித்து
ராசேந்திரனைப்பிடிக்கத் தான்சம்மதித்திட்டானே காடெ

சோழன் போர்க்குவந்ததுகண்டு பாண்டியன் சுவாமிமுன்
சென்றுமுறையிடுதல்.

விருத்தம்.

மருமகனு மிராசசிங்க னுடனிவ் வாறு
வனமெதிர்ந்த சோழனிசைந் தமரை நாடி
முரசறையத் திரண்டுகரி பரிதேர் காலாள்
மொய்த்திடவே யெழுந்துமது ராபு ரத்தின்
அருகினிலே ரிரண்டுயோ சனைக்கப் பால்வந்
தடைந்திடும்போ தொற்றரினால் அறிந்து தென்னன்
திருவால வாயுடையான் கோயி லுக்குள்
செல்லுவரன் பணிந்துமுறை சொல்லு வானே.

ஆனந்தபைரவி, ஆதி.

பல்லவி

சாமிகாடெ றிந்தசோழன் ருனேயிந்த மாநகர்மேற்
சண்டைக்காரம் பஞ்செய் தானே

அநுபல்லவி

சாமிசோம சுந்தராவுன் தன்னடிய னுமென் மேலே
மாமழைக்கொ துங்கவந்து மனைக்குவழக் காடல்போலே சாமி

சரணங்கள்.

முன்னேநிசி வேலையில்வந் துன்னடியைச் சார்ந்தானே தன்னகர் சேர்ந்
பின்னுமுன் திருவடியைப் பேணியடிக் கடிவந்து (தானே
அந்நிலையெ னக்குசித மானவஸ்துக் களும்தந்து சாமி

உறவுபோலவேயிருந்து குளவிபோலேகொட்டினனே உண்மைபோற்பகட்
உறையிலடங் குங்கத்திபோல உள்ளத்தில்வஞ்சகம்வைத்து [டினனே
முறைபிசகிக் கடைசியில் மோசத்தொழி லினைத்து சாமி

அளர்ந்தறத்துக் குள்ளுமாகப் பாவத்துக்குப் புறம்பாயே அன்றுநின்றநீயே
களவனுக்குட் கைகொடுத்த காரணம்போற்செய்தாய் முந்த
உளவனில்லா மலெங்காவ தூரழிவதுண்டோ யென்தன் சாமி

விருத்தம்.

ராசபுரந் தரனிவ்வா றுரைக்கக் கூடல்
நாதனரு ளாலுனது சேனை யோடே
பூசலிட வருமவரோ டெதிர்த்து நின்று
போர்புரிவாய் வெற்றியுன்பா லுண்டா மென்னும்
வாசகமொன் றரசேகே ளென்று காசு
வாணியுரைத் திடச்செவிக்கொண டன்பு பூண்டு
தேசுலவும் தனதிருக்கை யடைந்தா னந்தம்
தேக்கினன் விடியுங்கால் நோக்கி னே

சோழனுக்கும்பாண்டியனுக்கும்யுத்தம்.

இதுவுமது

கங்குலிந்த வாறகலும் போதா சாசம்
கண்விழிகரு முளனுக விழித் தெழுந்து
புங்கமுடன நித்யகன்மம் செய்து ராச
புரந்தரபா ண்டியனவிமா னத்துள் வாழும்
கங்கைவே ணியற்பூசை செய்தெ ழுந்து
கடுகிவரும் சேனையுடன சோழ ராசன்
அங்கமுடன் பொரநிறகும் அமர்க்க ளஞ்சென்
றடுத்திட்டான் சண்டைசெய்யத் தொடுத்திட் டானே.

சௌராஷ்டிரம், ஆதி.

பல்லவி.

சோழராசனும் பாண்டியராசனும் தொடுத்தா ரேசண்டை

அநுபல்லவி. (காலே

சோழராசன்படை மேலூரத்தாலே துலங்கும்பாண்டியன்சேனை கலங்கொருக்
குழுமலைபரவும் ஆழியின்மேலே தொடர்ந்துவங்கொருநதி அடர்ந்ததுபோலே

சரணங்கள்

பேரிதடாரிமல் லாரிகள்இருவரும் அடிக்க செயமிருந்த
வீரியம்பேசியே பட்டுக்கள் கட்டியம் படிக்க விண்ணிலிருந்து
பாரிலிறங்கிடும் விருதுகள்பொற்கொடி பிடிக்க மனந்துணிந்து
போரிடுவோர்புய மீதினிலேதும்பை முடிக்க நீருண்டகாள
மேகத்தைப்போலேயொலித் தேகத்திலார்ப்பரித்திடுவார் தீயினுமுக்ர
மாகக்கடுத்திடிபோல் வீரத்துடனே சிரித்திடுவார் அமரிற்றங்கள்
தேகத்தினுக்குமான மேயணியாகத் தரித்திடுவார் சினங்கொண்டதி
வேகத்துடனுதட்டில்மேற்பல்லழுத்திப் பொருத்திடுவார் இருதிறத்தோர்
தங்கள்படைநெருங்கி வந்தொன்றுக்கொன்றுகைகலந்தார் பொல்லாதிராச
சின்னதட்டக்கண்டு தென்னன்படைகொஞ்சம்ப யந்தார் பயந்துகண்
டன்னையறைந்துகைத் தடுத்துச்சேனைபடைமி குந்தா ரப்போதுதென்னன்
கங்கைவேணியைத்திரி கரணமும்பொருந்தநி னைந்தான் நினைக்குமுன்னே
கன்னிநாடன்படைதான்கொஞ்சமாகக்கருதுஞ்சோழன்படைதனக்குமுன்பாக
பன்னகாபரணன்அருளில்நன்றாகப் பார்க்கும்போதொன்றானந்த மாயெதிராக

சோழ

உ பேரியொலியுமத மழையைச்சொரியும்கெசத்தொலியும் மலைபோல்வரு
தேரினொலியும்பரி சேர்ந்துகனைத்துவரு மொலியும் மறவர்தங்கள்
போரினொலியுந்தோளிற்புடைத்துவரும்வீரர்களொலியும் இவைகளுடன்
ஓரொலியாகவே விளங்கிடும்வாரிதி யொலியும் அடங்கிநிறகச்
சிலையெடுப்பவருடன் சிலையெடுப்பவர்திரண்டெதிர்த்தார் மல்லயுத்தத்தில
மலைபயில்பவருடன் மலைபயில்பவர்கள்வந் துதித்தார்சஸ்த்ரமெடுக்கும்
கலைதெரிந்தவருடன் கலைதெரிந்தவர்வந்து குதித்தார் வேலையெறிந்து
கொலைபுரிபவருடன் கொலைபுரிபவர்மிகக் கொதித்தார் மும்மதம்சிந்தும்
கரிநடத்துவருடன் கரிநடத்துவருமே கூட கந்துயினற
பரிநடத்துவருடன் பரிநடத்துவர்சென்று சாட தேர்களாகிய
கிரிநடத்துவருடன கிரிநடத்துவரெதி ராட மிகச்சொலிக்கும்
எரியின்மேல்வரும்வாயுவெனக்கைகலந்துபோராடப் பாசத்துடனே
கூற்றெழுந்துமேல் வருகினும்சென்று கூடியொருகைபார்ப் போமெனநின்று
ஆற்றலுடையகாலாள்கள்திரண்டு ஆலமும்வடவையும்போலொன்றுக்கொன்று

சோழ

௩ தென்னன்படைவிடுக்கும் வாளிக்கெதிரேதப்பித் துய்வார் உய்தவாதின்
பின்னும்விடுக்கும்அம்பும் விலலும்அறுக்கவேறம் பெய்வார் எய்கையிலுரம்
தன்னிலுழையுமம்பைப்பிடுங்கிக்கொண்டுகர்ஜனை செய்வார் அந்தவாளிகொண
டொன்னலர்தலைகளை யரைக்கீரைபோலவே கொய்வார் சோழன்படைமேல
சோனைமழைபோல்வாளி தொடுத்துச்சொரிந்துநின்று தள்ள அவர்விடுக்கும்
ஆனவம்புக்கெதிரே தப்பித்தொதுங்கிநின்று கொள்ள நெருப்புக்கக்கும்

கூனலம்பைத்தனுவிற் கூட்டியடுத்தெரித்து விள்ள இப்புவிமுற்றன்
சேனைத்தலைவர்சென்னி சேனையைத்தவிடெனத் தெள்ள ரணகளத்தில்
தாளறுந்தவர்தலை தகர்ந்துமுண்டமாயுருள் வாரும் இறிகிகுர்த்த
தோளறுந்துரமெங்கும் துளைபட்டுயிரகலு வோரும் துதிக்கையற்று
மாளுங்கரியில்வரும் சோரியோராறுகவே சேரும் அதனைக்கண்டு
கூளிகழுகலகை கூடிக்கொண்டிரைக்காக நேரும் இர்தவகையா [ரிட்டு
இடைவிடாமறசேனைகள்தலைப்பட்டு இணைநதொருவர்க்கொருவர்சினக்தெதி
அடல்புரிந்துசூரி யோதயந்தொடடு ஆக்கைநிழலடிக்குள் அடங்குமம்மட்டும்
சோழ

வேனிலின்வெப்பத்தால்சேனைகள்வருந்தியதுகூறல்·

விருத்தம்.

தென்னவன் சோழனேடே செருக்களத் தமர்செய் யுங்கால்
தன்னடித்தான்மிதிக்கும் ததியிலெங் கெங்கும்வெப்பம்
துன்னவே முதிர்வே னிற்கால் சூழநீர் விரும்பிச் சேனை
சின்னபின் னங்களாகத் தெறிபடடார் முறிபட் டாரே.

தோடி, ஆதி.

பல்லவி.

சுற்றிக்கொண்டது கிரீஷ்ம காலத்துவெய்யில் பற்றிக்கொண்டதெங்குமே

அநுபல்லவி

சுற்றிக்கொண்டுலகெங்கும் தோய்ந்துகொள்ளவேயீசன்
நெற்றிக்கண்ணிலுண்டாகும் நெருப்புக்கிணையா வீச சுற்றி

சரணங்கள்

க எந்தநதியும்நீர் மாறவே வானும் இந்தவுலகுஞ்சூ டேறவே மிகும்
அந்தரத்தோரும்வெப்ப மீறவே உயர் மந்தாகினியும்காய்ந்து வீறவே
ஞாலமழன்றுபிளக்க பிலத்துடனே கோலுமலைகள்பிளக்க செழித்தமலர்ச்
சோலைமரங்கள்பிளக்க இதல்லாமலும் மேலும்விண்டலம்பிளக்க உக்கிரங்
பானுவெங்கதிர்மிகமூடவே தாக மானதெவர்க்கும்வர்துநீடலே பலர் (காண்டு
கானலைநீரென்றெண்ணியோடவே சுடும் வேனிலின்சூடுடனேகூடவே
தீயரைச்சேர்நல்லோரும் தீயவராவர்போலே
தூயநிலவுங்காற்றும் சுடும்படிக் கொருக்காலே சுற்றி

உ குஞ்சரத்தின்மதங்கள்நீங்கவே செருக் குஞ்சினமுமகலவாங்கவே அமர்
அஞ்சிநடுங்கிமன மேங்கவே தலை துஞ்சிநடக்கும்நடை தூங்கவே
காற்றிலுமிகுந்தோட்டம் புரிந்துகதி வாய்த்தகுதிரைக்கூட்டம்நாக்குலறண்டு
ஏற்றநடையினீட்டம் சிறுதென்றல் போற்றளர்வொடுவாட்டம் பெற்றுநடக்க
காய்ந்தவலகைத்தேரி லாரவே சூறை தோய்ந்தகாலெனும்பாக னூரவே வேனி
வேர்தனெழுந்தெழுந்து சேரவே கன லார்ந்தகணைதொடுக்கச் சோரவே (ல்
ஆனவிருமன்னரும் அமரைவிட்டுத்துறக்கத்
தானைகலந்துதண்ணீர் தண்ணீரென்று பறக்கச் சுற்றி

௩ இரக்கமேயின்றிவாழுவார் இடத் திரக்கவேசென்று சூழுவார் என
வ்ருத்தங்கொண்டுழன்றுவீழுவார் சுள்ளி மரத்தடிபுகுந்துதாழுவார் (லவேளரி
தம்மிலுமெலிந்திருப்பார் பக்கத்திற்சென்று செம்மையடையநினைப்பார் போ
வெம்மையாலெரிமுதற்போய் உக்கியிருக்கும் பொய்ம்மரத் தருகுறப்போய்.
ஒன்றுவரல்லார் — கரியின்நிழலுறத்தொ டங்குவார் தேர் பரியின்நிழலிலேம
டங்குவார் குடை — விரியும்நிழலுக்குள்மு டங்குவார் வட்டப் பரிசைநிழலுக்
குள்ளடங்குவார் — செல்லிடம்வேறில்லாமல் செருக்களத்திலேநட்ட
கல்லுமுதலாநிழற் கருதிபோட்டவு முட்டச் சுற்றி

சுந்தரேசர்பாண்டியன்சேனைக்கருகுதண்ணீர்ப்பந்தல்வைத்தல்.

ஓதரிய வேனிலிவ்வா றழற்றும் காலை
உயிரனைத்தும் ஈன்றளிக்கும் தாய்மீ னாட்சி
நாதனெனவர்க் குஞ்சமனாய் நின்றோன் தன்னை
நம்பியதென் னன்படையைக் காக்க வேண்டி
வேதமது நாற்காலா அங்க மாறும்
விட்டசட்ட மாப்பீடம் எழுத்தைந் தாமேற்
சீதளவெண் மதிவிரித்து நடுவே வந்து
திக்கின்றான் நீர்ப்பந்தல் வைக்கின் றானே

கல்யாணி, சாப்பு.

பல்லவி

பாண்டியராசன் படைக்கருகே நாடினரே தண்ணீர்ப்
பந்தலைவத்தருள் செய்துவிளையாடி னரே

அநுபல்லவி

நீண்டவனும்அய னும்தேடிக்காணாத நித்தம்வளர்சிவன் முத்திபுரநாதர் பாண்

சரணங்கள்

௧ புண்டரம்தங்கிய நெற்றியும்குண்டலம் பூண்டசெவியின் மலரும்தரித்தடி
முண்டகமேலொற்றைக் கிண்கிணிநாத முழங்கப்புலித்தோ லுடையும்விளங்க
பாணடி (ள்ளம்
௨ பார்த்தவர்கண்ணுமனமும் திருப்பப் படாமனுட் கொள்ளும்சிறுநகையுமு
வாய்த்தகருணைப் பெருக்கமுந்தோன்ற மறைக்குள்மறைந்தோர் அருந்தவராக
பாண்டி (ண்டேயொருவருக
௩ கொன்றைச்சடைக்கங்கை நீராலேபூரித்த கும்பத்தைச்செங்கையிற்கொ
கொன்றுய்ப்பலர்க்குப் பலவாய்த்தமர்கொண் டொழுகவிட்டுத்தண்ணீர்த்தா
பாண்டி கம்தவிர்த்திடப்

சோழன்சேனைதோற்றோடுதல்.

விருத்தம்

பன்னகா பரணனங்கே வைத்த தண்ணீர்ப்
பந்தலுக்குள் வந்தடைந்து வாசந் தோய்ந்த

கன்னிருண் டிளைப்பகன்று வலிமை பெற்று
ராசேந்திர பாண்டியன்றன் படைகொர்ச் சித்துப்
பொன்னிகா டன்படைமே லேறிச் சீறிப்
போர்முன்போற் செயதிடவா ரிதியு டைந்த
தென்னவே வருந்திநின்ற படைக ளோட்டம்
எடுக்கின்றார் தமைத்தொடர்ந்து முடுக்கின்றாரே.

மோகனம், சாப்பு.

௧ தென்னன்படைமுதிர்ந் தடித்தார் சென்னி சேனைமுறிந்தோட்டம் பிடித் (தார்
பின்னேதொடர்ந்துபற் கடித்தார் பல பேரைக்கைகால்முத லொடித்தார்
௨ செப்பியசோழனைத் தகைந்தார் ராஜ சிங்கனையுங்கூட வளைந்தார்
கைப்பிடியாப்பிடித் துவந்தார் பாண்டி காவலனமுன்புகொண் டுவந்தார்
௩ பாண்டியன்சோழனைக் கண்டான் மோசம் பண்ணும்தம்பியுடன நின்றான்
மீண்டிருவோருடன் சென்றான சக்கை வேணியனமுனபுரைக் கின்றான்
௪ உந்தன்கருத்தினுக் கேற்கச் செய்வ தோதவேணுமென்று கேட்க
சிந்தைக்கொத்தபடி யாக்கச் சிட்சை செய்யெனறனைவர்க்கும் தாக்க
௫ ஆகாயத்திற்சொன்ன தறிந்து மகிழ்ந் தய்யன்றிருவடி பணிந்து
வாகாஅரண்மனை புகுந்தான் ஜய மங்களம்பாடவே உவந்தான்

விருத்தம்.

சோழனை இவ் வாறுவென்ற வனைய மைத்துத்
துய்யபரி யானைமுதல் அளித்தூன் னூரில்
வாழெனவிட் டிராசசிங் கனைய மைத்து
வரும்பொருளிற் சிலதீந்து வேறு வைத்துக்
கேழிலகும் இராசேந்திரன் வீற்றி ருந்தான்
கேட்பரிதோ துவர்பசிதா கத்தி னாலே
சூழுதலத் திசைவிசய முதலாப் பூண்டு
தொல்வினையற் றானுலகிற் றுலங்கு வாரே.

ஆக விருத்தம், ௮, கீர்த்தனை ௫, தரு ௪, ஆக ௧௪ முற்றும்.

———0———

சிவமயம்

முப்பத்தாறாவது,

இரசவாதஞ்செய்தபடலம்.

அவதாரிகை — விருத்தம்.

அத்தன்பாண் டியர்கோன்சேனை யதனிடைத் தண்ணீர்ப் பந்தல்
வைத்தவன் றன்னைக் காத்த மகிமைய யுரைத்தே னிப்பாற்
பத்திபூண் டாடும்நாட்டியப் பாவையா ளொருத்தி தன்பாற்
சித்தம்வைத் திரதவாதம் செய்தவா றினிச்சொல் வேனே.

பொன்னனையாளென்னும் ருத்ரகன்னிகையின் தன்மைகூறல்.

விருத்தம்

கன்னிலத்தை யிராசேந்திரன் ஆளுங்காலங்
  நாட்டிலவையை மருங்கிற்பூ வணமென றோதும்
அந்நகரி லுற்றசரா சரமி லிங்கம்
  ஆகநினைத் துடுக்களுங்கோள களும்வி லங்க
மன்னிவளர் கடவுளைச்சூ ரியனிந்திராதி
  வானவர்பூ சித்துவர மடைந்தா ரந்த
முன்னவன்கோ யிற்கடிமை பூண்டொ ருத்தி
  முறைகொண்டாள உளத்திலன்பு நிறைகின் றாளே

ஆனந்தபைரவி, ஆதி

பல்லவி

கன்னியொருத்தியவள தன்னொழுக்கமுமுள்ளக் கருத்தையும்சொலக்கேளும்

பொன்னனை யாளென்றுபேர் பூண்டத்தலத்திலீசன்
சன்னிதி யிலெப்போதும் தளியெடுக் கின்ற ருத்ர கன்னி

சரணங்கள்

௧ வண்டிசையுங்குழலாள் அண்டருக்குமன் பாலே
மயக்குறவாதரிப்பாள் கடலமுதினைப் போலே
கண்டுமொழியாள்வீணை கொண்டிசைந்தொருக் காலே
கானம்பண்ணுவாளின்னம் கேளும்மென மேலே ருத்ரகன்னி

௨ பரதநூலிற்சொல்லும் படிக்கிசைந் தாடுவாள்
பைந்தொடியார்குலமும் பெருமையுஞ் சூடுவாள்
அருமையரம்பையரில் மிகுத்தெழில் கூடுவாள்
அல்லாமலொழுக்கத்தால் அவருக்கும் நீடுவாள் ருத்ரகன்னி

௩ மன்னிவரும்நாள்தோறும் விடியுமுன் எழுகுவாள்
மாதேவனை நினைத்து நன்னீரில் முழுகுவாள்
அன்னபூரணிக்கன்பன் அடியிணை தொழுகுவாள்
ஆதரவுடன்விர தமா யொழுகுவாள் ருத்ரகன்னி

௪ ஆண்டவனுக்குமுன்னே நாட்டியம் பொருந்துவாள்
அடியாரேபொருளாக அர்ச்சித்து வருந்துவாள்
வேண்டுமறுசுவையூண் அருத்தியே திருந்துவாள்
மிஞ்சியதைநிய மங்கொண் டருந்துவாள் ருத்ரகன்னி

சுந்தரேசர்பூவண நகரில்சித்தராகவருதல்.

விருத்தம்.

ஏமையன்பை யுலகறியப் பூவ ணேசன்
  இரணியத்தால் தமதுருச்செய் யென்று ரைக்குத்

நீர்மருள்த் தெரிந்தவகை கருவாற் செய்து
தனக்குநாள் தோறும்வரும் பொருளை யீத்தும்
சேமமுடை யடியார்க்கல லால்மிஞ் சாதால்
நினைத்துமுனனம் பொற்கிழிதென் னுக்கீந் தி
மாமதுரே சனைவேண்ட அவ்வா றேபூ
வனைநகரிற் சித்தராய் வருகினா ரே.

மத்தியமாவதி, ஆதி

பல்லவி.

சுந்தரர்வந்தனரே சாமிசோம சுந்தரர்வந்தனரே

அநுபல்லவி.

கந்தமிகும்பூவனம் வாழுமேமை பரிந்து
சிந்தையிலநினைந்தவ ரந்தருக வெழுந்து சுந்தரர்

சரணங்கள்

க துய்யபூதியணிந தெழில்பாவிய மெய்யும்
கையில்விபூதிப்பையும் காட்டிக்கொண்டருள்செய்யும் சுந்தரர்
உ கட்டுவாங்கமலர்க் கையிற்றரித்து யோகப்
பட்டமிடையிற்றங்கப் பரிநதேமையாள முன்பாக சுந்தரர்
ந உடையுங்கோவணமும் ஒழுங்காயசைந் திலங்கப்
படிகமாலையும்பூண்டு பதுமமுகந் துலங்கச சுந்தரர்

பொன்னனையாள்சித்தருக்குத் தன்மனக்குறையைக்கூறுதல்

விருத்தம்

சுந்தரரிவ் வாறுபூ வனத்தில் நோன்பு
தொடுத்திருக்கும் பொன்னனையாள் மனையை நாடி
வந்தளவில் லாமலங்கே யமுத ருந்த
வருமடியா ரோடொருவ ராகக்கூடிச்
சிந்தையில்வே றெண்ணமடைந் தக்கூட் டத்தில்
சேர்ந்திருந்து துய்யவமு
புந்திமகிழ்ந் திளநகைமேற் கொண்டே யன்பு
பொருந்திட்டார் தனித்தொருபா லிருந்திட்டாரே.

வசந்தபைரவி

சுந்தரரிவ் வாறுவர்தொ ருபால் இருந்தார் அங்கே
வந்தமுத ருந்தினரெல் லோரும் நடந்தார்
சித்தரைய டிச்சியர்கண் டுதொழு கின்றார் அமுது
பெற்றிடவெ ழுந்தருளும் அய்யனே யென்றார்
உங்களெச மானியெங்கே யென்று தொடுத்தார் அவனை
இங்கழையு மென்றருளிச் செய்து விடுத்தார்
அக்கணஞ்சே டியரேமை யாளிடஞ் சென்றார் ஒரு
தக்கவர்வந் திருக்கின்றார் என்று புகன்றார்

ரு 'அந்தமொழி யேமையறிந் தக்கணம் வந்தாள் பவ
பந்தமகற் றிடும்சித்தர் பாதம் பணிந்தாள்
சா சித்தனடி யாரென்றெண்ணியுள்ளங் களித்தாள் உவமை
அற்றவருக் கர்க்கியபாத்தியா சன மளித்தாள்
எ எத்தவஞ்செய் தேனிங்குற வென்று வாக்கினால் மொழிந்து
சித்தர்மேனி யும்அழகும் சேர நோக்கினாள்
அ புன்னகையரும்பநின் றஞ் சலிசெய் திட்டாள் சித்தர்
தன்னகம கிழ்ந்தருளும் கண்வலைப் பட்டாள்
கூ அய்யாவுள்ளே வரலாமென் றன்பு பொழிந்தாள் அடியேன்
உய்யவுமக் கேற்கச்செய்வே னென்று பரிந்தாள்
ய ஏமையிந்த வாறுபச ரிக்கத் தெரிந்தார் சித்த
சாமியவள் மேலேயருள் நோக்கம் புரிந்தார்
கக உன்னிடையைப் போலுன்பேர ழகினில் நல்லாய் கொஞ்சம்
என்னகார ணத்தினால்இ ளைத்தது சொல்லாய்
கஉ கூறெனச்சித் தவுருவம் கொண்ட மெய்யனே கேளும்
வேறொருகுறையுமெனக் கில்லை அய்யனே
கந எங்களையன் திருவுருத் தங்கத்தினாலே செய்யத்
தங்குமாசை யாற்கருவு ருச்செய் தேன்மேலே
கச என்கையிலே நாள்தோறும்வ ரும்பொரு தன்னால் தொண்டர்
தங்கள்பூசைக் கேசரிக்கட் டுதென்று சொன்னாள்
கரு எண்ணியப டிமுடிக்கக் கங்கை யணிந்தார் என்ன
பண்ணுவாரோ வென்றுமலர்ப் பாதம் பணிந்தாள்

விருத்தம்.

சித்தரைத்தாழ்ந் தேமையிவ்வா றுரைக்கு மின்சொற்
திருந்தியதே னெனச்செவிக்கே றிடவ ருந்தும்
புத்தமுதைப் போலவளன் பதுதித் திக்கப்
பூரணா னந்தமுடன் கருணை கூர்ந்து
முத்தநகை யேயிளமை யாக்கை செல்வம்
மூன்றுநீர் மேலுதிக்குங் குமிழி போலே
மித்தையெனக் கண்டறிந்து சிவதர் மத்தை
விரும்பியிழைத் தாயெனப்பின் விளம்பு வாரே

சித்தர் நவலோகங்களைக் கனகமாக்கி அளித்தல்.

அதிகமாம் சிவதாமங் கிளார்ச்சனைநற் சிவபூசை அடியார் பூசை
இதனிலொன்றுக் கெ . கம் ஆனதறிந் தடியார்ககே யீந்தாய் பின்னும்
மதியணிவோன் திருவுருவய் கரணசினைத் தனையதற்குன் மனையி லுள்ள
உதவியில்லா நவலோகம் யாவுமிங்கே கொடுவாவென் றுரைத்திட் டாரே.

ஆனந்தபைரவி, சாப்பு.

௧ சாமியிந்த வாறுரைக்க ஏமை மகிழ்ந்தாள் திரு
மாமனைக்குள் ளதிவேக மாகப் புகுந்தாள
௨ வங்கஞ்செம்பிரும்புவெள்ளி பித்தளை தரா உள்ள
வெண்கலமு தம்பலவும் குதிர்குதிர
௩ தேயுமிடை யாள்பரப ரென்றெ டுத்தாளே கொண்டு
போயிருக்கும் சித்தர்முன்கல் லென்று வைத்தாளே
௪ வைத்தபல்லோ கத்தையும்வெவ் வேறு குறித்தார் கேளும்
சுத்தநீறெ டுத்ததின்மேற் சித்தர் தெறித்தார்
௫ இத்தைநீயி ராவெரியி லிட்டெடு பொன்னும் எடுத்
தத்தையேகொண் டீசனுருச் செய்யென் றுசொன்னார்
௬ இன்றிரவுக் கிங்கிருந்த முத ருந்துவீர் நான்
வின்றுபடி செய்திடம னம்பொ ருந்துவீர்
௭ மண்டிருள்பு லருமுன்போ மென்று புகன்றாள் நில
கண்டரம்மொ ழிக்கிசைந்தி டாம லகன்றார்
௮ மானேகூடற் சித்தர்யாமென் றோதி மறைந்தார் மறைந்து
போனபின் மதுரைஎம்பி ரானென றறிந்தாள்
௯ வாய்த்தவரே கச்சிறித யர்ச்சிலைப் பூண்டாள் கவலை
மாற்றினாரென றேபெருமகிழ்ச்சியும் நீண்டாள்
௰ சித்தர்சொல்லைப் புத்திபூர்வ மாக நினைத்து வன்னி
மத்தியிலே வைத்தனள்பல் லோக மனைத்தும்
௧௧ ஈசனடி யையடைந்தோர் காட்சி யைப்போலே எல்லாம்
மாசகன்ற சொர்ணமய மாச்சொ ருக்காலே

விருத்தம்.

சித்தர்சொன்ன வாறுலோ கங்க ளெல்லாம்
செம்பொன்னு விளங்கிடலால் ஏமை நோக்கிச்
சித்தமகிழ்ந் தருவிலரு வுருவஞ் செய்து
திருவழகைப் பார்த்துச்சுந் தரனே யென்று
பத்திமிகுந் தள்ளிமுத்தங் கொண்டே ளன்பிற்
பழகியபி ரானுகப் பிரதிஷ்டை செய்து
நித்தமுதல் நடத்திச்சின் னாள்வாழ்ந் தின்பம்
நிறைந்திட்டாள் சிவபதத்தி லுறைந்திட் டாளே.

இதுவுமது

அய்யனைச்செய் தேமையர்நா யகன் கபோலத்
தள்ளிமுத்த மிட்டநகக் குறியுஞ் சொன்ன
செய்யகா ரணக்குறியும் கொண்டு செம்பொன்
திருமேனி வேறுகி விளங்கி னானாம்
பொய்யுகத்தோர் தமக்கோர்க்கத் தக்க தாகப்
பொருந்திநின்றார் இக்கதையைப் படிப்போர் கேட்போர்
வையகத்தி லேதுயர மகன்றின் பத்தை
மன்னியிருந் தானுலகிற் றுன்னு வாரே.

ஆக, விருத்தம் ௮, கீர்த்தனை உ, தரு உ, ஆக உ. முற்றும்.

சிவமயம்.

முப்பத்தேழாவது.

சோழனைமடுவில்வீட்டியப்படலம்.

அவதாரிகை—விருத்தம்.

பொன்னனை யாளுக் காகப் புராந்தகன் இரத வாதம்
தன்னைமுன் செய்து வந்த சரித்திர முரைத்தே னிப்பாற்
சென்னியை மடுவி லாழ்த்தித் திருவடி நம்பும் பாண்டி
மன்னனை யமரிற் காத்த மகிமையை யினிச்சொல வேனே

ஆனந்தபைரவி, சாப்பு.

௧ அருந்தவர்களே பாண்டிநாடா சாட்சியைச்செய்து வரும் ராஜ
புரந்தரபாண்டியன் சிவனுலகத்திற் புகுந்திட்டான்பின்பு கேளும்
௨ அவன்மகனிராஜேசபாண்டியன் அநுதினமும்அன் பாலே கதம்
பவனநாதனைப்பணிந்தவனியைப் பாலித்தானேஇப் பாலே
௩ ராஜகம்பீர னென்றவன்மகன் ராஜ்யம்வகித்தன் றானே கிராம
தேசமெங்கினும் ஈசனைத்தொழச் சிவப்ரதிஷ்டைசெய் தானே
௪ பாண்டியவம்சப்ர தீபனென்றவன் பாலகனொருக் காலே புவி
ஆண்டநேகநாள் இருந்தரனுல கடைந்திட்டான்அதின் மேலே
௫ புரந்தரசித்தன் அவன்மகனிந்தப் புவிவகித்திசை பூண்டான் நலம்
பொருந்திடும்அநேக மாலயாவரும் பூசைசெய்துல காண்டான்
௬ பக்திமிகுந்த பாண்டிவம்சப தாகனென்றவன் பாலன் சொல்லும்
இத்தரணியில் யாரையும்சிவ பக்தராக்கிய சீலன்
௭ கருத்துறுஞ்சுந்த ரேசபாதசே கரனென்றவன்கு மாரன் வெகு
திருத்தமாகவே பலர்புகழ்ந்திடச் சிவபத்திமிகுந் தீரன்

விருத்தம்.

பத்தபரி பாலனஞ்செய் சுந்த ரேச
பாதசே கரபாண்டிய ராஜ னென்போன்
பத்திரதம் நூறுனை ஈரைந் நூறு
பரிபதினை யிரங்காலாள் இவர்கட் காக
எத்தனைபொன் சிலவாமோ அதுபோய் மிச்சம்
இருந்தபொருள் அனைத்தும்விமா னத்துள் நாடிச்
சித்துருவாய் விளங்குகின்ற சிவனுக் கேற்பச்
செலுத்துவான் புண்ணியத்தை வலுத்து வானே.

காம்போதி, சாப்பு.

௧ இந்நிலத்தைதப்பாண்டி மன்னவர்கோன்வகித்தாண்டான் கூடத்
பன்னகபூஷணன் றன்பணிக்கேயன்பு பூண்டான்
௨ கண்டிகைவச்சிரமு டிமுதலாபர ணங்களும் சந்த்ர
மண்டலமடமேம் வளர்ந்தயரும்கோபு ரங்களும்

௫ அல்லாமலின்னம் அநேகவிதஞ்செய்து போக்கினன் கணக்
இல்லாமலேபணி யெல்லாம்புதிதாயுண் டாக்கினன்
௬ மத்தசிரோமணி யென்றிவ்வுலகத்தின் மீது புகழ்
பெற்றுத்தருமப் பயிரைவளர்த்திடும் போது
௭ தென்னவன்சேனைச் சிறுமையைச்சோழனறிந்தான் அவன்
தனனுடனேயம ராடமனத்திலதி னைந்தானே
௮ ஆவனுடனேயோ ராயிரம்வரம்பரிக் குநந்தான் ஒரு
சேவகனுக விருதணிந்துகொண்டெ ழுந்தான்
௯ கூடியநால்வகைச் சேனைப்படையுடன் கூடினன் கடல
சீறிவருவது போலேமதுரைமேல நாடினன்
௧௦ நாடிவருவத றிந்துதென்னனபயங் தோடினன் கல்கை
சூடிமுனறனகுறை சொலலிப்பணிந்துமன் றாடினன
௧௧ உன்பலத்தாலுல காள்வத றியாமல் நண்ணினன் அவன்
தன்பலத்தாலென்தனசேனையலேசாகவெண்ணினன்
௧௨ காவிரிநாடன் பெருஞ்சேனையோடென்தன பாலே வட
வாவனல்போலே வனைந்தானென்றோதவினை மேலே
௧௩ யுத்தமதிலநாம்வருவோஞ்சயமுனக் குண்டாம் எனறோ
உத்தரவீசன ருளாலெழுந்திடக் கண்டான்

விருத்தம்

வானிலெழு மொழிகேட்டு நாதன் றனில
வணங்கிமுக மலர்ந்துவந்து முரசியம்பச
சேனைகள்சூழ்ந் திடநடுவே பரிமேற் கொண்டு
செப்பரிய சோழமனன னுடனே மேவும்
தானையெனும் கடலுடனு நாறெ திர்க்கும்
தன்மையைப்போ லெதிர்க்கஅவர் தங்கட் கெல்லாம்
மீனவர்கோன படைகடற்போல் தோன்றிற் றநகே
மேலேதான் ஈசனருளாலே தானே.

சுந்தரேசர்வேடுருவம்கொண்டுவருதல்.

விருத்தம்

தென்னவர்கோன் சேனையைப்பார்த் திந்த வண்ணம்
செம்பியர்கோன் சேனையதிர்க் திருக்கும் போது
வன்னமிகு மேருமலை வில்ல தாக
வாசுகிநா ணகநெடுமாலம் பாகப்
புன்னகைவெ கனலாகப் பூண்டு முன்னாள்
புரமெரித்த ஆலவாய்ப் பெருமானு மே
துன்னலரைசெயித்திடவே வேடுருவம் பெற்றுக்
குதித்திட்டான் அமர்க்களத்திற் குதித்திட் டானே.

மத்தியமாவதி; ஆதி.

பல்லவி.

வேடுருக்கொண்டுவந்தானே தென்னனுக்காக வேடுருக்கொண்டுவந்தானே

அநுபல்லவி

நீடியஅரிபிரமர் கூடியதேவர் முனிவர்
தேடியவெள்ளியம்பலத் தாடியதேவாதிதேவன் வேடு

சரணங்கள்

க வேதமேபரியாவிளங்க ஏறியேமுடி மீதுமயிற் றோகைஇலங்கக்
காதிலணிதந்தத்தோடின் காந்திமதிபோலே மின்ன
ஓதரும்வெண்முத்துமாலை யுரத்திலுசேக்கவோவென்ன வேடு

உ அங்கிதலைப்பாகுஞ்சூட்டி தங்கக்கடகம் முன்கையில்து லங்கமாட்டித்
திங்கள்வங்கிசத்தரசன் சேனைக்கனு கூலனுகச்
செங்கதிர்க்குலத்துதிக்கும் சென்னிக்கொருகாலனுக வேடு

ங ஆலமுண்டதுமுன்னுலே கழுத்தில்தங்கி மேலெங்குங்க லந்தாற்போலே
நீலமேனியுஞ்சிவந்த நேத்திரமுட னடுத்துக்
காலவன்னிபோற்கர்ச்சித்துக் கையிலொருவேலெடுத்து வேடு

விருத்தம்

தேவதே வோத்தமனிவ் வாறு வேடத்
திருவுருவம் பூண்டுபொன்னி நாடன் முன்சென்
றுவனுடன் சார்த்தூலம் போலே கர்ச்சித்
தார்ப்பரித்தா யிரம்பரிக்கு மட்டும் நீயோர்
சேவகனென் றெநினைத்து வந்தா யல்லோ
செபபவொண்ணுப் பரிக்கொருசே வகன்யா மென்று
கோவமிகுந் துரைத்தடி போற்கா துக்குள்
கொண்டிட்டான திடுக்கெனவே நின்றிட் டானே

மத்தியமாவதி, சாப்பு.

க மாதவரேகூடல்வாழும் லோக நாதன்மகிமையைக்கேளும்
ஓதரும்வெண்பரிமேலே வே டுருவுடன்சோழன்முன்னுலே

உ மின்னலிலங்கிடக்கூடிச் செல்லும் மேகத்தைப்போலவேநாடி கையிற்
சொர்ணமயவேலையெடுத்தான வல்ம் சுற்றியேயுங்காரித்தடுத்தான்

ங ஆயிரம்வாசிக்குத்தீரனே வீர னுமென்றெண்ணியிருந்தானே நோக்கிக்
காயம்நடுங்கமென்மேலே பயங் கைக்கொண்டினியிவ்வேலாலே

ச மானுவதிக்குமெய்யாமே நம் வல்லபமெல்லாம்பொய்யாமே கொல்லும்
ஊழிதேயென்றெருக்காலே வெருண் டோட்டம்பிடித்தானிப்பாலே

ரு காமனை வென்றவன்மன றந்தா னது கண்டுவழுதிபின்றொடர்ந்தான் சோழ
மாமன்னனேட்டத்திலமா ற்றுன் பின் வருகிறுனேவென்றுபார்த்தான் (ம

சு வேடன்மறைந்துங்கண்டான் பயம் விண்டான்வழுதியைக்கண்டான்தன்
கூடல்ளவும்தூரத்திஞன் பயம் கூர்ந்துமதுராபுரத்திஞன்

௭ காற்றென்றுமுடுக்கலாலே அதைக் கண்டெரிசாடினைப்போலே
ஆத்திமலர்த்தொடைசூடினான் பிற காலேதூரத்தமுன்னோடினான்
௮ மாநகர்க்குள்விரைந்தெழுந்தான் பச்சிமத்திசையகழில்விழுந்தான்
தானதுதேர்ந்தகஞ்சூழ்ந்தான் பரி தன்னுடன்சோழனும்வீழ்ந்தான்
௧ தீனதயாபரன்களிக்கும் அருள் செய்வதினாற்கடலுதிக்கும்
ஆனைபோலெழுந்தான்தென்னன் அதில் ஆழ்ந்துபோனான் சோழமன்.

விருத்தம்.

சென்னியிந்த வாறுயிலத் தளவு மாழ்ந்த
செழுங்கிடங்கில் ஆழ்ந்தவிந்து போனா னிப்பாற்
பின்னவன்தேர் கரிபரிபூண் டெலநி றைக்கும்
பேழைமுத லானதெலலாம் கவர்ந்து கூடல்
முன்னவனுக் கேற்றவணி யெல்லாம் நல்கி
முத்திபுர நாடரசானை டிருந்தா னித்தைச்
சொன்னவரும் கேட்டவரும் பகையை நீங்கிச
சுகமனுபித் தானுலகில் துலங்கு வாரே

விருத்தம் ௩, கீர்த்தனை ௧, தரு ௫, ஆக ௯ முற்றும்

———0———

சிவமயம்

முப்பத்தெட்டாவது.

உலவாக்கோட்டையளித்தபடலம்.

அவதாரிகை—விருத்தம்.

சம்புவே லேந்திச் சோழன் றனையகழ் மடுவிற் றள்ளி
நம்பினவனைக் காத்த கலஞ்சில துரைத்தே னிப்பால்
பின்புழ வோர்க்குள் மிக்க பெருமையும் அறனும் பூண்ட
அன்பனுக் குலவாக் கோட்டை யளித்தவா றினிசசொல் வேனே.

நல்லான்வரலாறுகூறல்.

விருத்தம்.

படிபுகழும் புடிசோழ சுந்த ரேச
பாதசே கரனெண்டு வருநாள் வெள்ளைப்
பொடியணியும் பரமனுக்கா ரணத்தி னுச்சி
போல்விளங்கும் ஆலவா யுறையு மேழிக்
கொடியுடைய வேளாளர்க் குள்ளே கீர்த்தி
கொண்டறத்தி னெறிதவறு தியற்றி நாளும்
அடியார்க்கு நல்லானென் றெங்கும் பேருள்
ளவனென்பான் பத்திமிகுந் தவனென் பானே

தோடி — சாப்பு.

பல்லவி.

நல்லானடியார்க்கு நல்லான் அவன்குணம் எல்லாம்சொல்லக்கேளும்

அநுபல்லவி

நல்லாருழவர்க்குள் நல்லான் அறத்திற்கும்
நல்லானகீர்த்திக்கும் மல்லா னெவருக்கும் நல்லான

சரணங்கள்.

௧ இல்லறத்திற்கன்பு ருவாயிசைக் கொத்த
ஏந்திழைமார்கள் துதிக்கும்படி மெத்த
நல்லதருமசீலையெனும்பே ருற்ற
நாயகியைத்தனக் காதரவாப் பெற்ற நல்லான

௨ பலவேருழுதுப ரும்பலத்தின முந்தப்
பார்த்திபனுக்கிறை ஈந்துபின்மி குந்த
செல்லாப்பொருள்களும் சேகரித்து வந்த
ஈசனடியாரைப் பூசைசெய்து வந்த நல்லான்

௩ சாமியடியார் வெகுபேர்களுக் கன்னம்
தனையறுசுவை தன்னுடனே முன்னம்
நேமமுடனே யருந்தச்செய்து பின்னம்
நேரிழையாளுட னேபுசிப்பா னின்னம் நல்லான்

௪ தூய்யவிபூதிருத் திராட்சத்தைமெய்க் கொண்டு
சூலதரன்பூசைசெய்துபொருள் மொண்டு
செய்யவடியாருக் கீயும்நல்ல கண்டு
தெண்ணீர்மணற்கேணி போலேகிதி மண்டும் நல்லான

நல்லான் இல்லாமையால் வருந்தியது.

விருத்தம்.

பத்தருக்கு நல்லானிவ் வாறெக காலும்
பரிந்துதவும் நாள்வளங்கள் குன்றி னாலும்
சித்தமது மாறுபடா னென்னுந் தன்மை
தினைபுவியி லியாவருக்குங் காட்ட வேண்டி
மெத்தஅவன் தன்வயலில் விளைவு குன்றி
மெலிவுகொள்ளும் படிக்கால லாயில வாழும்
வித்தகனும் எம்பெருமான கருணை கொஞ்சம்
விலக்கினன் அவன்மனஞ்சக் கலக்கி னனே

நீலாம்புரி, சம்பை.

பல்லவி.

இல்லாமையடியார்க்கு நல்லான்கொண்டானே

அநுபல்லவி

இல்வாழ்க்கைத்துணைநலம்பூண் டிசைத்தடியார்தமக்குதவப்
பல்வாழ்க்கைதருமீசன் பரிசோதனை யாலே இல்லா

சரணங்கள்

திருவுளமிரங்கிக்குறையுமின்று கடன்வாங்கியளித்தொண்டர்
தம்பூசைகுன்றாமல் அன்புடனே செய்து
தினமுங்கடன்கிடைக்காமல எடுத்தவிரதத்துக் குறுதி
செய்யவகையுமில்லாமல் மெய்யையொறுத் தானே இல்ல

கொடியவரேவினைவுங்கடன் கொடுப்பவரையும் தடுக்கில்
குவலயத்திலதைவிலக்க எவருண்டென் றெண்ணி
அடுத்தவர்கள் துன்பங்களைத் தடியார்க்கசன மருத்தும்
அந்தியமத்தடைப்பட்ட தென்னசெய்வோ மென்றே இல்லா

அடியார்க்கசனமூட்டி யல்லாமலுண் ணுத
அருந்தவத்துக்குயிர்த்துணையாம் தருமசீலை யுடனே
முடியாதபட்டினியாக் கிடந்துநெஞ்சம்புண் ணுக
மூண்டபசித்தீமிகவும் ஈண்டியுடல புழுங்க இல்லா

உழவார்க்குழுகுவிருக் தோண்டலென்பது குறைய
உலையிலிட்டமெழுகுபோலே உருகிப்பர தவித்து
அழுதிராப்பொழிக்குத் தெய்வமேதுணை யாமென்
றரியுவயிற்றைப்பசியா லெரியக்கட்டிக் கொண்டு இல்லா

ஊறுமணற்கேணிபோலே தருமமேசெயந தருமென்
றுலகிலுள்ளபெரியவர்கள் உரைத்தமொழி பொய்யோ
கூறுமீசன்பண்ணுந்திருக்கூத்துக்குநாமென்ன செய்யுங்
கூடுமென்றறிந்துமுகம் வாடியினம் வருந்தி இல்லா

நல்லான் சுந்தரேசரைத்தன்வறுமைநீக்கவேண்டுதல்.

விருத்தம்.

இல்லாள்தன் னுடனடியா ருக்கு நல்லான்
இந்தவிதம் வருந்திமொர்ந்தே நிலைமை சற்றும்
இல்லாத பொய்யுடம்போ டிருந்திம் மண்ணில்
இன்பமெதும்பே றேதுளதென் றேங்கிப் பட்ட
தெல்லாமெம் மய்யனுக்குச் சொல்லிப் பின்னே
இவ்வுயிரை யொழிப்பதுவே கரும மென்றங்
கல்லாருங் கந்தரன்முன் னடைந்துக் கத்தை
அடுக்கின்றான் பணிந்துசொல்லத் தொடங்கின் றானே.

ஆரபி, திரிபுடை

பல்லவி.

வந்துசொல்வாய்

அநுபல்லவி.

அந்தரத்தவருய்யநஞ்சமு தாகவருந்தியமெய்யனே
உன்தனடியவர் பூசைக்கிடையூறு யென்தன்வயல்வினை வய்யனே கு
றைத்தவிதமென்ன தய்யனே வந்து

௧ உய்யும்வகைகடன் கொடுக்கத்தகவர் ஒருவருமில்லர்புன்னுருந்தேன்
வையகத்திலே கடன்கொடுக்கின்ற வல்லவரிருக்கும் வுரையும் புகழ்
செல்லும்அவர்குடிப் பேரையும் வந்து

௨ சட்டும்மதிநதி சூட்டுமெய்யனே எனக்குக்கடன்கொடுப் பவர்களைக்
காட்டிடாவிடில் மனைவியோடுயிர் கழித்திவ்வுடற்சுமைமாற்றுவேன் தருமங்
களைச்செய்யாதகுறை யாற்றுவேன் வந்து

௩ ஈவில்லாமலே புவிக்குப்பாரமா இருக்குந்தேகியைப் போலவே
பூவிலென்னையும் ஈகையில்லாமல் புல்லனுக்குவது ஞாயமோ சாமி
அல்லதீதென்ன ஞாயமோ வந்து

விருத்தம்.

தொண்டருக்கு நல்லானிவ் வாறு வேண்டச்
சோமசுந் தரக்கடவுள் அருளி னாலே
அண்டமதில் ஒருமொழியே வாளர் மன்னு
அரிசிப்பை யொன்றுனகத் தமைத்தோ மத்தைக்
கொண்டுபூ சித்ததில்நாள் தோறு மொள்ளக்
குறையாதன் பருக்கீந்தே யறத்தைச் செய்திம்
மண்டலத்தில் வீற்றிருந்தென் மலர டிக்கீழ்
மன்னுவா யெனக்கேட்டு மகிழ்ந்திட் டானே.

நல்லான் அரிசிக்கோட்டையைப்பெற்று தருமங்கள் செய்தல்.

இதுவுமது.

இப்படியே யந்தரத்தில் உரைத்தி டத்தேர்ந்
தின்பமடைந் தடியார்க்கு நல்லான்வேதச்
சொற்பொருளைப் பணிந்தில்ல மடைந்து முன்னுள்
தொகுத்ததவப் பயன்றிரண்டு தோன்றிற் றென்ன
ஒப்பிலன்பர்க் கானருளும் நதியைப் போலே
உலகறியக் கோட்டையைப்பார்த் தரிவை யோடும்
அப்பொழுதே பூசனைசெய் தரிசி யைக்கொண்
டடுக்கின்றான் யாவருக்கும் கொடுக்கின் றானே

பரசு, ஆதி.

பல்லவி

அடியவர்க்குநல் லான்சிவனருள் அரிசிக்கோட்டையைத் தனக்குலவாத
ஆஸ்தியாக்கொண் டறஞ்செய்து மகிழ்ந்தானே

அநுபல்லவி

படிபுகழும்த ருமசீலையெனும் பத்தினிதன்னுடன்நித்தமுந்தப்பாமல் அடி

சரணங்கள்

முாமதிருடும்சோமசுந்தரர் தாமளிக்கின்றகோட்டையை நன்
மனமிருந்தசந் தனம்புகைசுடர் புனிமலருடன்தினமுமருச்சித் தடி

உ வழக்கப்படிக்குவிளக்கமாமடி சிறுக்குமதற்குவேண்டும் பல (ழக்—தடி
வகைப்படுங்கரு விகட்குமேயது விலைப்படுத்திக்கொண் டகத்தினில்மகி
௩ கொண்டலைப்போலே தொண்டர்களுக்கும் பண்டிதர்மறையவர்க்கு மன்பு
கூர்ந்தைம்புலத்திலார்ந்தவர்க்குளம் வாய்ந்தெவர்கட்குமீந்தநுதின மடி

விருத்தம்.

அன்பனடி யார்க்கினியா னிந்த வண்ணம்
அனைவருக்கும் வேண்டியதீந் தளகே சன்போல
தன்பிரிய மனைவியொடும் புத்திர பௌத்திரர்
தங்களொடும் சுற்றத்தார் தமர்க ளொடும்
அம்புவியில இன்பமுடன் வாழ்ந்தந் தத்தில்
அரனுருப்பெற் றனிதனை யறைவோர் கேட்போர்
இன்பமடைந் தல்லலகன் றிசையைப் பூண்டே
இருநிலத்தி லுபாதியற்றே யிருப்பர் தாமே.

விருத்தம் எ, கீர்த்தனை ௬, ஆக கக முற்றும்.

———0———

உ

சிவமயம்.

முப்பத்தொன்பதாவது,

மாமருகைவந்துவழக்குரைத்தபடலம்.

அவதாரிகை—விருத்தம்.

காமனை யெரித்தோன் றொண்டர் களுக்கினி யான்றன் பத்தைத்
தாமறிந் துலவாக் கோட்டை தநதவா றுரைத்தே னிப்பால்
தேமலர் முல்லைத் தாரார் சிறுதகை வணிகற் காக
மாமரு வழக்கு ரைத்த மகிமையை யினிசசொ லவேனே.

தனபதியின்செய்திகூறுதல்.

விருத்தம்.

தென்னவர்கோ ஞனசுந்த ரேச பாத
சேகரனிவ் வுலகாளும் நாளிற் கூடல்
தனனிலுறை வணிகருக்குட் குபேர னெப்பாம்
தனபதியென னும்பெயரோன் துணைவி யாகும்
அன்னநடை சுசீலையென்பாள அவளோ டில்லத்
தகமகிழ்நது வாழ்ந்திடுநாள மைந்த ரில்லா
தின்னலுடன் இருவருமக் குறையே மேற்கொண்
டெண்ணினுர் மனவருத்தம் நண்ணி னுரே

பௌலகரி; ஆதி.

பல்லவி.

தனபதிசெய்திகேளும் தவமுனிவோரே

அநுபல்லவி

தன்பதிபோற்செழிக்கும் சம்பன்னனுக்களிக்கும் தனபதி

சரணங்கள்

க பிள்ளைப்பேறில்லாமையாலே பெருமைகுன்றிமென் மேலே
உள்ளத்தில்மொர்தொருக்காலே ஒண்டொடிதன்றுடன் பாலே தனபதி

உ தங்கைமகனைத்தாம்பெற்ற நினையனுககொண டுற்ற
மங்கைகைக்கொடுத்தான்சுத்த மனையாளவாங்கி மிகுத்த தனபதி

ங கண்டிகைசுட்டியும்பூட்டிக் கைவளைகுண்டலம் மாட்டித்
தனடையரைஞாணும்சூட்டித் தழைக்கசெய்தான்சீ ராட்டி தனபதி

விருத்தம்

தனபதிசந் ததியில்லா தவனு னுலும்
தன்மனையா ளிடத்திலஉற்ற வாஞ்சை யாலே
அனுசையிடத் தனுதினமும் பூசல் செய்ய
அவளுமொரு நாள்கோபித் தனனு விந்த
மனமகிழ்ச்சி யேனவிளங்கும் பிளளை யிலலா
மாபாவி யுனக்கிருமை வரும்பே றெலலாம்
ஏனதருமை மனமகனு லன்றோ வென்றே
யேசினுள் நேர்ந்தபடி பேசி னுளே.

தாயத்தார்தனபதியின்பொருளெல்லாம்அபகரித்தது.

இதுவுமது

தங்கையிந்த வாறுரைக்க வெட்கம் பூண்டு
தனபதியின் றொருசென்மத் துக்கா னுலும்
அக்குழந்தைப் பேறடையத் தவஞ்செய் வோமென்
றயன்பொருளெல் லாமருகன் றனக்கே யாக்கி
மங்கையுடன் சென்றான்பின வராது கண்டு
வல்மையினல் இலலாத வழக்குப பேசிப்
பங்குடைய தாயத்தார் அந்த மாக்கைப்
பற்றினர் பொருள்முழுதும் சுற்றி னுரே.

சாவேரி, ஆதி.

பல்லவி

பாரும்பாரும்தாயத் தார்கள்மிகுந்து தன பதிமுதலைக்கொண் டாரே

அநுபல்லவி

பாரும்விளைநிலம் அடிமையா பரணம்
பசுக்கள்நவமணிகள் கணக்கிலலாத தனம்
சேரும்பெட்டிகள்யாவும் இழந்துகண்ணீர் வடிக்கச்
சிறகரிந்தபுட்போலே சேயும்தாயும் துடிக்கப் பாரும்

சரணங்கள்

க அகதிக்குத்தெய்வந்துணை யலலாலவேறுண்டோவென் றனையுமகனும்நய
அகமெலிநதேழைசொல் லம்பலமேறுமோவென்றுலவாயரின்முன் றலே
புகலுமடியவர்க்கோர் ஆதாரமாவிளஙகும் புண்ணியாவெனப்பணிந்தன்
சகமதற்குத்தநதைதா யாவீர்எங்கட் கன்னையும் (பாலே
தகப்பனும்அனறோவென்றே முறைகூறவொருக்காலே பாரும்

உ என்மகனையெனக்கு முன்னேனமகனிலலாமல்எவரும்காணத்தகுதியாகவே
தன்மகனுகப்பெற்றிப் பாலேகாணிபொன்மனை சகலமும்எங்கள்வச மாகவே
தன்மனமகொண்டளித்து மனைவியுடன்றவத்தை நாடிச்செயவேணுமென் றே
வனமையினுலேதாயத் தார்களவைக ளெல்லாம் (கவே
வவ்விஞரெனறுசொன்னுள் பின்னுமகூர்மையாகவே பாரும்

௩ ஒருத்திநானெனக்கய்யா ஒருமகனிவனென்றும்ஓதறியாளேழையல்லாமலே
கருத்தறியாதசிறி யோனெங்களுக்குவேறு கிளைகளைத்தாங்குவாரில்லாமலே
வருத்தமுற்றோமேயுயிர்க் குயிராய்நிறைநதோயெந்த வரலாறுங்காணுவாய்
அருடகடலேநீயன்றி யாரிருக்கின்று ரெனறே (சொல்லாமலே
அடிபணிநதோதிவீழநதாள அகம்வேறுசெலலாமலே பாரும்

தன்பொருளைத்தரும்படிவணிகமகள்ஞாதிகளைத்தடுத்தல்.

விருத்தம்.

அடிபிடிவழக்காச் செய்துதா யத்தார் அரும்பொருள் கவர்ந்திட வருந்தி
அன்னையும்மகனும் சாமிமுன் னுரைக்க அவரரு ளாலுறங் கிடுங்கால்
விடிவரைஞாதி களைமதித் தவையில் வேந்தன்மே லாணையிட் டிருத்தவ்
வேளைவந்துனது வழக்கைநாம் தீர்த்து விடுகிறோ மெனக்கனு வதனில்
வடிவுறுமறையோன்போலுரைத்தகன்றார் மகிழ்நதெழும்தெளியருக் குத்தெய்
வந்துணையெனப தறிந்தன னனு வணஙகிவந தகம்புகுந் துரைத்த
படியெழுந் தீசன் கோயிலமுன் பணிந்து பலர்களுமறி யஞாதிகளின்
பக்கம்வந்தெமதுபொருள்களைக் கொடுத்தப்பாலேபோமெனத்தடுத்தனளே.

கௌளிபந்து, ஆதி.

பல்லவி

அன்னியாயஞ்செய்து கொளளும்ஞாதி களேயெம்பொருளைத்தாரீர்

அநுபல்லவி.

மன்னவனுணை தன்னையேயிட்டேன பின்னொருபக்கமும் செலலவுமொட்டேன்
அன்னமுதலாப்புசிக்கொட்டேன் அன்னி

சரணங்கள

க அடியெடுத்தொருபால்நாட்டக்கூடாது அடுப்பிலேநெருப்புமூட்டக்கூடாது
படிவாச லும்தாணடக்கூடாது அன்னி (சார்வீர்

உ அழுக்காறுடையவர் ஆகவேசேர்வீர் ஒழுக்கமிருநதர்மச் சபைக்குள்ளே
வழக்குத்தீர்நதபின் அப்பால்போவீர் அன்னி

சுந்தரேசர்வழக்குத்தீர்க்கமாமனுகவருதல்

விருத்தம்

இந்தவிதந் தடுக்கையில்ஞா திகள்வலுக் கொண்
டிழுக்குரையால் வைதுதள்ளி யடித்தோட் டுங்கால்
வந்துதர்மச் சபைமுன்னே முறையோ வென்று
மாதுரைக்கத் தெரிந்தறத்தார் அவள்பின் னோடே
தந்திடுஞ்சே வகருடனே சென்று மாற்றார்
தலைப்பழைத்துக் கொண்டுவந்தாள் வரும்போ தாங்கே
புந்திதனி லாலவாய்ப் பெருமா னன்பு
பூண்டிட்டான் தனபதிபோல் தோன்றிட் டானே.

மோகனம், ஆதி.

பல்லவி.

மாமனுகவந்திட்டானே வழக்குத்தீர்க்க மாமனுகவந்திட்டானே

அநுபல்லவி.

சேமிதரனுமல ரயனுந்தேடரிய மாமதுரையில்வளர் சோமசுந்தரமூர்த்தி மா

சரணம், ஆதி.

க துங்கமாங்கா திற்குண்டல மின்ன வரைநிகர்த்த
தோளிலங்கதம் பளப ளென்ன இருளகற்றும்
கங்கணமுன் கையிலொளி துன்ன உருத்திராட்சக்
கண்டிகை திருக்கழுத்தில் மின்ன மதுவையுண்டு
பங்கயத்திதழிலு றங்கும்வண்டுகள் போலே
தங்குமணிமோதிரச் செங்கைவிரிமென் மேலே
தங்கையையும்சேயையும் தள்ளிவிட்டோர்முன் னுலே
சிங்கவேறுபோல்வீதி லங்கநடந்தன் பாலே மாம

உ திருமுகமாகுந்தாமரை வாடிப் பிள்ளைக்குச்சதி
செய்ததாயாதிகள்மேலே மூடி உடனேதமக்
குரியதிருமகன்மேலே நாடித் தண்ணளிநயந்
துளமகிழ்ச்சிதனைமிகக் கூடி நீதிதெரிந்த
அரசனில்லையோபெரி யோரில்லையோ சிறந்த
அரசனசெங்கோலுங்கொடி தாச்சோ நூல்கள்மொழிந்த
உரியதெய்வமுங்குடி யோடிப்போச்சோ வுயர்ந்த
தருமமும்போச்சோவென்று தருமச்சபையில் முந்த மாம

ங பாதகத்தாயாதிமார்கள் கண்டு விம்மிதமுடன்
பகட்டுமனவலியிழந்து பண்டு தீர்ந்தவழக்க
நீதமாச்செய்தோமென் றுள்ளம் பிணடு அச்சமுநாணும்
நெருங்கியேதமைவிழுங்கக் கொண்டு நட்டுவிழிக்க
ஆதரவுடனேதம் மருமகனை நேரிட்டுச்
சோதரியுடனுரைத் தேதமுவிக்கை தொட்டு

வேதியர்சாமகானம் ஓதுதல்போல்வாய் ௫டு
ஆதுலரானீரக்தோ அந்தோவென்றேகூப் ௫டு
மருமகனைத்தழுவி அழுதுவருந் ப

விருத்தம்.

மாதுலன்போல் வந்தசுந்த ரேசனா ருளில
மைந்தனுந்தா யுங்கண்ணீர் சொரிய வீழ்ந்தெம்
தாதையே யென்றலறி யழுகு மையன்
தடக்கையா லெடுத்தணைத்துக் கட்டிக் கொண்டு
ஆதரவோ டவர்தமைத்தங் கண்ணீர் வெள்ளத்
தாழ்த்திமகன் றனைப்பார்த்தென் னப்பா வுன்றன்
ஓதரிய பணியெல்லா மியாவர் கைக்கொண்
டெய்தினரூர் என்றுரைத்து நைகின் றாரே

ஆகிரி, ஆதி.

க பாலனேயுன்மார்பிற்சரப் பணியெங்கே காணேன்
காலணிச்சிலம்புஞ்சதங் கைகளுங் காணேன்
உ பட்டையரைஞாணிடையில கட்டவுங் காணேன் சொர்ணக்
கட்டியமுகத்தசையும் சுட்டியுங் காணேன்
௩ மின்படுங்குண்டலஞ்செவி தன்னிலே காணேன் பிள்ளை
தன்பணிகளைக்கவர்ந்தென் பெறுவரோ காணேன்
ச அஞ்சாதேவேறொன்றுக்கும்ம னஞ்சலிக் காதே கொம்ம
வஞ்சகர்வழக்கிழந்து மறைவாரிப் போதே
௫ மித்திராிடத்தில்வஞ்ச கத்தைச்செய் தேனே கமப
வைத்தவர்பொருட்குமாறுட் டத்தைச்செய் தேனே
௬ காடியேற்றோர்க்கில்லையென்றே யூடிவிட் டேனே
கூடிவாங்கியுஞ்சிலர்போல் தேடிவிட் டேனே
எ ஏலேலசிங்கம்பொருளைப் போலேமண் மேலே தருமத
தாலேயீட்டும்பொருள்வரும் தன்னால்மென் மேலே

விருத்தம்.

மைந்தன்மனந் தேற்றியீ சனைக்கும்பிட்டு
மாணிக்கந் தேற்றிவிற்கும் வணிக ரேறே
அந்தரவனி பன்செங்கோல் நண்ணூற் கட்டும்
அறத்தட்டில் நாவென்னும் துலைநாவிட்டு
இந்தஅற வோராலெம் வழக்கு மாற்று
ரியறறும்வழக் குந்தூக்கித் தெரிவா யென்று
சுந்தரனுந் தனபதிவேண் டிடவே மாற்றார்
சொடுங்கினர் சபையிலுள்ளோர் நடுங்கி னரே.

வணிகர்தாம்தனபதியென்றுமுறையோடடையாளம்சொல்லல்.

ஒருவியாக் கிரமன்னன் கூறக் கேட்டே
யுளம்நடுங்கித் தருமசபை யுற்ற சான்றோர்

இருவர்வழக் கையுமேற்கொண் டனுவர திக்தாயுந்
திவற்றில்ஞா திகள்வழக்கே இழுக்கென ஞேத
வெருவியவ ராடெடுத்த கள்ளன போலே
விழித்தவரிற் சிலர்கள்தன பதியல் லென்று
திருமுறுகாய்ப் பேசியடை யாளங்கேட்கச்
சீறுவார் மற்றதனைக் கூறு வாரே

மோகனம், சாப்பு

பல்லவி.

முறையோடே அடையாளம் மொழிந்தார்

அநுபல்லவி.

மறையின்பொருளுரைக்கும் மதுரைநாயகன்நெறி முறை

சரணங்கள்.

க தந்தையன்னை மாமனும் மாமி தாயாதிதமக்குமுன் னுண்டானோர் இரும்
மைந்தர்களுடன்பிறந்தோரும் பந்து
மனைவியைமுதலான அனைவர்கள்பேரும் முறை

உ குலமுறைநடத்தைசொரூபம் நிறங் குடிப்பிறப் பளவோசை வரும்லாப
தலைமுறையோர்கள்பிரதாபம் சத்தியம் (லோபம்
தயவுதாட்சண்ணியம் பயம்பச்சாத்தாபம் முறை

ங செல்வம்வயதளவுதாரம்தொழும்தெய்வபத்தியொழுக்கம்தருமம்விஸ்தாரம்
கல்விநடுநிலைமைதீரம்பட்டங்
காணிநலமைபெலம் முதலாங்கெம்பீரம் முறை

அடையாளம் இந்தவண்ணம் உரைத்திடக் கேட்
டரியதன பதிவணிகர் இவர்தா மேயென்
றுடையதுரைத் திடத்தாயத் தார்வ ழக்கில்
ஓரமடைந் தரசனுறப் பானென் றெண்ணி
நடைமிகுந்தில் லுக்குப்போய் வருவே னென்றும்
நான்குளத்துக் கேகியிதோ வந்தே னென்றும்
இடையிலவை மாருதங்கண் டெழுமே கம்போல்
ஏகினர் சிதைந்தொளித்துப் போகி னாரே

இதுவுமது.

ஞாதிகள்நீங் கிடச்சபையோர் தனப திக்கே
நற்பொருள்முற் றும்சேர்த்தா வணம்வ ரைந்தாங்
கோதிடப்பின் னதைவாங்கி மைந்த னுக்கீந்
துலகீசன் மறைந்திட்டான் சுந்த ரேச
பாதசே கரன்மகிழ்ந்தீ சனைப்போற் றித்தன்
பாலகனும் வரகுணற்கு மகுடஞ் சூட்டி
நாதனடி சேர்ந்தனனீ துரைப்போர் கேட்போர்
நலம்பொருந்திச் சிவனுலகில் நண்ணு வாரே

ஆக விருத்தம் ம, கழிநெடில் க, கீர்த்தனை ரு, தரு க, ஆக ௰எ. முற்றும்.

சிவமயம்.

நாற்பதாவது

வரகுணனுக்குச்சிவலோகங்காட்டியபடலம்.

அவதாரிகை—விருத்தம்.

முதலிடை யீறில் லாத முக்கணனை வணிகனாகி
எதிர்வழக் காடி வெற்றி யிசைத்தவா றுரைத்தே னிப்பால்
பதிவர குணனைச் சூழும் பழிதொலைத் தால வாயில்
கதிதரும் சிவலோ கத்தைக் காட்டிய தினிச்சொல் வேனே

வரகுணபாண்டியன் அரசாட்சி.

விருத்தம்

நிஷ்டையிலே முக்கணனைப் பால அன்பு பூண்டு
நெறியறிந்து தவஞ்செய்முனி வோரே கேட்பீர்
இஷ்டமிகு மிசமான னிரவி யிந்தோ
டெரிவானம் நிலஞ்சலிலங் காலென் றோதும்
அஷ்டமூர்த் தியின்வடிவும் தானா யோங்கும்
ஆலவாய்ப் பிரானைமன மெய்வாக் கொத்துச்
சிஷ்டர்புகழ் வரகுணபாண் டியன்முக் காலும்
சிந்திப்பான் துதித்தடியில் வந்திப் பானே

முகாரி, ஆதி.

பல்லவி

வரகுண பாண்டியன்புவி யாண்டான் மகுடஞ்சூடி வரகுண

அநுபல்லவி

வரமிகவருளுஞ்சுந் தரபாதசேகரபாண்
டியனுதவியபுதல்வனெனுந் திருவுள வரகுண

சரணங்கள்

வேதமுதறகொண்டொருக் காலே உள்ளகலைகள்
ஓதியுணர்ந்தறிவி னாலே பலகாரியமுய்
நீதிதவிராமலமென மேலே செய்கையாலமலர்
மீதில்வளரயனைப் போலே விளங்கிப்பின்னும்
பூதலமன்னவர்தன் பாதநதொழவிசயம்
சேர்தலினாலேபுருகூதனினுந்துலங்கும் வரகுண

புகலுங்கற் புடைமையைச் சூடிப் பங்கயமலர்
மகளிரைப் போலநெறியில் நீடி வருமிலலாளோ
டிசபோக முறைமையைக் கூடி வாழ்கையினாலே
முகிலவண்ணனுமென்றிசை பாடிச் சுகித்துப்பின்னும்
மிகவெழில்பரவிய மகிமையி னாலிரதி
மகிழாளும்இவனுக்குநிகரோவென விலங்கும் வரகுண

௩ முறைமாறிக் கொண்டெப்போதும் தோற்றி இகல்புரியும்
பொறிகரனுதிபகை மாற்றி மொழிதப்பாமல்
அறிவால்முற் றுமுணரும் கீர்த்தி கொண்டதாலெங்கும்
நிறையுமீசனென்றியாரும் ஏத்திச் சொல்வதலலாமல்
நிறைவுதருமெய்யொளி பெறுவதினுலகில
கறையிருள்கடிபகல இறையவன்போலவிளங்கும் வரகுண
௪ ரதகெச துரகப தாதி பெலம்பெற்றோங்கும்
நிதியிலகு பேரணியும் ஒயாதி பூண்டுதெளிந்த
மதிமான னுதினமும் பாதி மதியணிந்தே
மதுராபு ரேசன் அடி மீதில் பத்தியுடனே
நிதமுந்தொழுதுபல துதிகள்மொழிந்தறிவு
முதிரவுவந்துகூடற் பதியில்நிதம்விளங்கும் வரகுண

விருத்தம்

மேதினியிவ் வாறுண்டு வரும்காலோர் நாள்
வேட்டையின்மேற் காதலகொண்டா ரணியஞ் சென்று
போதகம்வெம் புலியேன முதலா யாங்கே
புக்குவிலங் குகளோடத் துரத்தி மாலைப்
போதளவும் வார்சிலையில் கொடுங்கூ ரம்பைப்
பூட்டியனே கம்வேட்டை யாடி வேந்தன்
வாதனிலுங் கடும்பரிமேல் ஆல வாய்க்கு
வருகின்றான் மனத்துவகை பெருகின் றானே.

ஆனந்தபைரவி, ரூபகம்.

மதிகுலசிகா மணியெனத்திகழ் வரகுணன்வேட்டை யாடிக்
வனவாம்பரி தனிலேமன மகிழ்கதேகூடல் நாடி
கதியுடன்வரும் வழியிலேதாகம் கடும்பசிநடை யாலே
களையாயொரு மறையோனுறங் கையிலேயவன் மேலே
அயமடிகடு வுரத்திலுவக்கவே யாருயிர் இறக் தானே
அறியாமலே தனதாந்திரு அரண்மனைபுகுந் தானே
உயிரகலுமவ் வுடலைக்கண்டுரி யோர்விழியுமுன் னெடுத்தார்
உலகாள்பவன் தலைவாயிலந் தோவென்றிடத் தொடுத்தார்
அதையறிந்துதென் னவன்றனதுளத் தருண்டமைச்சரோ டெடுத்து
அறவோர்கையில் பொருளீந்துகர் மாதிசெய்ய விடுத்து
சதிதரும்பழி தனைநினைந்தகம் தனில்வெகுதுய ரடைந்தான்
சாரும்மந்திரி மாரும்பர தவிக்கவுள் ளுடைந்தான்

வரகுணபாண்டியன்பாபசாந்திசெய்தல்.

விருத்தம்

வரகுணனிவ் வாறுவலைப் படுமான் போலும்
வன்னிதனி லேவிழுந்த வெண்ணெய் போலும்
உருதல்கண் டமைச்சாபுரோ கிதர்கள் சூழ்ந்தே

ஓகோஇப் பழியறியா மையினல் வந்துன்
அருகுமலா லிதுநீக்கும் வண்ணஞ் சாந்தி
அதிவிரைவிற் செய்யவேண் டுமென வைவைக்
கரைதனிலோர் சாலையெடுத் துடனே செய்யக்
கருதினன் யாவருடன் பொருதி னனே.

துசாவந்தி,

பல்லவி.

பாவசாந்திபண்ணினனே பிரமகத்தியாதி பாவசாந்திபண்ணினனே

அநுபல்லவி.

தேவதேவநீலகண்டன் சேவடிபணியும்தொண்டன்
காவலர்தமக்குமிண்டன மாவரகுணவுத் தண்டன் பாவ

சரணங்கள்

வேதியர்க்கன்னமாராய்ந்து அறுசுவையோ டேதினந்தினமுமீந்து
பூதனம்பசுத்தொடுத்து ஓதுமுறைமை யடுத்து
ஆதரவுடனெடுத்து ஹோதுநினைந்துகொடுத்துப பாவ

அகமருஷணத்தினலே திலம்நெய்யோமம் சகலமுஞ்செய்துமென்மேலே
புகலுமைங்கவ்வியமுண்டு வகைபலதானமுங் கண்டு
நிகரில்லாப்புகழைக்கொண்டு தொகையிலாப்பொருளைவிண்டு பாவ

மூவருருவாகவாழும் அரசைநிதம் ஆவலாய்வளைந்துகேளும்
கோவிருகொம் பில்நீர்பெய்து ஆவலோடன்னீருண்டெய்து
பூவறுகுதேடிக்கொய்து ஆவினுக்கருந்தச் செய்து பாவ

வரகுணபாண்டியனைபிரமகத்திபிடித்துக்கொள்ளுதல்

விருத்தம்.

சாந்தியிந்தவாறுமுறை யோடே தக்கோர்
சாற்றுதலுக் கிரண்டுபங்காத் தனத்தை யீந்து
வாய்ந்துசெய்தும் அம்மகா பாவத் துக்கு
வலிநீங்கா மையினலே மேலிட் டேறக்
காய்ந்தநெய்யிற் பற்றியத்தீ தூமந் தன்னைக்
காட்டியழ லெழுந்தவகை டாலே தோன்றி
வேந்தனரு கேயுருவத் துடனே வந்து
விடக்கண்டான தன்னைவளைந் திடக்கண் டானே.

கல்யாணி, ஆதி

பல்லவி.

தத்திக்கொண்டுபிரம கத்திவரகுணனைச் சுற்றிவந்ததுகேளும்நற்றியே

சுற்றித்தலைமயிர்விரித்துப்பு கையெழுமு
கத்தைக்கொடுவக்கிரதந் தத்தைநயளித்துத்தத்தித் தத்தி

சரணங்கள்

௧ முன்னேசென்றாற் பின்னே முடுக்கும் இருபக்கமும்
மோதிநிழல் போலேகூடக் கூட அடுக்கும்
முறுக்கும் வீசையைத்தொட்டே யுறுக்குங் குகைபோலவாயைத்
திறக்குஞ் செக்கலிகொட்டிக் குறுக்கும் நெடுக்குமாக
முதிர்ந்தமலைநேருருவந்தக்கிடி அதிர்ந்ததெனவா ரொலியும்செய்திவை தத்தி
௨ வாரும்பிள்ளா யென்று சொல்லும் சீக்கிரத்திலே
வன்பழிதா வென்றுவாயை வாயை மெல்லும்
வாங்கும் பெருமூச்செறிந் தோங்கும் வெகுதூரத்தில்
காணும் பக்கத்திலேவந் தோங்கும் கையையெறிந்து (ம் தத்தி
சிறந்தவொருவன் முசலங்கொண்டுகை அறைந்தமுதுபின் நகையுஞ்செய்தின
௩ கிட்டிவந்து கையைப் பிடிக்கும் இழுக்கும்விடும்
கெம்பிக்கெம்பி வந்ததம்பிப் பல்லைக கடிக்கும்
கேளுந் திசைகள்தோறும் சூழும் உருப்பிசகித்
தாழும் நெருப்புப்பொறி வீழும் கண்ணையுருட்டிக் (தத்தி
ளம்பியெழுமுன் படரும்பின்குதி கொளும்பெரியமை யுடலோடிவ்வகை

பிரமகத்திநீங்க வரகுணபாண்டியன்சாமியைவேண்டுதல்

வலியபழி சூழ்ந்திடத்தென னவன்மா சுண்ட
மணிபோலும் பாம்பினவாய் மதியைப் போலும்
மலமுறத்தேர்ந தந்தணர்பார்த் தரசே யுன்றன்
ஹஸ்தகத்தில் விதித்ததற்கா லவாய்ப்பி ரானை
வலமுறநா ளொன்றினுக்கா யிரத்தெட் டெண்ணி
வருகிலிது நீங்குமென்று ரந்த வாறே
விலகுமென்றே ரந்தணனீ லரந்து நாளில்
விதித்திடக்கேட டய்யன்முன்போய் விளம்பி னுனே.

எமுனகல்யாணி, ஆதி.

பல்லவி.

போலேயெ பாதகமும் போக்கடிப்பாயே

அநுபல்லவி. (துபோலே

மாலயனோ டோலமிடும் கோலத்தைக்கண்டு நஞ்சையுண்டு காத்தீர்பண்டு அ

சரணங்கள்.

௧ ஆதியிலே வேதியன்மா பாதகம் தீர்த்தாய்
பின்னுங்காத்தாய் கதி சேர்த்தாய் அதுபோல
௨ இந்திரனைத் தொடர்ந்தபழி சிந்திட நீயே
எதிர்த்தாயே தொலைத் தாயே அதுபோலே
௩ அண்டியமார்க் கண்டனுக்காச் சண்டன்முன்நின்றாய்
உதைக்கின்றேய் ட்சணம் வென்றாய் அதுபோலே

விருத்தம்.

வருந்திமன்ன னிவ்வாறீ ரைந்து வைகல்
வனைந்திடப்பார்த் தய்யன்விண்ணின் றாசே யெம்மைப்
பரிந்துநிதம் வனைவதற்கோர் அசுவ மேத
பலனிலுமேற் கொண்டோம்இப் பழியோ வென்றால்
விரிந்தபடைச் சோழன்அமர்க் கடுப்பான் நீயும்
வெகுண்டெழுந்த வனைத்துரத்திப் பிடிப்பாய் போற்சென்
றிருந்தெமையாம் அருச்சிக்கும் தலஞ்சென் றூற்போம்
என்றுதான் சொன்னதுவாக் கொன்று தானே.

காம்போதி, சாப்பு.

க தேவதேவனருட்பெற் றேவரகுணத்தென்னன் பணிந்தான் பணிந்
தாவலுடனிருக்கை மேவியிருந்துமன துவந்தான்

உ சிலநாட்சென்றபின்சோழன் சலதிபோற்படையுடனெழுந்தான் கூடல்
தலமீதுபாண்டிகா வலன்மேலமர்புரிய வனைந்தான்

ங அந்தவகைதென்னன றிந்தமர்புரிந்துவி லக்கினான் பெருஞ்
சிந்துவினுக்குளொரு மந்தரமெனவேக லக்கினான்

ச கலக்கச்சேனையுடனே மலைத்துச்சோழன்முதுகிட டோடினான்தென்னன்
வலுத்துக்குதிரைமேற்சென் றூரத்துப்பிறகேபற்றிச் சாடினான்

ரு நிறையும்மலர்களிரு புறமும்துலங்கும்பொன்னி கூடினான் புகழ்
நிறையுந்தைமதிப்பூசத் துறைகண்டுளமகிழ்ச்சி சூடினன

சு புண்யதேசமும்மேலும் புண்யதினமுநேரக கண்டான் கூடப்
புண்யஸ்தலமுந்துய்ய புண்ய காலமுந்தெரி ஸின்றான்

எ சங்கற்பவிதிமுறை யங்கத்துடனேமொழிந் தாடினான் மனச்
சங்கையறவேலகு அங்கத்துடனய்யனைத் தேடினான்

வரகுணபாண்டியன் துதி

விருத்தம்.

மாநதிதோய்ந ததன்தெற்கா லயத்தின் கீழ
வாசல்கடந் துட்புகத்தன பழிபா வங்கள்
ஆனதுடன் புறங்கிடக்கச் சுருதியாம் வண்
டதுபுறஞ்சூழ்ந் தரற்றமரு திடையில் வாழும்
தேனைவிழி வாயங்கார் தருந்தித் தாழ்ந்து
தியடுத்த நவநீதப் பாவை போலே
தானுருகிச் செயலுரையற் றுணர்வாய் நின்று
சாற்றுவான் வரகுணன்றேர்ந தேத்து வானே.

ஆனந்தபைரவி, ஆதி.

பல்லவி

திருமருதநிதியேசரணம் ஏனைத்தொடர்பழிபாவந்தீர்த்தோய்சரணம்

அநுபல்லவி வளர் கிருபா
கிருபாநிதேராஜத சபாபதியே தொண்டர் உபாதிநீக்கிடும்ஸ்வரூபாமருதில்

சரணங்கள்

பராபர புராதன ஹரா சூலபாணி கொன்றை வேணி நாக
தராசோமசேகரா திரிபுர ஹரா சங்கரா சுந்தரா மருதில்வளா கிருபா
வேதாவுந்தாமோதரன் விண்ணுதாதியென்னும் விண்ணவர்கள் நண்ணரிய
பாதாஉமைநாதா லீலாவிநோதா சுபோதா நன்னீதா மருதில்வளர் கிருபா
மாலாப் பலநூலாய்ந்திடு மேலார்புகழ் மாமிகுந்தசாமகான
லோலாபத்தபாலா காலகாலா னுகூலா திமூலா மருதில்வளர் குபா

இப்படிக்குத் துதிக்கநெடு கிலுமென் பத்த
ரேறேநீள் வாயலிலே பிரமச் சாயை
நிற்பதநிற் செலவேண்டாம் மேலைவாயால்
நீங்கிநங்கூடலுக்கேகென் றுகா சத்தோர்
சொற்பிறக்கத் தெரிந்துமரு தினைவலந்து
சூழ்ந்தவாய் தோறுமடிக் கடிவீழ்ந் தேத்திப்
பொற்புறுமேல வாயல்செல்வான் தன்பேராலே
புதிதாக்கோபுரந் தென்னன்புனைவித் தானே.

திருமணிக்கோபுரமுதலாத் திருப்பணிமென் மேலே
தென்னவர்கோன் தனபெயராற் செய்தெழுநதிப் பாலே
பரவியதென் றிசைகுறித்துப் பயணம்செய்தன் பாலே
பரன்கோயில் வழிதோறும் பணிந்தேயொருக் காலே
புகழ்பெருகும் மதுரையென்னும் பொன்னகரடைந்தான்
போக்கரிய பழிதொலைத்த புண்ணியனைப் பணிந்தான்
வகைவகையாமேறகட்டிசாமரைதுவசங் கவிகை
மாமுடிகோளகையணிகள் வஸ்திரங்கள் சிவிகை
பத்தியுடன் இதுமுதலாப் பரிந்துபரிந் திந்தான்
பார்புரநதேயாறிலொருபங்கெடுத்து வாழ்ந்தான்
அத்தனடியாரறவோரனைவருடன் அடுத்தான்
அரனபுகழைச் செவிக்கமுதாயனுதினமு மடுத்தான்

விருத்தம்

வழுதியிவ்வா றிருக்கையில்வே தாகமாதி
வழுத்துவதிற் பெரிதுருத்ர லோகமென்றே
மொழிவதுகேட் டப்பதியைக் காணவேண்டும்
மோகமுடன் சேல்விழிநாயகன்முன் சென்றே
எழுபவநீங் கியவடியார் சூழநீவீற்
றிருந்திலகும் சிவபுரத்தைக் கண்டுன் பாதந்
தொழுவதற்கோர் கருத்தெனக்குண் டென்று சொல்லத்
துணிவின்றுன் அன்புடனே பணிகின் றானே.

வரகுணனுக்குச்சிவலோக

இதுவுமது

வரகுணன்வேண் டியபடிநஞ் சிவலோ கத்தை
மதுரையிலே காட்டிவைப்போ மென்றே அய்யன்
திருவுளத்தி லோர்ந்திடுங்கால் கோடி திங்கள்
திரண்டுதித்தாற் போலுதிக்கச் செய்து நாதன்
பரிவுடனந் தியையழைத்தெம் பாலன் புற்ற
பாண்டியற்கு நமதுலகைப் பண்பாக் காட்டென்
றருளினா ரந்தவண்ணம் நந்தி தேவர்
ஆங்கவற்கு விதிப்படியே யறிவித் தாரே.

மத்தியமாவதி, சாப்பு

௧ சுருதிமாலயன் தேடியுங்காணாத சோதிர்மயானந்த மாகவிளங்கிய
பருதியாளுஞ் சிவபுரத்தையுற்றப்
பாண்டியனே நேராய் மனத்தன்பு பூண்டிதனைப் பாராய்
௨ பத்தைந்திருபது யோசனைவாசிக்கும் பங்கயப்பூவிதழ்நூ றாயிரத்துடன்
நித்தஞ்செழித்திருக் கும்மலரோடைகள்
நீடுவதும் நேராய் பலநதி யோடுவதும்பாராய்
௩ சுரும்பிசைக்கிணை யாகவேநாரத தும்புருவேழிசை கூடியவீணைகொண்
டிரும்பும்நீரா யுருகவிசைக்கின்ற
இன்னிசையும்நேராய் மொழிகின்ற நன்னிசையும் பாராய்
௪ பொன்னரவிந்தத் தடமும்மரதகப் பூஞ்சோலையும்அமு தவாவியும் ஒளி
தன்னில்மிகுந்திருள் ஓட்டிடவானவர்
தங்கும்பதம்நேராய் சிறந்துவி ளங்குமிதைப்பாராய் (யும்
௫ இலங்கும்பாற்கடல் போல்நீரகழு மெயிலும்பொற்கோபுர மும்மணிவீதி
துலங்கும்கொத்தள மும்நிரையாகிய
சூழிகையும்நேராய் உயர்ந்திடும் மாளிகையும்பாராய் (ள்தொறும்
௬ வெம்பியநால்வகை யுண்டியுமாடலும் வீணையும்சாந்தும்பொன் னாரமும்நா
ஐம்புலத்துக்கும் விருந்தாகவேகொண்
டருந்துவதைப்பாராய் சித்திரம்போற பொருந்தியதைப்பாராய் (யும்
௭ தங்குமுருத்திர மின்னாருடன்ருத்திரர் சார்ந்திருக்குமுயர் மாளிகைப்பந்தி
புங்கமிகுஞ்செல்வ முங்கலையில்லாப்
போகத்தையும்நேராய் அவர்பெற்ற யோகத்தையும்பாராய்
௮ புண்டரீகாட்சன் பதமிதுவேதன் புரமிதுருத்ரத் தலைவர்பதியிது
எண்டிசையிலுள்ள காவலர்தங்கி
இருப்பதிதுநேராய் மனதில் விருப்பமுடன்பாராய்
௯ அடுத்துநீராடி வெண்ணீறணிந்தர னாலயம்சென்று விளக்கிமலர்கொய்து
தொடுத்தரனைபுகழ்ந்தட்டுவந்திங்கு
சுகிக்கின்றனாநேராய் ஸாலோகத்தி ருக்கின்றதைப்பாராய் (டிய்யனை
௰ சத்திபூரணின்னும் புறம்புமொன்றாகவே ஷோடசோபசாரத்தோடேசம்

பத்தியுடன்கரங்குவித்தர்ச்சனை
பண்ணினவர்நேராய்ச் சாமீபத்தை நண்ணியதைப்பாராய் (
கக காற்றினல்வன்னியை மூட்டியிடையிக் கலைநடுப்பாதைச் யெழுமதியி
னூற்றமுதுண்டு நம் மீசன்வடிவை
உளக்கொண்டவர்நேராய் சாரூப வளக்கொண்டதைப்பாராய் (
கஉ பகவன்மூலம் மகம்செய்தவேதியர் பாரிவர்நீர்ப்பந்த லாதியாம் தர்
புகழ்மறந்து நிராசையினாலே
புரிகின்றவர்பாராய் வினையைப் பிரிகின்றதைப்பாராய் (
கங உறுதிநீறணி மெய்யினரைந்தெழுத் தோதியநாவினர் ஈசன் புகழ்
முறைமையுள்ளவர் வினைவலியை
முடுக்கவந்தோர்பாராய் இங்குவந் தடுப்பதனைப்பாராய்
கச தவளநீறட்ச மாலையணிந்தவர் தங்குறியும்குல மும்குறிக்காமலே
சிவனென்றெண்ணும்அன் பாலேபிறவிநோய்
தீர்ந்தவர்கள்நேராய் இவிடத்தில் சார்ந்ததனைப்பாராய் (தின்னமுதூட்டி
கரு தொண்டருக்காவன செய்தோரரனெனத் தொண்டரைப்பூசைசெ
தொண்டர்பணியே தவமாயுயர்ச்சியைச்
சூட்டினவர்நேராய் எழுந்திங்கு மாட்டினதைப்பாராய் (ப்பித்
கசு ஆலவாயீசனுக்காலயஞ்செய்வித் தணியவும்செம்பொற் பணிகளும்
ஞாலத்தையாண்டிங் கடைந்தவுன்வங்கிஷ
ராசர்களும்நேராய் நமதய்யன் நேசமுற்றார்பாராய்

வரகுணன்சிவலோகநாதரைத்தரிசனம்செய்தல்

விருத்தம்.

நந்திவேத் திரங்கொண் டிவ்வண் ணஞ்சிவ லோகங் காட்டிச்
சிந்தையில் அன்பு பூண்ட திருத்தொண் டரதிர்வந் தேத்த
அந்தமா தியிலான் முன்சென் றறியென விடுக்கத் தென்னன்
வந்துமா முடிமேற் செங்கை வைத்தவ னெதிர்கண் டானே,

தோடி, ஆதி

பல்லவி

தேவதேவேசனைக் கண்டானே கண்டுமகிழ்ந்து
தென்னர்கோனைந்தங் கொண்டானே

அநுபல்லவி.

கூவுமறைசைவாக மாதிவடிவம் நீடக்
கொண்டிருபக்கத்திலும் நின்றுவந்தேத்திக்கூட
ஆவலுடன்தும்புரு நாரதரிசை பாட
அரம்பையராடத்தேவர் பதங்கிடையாமல் நாட

சரணங்கள்

தந்திமுகமைந்தனும் தாருகனைப் பொடித்த
கந்தனுந்தக்கன்வேள்வி கலைத்தவீரபத் திரனும்
தந்தம்முடிமாலைத்தேன் றுளிர்சிந்தத் தொழுது
பத்தியாகநின்றேவற் பணிவிடைசெய்து நிற்கத்

௨ தொங்குந்தானையொதுக்கித் துணைக்கைகொண்டுவாய்பொத்திப்
பங்கயன்மால்தங்குறை பகர்த்தேயொதுங்கிநிற்க
அங்கமுடனிந்திராதி யஷ்டதிக்குப்பாலரும்
கங்கில்நின்றுதாஞ்செய்யும் காரியக்குறைசொல்லத் தேவ

௩ தண்டும்வளைதடியும் தரித்துப்பல்லையதுக்கி
மண்டும்பைசாசத்தலை வருமல்லாதொருகோடி
சண்டனஞ்சவேசூலம் தாங்கிப்பூதருங்கூடிக்
கொண்டுதலைவாசலிற் குவிந்துகாவலாய்நிற்கத் தேவ

௪ சித்தசாரணர்கந் திருவர்கருடர்தோளில்
வைத்தயாழினர்வான வர்தானவரியக்கர்
உற்றமாதவர்நாக லோகர்கிங்கரரின்னம்
சுற்றயோகியர்முதல் சூழ்ந்தெல்லோரும்பரவத் தேவ

௫ இருவினையறுத்தெம்மை யிரட்சியெனத்தமனபிற்
பெருகிவருங்கருணைப் பேரமுதையானந்த
அருவிவரும்விழிவா யாலுண்டுடல்குளிரத்
திருமுனிவர்சங்கர சிவனென்றோதிமுழங்கத் தேவ

௬ தூயவரந்தப்பாமற் றொழுதுவேண்டியாவர்க்கும்
ஈயும்வரன்முறையால் ஈந்திடத்திலெப்போதும்
தாயுமையாள்முகத்திற் றவளநகையரும்ப
ஆயிரங்கதிர்வீசும் அரியாசனத்தின்மேலே தேவ

விருத்தம்.

வரகுணனிவ் வாறுசிவ லோக நாதன்
மலரடிகண் டிறைஞ்சியுரோ மம்சிலிர்ப்ப
உரைகள்தடு மாறிடவே கருணை யாகும்
உததியிலன் பாறிழுக்க மிதந்து போகிக்
கரையிறந்த வானந்த வமுதை யுண்டு
கரணமுமைம் புலன்களுந்தன் வசமாக் கிக்கொண்
டரியபே ரன்புடம்பு பூண்டு தன்னே
ராக்கணடான் பின்புபண்டு போற்கண் டானே.

இதுவுமது

பின்புமது ராபுரமாக் கண்ணிற்கண் டெம்
பிராட்டியுடன் பிரானும்பண் டிருந்த வண்ணம்
பண்புயர்சுந் தரமூர்த்தி யாக்கோ யிற்குட்
பதிந்திருக்கப் பார்த்தீசன் அருளால் வந்த
தன்பெருமை யாய்ந்துவகை மனங்கொள் ளாமற்
றனதன்போ டிசைந்துவெளிப் பட்டாற் போலே
கண்புனல்த தும்பிடநாக் குழறத் தாழ்ந்து
கதிக்கின்றான் அஞ்சலித்துத் துதிக்கின் றானே

நிலைமண்டில ஆசிரியப்பா

அரகரசிவனே யாண்டவாசரணம்
புரகரவுரகம் பூண்டவாசரணம்
ஆலவாய்விளங்கும் அண்ணலேசரணம்
மாலயன்அறியா வள்ளலேசரணம்
என்னைவந்தருட்டும் இடும்பழிமாற்றி
அன்னைபோற்கருணை அளித்தவாசரணம்
கண்டிடாச்சிவலோ கந்தனைக்காட்டி
பண்டுபோலருளும்நிரு பாநிதேசரணம்
முடிவிலாநரகில் மூழ்கவைக்காமல்
அடியனுக்காரன் பளித்தவாசரணம்
தொல்பிறப்பெழும் தோற்றம்நாலாகும்
பல்பிறப்பகற்றும் பரமனேசரணம்
உலைவிலாவினைவே ரறுத்துக்கியேசந்திர
குலமதைவிளக்கும் கோவேசரணம்
அங்கமாயடியார்க் கருள்சிவபுரத்தை
எங்களுக்கறிவித் திசைத்தவாசரணம்


விருத்தம்

ஏத்திநின்ற வரகுணனய் யனுக்குப் பொன்பூண்
 இசைத்திருந்தா னெனக்கேட்டம் முனிவோ ராங்கே
வாய்த்தகும்ப முனிவனைப்பார்த் தன்னுள் இந்திரன்
 வன்பழியன னையைப்புணர்ந்தப் பனைக்கொல் பாவம்
தீர்த்ததென் மதுரையிலே நடந் திருக்கத்
 தென்னவன்றன் பழியையிடை மருதூர் தன்னில்
போய்த்தணித்த காரணமியா தென்று கேட்கப்
 புந்திமகிழ்ந் ததின்விபரம் புகலு வாரே

இதுவுமது

குன்றைவில்லி தனதடியார் பாத கத்தைக்
 கூடலிற்செய் யாதொழுகும் படி நினைந்து
வென்றிவர குணன்பழியை மருதூர் தன்னில்
 விலக்கிவைத்தா ரென்றிடக்கேட் டகங் களித்தார்
அன்றுதொட்டு மதுரைசிவ புரமெனப் பேர்
 ஆனதிந்த லீலைதனை படிப்போர் கேட்போர்
கொனறபழி பாவமகன் றமரில் வெற்றி
 கூடியிருந் தானுலகில் நாடு வாரே

விருத்தம் ௰௬, அகவல் ௧, கீர்த்தனை ௬, தரு ௪, ஆக ௨௭, முற்றும்



நாற்பத்தோராவது;

விறகுவிற்றபடலம்

அவதாரிகை—விருத்தம்

மறுவளா கண்டன் பாண்டி மன்னனுக் காலவாயில
முறையினல் சிவலோ கத்தைக் காட்டலே மொழிந்தே னிப்பால்
பொறைமிகும் பத்திர னுக்காப் பூமிசை நடந்தா னாகி
விறகுவிற் றுடல் செய்த விசித்திர மினிச்சொல் வேனே.

ஏமநாதன்மதுரைக்குவருதல்.

விருத்தம்.

இத்தரணி முழுதும்வர குணத்தென் னன்கோல்
ஏந்திமக வான்போலே விளங்கும் நாளில்
உத்தரத்தி லிருந்தேம நாத னென்னும்
ஒருவீணை கானவல்லோ னென்றெங் கெங்கும்
மெத்தவெற்றி கொளும்விருது பட்டுக் கூற
மிகவீறு டனேசோழ னிடத் திருந்து
சித்தனருள் பெற்றமன்னன் சபையிற் செல்ல
நேர்ந்திட்டான் மதுரைநகர் சேர்ந்திட் டானே.

மத்தியமாவதி, ஆதி.

பல்லவி

ஏமநாதன் வந்திட்டானே பாண்டியராசன் கோமனை புகுந்திட்டானே

அநுபல்லவி.

பூமியிலுள்ளமன்னவர் மாமிகுஞ்சபையிற் சென்று
மேன்மையாப்பெற்றபரிசை யேமிகப்புகழ்ந்துவந்து ஏமு

சரணங்கள்

க எழிலுடன்வீணையெடுத்துத் தழுவியேசு ருதிசட்டி
வழுதிகாதி லேயின்னிசை பொழியும்அமுதம்போ லூட்டி ஏம

உ தென்னவன் மகிழ்ந்துமுடி தன்னையசைத் துப்புகழ
பொன்னிழை மணிப்பூணாரம் உன்னதமா கப்பெற்றிட ஏம

௩ ஆனைகுதி ரைகள்முதல் ஆனபரி சுகள்பெற
மானமேற்கொண் டுகானதில் வல்லவாய லர்கள்சூழ ஏம

விருத்தம்.

ஏமநா தன்வந் தேவழு தியின்பால் இசைந்திசை புரிந்துசம் மானம் (வில்
ஏற்றொரு விடஞ்சென் றிசைவலார் தம்போல் இல்லெனச் செருக்குறு மள
கோமகன் றனது பத்திரனை யழைத்துக் கூர்ந்தேம நாதனுக் கிணையாக்
கொண்டுநீ பாட வல்லனோ வெனலுக் கூடல்நா யகன்திரு வருளால்
யாமிசை பாடி யவன்விரு துடன்வீ ழிழந்திடச் செய்குவே மெனவே
இனியிசைநாளைப் பாடலா மெனத்தேர்ந் தில்லில்வந் திருந்திடும் போது

மாமணிவீதி வீதியா வந்த வாணர்கோன் தமரிசை கேட்டு
வரும்பெய ருரைக்கும் வண்மையா லுளத்தில் மலைத்ததி சயித்திருந் தனனே.

சுந்தரேசர்விறகுவிற்கவருதல்·

விருத்தம்

பாணர்கோன் பத்ரனிவ்வா றறிந்து நாளைப்
பாடிவெல்ல தெவ்வகையென் றெண்ணி யன்பு
பூணுமது ரேசனைத்தாழ்ந் தடியேற் கின்று
பூங்கருணை செய்வாயென் றிரந்தில் வந்தான்
நீணும்வருத் தத்துடன்வந் திரந்தோன நெஞ்சில்
நினைந்தவண்ண மேமதா தனைச்செ யிக்கத்
தோணியொரு விருத்தவடி வம்பூண் டன்பு
தொடுக்கின்றான் விறகுசுமை யெடுக்கின் றானே

பரசு, ஆதி

பல்லவி.

விறகோவிற கெனச்சொல்லிக்கொண்டு வீதியில்வந்தான் தொண்டர்
வேண்டும்படிக்கே யருளும்திருவால வாயில மர்ந்தான்

பிறையணிமுடி வருந்திடச் சுமை
பெரியதென்றும் உலர்ந்ததென்றும் பின்னும்
திறமாகின்றே யெரியுமென்றே சொல்லித்
திண்ணமுடன்நாலாம் வர்ணவுருப் பெற்று விறகோ

சரணங்கள்

க தலையிலணியும் வெண்பிறையிது தானோ வென்ன இடை
தனில்வலப்பக்கத் தொருகொடுவாளைச் சொருகிமின்ன
கலையழுக்கடைந் தரையில்விளங்கக் கஞ்சன்திருமாலுமே தாகமம் தேடிய
மூலாடிக்குப் பழஞ்செருப்புந்தொட்டு வன்னமயிற்றோகைபின்னே செருகியே
விறகோ

உ இழிசலர்யொரு பழயகெளசிலை போர்த்தி அங்கத் தோளிற்
கேளும்புராதன மாயொருவீணையை மாட்டித்தொங்கத்
குழையணிந்திடும் இருசெவியிலும் குண்டலம்போற்றரிக் கின்றபசுங் காயும்
தழையுங்கேசம் சரியச்சுமையடை தன்னைக்கொடியாலே பின்னி வைத்தணிந்து
விறகோ

ங செறிந்தவிந்தனம் எடுப்பவன்போல்முன் சென்னியதுங்க பின்
சென்னியிலேநெடி தாகியபங்கி பறிந்து பிதுங்க
சிறந்தசோகி மாலையைத்தமது திருவுரத்திரு பாலுமணிந்துகொண் (வைத்து
டறைந்தகங்கைக்கும் மெய்யுறைமங்கைக்கும் அறிந்திடாமல் திருமுடிமேல்
விறகோ

சு ஆக்கையிளைத்தா காரமில்லாமல் என்புதோணக் கண்டோர்
அகங்கனிந்தன்பு தோன்றியேவந்தி ரங்கிக்காண
ஏர்க்கும்திருவ தனத்திலேவெயர் வெழும்பமலர்வாய் குவித்தொலியிட்டு
வாக்குமனத்துக்கெட் டாததிருத்தாளை மாநிலப்பெண் தவத் தாலேமுடி சூட
விறகோ
ரு எடுக்கவரிய சுமைக்களங்கொண்டி ளைப்பினாலே மெள்ள
இறக்கிநெடுமூச் செறிந்துகற்சுமை தாங்கிமேலே
அடுக்கமடுநீர் குடித்தலைச்சூ டாற்றியிருகரத் தாலுமடிக்கடி (விறகோ
எடுத்தெடுத்தெடுத் தேந்தி யேந்திமிக ஞயாமணியாக வேவிலையைச் சொல்லி

விருத்தம்.

இந்தனமிவ் வாறுசுமந் தடுத்துக் கேட்போர்க்
கிசையாத விலைபகர்ந்தே ராச வீதி
சந்துமுடுக் குகள்தோறும் சென்று சென்று
சதுமுகன்மால் தேடரிய முக்கண் மூர்த்தி
புந்திமகிழ்ந திசையில்வெலலும் ஏம நாதன
புக்கமனைத் தலைக்கடைவா சலையே நாடிச்
சிந்தையுவந் திந்தனமூட் டையுடன் வந்து
சேர்ந்திட்டான் மாலைவரத் தேர்ந்திட் டானே.

கெண்டை, சாப்பு.

க நீலக்கழுத்தன் விறகுசுமையை றக்கினான் அப்போ
மாலைப்பொழுதென்னும் மங்கையுருவம் ரக்கினாள்
உ தங்கணவன்பிரி வாற்றாமையாற்கண்ணீர் வடிய செய்ய
புங்கயங்கூம்பப் பருதிமேலைக்கடல் படிய
ந மங்கைமணாளன் வருமுன்னழைப்பது போலே வாயைச்
செங்குமுதங்கள் திறக்கமதிவர மேலே
ச வணடினந்தம்பேடை வாய்த்தேனருந்தியே யடுக்க வந்து
தண்டாமரைப்பள்ளி யிற்சயனித்துக்கண் படுக்க
ரு வானரக்கூட்டம் மரத்தின்முழைக்குள்ளே யொருங்க பல
ஆனினங்கன்றுக்கி ரங்கிமனைதோறும் நெருங்க
சு ஓதியவோலைக் கணக்கொலிக்கின்றது மோயச் சேரும்
காதலர்நெஞ்சத்திற காமனெரிகணை பாய
எ பட்சிகள்வாய்புதைத் துப்பேடைதன்னுடன் விளங்க இரு
பட்சமதாலே யணைத்ததினைகூட்டிலவந திணங்க
அ கூவியவாரிதி யாகும்கரும்படம் மூடம் பூமி
தேவிதுயில்வது போலேயிருள்மெள்ள நாட

விருத்தம்

மாலைவரத் தெரிந்தொருபால் விறகைச் சார்த்தி
வைத்தடுத்த திண்ணையிற்சார்ந் திளைப்பாறிக்கொண்
டேலும்வீணையையெடுத்துப பாடினான் கேட்
டேமநா தனும்இசைபா டுவரியா ரென்றுறே

ஆலமுண்டோனை முன்னேவந்து நீயா ரென்றான்
அரிபிரமன் முதற்றனக்க டிமையாட் கொள்வோன்
ஆலவாய்ப் பத்திரனுக் கடிமை யானென்
றறைகின்றான் தொண்டருளத் துறைகின் றானே.

சுந்தரேசர்வீணகானம்பண்ணுதல்

பத்திரன்கீழ்க் கற்பவர்அ னேகம் பேரால
பாடக்கேட் டியானுஞ்சில பாட லானேன்
புத்தியிலலா வெனைநோக்கி வயது மூத்தாய்
புரியுமிசைக் காகாவென் றவனி கழ்ந்தான்
இத்தொழில்பூண் டெனதுதரம் வளர்க்க லானேன
என்ன இசை வளநதெரிந்த வேம நாதன்
சித்தமுழுந் தினியொருகாற் பாடென் றோதத்
திரும்பியும்அவ் வாறய்யன் செப்பு வானே.

ஆனந்தபைரவி, திரிபுடை

பலலவ

வீணை கானம்பண்ணி ஞனே ஜெகதீசன் வீணை கானம்பண்ணி ஞனே

அநுபலலவி

கோணமலே தந்திரியோடிசை கூடையிற்றுளிர் கொண்ட திலவண்டுகள் (வீண
பார்ணர்ந்திடும் நாதமுந்தனித்தனிப் பகுத்தறிவோரும் அறியாமல் மயங்கிட

கா ஏதரங்குழியல் அழுமுகங்காட்டல் ஓங்கும்புருவம் கோணலதலையாட்டல்
பதியுமிடறு தடித்தலகணணுட்டல பற்கள்தெரியும் படிக்குப்பாரா ட்டல (ரும்
இதுவன்றிவாயங் காத்தலெனசசொலலுமிவ் வெட்டுமவ யவத்தொழிலால
அதுசெயிரறப்பாடககணடியாவரும் அமரர்களைப்போலேயிமைக்காமற்கேட்க

—கானம

உ வெள்ளைமந்த மாயெழுமோசை வெடிகுரல்மூக் கடைத்தல்கீ ழோசை
உளளம்நெரிந் திரட்டிக்குமோசை உரைக்கும்நெறியைக் கடநதபேரோசை
விளைனும்பெருமூச்சோடலிலைத்தலிகதவிதமாகும்துள்ளலென்றிவையாமெட்டு
துள்ளியபாடல் தொழிற்குற்றம்நீககியேஉசிதமுசித மாகமதுவொழுக

வீணகானம்

மந்திரமத் திமதாரமிணைந்து வாகுடன் துளளல் துங்கலகண்டறிந்து
சிந்தைதிருநதி மெலிவதுதெரிந்து சிறப்புடனு ராயந்துளம கிழ்நது ஆ
உந்தியிலிருந் தெழுமிசையோடமு தொழுகவேபாட லோசையும் வழுவாமல
அந்தமுடனே விருந்தெனக்காதுகொண்டி யாருமருந்தித் துதிககவருள்புரிநது

ச பாதபங களுஞ்சலிக்காமல் பருப்பதத்தரு வியுஞ்சலிக்காமல்
ஓதமிகுக்கடலுஞ்சலிக்காமல் ஓமகிறந தியுஞ் சலிக்காமல் ஆ
வேதனுமா லும்பரமானநத வேலைபடிய விணணவர்கோனுடல் (வீணகா
லவிழி போலவே காதுகள் விளங்கப்பெற்றோ மிலேயே யென்று வருந்த

விருத்தம்

சந்தமுட னிந்தவண்ணம் காளம் பண்ணிச்
சாரசமுந் திசையுநதன் மயமா யாக்கிச்
சிந்தையுமக் கமுமுருக வேம நாதன்
செவிவழியா லெம்பொறியும் புகுந்திடச செய்
தந்தநிமி ஷந்தனிலே பத்ர னேவல்
ஆனாகவுந்தவரெப் போதும் பேலே
இந்தனபா ரத்துடனவ் விடம்விட டிம்மென
டேகினுர் பழயவடி வாகி னுரே

ஏமநாதன்பாபந்துஓட்டம்பிடித்தல்

இதுவுமது

செழித்தவள்ளல் மறைநடிடபபார்த் தேம நாதன்
சிந்தைதளர்ந தெழுந்தருணடித் தேவ காணம்
வழுத்தியது முக்கணனே யல்லால் வேறோர்
மானிடரா லாமோவென றதிச யித்துப்
பழுத்தகிழ மகனபாட்டிப் படியா னுலப்
பத்திரனபாட டெப்படியோ வென்றே சூழகத
குழுக்களுக்குங குலேகுலே திடவச சத்தைக்
கூடினுன் இருளவழிக்கொண் டோடி னுனே

நாதநாமககிரியை, ஆதி.

பல்லவி.

எடுத்தானேயோட்டம் ஏமநாதன விடுத்தானேகூட்டம்

அநுபலலவி.

மடக்கியபலகலே அடக்கிய பேழையும்
தொடுத்தபணிப்பேழையும் எடுத்தவன்றனியே எடுத்தானே

சரணஙகள.

க நற்றியவீணை விழ்த்துவெடுத்தது சுற்றிலும்வைத்தவி டத்திலேகிடக்க முறறியமானமும் உற்றிடும்அச்சமும் பறறிபிழுத்திட உத்தரம்நோக்கி
எடுத்தானே (கயாக

உ கவிகையொருவழியும் சிவிகையொருவழியும்கவரியோர்வழியுமாக் குவிசை சவரியோர்ஓர்வழியும் அடுபபரோர்வழியும்உவகையிழந்துபா தவித விக்
எடுத்தானே (தலேய

பாணபத்திரன் துதி

விரைந்தேம நாதனிவ்வா றகனறுன் கூடல்
விமலனன்றே பத்திரன்சொற்பனத்தில வந்து
பரிந்துவிழ கெடுத்துன்றன் அடிமை யென்றே
பாடினேன் தேட்டகன்று னென்று கூறத்

தெரிந்துவினைக் கரியசொற்கேட் டடனெ ழுந்து
செங்கதிரோ னுதிக்குமுன்னே வையஞ்சேர்ந்தன்பு
சார்ந்தமன்றப் பொருள்யடியவைக் கண்ணுற் றானைத்
துணிந்தெழுந்து பணிந்திரங்கிச் சொல்லு வானே.

ஆனந்தபைரவி, சாப்பு.

பல்லவி

இந்தகோவந்தேன்சாமி அடியேனகுறை யிரக்கவந்தேன்சாமி

அனுபல்லவி

மதிக்கொழுந்தையணியும் மதுராபுரநாதனே
கதிக்குமெதற்குமூல காரணுவனே நாடி

சரணங்கள்

க காரிருள்நெருங்கிய கானகத் தமிக்கவோ
காஷ்டம்பிளந்துகைக்கொப்பளித்துநோவெடுக்கவோ
ஆரணத்தரும்பொருள் மொழிந்தசெங்கனி வாயால்
அடியேன்மூலமாயிழி வானசொல் விடுக்கவோ

உ நீண்டவன்முதலான சகலதேவருந் தேடி
நிகமமாகியகிரிச் சிகரங்களுங் கூடி
காணடரியவொண்ணுநின் கமலத்தாள்நடந் துளளம்
காலவெனளெ தும்பாத்தேய வோவிரைந்துனைத்தேடி

ங இசைகொளும்விதிக்கும் எட்டாதமுடி மேலே
ஒச்சமாகவிறகு சுமைசுமதொருக் காலே
தச்சனடித்ததலை வாசல்தோறும் திரிந்து
உச்சிகுழியவோநான் நச்சிவந்ததுன் பாலே

ச ஆதிமுடிவும் கடந்துநின்றமெய்ஞ் ஞான
ஆனந்தபோதசித்தி யானந்தமய மான
சோதியதனைமறைத் தொருமணிதனைப் போலே
சுமைசுமந்துடல்வருந் திடவோவுரைக்க

கன்னிபுரே சனைத்துதித்து வந்து பத்திரன்
காவலனைப் பணிந்திடப்பார்த் தேம நாதனை
தன்னையழை யெனத்தூதர் போய்க்கா ணுமல்
சார்ந்துவிசா ரித்திடசேற் றிங்கி ருந்தான
பின்னேயொரு கிழவனிங் தவஞ்சு மந்து
பெயர்பெருகும் பத்திரனுக் கடிமை யென்றே
பண்ணிசைவீ ணையையெடுத்துச் சுருதி கூட்டிப்
பாடினன் எனசிலர்சொல லாடி னுரே

இதுவுமது.

பாடியபின் னடந்ததறி யோம்இன் றைக்குப்
பயந்தோட்ட மெடுத்தானென் றிடக்கேட் டொற்றர்

ஓடியர சனுக்குரைக்க அநுமானித்தாங்
குற்றிருக்கும் பத்திரனை நோக்கி என்ன
பேடிபிடித் தேமமா தன்போம் வண்ணம்
பிரயத்தினம்நீ யாதுசெய்தா யெனவுங் கொன்றை
சூடியருளாலேநடந் ததெலாம் சொல்லத்
தொடுக்கின்றான் மன்னனைத்தாழ்ந் தடுக்கின்றானே.

நிலைமண்டிலவாசிரியப்பா

மன்னவாநேற்றுன் மலரடிவணங்கிப்
பன்னகாபரணன் பதம்பணிந்தெனது
குறையிரந்திருக்கை கூடிநானிருக்கக்
கறையிருளினிலென் கனவில்வந்தீசன்
சாடியுன்பொருட்டிந் தனச்சுமையெடுத்து
வாடியுன்மாற்றான் மனைப்புறமடைந்து
வீணையையெடுத்து மீட்டியாம்பாட
நாணமுற்றேம நாதனோடினனென்
றின்னவாறுரைத்தே யேகினன்விழித்தென்
மன்னவாநடந்த வகையிதென்றுரைக்க
ஒற்றர்கள்போய்வந் துரைத்ததும்பாண
பத்திரன்கண்டசொப் பனமுமொத்திடத்தேர்ந்
திதுநங்கூடல் எம்பிரான்செய்த
சூதெனத்தெளிந்து தொல்புவியாள்வோன்
பத்திரன்அன்பையும் பகவான்அருளையும்
உத்தியாலியோசித் தவனுடனெழுந்து
மதுரைநாயகனை வணங்கிநின்றேத்திச்
சதிருடன்பாடும் தனதுபத்திரனை
மத்தமாமீதில் வாத்தியமொலிக்க
வைத்துமாநகரம் வலம்வரச்செய்து
மனமுவந்திடநல் வரிசையுஞ்செய்து
தனதுளமகிழத் தரணிபன்பின்னும்
அரியயன்முதலா ஆட்கொளும்தேவன்
உரியநும்மாளா வுருவெடுத்துற்றே
உநகுறைமுடிக்க வுற்றனனதனால்
ஏவோரும் புலவருமக்கே
லென் ஆண்டவர்நீரே
ஓதியவடியேன் உமக்குநானினிமேற்
றெருள்முறைவழக்குச் சொல்லலாவதுவோ
எனமனக்குறையொன் றிருக்குதின்றுமுதல்
வேதநாயகன்பால் விரும்பிநீர்பாடல்
ஓதுதல்கடனென் றுரைத்தனுப்பினனே.

விருத்தம்.

காவலனாற் பெற்றபூ ணுடை யாவும்
கற்றறிந்த நாவலர்மா னவர்யா வர்க்கும்
ஆவலுடன பகிர்ந்தித்து வரிசை யாக
அடுத்துவரும் சுற்றத்தா ருடனும் சேர்ந்து
மாவரிசை பெற்றிசைவல் லார்கள் சூழ
மனமகிழ்ந்து பத்திரனிற் புகுந்தா னித்தைக்
கூவுவர்கேட் பவர்அபீஷ் டமியா வுங்கைக்
கொள்ளுவார் அரனுலகில் உள்ளு வாரே

ஆக விருத்தம் ௧௨ கழிநெடில் ௧ அகவல் ௧ கீர்த்தனை ௫ தரு ௧ ஆக ௨௰

௨

நாற்பத்திரண்டாவது.

திருமுகங்கொடுத்தபடலம்.

அவதாரிகை —விருத்தம்

மானணிமதுராநாதன் வருமேமகாதன் றன்னைக்
கானமார்ந்திசையால்வெனற கதைசிலதுரைத்தே னிப்பாற்
சேனைசூழ்சேரனுக்குத் திருமுகங்கொடுத்துப் பாணர்
கோனவன்றனக்குச்செம்பொன் கொடுப்பித்ததினிச்சொல்வேனே

பத்திரன்பலருக்கும்பொருள்வழங்கல்.

விருத்தம்

வரகுணபாண் டியன்நாளி லேம நாதன்
மதமடக்கும் பத்திரனங் நாட்கொண் டேதன்
அரசனுடை திருமனையிற் சென்று பாடு
வதனைவிட்டிங் திரவிமா னத்துள் வாழும்
பரமன்கோ யிலைத்தேடி நிதமுஞ் சென்று
பணிந்தேத்தி முக்காலும் பாடிக் கொண்டு
வருகையிலே யாவருக்குங்கொடுக்கி விருக்கை
வைக்கின்றான் தினம்பிரதிகொ டுக்கின்றானே.

மாஞ்சி, சாப்பு.

பல்லவி

பத்ரன்கொடுக்கத்தொடுத்தான்கேளும் பாடும் பாணர்முதலானவர்க்குநாளும்

அநுபல்லவி

இத்தொழிலேயல்லாமல் மற்றோர்தொழிலும்தனக்
கேதுவில்லாமலீசன் பாதம்தனிற் பணிந்து பத்ரன்

சரணங்கள்

தனபால்வறுமைபின்புண் டாகக்கண்டான் கூடற்
சாம்பமூர்த்தியுடனே சொலிக்கொண்டான்

திருமுகங்கொடுத்தபடலம்.

அன்புக்குரியவனை தற்கிசைந்து பாண்டி அரசன்றன்அரண்மனைக் குட்புகுந்து
செம்பொன் அறையிற்பொருள் திருடிப்பாடும்போதெல்லாம்
முன்புகாணிக்கைவைக்க முடிப்புமுடிப்பாவாங்கி பத்ரன் (நாள்
௨ மெய்யாபரணங்கள் தனைச்சிலநாள் துய்ய வெண்சாமரைப்பிடி கனைச்சில
செய்யபொற்கலவனை கனைசிலநாள் சொர்ண சிம்மாசனத்தகட் டினைச்
பையப்பையவேஇந்தப் படியெடுத்தெடுத்தய்யன் (சிலநாள்
மையனிசிவேளையில் வழங்கவழங்கவாங்கி பத்ரன (சொல்லாமல்
௩ வாய்ந்தபொருள்தருவோ ரலலாமல வேறே மனிதரொருவருக்கும்
காய்த்தநெருப்பினிலிட் டேயுருக்கிப் பல கண்டதுண்டமா கநறுக்கிச்
சார்ந்தவர்இரந்தவர் தனைகைபார்த்துண்பவர்க்
கீந்துபிறர்க்குமாறு நீந்துட்கவலை தள்ள பத்ரன்

விருத்தம்

பத்திரனிப் படிகொடுப்பக் கொடுப்போன் பின்னப்
பரிசுமறுத் திடலாலே போய்ப்போய்த் தாழ்ந்து
சித்தமுழந் தொக்கலுட னொக்க வாடிச
சிறுமையடைந் திருக்கஅவன் கனவின் கண்ணே
சித்தராய் வந்தரசன் கோசந் தன்னில்
திருடியளித் தனமுன்போல எம்பா லன்பு
வைத்தவனீ தறிநதிடில்காப் போர்க்குத்தண்டம்
வருமெனவே மொழிந்துபின்னும் வழுத்து வாரே.

பத்திரன்திருமுகங்கொண்டுசேரன்நகர்க்குச்செல்லுதல்.

இதுவுமது

காவலுமுத் திரையும்பூ ணாரணும் கிற்பக்
கவர்ந்துகவர்ந் தீந்தகள்வன் சேர னென்னும்
காவலன்பே ராலேயொரு திருமு கத்தைக்
கவியாக வரைந்தளிப்போ மெனஅவ் வாறே
மேவுமறைப பொருளுரைத்த வாக்கினாலே
விளம்பியவா றெழுதிஈக துடன்ம றைநதார்
ஆவலுடன பத்ரன்விழித் தெழுகதா னந்தம்
அடைநதிட்டான் அப்படியே நடநதிட டானே.

சாவேரி, சாப்பு

பல்லவி.

சேரன்மாநகர்குறித் தெழுந்தான்பத்திரன் திருவாலவாயோனைப் பணிந்தான்

அநுபல்லவி.

பாரும்திருமுகத்தைப் பட்டாடைமேல்வைத்து
நாரிபாகனைகோயில் வலம்வந்துதிவேகமாச் சேரன்

சரணங்கள்

அலைகடலேயுடை போலேபூணும்நிலமகள்தனக்குமென் மேலே
மலையேமுலைகளாக மாமுகத்திலெழுதும்
திலதமாகவேயிந்தச் செகத்திற்புகழ்சிறந்த சேரன்

உ கன்மைசேர் திருமகளாக்கமும் நீதிமழுவாதபோர்மகளாக்கமும்
தென்மொழிவடமொழிச் செஞ்சொல்மகளாக்கமும்
தர்மமகளாக்கமும் தப்பாமலே சிறந்த சேரன்
படர்ந்திடுமருதமும் முல்லையும்நெய்தல்அடர்ந்தெழுங்குறிஞ்சியும் கொல்
கடந்துபலவின்சுளைக் கனிகாலில்இடறிட (லையும்
நடந்துநடந்துமலை நாடிடையிற் சிறந்த சேரன்

விருத்தம்.

திருமுகம்பெற் றெழுந்துசே ரன்பு ரத்தைச்
சேர்ந்தொருநீர்ப் பந்தலில்வந் திருந்தா னன்றே
இரவினில்வந் தவ்வரசன் கனவிற் கூடல்
எம்பிரான் தனதுசித்த வடிவங் காட்டி
ஒருமையுடன் நமதுதிரு முகம்வாங்கிக் கொண்
டெனை திடத்தில் இருநிதியம் பெறவெம் பாலின்
றருமையுடன் பாடிவரும் நமது பத்திரன்
அடுக்கின்றான் எனறுபின்னும் தொடுக்கின் றானே.

பத்திரனுக் கரும்பொருளீந் ததிவே கத்தில்
பயணஞ்செய் தனுப்பியென மறைந்தார் சித்தர்
கொற்றவன்றன் றுறக்கமகன் றமைச்ச ரோடே
கூர்ந்திரவில் கண்டகன வுரைத்த போதே
முத்திபுர நாதர்திரு முகங்கொண் டிங்கு
முயன்றுவந்த தாரெனவே தூத ராலே
வித்துவா னிருக்குமிட மெதிகதை யத்தை
விண்டிட்டான் கண்ணாரக் கண்டிட் டானே

கல்லியாணி, ஆதி.

பல்லவி.

கண்டானேதீரன் சுவாமிஸ்ரீமுகம் கொண்டானேசேரன்

அநுபல்லவி.

தண்டளிர்த்திலங்கிய தண்ணீர்ப்பந்தலிலே
தந்திரிக்கிழவன்றன் செந்திருக்கரத்திலே கண்டான

சரணங்கள்.

க தேடித்தேடித்தனது சேனைகாவலருடன்சென்றெதிர்கொண்டுவந்து நாடி
(ச்சூடிட்
திரிகரணமுமொன்றாக் குவித்துச்செங்கைக்கமலம் சென்னியிலமேல்விளங்க
பாடிப்பாடித்திருக்கூத் தாடியாடித்தடிபோலப் பணிந்துபணிந்துமுன்னே நீடி
பண்ணுந்தவப்பயனென் றெண்ணித்தேனையருந்திப
பாண்மிழற்றும்வண்டுபோல் தானுவந்துகொண்டாடிக் கண்டான
(கொண்டு வந்து

உ செங்கையிரண்டும்விரித் தேங்கிவாங்கித்தனது திருக்கண்ணிலொத்திக்
தேனொழுகுமலரும் பூமாலையைப்போலவே திருமுடிமீதிலே பணிந்து

கண்களிரண்டினிலும் இருந்துபேரானந்தக்கண்ணீர்துளித்திடப் பரிந்து
காயமுழுதுந்தடித் தோங்கிமயிர்க்குச்செழுக்
கதம்பவனேசர்திருக் கையெழுத்துத்தெரிந்து கண்டான்

௩ முத்திபுரேசனியா மெழுதியனுப்புந்திருமுகஞ்சேரமாபாலன் காண்க
முகில்போற்புலவருக் குதவும்நின்பாலேயெம்பால் முதிரும்பேரன்பன்கலி நீ
பத்திரன்நம்மிடத்திசை பாடிவருபவனுன்பால்வருகிறான்புக ழோங்க (ங்க
பரிந்தேயிருநிதியம் கொடுத்தனுப்பென்றெழுதும்
பாடலைக்கண்டானந்தம் கூடிமகிழ்ச்சிதேங்க கண்டான்

விருத்தம்.

சேரனிந்த வாறுதிரு முகத்தைப் பெற்றான்
செம்பொன்னின் றளிகையில்வைத் தானை யேற்றித்
தாருலவும் பத்திரனை முன்வைத் தப்பின்
தானிருந்து சகலவிரு துகளுஞ் சூழ
நாரியரெண் மங்கலங்கொண் டெதிரே தோன்ற
நன்னகரை வலஞ்செய்வித் தரனு வெண்ணிச்
சீருயர்நன் னீராட்டித் தவிசின் மேலே
சேர்க்கின்றான் பூசனைசெய் தேற்கின் றானே

ஆனந்தபைரவி, சாப்பு

௧	அம்பொன்னாசன மீதி	லிருத்தினான்	பூசைபண்ணி
	அறுசுவையுடன் அன்ன	மருத்தினான்	
௨	செம்பொன்னிறச்சந் தனத்தைப்	பூசினான்	நறும்புகைமுதல்
	திருமுகத்துக்கு வாசம்	வீசினான்	
௩	வெற்றிலையடைக் காய்தக்	கோலமும்	பொற்றளிகையில்
	விதிமுறைப்படி யீந்தெக்	காலமும்	
௪	நித்தனெழுதும் திருமு	கத்திலே	பூசைசெய்து
	நெஞ்சந்தனிலு வந்தட்ச	ணத்திலே	
௫	பொன்னறைதனைத் திறந்து	காட்டினான்	காட்டியீதுள்ள
	பொருளெல்லாமும தென்று	சாட்டினான்	
௬	முன்னவனடியாரே	யாகுவீர்	ஆதலாலிப்பொன்
	முழுதும்நீரே கைக்கொண்	டேகுவீர்	

விருத்தம்

சேரனிந்த வாறுரைக்க நீரு வந்து
செய்ததுவே போதுமெனப் பொற்பூ ணுடை
வாரணமா முதலளித்தே முடிபின் சென்று
மகிழ்ந்தனுப்ப வுந்திரும்பி மதுரை வந்து
காரிபா கனைப்பணிந்து கொணர்ந்த பொன்னை
நாவலர்தொட் டியாவருக்கும் அளித்தான் பத்திரன்
யாரிதையோ துவர்கேட்போர் அவர்கள் சம்பத்
தடைந்திறில் சிவனுலகை யடைவர் தாமே

ஆக விருத்தம்௮, கீர்த்தனை ௩, தரு ௧, ஆக ௧௨, முற்றும்.

நாற்பத்துமூன்றாவது.

பலகையிட்டபடலம்

அவதாரிகை — விருத்தம்

கூடலெம் பெருமான்பத்திரன் குறையினை யகற்றச்சேரன்
மாடொரு திருமுகத்தை வரைந்திந்த துரைத்தேனிப்பால்
கூடவோ ரிரவிலன்பு கூர்ந்தவன் றனையிருந்து
பாடெனப் பலகையிட்ட பான்மையை யினிச்சொல் வேனே

பத்திரனுக்கிடையூறாகமழைபொழிதல்·

விருத்தம்.

வரகுணன்னா ளையிலேபத் திரன்சே ரன்பால்
மாநிதியம் பெற்றுமது ரேசன் றாளில்
திரிகாலும் பணிந்தர்த்த சாமத் தும்போய்த்
தினம்விடையின் பின்னின்றே படிப்பா னோர்நாள்
இரவினிலம் பிகைதிருப்பள் ளியறைக் கையன்
எழுந்தருளும் போதிடையூ றேதும் றாலும்
வருவதுல கறியவிளை யாட்டால் மாரி
வரக்கண்டான் எங்குமிருள் தரக்கண் டானே.

பந்துவராளி, சாப்பு.

பல்லவி

மழைசொரிகையில் அப்யனைவந்திக்க வந்தானே பத்ரன்

அநுபல்லவி

தழைபுமாலயன்தேடியகொன்றையந் தாமனுக்கன்புசெய்மாமுனிவோர்களே

மழை

சரணங்கள்

க தடித்திறலிரு கண்கள்பிதுங்கச் சாருந்திசைதெரி யாமலுமயங்கத்
துடித்துக்கொண்டு விடவாய்ப்புயங்கம் சோர்ந்துசருண்டு நடுக்கிப்பதுங்க

மழை

உ வரையிறசரிந் தோனேவலாலே வருணன்முன்னுள் முடிக்கமென்மேலே
வரவிடுத்த முகிலேழும்போலே வளைந்துகொண்டதெ னவொருக்காலே

மழை

ங ஆழியைத்தூக்கியெடுத்தொருமிக்க ஆகாயந்தன்னிற்கவிழ்த்ததையொக்க
வீழும்பெருந்தாரை யெங்குங்கதிக்க மிக்கவிருப்புத்தூண் போலேதடிக்க

மழை

ச கல்லார்மனம்போல் அகம்புறம்மூட காணுமுன்பின்னும் இருபாலுமூட
அல்லாமற்கீழ்மேலும் தோணமல்மூட அங்கந்தெரியாமலேயிருள்மூட மழை

விருத்தம்

மழையினால் நனைந்ததுயு மாரி யாக
மகிழ்ந்துதிருக் கோயில்வந்தி சனைப் பணிந்தே

அழகுடைய வீணையவிழ்த் திடவத் தின்பின்
அம்புயத்திற் சாத்திநின்று சுதிகூட் டுங்காற்
பழுதகலும் தந்தியொலி மழுங்கச் சேற்றிற்
பதமழுந்தக் குறுக்குவலி வாங்க மீனா
விழியமலோ டய்யனைத்தப் புரத்துள் வந்து
மேவவிற்பத் திரன்பாடி விளங்கி னானே.

இதுவுமது

இத்தகையாப் பாடுமிசை செவிக்கே றுங்கால்
எம்பிரான் கருணைகொண்டம் பரத்தில் நின்று
பத்திரா வெனக்கூப்பிட் டுதன்மேற் றங்கிப்
பாடுகென்று மணிப்பலகை யிடப்பார்த் தாங்கே
பத்தியுடன் சாமிசொலலுக் கஞ்சி யப்பொற்
பலகையின்மேல ஏறியிசை பாடிப் பின்பு
சித்தமுவந் தவிடம்விட்டப் பலகை தன்னைச்
செங்கைதனில ஏந்தியில்லிற் சேர்ந்திட டானே

பூரி, சப்பு

சாமிதிருவடி பணிந்தான் பத்திரன் தன்னிருக்கைநாடி நடந்தான்
மாமேகம்மின்னுடன நீங்கஅகல் வானம்பிரகாசம்பெற் றோங்க
முன்புமுனியாலேவறந்த போது முத்தும்மணிகளும் நிறைந்த
அம்புதிபோலவே புடுக்கள் உதித் தம்பரத்திலொளி விடுக்க
தீயவிருள்வலி யிழந்து ஓடச் செங்கதிரோன் விழித்தெழுந்து
ஆயிரம்கைவிரித் தோதும் திரை யாழிமீதிவரும் போது
இத்தரையாளும்சம் பனனன் இசை ஏற்கும்வரகுணத் தென்னன்
பத்திரன்அய்யனைப் புகழ்ந்து மணிப் பலகைபெற்றது தேர்ந்து
உத்தமபத்திரனை வாழ்த்தி சாமி தந்தபலகைமே லேற்றி
பட்சமுடன்அன்னை தன்னி கூடல் பரனிவனேயென் றென்னி
ஆனந்தக்கண்ணிப் பூணும் பொன் னுடைநிலங்கொள்ளை நீணும்
மாதிரியத்துடன் தந்தான் நல் வரிசையானடத் தினித்தான்

விருத்தம்.

பகவன்றற் பலகைபெற்ற பத்திரனுக்கிப்
படிவழுதி வரிசைசெய்யப் பெற்றுக் கோயில்
அகமடைந்து நாற்காலும் வணங்கி யில்வந்
தமைந்திருந்தான் இப்பால்ராச ராசனுக்கே
மங்புரப்ப நீகதுவர குணன்சா ருபம்
மன்னிடவே சிவபுரஞ்சேர்ந் திருந்தானித்தை
புகலுவர்கேட் பவர்செல்வம் சௌக்கியம் வாழ்நாள்
பொருந்துவர்பின் அரனுலகில்திருந்துவாரே

ஆக விருத்தம் ௫, கீர்த்தனை க, தரு க, முற்றும்.



நாற்பத்துநான்காவது,

இசைவாதுவென்றபடலம்.

அவதாரிகை—விருத்தம்

இறையவன் பாணபத்திரன் இசையைக்கேட் டவர்க்குத்தாமே
நிறைமணிப் பலகையீந்த நிலைமையை யுரைத்தேனிப்பால்
மறுபடி யவன்றன்கற்பின மகிமைசேர் இல்லாள்தானோர்
விறலியை யிசைவாதாடி வென்றவா றினிச்சொல்வேனே.

விருத்தம்.

ராசரா சத்தென்னன் செங்கோ லேந்தும்
நாளிலவன் றேவியுஞ்ச ளுட்சி யென்பாள்
ஈசனுக்கன் புடையபத்ரன் மனையா ளுக்கும்
இறைவனுக்கன் புடையவொரு இசைவல் லாட்கும்
பூசலிசை யாலுறவே றிசைவல் லாளைப்
புறத்திலிருந் தழைக்கவவள் புரிந்த வண்ணம்
மாசகலும் பத்திரையைச் செயிக்க வேண்டி
மன்னனொரு விறலிதனை வருவித் தானே

சௌராஷ்டிரம், ஆதி.

௧ இராசராசபாண்டியன் ஈழ நாட்டுமின்னை வருத்தினான்
ஆசையோடவள்மேலன்புற் றுதரவோ டிருத்தினான்
௨ வந்தவளரசனிரு மலரடி வணங்கினாள்
பந்தமாயெக்கலிப்புடன் பாடுதற் கிணங்கினாள்
௩ வல்லகிமீட்டிச்சுருதி வகைதெரிந்து கூடினாள்
சொல்லுமேழிசையுடனே சோபிதமாய்ப் பாடினாள்
௪ பாடினிகானத்தில்மனம் பதிந்தரசன் தோகையினான்
கூடியவன்மேலேமையல் கூர்ந்துமதி போக்கினான்
௫ பத்திரையைநீமுட்டப்பாடிப் பார்த்திடென்று கூறினான்
உத்தரங்கேட்டதக்கவ ளுரைத்தனக்கு மீறினான்
௬ நாமவனுக்குச்சார்பாக நவிலினும்வி டாமலே
நீமடிபிடிவழக்கா நிறுத்தடியெ டாமலே
௭ நாலுபேர்முன்றலைகுனிந்து நாணமதுண் டாகவே
மேலும்வாயில்வந்தபடி விளம்புநீமின் டாகவே
௮ என்றுசெலதிந்தவளை யிருக்கைசெல்லென் றனுப்பினான்
நன்றுநாளைவந்திடென்று ராசராசன் விருப்பினல்
௯ கற்புளபத்திரையையழைத்தக் கணம்அவட்குச் சூதினான்
இப்போதொருத்திபாடவந் திருக்கிறுளென் றோதினான்
௰ இங்கவளுடன்பாடுதற் கேற்குமோவென றுரைக்கவே
கங்கைவேணியருளுமென் கற்புந்நிறைந் திருக்கவே
௧௧ பாடிவெல்வேனென்றுசொல்லி பத்ரையிற்சென் றிருந்தனள்
காடியவளைவிடுத்து ராசராசன் இருந்தனன்

விருத்தம்

மற்றநாள் விறலியிரு வரையும் பாண்டி
மன்னனழைத் திசைகேட்கு முன்னி ழத்தில்
உற்றவள்பத் திரையைப்பார்த் திகழ்ந்து வீணைக்
கோதியநூல் முறைப்படியுத் தரங்கள் சொலலி
மற்றெனுடன் பாடுகிலலை யாகில மெத்த
வழுவுனக்கா மென்றுரைக்கக் கேட்டுக் கற்புப்
பெற்றயரும் பாடினியாக் கவளைப் பார்த்துப்
பேசுவாள சபையதிய ஏக வாளே

இதுவுமது.

பெருக்கமுறும் கலவியும்வா தின்மே லூக்கப்
பெருமையும்பல லோர்விரும்பும் அழகும் பூண்ட
செருக்குடைய நின்னுடேன னன்முன் வாது
செய்யும்பூ சலுக்கெதிர்நா னலலேன் கண்டாய்
தருக்கமிடு முன்போலமா னம்விழ் றண்ணும்
தாசியரே யுனக்கெதிரா மெனககேட் டாககே
விரைக்குழலா ளிருவருக்கும் ஞாயஞ் சொலலி
விலக்குவான் போலரசன துலக்கு வானே

பநதுவராளி, ஆதி

க ஈசன்மகிமையை யுங்களிதயமுவந்து கேட்பீர் மெய்த்தவோரே ராச
ராசனிருபாடி னிகருமிராசிபோல விலக்கியபின்மெயத்தவோரே
உ பாடினியிருவரையும் பாங்க ளென்றுமொழிந்தான் மெய்த்த...வெற்றி
சூடினவருக்கிளைத்தோர் தொண்டுவேலை செய்வதென்றான் மெய்த்தவோ
௩ மன்னவன்சபதமிரத வண்ணமுரைத் திடக்கண்டு மெய்த்தவோரே ஈழந
தன்னிலிருந்து வந்தவள் தலைஎடுப் போடேனேமெய்த்தவோரே
ச வீணைஎடுத்தேழிசையில மீட்டிபபா டத்தொடுத்துமெய்த்தவோரே முடி
பூணுமன்னவன்செவியில புத்தமுதெனச்சொரிநதாள மெய்த்த வோரே
௫ பத்திரையெனும்பாடினி பாடத்தொ டுத்துவந்து மெய்த்தவோரே சபை
யுற்றிடும்பலர்கள்கா தி லும்மமுதம் போறசொரிந்தாள் மெய்த்தவோரே
௬ தென்னவன்மனக்குறிபபி தெனஉறியாம லவளுள்ளோர் மெய் த்... பத்திரை
தன்னுடைகானத்ததைத்தானே சகலபேரும்புகழ்ந்தார் மெய்த்தவோரே
எ பின்னுமரசன்விறலிபிரசங்கத்தை மெய்க்கக்கண்டு மெய்த்த... மண்ணிற்
கொற்றவன்சொலலும்படிக்கே கூறுவதியலபல்லவோ மெய்த்தவோரே
அ ராகமதுவுணடமன்னன நனறுதீததியாமலே மெய்த்தவோரே இன்றைக்
கேகிநாளைக்குவருவீர் என்றவர்க்குத்தரவீன்றான்மெய்த்தவோரே
௯ பாண்டியன்மனதிசையைப் பரிகதேபரிந்ததாம் மெய்த்தவோ...எண்ணி
மீண்டவிறலிபஞ்சணை மீதிலதகக்கொண்டிருந்தாள் மெய்த்தவோரே

விருத்தம்.

பத்திரைவந் தாவுஞ்சென் றய்யன் பாதம்

பணித்துகண்ணீர் சொரியத்தென் னவனுக் கோல்கொண்
டித்தலத்தை யாளும்பாண் டியனென் றன்பால்
இசைகேட்டக் கிரமஞ்சொலப்பின் யாருஞ் சொன்னார்
சத்தியமா புரைப்பவரா ரென் றிரக்கத்
தையலே நாளைவெல்வா யெனவிண் ணின்றோர்
சத்தமெழ திடத்தெரிந்தி சனை வணங்கித்
தனதுமன மகிழ்ந்திருக்கை தனிலவந் தாளே

இதுவுமது

இருக்கையிலே மறுநாள்முன் னூடபோல மின்னார்
இருவரையும் அழைத்தரசன் பாடக் கேட்டுப்
பெருக்கமுடன் முதனாளிற் சொன்ன வாறே
பேசிடத்தேர்ந் தவைஞரும்அவ் வாறே சொன்னார்
மருக்கமழும் குழலாள்கற் புடையாள பாண்டி
மன்னவனை நோக்கிமடி நிலைமை நூலைத
திருத்தமுட னுய்ந்துணர்ந்தோய் கேளா யென்று
செப்பிடவாங் கறிவுடையோர் ஒப்பி னாரே.

சௌராஷ்டரம், ஆதி

பல்லவி.

மகராசராசபாண்டிய மன்னனேநிசம்சொல்வாய்

அநுபல்லவி.

செகமெங்குமனுவழியே செங்கோலசெலுத்திவரும் மகராச

சரணங்கள்

க ஈசன்முனபோய்பாடுவோம் இருவர்பாடலுந்தூக்கி மகராச
உ இன்னவள்வென்றாளென்றும் இவள்தோற்றுப்போனாளென்றும் மகராச
ங அனியாயம்நீயேசொன்னால அவையோர்சொலலக்கேட்பானேன் மகராச

விருத்தம்

கற்புமிகும் பாடினியிவ் வாறுரைக்கக்
காவலனப் படியேசெய் வோமெனக் கேட்
டிற்புகுந்தி றந்தனர்பின் னாளேவந் தன்கோ
யிற்புகுந்த மைச்சரிசை வல்லார் தம்மோ
டற்புதமண டபத்திலிருந் தவரைத் தூதர்
அழைத்திடவே பத்திரையை யாமே யின்னுமக்
கெப்படியும் வென்றிடலா மெனலங் கைப்பா
டினிவந்தாள் பேரவையந் தனிலவந் தாளே

———

ஆய்ந்தரிய கற்புளபா டினியின் னேபோ
அவையிலவந்தாள் ஆங்கொருநா வலர்போற் கூடல்
வாய்ந்தபிரா னுஞ்சபையில் வந்தாற் றன்முன்
வந்தபா டினியிசைபா டக்கேட் டாங்கே

சார்ந்தவர்கள் ஒன்றுமுரைக் காதிருந்தார்
தவமிரும்பா டினிவீணை தன்னைத் தோளில்
ஏந்தியிசை யோர்ந்தால வாய்ப்பிரானை
யேத்தினுள் பலர்புகழ வாழ்த்தி னாளே

ஆனந்தபைரவி, ஆதி

பல்லவி.

சாமியுன்தன்மகிமைகண்டெந்தவிதம் சாற்றிமுடியுமய்யா

அநுபல்லவி.

சாமியகிலசரா சரத்தும்பொதுவாய் நீயே
சாட்சியாயிருந்தரசாடசிசெய்துவிளங்கும் சாமி

சரணங்கள்

க அங்கைநீரும்பத்திரமும் ஏந்தியுனையர்ச்சித்தோர்க்
கரியயனிந்திரபத மருள்செய் தளிப்பாயுன்னைச்
செங்கையிலேகபாலம் தரித்துபவதீபிட்சாந்
தேகியென்றிரந்தாயென் றேசுவாக்கென்னசொல்வேன் சாமி

உ மாதரைக்கண்டுமயங் காதவர்க்கேவீடென்று
வாய்ந்தமறைப்பொருளை ஆய்ந்துமொழிந்தாய்நீயே
பாதியுடற்பெண்ணுரு வாகினையென்றுபிறர்
பழித்தாலவர்க்குவதல் எடுத்துநானென்னசொல்வேன் சாமி

ந. மாயையிடமாச்செல்லும் விருத்திவலியடக்கி
மனுயிர்க்குமுத்தியை யருள்வாய்தனிவள்ளலே
நீயேமுத்திபெறுவார் போலேவிரதயோக
நெறியடைந்தாயென்பாருக் குறுதிநானென்னசொல்வேன் சாமி

ம்

இடவவா கனன்மதுரைப் பிரானை போற்றி
இசைநூலி லோதும்வண்ணம் பொருந்த வாய்ந்து
மிடறுவீங் காள்விழியி மைக்கா தந்தம்
வெளிப்படாள் புருவமேல் மிமிராள் கன்னம்
துடிகொளாள் பத்திரைமா னிடர்கா துக்கோ
ரார்செவிக்கும் நாவில்வினை யமுத மாக
அடைவுடன்பா டடக்கேட்டுக் குறாக லத்தை
யார்ந்திட்டார் மண்டபத்திற் சார்ந்திட் டாரே

இதுவுமது

தென்னவன்கை தவனெனும்நா மத்துக் கேது
தெரிவிப்பா னுகவிசை பாடக் கேட்டும்
முன்னுரைத்த படிமொழிய நினைத்தி ருந்தான்
முக்கணன்முன் னருளால்அவ் வெண்ணம் நீங்கத்

தன்னிதய மகிழ்ந்துபொது வாக நோக்கித்
தவயிரும்பா டினிதானே வென்று ளென்று
சொன்னதுகேட் டந்தவண்ணமேச பைக்குள்
தோற்றினார் யாவர்களும் சாற்றி னாரே.

பூரா,

க பாண்டியன்சாட்சிசொல்லியிப்பாலே ஈழப் பாடினிதிருக்கழுத்தின்மேலே
ஈண்டியதவப்பாடினி மாது தன்னை இருத்தெனவே இருத்தும் போது

உ ஆண்டவனுரும்காவலன்கண்டான் கண்டதற்புதமற்புதமென்றீதென்றான்
(பயந்தான்
பூண்டவைகாணமின்போலேமறைந்தான் யாரும் புகழ்ந்தனர்தென்னன்கண்டே

௩ அய்யன்திருவிளையாட்டிதென்றார் மிகஆச்சரியங்கொ ண்டுவந்து நின்றார்
துய்யவடியாரன்பையும் நோக்கிச் சோமசுந்தரனருள்திறமும் தூக்கி

௪ தங்கள்கண்ணினாலேநீர் துளித்தார் ஆனந் தம்பெருகும்வாரிதி குளித்தார்
இலங்கைப்பாடினிமேலிருந் தாளை மன்னன் இறக்கிவித்தவளுக்குமுன் னாலே
ஆணிமுத்தாரங்கள்முதற் றொடுத்தான் செம்பட் டாடைவரிசைகள்மிகக்கொ
காணியேநின்றபாடினிக்குந்தான் உவகை நண்ணிடச்சிலவரிசைதந்தான் (டுத்த

௫ காவலர்போலேவந்துரையாடிப்பின்னே மறைநதுவிமானத்துக்குள்ளேகூடி
தேவியோடிருப்பவரைப் பணிந்தான துய்ய செம்பொனாமுதற்கொடுத்துவ
(தான்

விருத்தம்

மைப்படிகண் டனுக்கிவ்வா றீந்து வேந்தர்
வலியெல்லாந் தெய்வத்தின் வலிமுன னில்லா
தப்படித்தெய் வஞ்செய்யும் வலியெல் லாமுன்
னவன்வலிமுன் னில்லாதென் றுரைப்ப தெல்லாம்
கற்புளபா டினியிடத்தி ர கணடோ மென்று
காவலன்வீற் றிருந்தானி துயைப்போர் கேட்போர்
இப்புவியில் ஆபத்துநீங்கி வெறறி
எய்தியிருந் தரனுலகில் உய்கு வாரே

ஆக விருத்தம் ௧௧, கீர்த்தனை ௨, தரு ௩, ஆக ௧௬. முற்றும்.

௳

நாற்பத்தைந்தாவது,

பன்றிக்குட்டிகளுக்குப்பால்கொடுத்தபடலம்.

அவதாரிகை—விருத்தம்

முன்னவ னருளால்கற்பின் மொய்குழல் தனக்குமாறும்
மின்னையின் னிசைவாதாடி வென்றவா றுரைத்தேனிப்பால்
பின்னக மிரங்கிக்காட்டிற் பிறங்கிய பன்றிக்குட்டிக்
கன்னையா முலையீந்தாவி யளித்தவா றினிச்சொல்வேனே

விருத்தம்.

மகராச ராசனுல காளும் நாளில்
வைகைநதித் தென்கரையில் குருதீர்த் தத்தில்
மகவான்விண் ணவரேத்த வால முண்டு
மணிமிடற்றில் சாட்சியா வைத்தோன் வியாழ
பகவான்மெய்த் தவஞ்செய்ய வேவ ரங்கள்
பரிந்திந்து குருநாத னெனப்பேர் பூண்டு
ககவாகன்அயன்பரவ விளங்கும் நாளிற்
காணுவீர் மனத்திலன்பு பூணு வீரே

ஆனந்தபைரவி, ஆதி.

க முக்கணனுக் கன்புடைய முனிவர்களே கேளும்
மொழிந்தகுரு தீர்த்தமென்னும் முதுநகரில வாழும்
உ தக்கவனோர் வேளாளன தன்பெயர்சு கலனே
தனதுமனை யாள்சுகலை தனனொடுவாழ் பவனே
ங அவர்களுக்கீ ராறுமைநதர் அழகழகாப் பிறந்தார்
அருமையுடன் வளர்க்கையிலதாய் அப்பனுமி றந்தார்
ச அவியவேபின் வேடரைசசேர்ந் தரியவனம் புகுந்தார்
அக்கிரமஞசெய் தொழுகியிரண் டறுவருமி குந்தார்
ரு இத்திறநகொனை டொருபுதர்க்குள் ளேயவர்கள் சென்றார்
இந்த்ரனுக்கா சான்றவமங் கிருந்தியற்றக் கண்டார்
சா கைத்தலங்கொட் டிச்சிரித்துக் கலலவர்மேற் பெய்தார்
காயமதி லேயழுந்தக் கருதித்தவஞ் செய்தார்
எ தவமழிமைக் கிடராகச்செய் சல்லியம்தெ ரிந்தார்
சாதித்தொழில் மறந்துழலவோர் தமகள்மேற்சி னந்தார்
அ அவனியுழ வோரேபன்றி யாவீரென்று சபித்தார்
அப்பனுமன் னையுமிறந்தே யலைவீரென்றைந் தவித்தார்
கூ இப்படியாச சவித்திடப்பன் னிருவரும்ப யந்தார்
எங்களுக்கிச சாபந்தீர்வ தெப்போதென்று பணிந்தார்
ய மைப்படியுங் கணடனிரு மலரடியை நினைந்து
மாகோபம் தணிநதவர்மேல் மனதிரக்கம் புனைந்து
கக உமக்குமது ரையிலவளரும் ஒருவன்வநதே யன்னை
யுருவெடுத்து முலைப்பாலீந தயிரளித்துப் பின்னே
கஉ அமைச்சர்களாச செய்வனதென்னன் அருகினிலே பன்னுள்
அமைந்த தறபின் சிவனுலகை யடைவீரென்று சொன்னர்

பாண்டியராசன் வேட்டையாடுதல்.

விருத்தம்.

குருமொழிகேட் டவிடம்விட்டப் பன்னிரண்டு
குமரர்களும் குருதீர்த்த மெனுமீ தூருக்

கருதில்வனத் துள்ளபன்றிக் கெல்லாம் வேநதன்
ஆங்குறுங்கோ ளப்பேடை வயிற்றிற் சென்று
அருளையாப் பிறந்திருக்கும் நாளிற் றென்னர்
கோனொருநாட் படையுடன்வேட் டையைக்குறித்துத்
திருவால வாயைவிட்டவ் வனத்தில் வந்து
தேடினன் மிருகவேட்டை யாடி னனே.

பந்தவராளி, சாப்ப.

பல்லவி

வேட்டையாடினதைக்கேளும் பாண்டியராசன வேட்டையாடி

அநுபல்லவி.

வேட்டையாடினதைக்கேளும் காட்டகத்தனனிலேவாழும்
வெம்புலிகலைமானேனம் கும்பலாத்தங்கும்நிதானம்
வேடர்கள்தெரிந்துகொண்டு ஓடிவந்துரைக்கக்கண்டு
வேட்டைக்காரரெலலாம்கூடிக் கூட்டமாகவிரைந்தேதடி
விலங்கினத்தையொதுக்கி மலங்கநிலைகலக்கி
வெருட்கொண்டிடவிரட்டி யுருக்குவலையைக்கட்டி
வெற்றிமாலைதனைச்சூடச் சுற்றிலும்படைசூழ்ந்தோட
வீரமுடனே துணிந்து வாரணத்தின்மேலிருந்து

சரணங்கள்.

சுற்றிலுமுழக்கம்வாய்த்து மெத்தவொலித்திடப்பார்த்துச்
சொலிக்கக்காய்ச்சியவேலை வறுக்கப்பாய்ச்சினாற்போலே
துளைக்கச்செவிக்குட்பட்டுக் களைத்தசனம்போல்நட்டுத்
தோல்விவந்ததெனப்போட்டிப் பார்வையனேகமாக்காட்டிச்
சூரமிகும்புலிக்கூட்டம் தீரமிகும்பன்றிக்கூட்டம்
சொக்கிவிழுமான்கூட்டம் மிக்கவேபயத்தில்நாட்டம்
சூழநிற்பவர்முன்னாலே கேளுமவைகளின்மேலே
தொனிக்கும்விலமணியாட்டிக் குனித்துக்கயிற்றைமாட்டிச்
சுரிகணைதாக்கிவிட்டார் கொருங்குமான்கள்
உடலைப்பண்ணக்கிவிட்டார் காலதலைமூளை
தொண்டையிலும்வரும்ரத்தம் மண்டியோடுவதல்லாமல்
தும்பிமிருகத்தின்சோரி அஷ்டகெசங்கள்
பட்டதுபோலவாரிக் கொண்டுபெருகத்
தொப்பெனவேவிழுந்துவா யைப்பிளந்தாவியொடுங்கத்
துடிக்குஞ்சிலதுமிருகங்கள கண்ணிலையப்பலகால
கடிக்குஞ்சிலதுமிருகங்கள் பொறிகலங்கிச்
சோங்கிவிழுந்துபயம் தேங்கியோட்டமெடுக்கத்
தொடுக்குஞ்சிலதுமிருகங்கள பக்கத்திலேவர்
தடுக்குஞ்சிலதுமிருகங்கள் வலையைத்தாண்டித்
துள்ளிவிழுகையில்நாய்கள வெளவென்றுகடித்துப்பினனே

தொடரச்சிலதுமிருகங்கள் ஓடவும்பின்னே
அடரச்சிலதுமிருகங்கள் இப்படியாகத்
துணிந்தவீரர்களவேலாற் றணிந்திறந்துபோகச்
சொச்சமுள்ளசிலமிருகங்கள் வலைக்குட்டலை
வைச்சதங்கேசிலமிருகங்கள் சூழ்ந்துவலையைத்
தொட்டிருந்தபேரைவிட்டு எட்டியிருக்கின்றவர்மேல்
தொத்திவிழுஞ்சிலமிருகங்கள் சிலரோடேயெ
திர்த்துவிழுஞ்சிலமிருகங்கள் முட்டிவலையைத்
துளைத்தகலும்புலிகள் துளைத்தகலும்வராகம்
துளைத்தமிருகமனேகம் அதனைச்சுற்றி
வளைத்தவீரரனேகம் பின்னேதொடர்ந்து
சொல்லினுங்கடித்துச்சாடிக் கொலைகையில்விழுந்தமிருகம்
தொகைசொல்லிமுடியாது தப்பிப்போனதின்
வகைசொல்லிமுடியாது மகிமையிரு
துண்டமாப்பிளந்துதெளிக் கொண்டதும்பாற்கொம்புடைய
துங்கலின்காதுகளிலே வேலாற்குத்தி
வாங்கிடவேயதனிலே இருந்துதிரம்
சுரந்துகொண்டுமலையிலே பரந்தவெரியைப்போலே
தோணுமகலடவியெங்கும் அந்தப்படியே
காணும்நெடும்புடவியெங்கும் வீரரொலியும்
துடியினொலியும்வாளால் மடியுமிருகவொலியும்
சோபிசோடாய்மாவொலியும் அதனைத்தொடர்ந்
தோடுகின்றநாயொலியும் ஆகாசத்திலே
தொனிக்குங்கருமேகத்துக் கிணைத்துவிளங்கும்போது
தோற்றிமேலைத்திசையிலே பாண்டியனிளப்
பாற்றவந்திருக்கையிலே அந்தவனத்திலே
சூகரங்களுக்கிறைவன் ஆகவேபுதருக்குள்ளே
தோய்ந்தபன்றியைநாடி பலபன்றியும்
சேர்ந்தொருமிக்கக்கூடி எங்களரசே
சுவஸ்தமாயிந்தவனத்திலே இத்தனைநாளினுமொரு
தொந்தரவுங்கண்டறியோம் உன்னதிராலேர்
சிந்தனையுங்கொண்டறியோம் இப்போதொருவனால
துய்யமதிகுலமன்னன் அய்யனேசேனையுடனே
தோணிமிருகவேட்டையாடினான் வில்லைவளைத்து
நாணிறுக்கிக்கணைசாடினான் பலமிருகங்கள்
தொலைந்துபோனதல்லாமல் வளைந்தெங்கள்மெய்யெங்கும்
துளைத்ததென்னென்றுசொல்வோம் நமதுகூட்டம்
இளைத்ததென்னென்றுசொல்வோம் என்றுபணிந்து
சொல்லவுங்களித்துப்போரிலே சொல்லவுந்தென்னனைப்படையைக்
கொல்லவும்யுத்தக்களத்திலே வெல்லவும்நினைத்துவர

உ வராகமெல்லாங்கூடிவந்து — வராகராசனைப்பணிந்து
வந்துரைப்பதனைநோக்கிச் — சிந்தையெக்களிப்போடேகி
மங்கையாம்பன்றியைப்பார்த்து — நங்குழந்தைகளைக்காத்து
வைத்துநீயிங்கேபொருந்து — இத்தொலையில்வரும்இந்து
வங்கிஷத்தாசனேரில — இங்குவிட்டெழுந்துபோரில
வாகுபெலமுடன்வெல்லப் — போகுவேனென்றுசொல்ல
மாநிழலமரம்விண்டு — பிரிவதுமுண்டோவென்று
வாகுயிலைவிட்டகன்று — தேகமிருக்குமோவென்று
வருந்திநின்றுரைத்தழுது — கணவனுள்ளங்
கரைந்திடும்படிதொழுது — மனைவிவேண்ட
மைந்தரைப்பிரிந்தப்பாலே — அந்தமுள்ளபரிமேலே
மகிழ்ந்திருவருமேற — வராகவீரனைப்
புகழ்ந்தெகசரிக்கைகூறப் — பல்வகைச்சாதி
வங்கவராகந்திரண்டு — நூற்படையாகவேசென்று
வழுதிபடைமேற்சீற — மன்னவன்கண்டு
வீதிகளிற்பொதிதூற — வருகுமுன்னே
வரிவிலவளைத்துமள்ளர் — சொரியுங்கணைகள்பட்டு
மாண்டதங்கேசிலதேனம் — உரத்திலம்பு
பூண்டதங்கேசிலதேனம் — தேகத்திலநின்று
வாரிவாரியாப்பெருகும் — சோரியோராறாகவோட
மறிந்ததுசிலதேனம் — மணிக்குடலகள்
சரிந்ததுசிலதேனம் — எனபுதகர்ந்து
வழும்புமூளைபறிந்து — எழும்பவொணாமல்மண்ணில
மடிந்ததுசிலதேனம் — சாதுகள்முதல்
ஒடிந்ததுசிலதேனம் — இப்படியாக
மன்னவேகொன்றிடக்கண்டு — பின்னுளளபன்றிவெகுண்டு
மண்டியேபடையிற்பாய்ந்து துணிந்துசெய்த
சண்டைபொன்னசொல்வேன்காய்ந்து பனறிகளெலலாம்
வணசமர்வெறிபிடித்து — மெஞ்சிலேபடபடத்து
மள்ளரிற்சிலரைமுடித்து — முண்டமாயுடல
துளளவேசிலரைமடித்துக் — கெறசனையுடன்
வளையுகொம்பிஞெலெற்றித் — துளையமார்பிலேகுத்தி
வாயினாலேஇரத்தங்கக்க
சாயவேயுதைத்துநோக்கச் — சரீரமெங்கும்
மரணவலிப்பெடுத்துக் — கரணம்போட்டுவிழுந்து
மாய்ந்தாரேசிலபேர்கள — நெஞ்சுபிளந்து
காய்ந்தாரேசிலபேர்கள் — இதுவலலாமல
மஸ்தகம்பிளந்தபேரும் — கைத்தலம்பிளந்தபேரும்
வலக்கைகளஅற்றபேரும் — தனித்திலகும்
இலக்கைகள்அற்றபேரும் — துடைகளற்று

வாழ்நாள்சிதைந்தபேரும் ஊழ்நாளமைந்தபேரும்
வாள்களொடிந்தபேரும் மலைகள்போலே
தோள்களொடிந்தபேரும் காலொடிந்தோரும்
மன்னியில்மரங்கள்பட்டு தன்னுயிரகலுமுன்னே
வைப்பினிலேவிழுவோரும் சிலசிலர்கள்
குப்புறவேவிழுவோரும் பலவிதமாய்
வாதைகொண்டிப்படிச்சேனை சேதம்வரக்கண்டரசன்
மந்திரியில்சிலபேர்கள் மனக்குறிப்ப
றிந்தெழுந்தார்சிலபேர்கள் வெகுண்டெமன்போல்
வல்லிருப்புலக்கைவீசிக் கொல்லுகவிருதுபேசி
வராக்கண்டேனவீரன் கர்ச்சனைகொண்டு
சரக்கென்றெழுந்துதிரள கூடவேநிற்கும்
மானமிருந்தபெண்பன்றி சேனையெல்லாம்போச்சுதினி
மான்வதுபெருமையென்று தப்பிப்பிழைத்துப்
போவதேகருமமென்று மொழியப்பார்த்து
வல்லகலைகள்தெரிந்தும் நல்லறிவுபெற்றிருந்தும்
மாதரறிவென்பதெல்லாம் பேதைமையாகும்
ஆதலாலேநீசொன்னதெல்லாம் உனதனுக்கேற்ற
வண்ணமுரைத்ததல்லாமல் எண்ணறிவுடையோர்க்கெல்லாம்
மண்ணினிலிழுக்காவந்து நண்ணிடுமென்றேயுரைக்க வேட்
ஏனராசனுக்குச்சொந்த மானபெண்ணெனமொழிந்த
தென்ணியிருசிங்கங்கூடித் தண்ணீருண்கையில்நாடி
இடையிற்சென்றொருஏனம் தடையினறிச்சலபானம்
இனித்துண்பதுசாரகம் தனித்திரண்டுவராகம்
ஏரிநீருண்கையிற்சிங்கம் சாருமோநமதுத்துங்கம்
இப்படியிருக்கவுன்தன் சொற்படிநடக்கவெந்தன்
இருதயந்துணியுமோ பெருவீரந்தணியுமோ
என்பலங்கண்டறியாமல் முன்பின்னையுங்குறியாமல்
ஏராதவார்த்தைசொன்னால் வசைபோலொக்கல்
பாராமல்மொழிந்தாலென்னும் ஆகிலுங்கேளும்
இந்துகுலமன்னன்வீரன் சிலந்திடவெனக்குத்தீரம்
இல்லாமற்புவிமீது அவனையேநாம்
வெல்லாதிறந்தபோதும் கடல்வளைந்த
இத்தரையுள்ளவரைக்கும் பொய்த்திடுமுடம்பொழிந்தும்
இசையுடம்பழியாதுண்டோ மித்திலம்போலே
திசையெங்கும்பரவுமன்றோ ஆனதாலேநீ
இங்கிதென்றுரைத்தகற்றி நங்கையேனத்தைநிறுத்தி
எரிபறக்கவேகொதித்துப் பாண்டியனுக்குச்
சரியாகவேகுதித்து வராகவீரன்
இங்கிவர்துணைத்துப்பிலக் தன்னைவெளியாக்கிநிமிர்ந்

தெழும்புந்துகளினாலே விண்ணைமறைக்கக்
கிளம்பிவந்தெதிராலே வரவும்வில்லை
எடுத்துவளைத்துக்கணை தொடுத்துப்பெருமழைபோல்
இலக்காகவெய்துசொரிந்து விடக்கண்டுள்ளம்
மலைக்காமல்முறித்தெழுந்து சிலகணையை
எம்பிவாயினாலேப சும்புல்லெனவேகடித்
தெறிந்தது சிலகணையை காலாற்றேய்த்து
முறிந்திடச்சிலகணையை வாலினாலே
இன்னமுள்ளகணையையும் சின்னபின்னமாநொறுக்கி
எதிர்கொண்டுவரக்காய்ந்து மனம்பொறாமல்
மதிகுலத்தவனோர்ந்து ஆனையின்கையில்
இருப்புலக்கைகொடுத்து வரக்கண்டபன்றிவீரன்
இடிபோல்முழங்கியொலித்து துதிக்கையிளந்
திடவேகொம்பினாற்கிழித்து விடக்கண்டுதேர்
ஏறிநேமியைச்சுழற்றிச் சீறிவிடவுமகற்றி
இரதக்காலிலேபாய்ந்து தகர்த்துடைக்க
பரியினமீதிலேவாய்ந்து தென்னவனவேலை
எடுத்தெறிந்துமுன்னே யடுத்துப்பரியில்விரைந்
தேகிக்கொம்பினாற்குத்தவே குடலசரிந்து
போகப்பரியைமொத்தவே தென்னவன்பொறுத்
திப்புவியிலேகுதித்து கைப்படுமிருபபுத்தண்டால்
இரத்தநீரொழுக்காலே பெருகநடுச
சிரத்திலடிக்கமேலே மணிபிழைத்த
இந்திரவிமானத்திலேற அந்தரர்பூமாரிதூற
இருதிருசெவிகுளிர தேவகானம்
புரிகதிடமனமிளிரப் புத்தமுதுண்டு
இங்கிதம்பெருகும்தெய்வ மங்கையர்களைத்தடவி
இணங்கியுலகைசூழ்ந்து விண்ணுலகுள்ள
கணங்களுடனேவாழ்ந்து இருக்கும்போது
என்கணவன்மாளவிங்கே தங்கியிருப்பதுகற்போ
என்றுவராகப்பெண்கதிக்க அமர்புரியக்
கண்டுதென்னவனுளம்பிரமிக்க பெண்ணினத்துடன்
இறைவர்க்கமர்புரிதல் அறனல்லவென்றுசேனைக்
கெசமானெனவேசிறந்தான் சற்சரனென்போன்
விசைகொண்டதனைவளைந்தான் அவனுடனே
எண்ணமில்லமைச்சனடை பண்ணியவன்றன்னைமண்ணில்
இறந்திடச்செய்யுங்காலை அவன்கையிலே
சிறந்ததொண்டத்தினாலே இம்மெனவோங்கி
எடுத்தலையிலடித் தனதுவுமாணடிடவீ
மானமேறிக்கணவன்பால் வானுலகிற்சென்றிருக்க வேட்டை

விருத்தம்

வழுதியிந்த வகைவேட்டை யாடிச் சென்றான்
வராகம்வீழ்ந் ததுமலையா கின்ற துப்பேர்
மொழியலாச் சன்றுதெரிந்த் ததிற்ற வத்தை
முயன்றுபலர் வீடடைந்தா ரென்று ரவ்வா
றிழிவான சூகரரூ பக்குன் றின்மேல்
இருந்தவலஞ் செய்தகா ரணமியா தென்னப்
பழயகதை யெடுத்தம்மா தவர்கட் குக்கும்
பூத்திதுதித் தெழுந்தமுனி பகரு வாரே.

அடாணா, ரூபகம்.

க மாதவரேலித் தியாதரனொரு வன்லங்கையில்வீணை கொண்டே யவன்
ஓதியபுலஸ் தியன்தவத்திலுக் கூறுகப்பாடக் கண்டே
உ பன்றியாகவே சபித்திடக்கண்டப் படியேசாபத்தைப் பெற்றான் பெற்
றென்றெனக்கிந்தச் சாபம்நீங்குவ தென்றுவன்பின்பு ரைத்தான்
௩ தென்னவன்வந்து இன்வனத்திலே செறிவிலங்கெல்லா மழியச் செய்து
உன்னைமாய்த்திடப் பின்னிவ்வுருவம் உறுமென்றம்முனி மொழிய
௪ அந்தவாறேவத் திறந்துபண்டு வடைந்தானபுண்ணியத்தாலே பண்டி
ருந்தவிஞ்சயன் காகமாகவந் திசையவம்மலை மேலே
௫ வாசமாகவே துறந்தவர்கள்த வம்புரிவரெந் நாளும் மது
ரேசரும்அந்த மலையிலேயுவந் திணங்குவாரின்னங் கேளும்
௬ ஏனவீரனும் பெடையோடவ்வனத் தேயிறந்திட்ட போது தனி
யானபன்னிரு குருளையுந்தவித் ததுச்சொல்லிமுடி யாது
௭ காடுந்தாய்முலைப் பாலைவேட்டிளம் மைந்தரிமலை விரும்ப மெய்
வாடிவெம்பசி மிகவருத்திட வருந்திவெயிலால் ஒடுங்க
௮ தேவதேவன்வி மானத்திலேறிச் சேலவிழியுடன் வந்தான் அந்த
மாவனத்தனிற் றனிச்சையாலே மகிழ்வுற்றாடல்செய்திருந்தான்

விருத்தம்.

கூடியிவ்வா றுடையையர் ஆறி ரண்டு
குருளைகளும் வருந்திடஞ்சென் றின்றாள் கோலம்
சூழுறுங் கண்டுமைதம் அன்னை யென்றே
சுற்றுதலும் சுத்துதலும் பசியால் மிக்க
வாடுதலும் பார்த்திரங்கி முலையீந் தேனு
வடிவ்முக மட்டாகச் செய்த கன்றார்
காடியிதோ துயர்கேட்டோர் சாப தாபம்
கெடுப்பதனை தியாதுலகிற் சுகிப்பர் தாமே

ஆகவிருத்தம் ௫, கீர்த்தனை க, தரு உ, ஆக அ. முற்றிற்று.

நாற்பத்தாறுவது

பன்றிக்குட்டிகளைமந்திரிகளாக்கியபடலம்.

அவதாரிகை — விருத்தம்

பன்னகா பரணன்பன்றிப பாலர்பன் னிருவர்க்காக
அன்னையா முலையீந்தாவி யளித்தவா றுரைத்தேனிப்பால்
பின்னவர் களையமைச்சாப் பிறங்கிடச் செய்தந்தத்தில
உன்னருஞ் சிவலோகத்தி லுறச்செய்த தினிச்சொலவேனே.

அங்கயற்கண்ணி சுவாமியை ஓர்சந்தேகங் கேட்டல்.

விருத்தம்

திருமுலைப்பா லீந்தபிரான்மறையப் பன்றிச்
சேயர்கள்பன் னிருகதிரோ னுதித்தாற் போலே
பருவதத்திற் றோன்றிப்பல கலைக ளாய்ந்து
பாங்குறவீற் றிருக்குங்கால் கூடல வாழும்
ஒருவனருள் மகிமையைநால் வகையாத் தோற்றும்
உயிரனைத்துக் கும்பொதுவா யிருக்கு முண்மை
இருநிலத்தி லியாவருக்குந் தெரிய வேண்டி
ஏர்க்கின்றாள் அங்கயற்கண் கேட்கின் றாளே.

மோகனம், ஆதி

சாமீயொரு சந்தேகந்தீர்க்கவேணும் சாமீ

அநுபல்லவி.

சேமிதரனும்பரமேஷ்டியுங்காணரிய நித்தியானந்தபரி பூரணராகுமென்றன்சாமீ

சரணங்கள்

சகலலோகநாதனு விளங்குந்தேவரீர்தாமே
சரிக்குமிருகங்களையும் சிருஷ்டித்திரிகதப்பூமேல்
அகலுமகதின்பழுகம் அதில்துஷ்ட அதமமிருகத்தின்மேகம்போலே வேஷம்
டகவனேநீபெற்றத்தப் பன்றிக்குட்டியின்மேலே
பக்ஷமதாகவே [illegible]
ரக்ஷணை செய்துஞான சட்சுவளித்ததென்ன சாமீ

௨ துஷ்டமிருகாதியாலே யுண்டாகுந்துன்பங்களைத்
தொலைக்கும் பொருட்டா வேட்டையாடும்மன்னிகளை
இஷ்டமாயும்மாலே யோப்பாட இருக்கக்காண்பதாலே உலகத்தில்
திட்டமாயதுவும் ராஜதர்மமன்றோநீர் செப்பியநீதியும் ஒப்புமையாயிருந்
திப்படிச்செய்யவம்பு றப்பட்டமூலமென்ன சாமீ

௩ வேட்டையினாலே துஷ்ட மாமிருகங்களைக்கொன்று
விஜயம்பெற்றோர்க்கதனால பாபமேஇல்லையென்று
நாட்டுவழக்கமிருக்க உமதுகையில்மானணிமிருகமும் இருக்க கருணையால்
ஊட்டியவைகளுக்கவ் விலங்கறிவகற்றி உத்தமமேனபரதத்துவமாகிய
கர்த்தமெனபொருள் வைத்ததுசொலுமென்றன் சாமீ

சுவாமி அம்மையைநோக்கிச் சொல்லுதல்.

விருத்தம்

எத்தியிவ்வா றங்கயற்கண் கேட்கும் போதே
இவ்வுலகிற் பலபலவே தாக மாதி
சாத்திரமெல் லாம்நம்மைச் சகல சீவ
தயாபரனென் றுரைத்துமுறை யிடுகை யாலே
பூத்திடுஞ்சே தனமசே தனமி ரண்டும்
பொருந்தவிசா ரிக்குங்கால் அபேத மாக
வாய்த்திருப்ப தாலனைத்தும் சரியென் றேற்றில்
மல்லுவார் கருணைசெய்து சொல்லு வாரே

பலகரி, ஆதி.

பல்லவி

அங்கயற்கண்ணிநீயே அறிந்திடுவாயே

அநுபல்லவி.

சங்கைநிகர்கந்தரி சாம்பவிநிரந்தரி அங்கயற்

சரணங்கள்.

அன்னைபோய்விட்டதினாலே அழிபசிகொல்லமேலே
கன்றும்வெய்யிலாலழன்று காட்டிற்றனியேயழன்று
காயுமேனக்குட்டிகளுக் காயுமாய்முலைகொடுத்துச்
செயிலுமதிகமாக வேயருள்சுரந்தளித் தோம் அங்கயற்

எல்லையில்லாதபலமும் எண்ணெழுத்தறிநலமும்
வல்லமையும்மெஞ்ஞானமும் வழுதிக்கபிமானமும்
வந்தமைச்சராகவேயிருந்துபல்வளம்பெருக்கி
அந்தமில்நங்கணத்தி லைசக்கிருக்கவேயளித்தோம் அங்கயற்

யாவருக்குந்தேகம்சொந்தம் எப்படியப்படிக்கொத்தம்
பூவயன்முதலனேகம் பொருந்துஞ்சீவன்கள்தேகம்
புங்கமிகுந்தஅவய வங்களைப்போலேஸ்தலவர
ஜங்கமவடிவாமுல கெங்கணும்பிரியமென அங்கயற்

குருவுக்கபசாரித்து கோலமாச்சாபத்தைப்பெற்றுத்
திரிவததுமறுத்துத் திறம்பொருட்டியாமடுத்து
செப்பிணைமுலைப்பால்கொடுத் தெப்போவந்துரக்ஷிப்பாரோ
அப்போதிருமென்றவரா னுக்கிரகப்படிரக்ஷித்தோம் அங்கய

சுவாமியின்கட்டளைப்படி பாண்டியன்செய்தல்

இதுவுமது

பராபரன் டராபரைக்கிவ் வாறு தேற்றிப்
பாண்டியன்சொற் பனத்திலவந்து வேந்தே கேளாய்
வராகமலை தனிலாறி ரண்டு பேர்கள்
வராகமுக மாயதிவுந் திருப்போர் தம்மைச்

சராசமா புன்னிடத்துக் கழைத் தமைச்சர்
தங்களைச் செய்குகவென் றுரைப்பத் தேர்ந்து
நராதிபன்கண் விழித்தெழுந்தவ் வாறு செய்ய
நாடினன் மனத்திலன்பு கூடி ன்னே

சௌராஷ்டிரம், சாப்பு.

பல்லவி.

பத்தபராதினர் சொற்றவிராமலே பாண்டியன்செய்தானே

அநுபல்லவி.

சுற்றிவிளங்கும் அமைச்ச ருடனேதன்
சொற்பனத்திற்கண்ட அற்புதத்தைச்சொல்லி (பத்த

சரணங்கள்.

அந்தமலைக்கே யமைச்சரைவிட்டுடன் காண்டு கோல
மைந்தரைக்கூட்டிவரக்கண்டுசந்தோஷம் பூண்டு
சிந்தைமகிழ்ந்தவர் தாழ்ந்திடுதல்பார்த்தன் பீன்று உள்ளு
வந்தேயவர்களை மந்திரியாச்செய்தின்னம் வேண்டும்
விந்தையாகப் பலநல்வரிசையும் மென்மேலும்செய்து த னக்குப்பாகிய
மந்திரர்பெண்களைக் கல்யாணம்செய்வித்து வைத்துலகெங்கும் பிரசித்தமாக
(விண்ணம்

பத்த

ஈராறுடற்கு முயிரொன்றதாமெனச் சேர்ந்து தம்பம்
சேராவரினும் மதிபோலொளியுடன் கூர்ந்து
பூராமனத்துடம் பாடுடனுள்வினை சாய்ந்து என்றும்
போராதகல்விப் பயனபோல்மகிழ்ச்சிதந் தோய்ந்து
காராவின்பாலுஞ் செந்தேனுங்கலந்தன்ன கற்றோருமாகி மதிநுட் பருமாகிச
சீராருஞ்சொல்லால் அயலார்களுங்கேட்கச் செப்பிப்பிறர்சொற்பயனைக்கவர்
(ந்திடப்

பத்த

சேர்ந்ததிகாரம் படைத்தோமென்றேயகம் படையார் வல்
வாய்ந்திடுமக்களைப் போலொதுங்கிப்பணி சடையார்
வேந்தன்பொருளை விஷம்போலநினைத்ததை யுடையார் நிலைச்
சார்ந்தவர்போலக லாதணுகாநெறி யுடையார்
காய்ந்தபராதப்பொருளுடன்சத்துருக் களைவென் றுறுபொருளையுஞ்சேராமலே
ஆய்ந்தகுடிகளிறுக்கும்பொருளே அரசனுக்கீட்டும் பொருளாகச்செய்திடப்

பத்த

தம்மனக்கொள்கை தனைத்தம்முளங்கொண்டு பரிந்து துய்ய
நிர்மலமானகண்ணாடி நிழற்போலே தெரிந்து
தன்மமுடனிருந் தாலதிலாள்வினை புரிந்து
தர்மமாகவிருந் தாலந்தக்காரியத்தில் பிரிந்து
அம்முறையாலே தமக்குள்ளவாக்கமும் ஆவியுநீக்கும் படிக்குவருகினும்
உண்மனத்தாலும் நினைத்தார்களைத்தனக் குற்றமந்திரிகளாயு பெற்று மகிழ்ந்
(திடப்

பத்த

விருத்தம்

மந்திரியாய்ப் பின்னிருபேர் களுமிவ்வாறு
மாதருமம் புகழீகை விசேடம் நான்கும்
அந்தமுடன் மன்னனுக்குப் பெருகச் செய்தே
அந்திகத்தில் சிவனுலக டைந்தார் தென்னன்
இந்திரலோ கம்புகுந்து வீற்றி ருந்தான்
இக்கதையைப் படிப்பவர்கேட் பவர்கள் நல்ல
மைந்தர்மனை வியைப்பெற்று வாழ்ந் திடுக்கண்
மாற்றியந்தத் தானுலகில் மன்னுவாரே

ஆகவிருத்தம் ௫ கீர்த்தனை ௧ ஆக ௮ முற்றிற்று

௰

நாற்பத்தேழாவது:

கரிக்குருவிக்குஉபதேசஞ்செய்தபடலம்.

அவதாரிகை — விருத்தம்.

ஆண்டவன் வராகச்சேய ராணபன் னிருவர் தம்மைப்
பாண்டியற் கமைச்சராகப் பண்ணிய துரைத்தேனிப்பால்
வேண்டிய பாரத்துவாச விகங்கத்துக் கருட்கண் ணோக்கம்
பூண்டுமெய்த் திரோபதேசம் புரிந்தவா றினிச்சொல்வேனே

கரிக்குருவியின்வரலாறுகூறல்

விருத்தம்

மகாராச ராசபாண் டியனின் னாட்டில்
வாழ்ந்திருந்தான் அவனீன்ற மைந்த னொருவன்
தருமான வனபெலத்திற் சிங்கம் போல்வான்
சத்துருவேந் தர்களுஞ்சென் றுபோர் செய்வாய
சுகுணபாண் டியனெனப்பேர் பூண்டோ னிந்தத்
தொல்லுலகை யாண்டுவரு கின்ற நாளில்
பகலனடி யாரேகேட் பீரென் றன்பு
பரிந்திளைஞர் ஓர்கதையுச் சரிக்கின் றாரே.

செஞ்சுருட்டி, ஆதி.

பல்லவி

மாதவத்தைச்செய்யு மாமுனிவோரே கேளும்

அநுபல்லவி.

பூதலத்தொருவன்வெகு புண்ணியமேசெய்தான்முன்னே மாத

சரணங்கள்

௧ ஞானமுற்றிலகுபாவம் இயற்றியறம் மறந்தான்
ஆனதாற்கரிக்குருவி யாகவந்து பிறந்தான் மாத
௨ காகமுதலியவன்போற் கண்டபடி யுழக்கத்
தேகமெங்கும்இரத்தமாகச் சென்னியாலே யுடிக்க மாத

புட்களுக்குள்ளெளிதாய்ப் புரத்துள்வர நமிங்கி
புட்கிவனத்துட்குட்டானே புறையுக்தேக மொடங்க மாத
பாதையிலேயிருக்கும் பாதபத்தின் மேலே
ஏதுசெய்வோமெனவேங்கி இருந்ததுஅன் பாலே மாத

மதுரைக்கலந்தின்மான்மியங்கூறல்.

விருத்தம்

கரிக்குருவி யாப்பிறந்தில் வகை வருந்திக்
காக்கதொரு மாத்திருக்கத் திருவெண் ணீறும்
திருத்தமுடன் கண்டிகையும் தரித்துக் கொண்டு
தீர்த்தயாத் திரைகுறித்தம் மரத்தின் கீழே
வருத்தமுடன் ஒருமுனிவன் நடை தளர்ந்து
வந்திருக்கும் போதுவழிச் செல்வோர் பார்த்தெப்
புரத்தைநீர் குறித்தெழுந்தீ ரெனக்கேட் டாங்கே
புகின்றார் தமக்கவரு ரைக்கின்றாரே

காம்போதி, செம்பை.

பல்லவி

நான்வந்ததனைச்சொல்லேன் காணும் நீங்கள் நால்வரும்இங்கிருந்து கேட்கவே

அநுபல்லவி

நான்வந்தகாரியமிந்நாளிலமெங்குஞ்சுற்றி நான்

சரணங்கள்

க நன்மைதரும்தலம்தீர்த்தம் மூர்த்தியுமிப்புவி மேலே
தொன்மதுரைபொற்கமலஞ் சுந்தரேசன் போலே
மும்மகிமையுஞ்சேர்ந்து முளைப்பதரிதத ஞலே
என்மனங்களித்ததன்மேல இச்சைகொண்டொருக் காலே நான்

உ ஓரிடத்தில்மூன்று முள்ளதுவாகநோக்கச் சென்று
பாரிடத்திற்கயிலைமுதல பார்த்ததுமில்லை யென்று
சீறலவமதுரையிம்மூன்று மொருமையுடன் நின்று
பேருலவமதுபோலே பிறிதுதலமியா தென்று நான்

ங அக்கதம்பவனநாதன அன்படையோர்கை மாகிக்
கைக்கனிபோலேமனதிற் கருதும்பொருள் த்யாகி
முக்கியமாச்சீவனுடன முத்திகொடுக்கும யோகி
பக்கமுள்ளவை மறுமைப் பயன்றருவதா லேகி நான்

கரிக்குருவி ஆலவாய்க்குவருதல்

விருத்தம்.

புதுமைமா மகிமையையோர் முனிவ னிந்த
வகையுரைக்கும் போதிலந்த மரத்தோர் கொம்பில்
பதியிருக்கும் கரிக்குருவிக் கிறிவு வந்து
பட்சியாத் தான்சனித்த வகையும் பின்னும்

உதயமா லுதவியுமோர்ந் திச்சென் முத்தை
ஒழிப்பதற்கே யிதுபோல்வே றில்லை யென்று
மதியிலுணர்ந் தோருமுந்தி யாற்றுன பத்தை
மறந்தெழுந்த அடனுல வாக்குத் தானே.

பமுகையாணி, சாபு.

பல்லவி

கரிக்குருவிபறந்துவந்த காரணத்தைக்கேளும்

அநுபல்லவி

கருக்குன்மறைந் திருக்கவிட்டுக கருக்குஞ் சென்மமொழிக்க

சரணங்கள

க நீடுமலர்க் காநீத்தள்ளிக் கூடல்நகர் தேடிக்
உ கலகக்கஞ்சப் புன்விற்றுய்ய மனமுற்றுடல் நினைக்கக்
ங அங்கயற்கண் பங்கனைவ லங்கொண்டு துதிக்கக்.

விருத்தம்

பறந்துவந்திப் படிமூன்று நாட்சு வர்ண
பதுமினிதோய்த் தன்னலைச்சூழ்ந் திருக்கும் போதே
அறம்பெருகும் அங்கயற்கண் பணிந்து நோக்கி
அயயனேயிக் கரிக்குருவி செய்யும் செய்கை
திறத்தெனக்குத் தெரியவுரைப் பாயென றேதத்
திருத்துமதின் செய்தியெல்லாம் முறையாற் கூறிச்
சிறந்தபத்தி பூண்டதைக்கண் டதின்மே லன்பு
தேக்கினூர் கடைக்கணுல நோக்கி னூரே

இதுவுமது

நாட்டமிலைக் காமல்வைத்துப் பார்த்து முக்கண்
நாதன்முன்னு ளொருமார்க்கண் டனுக்கா யன்பு
நாட்டியமி யாமையளித் தெமனைக் காய்ந்த
ஞானமித்திஞ் சயமந்த்ர மூபதே சிக்சக்
கேட்டவுடன் புல்லறிவு நீங்கிப் பின்னும்
கேளுமந்தக் குருவியிரு வினையை நீக்க
ஓட்டரிய கவலையொழித் துளத்தி லேயன்
